1995

# الجامعة

# அல்ஜாமிஆ

1416



ஜாமிஆ நளீமிய்யா இஸ்லாமிய்யா பேருவலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FAYIQ

Ahatthimurippu.

# அல்ஜாமிஆ

## 1995 - 1416

Acc. No :-
Class No :-
Date :- 2000-

ஜாமிஆ நளீமிய்யா இஸ்லாமிய்யா

பேருவலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## EDITORIAL BOARD

| | |
|---|---|
| A.M.MIHLAR | Final year |
| A.M.M.ISMAIL | Final year |
| M.F.ZAINUL HUSSAIN | Final year |
| U.L.NIYAS | Sixth year |
| M.M.JAWAD | Sixth year |
| S.S.S.AROOS | Sixth year |
| A.H.IHSANUDEEN | Sixth year |
| P.M.M.IRFAN | Fifth year |

## ADVISORY BOARD

| | |
|---|---|
| Dr.M.A.M. SHUKRI | B.A.Hons (Cey.) Ph. D (Edin.) |
| A.C.AGAR MOHAMED | (Naleemi), B.A.Hons. (Cey.) |
| M.A.M.MANSOOR | (Naleemi), B.A.Hons. (Cey.) |
| A.C.M.NAJEEBDEEN | Dip.in Journalism. |
| C.IYOOB ALI | (Naleemi), B.A.Hons. (Cey.) M.A. (Sudan) |
| H.I.KHAIRUL BASHER | (Naleemi), B.A.Hons. (Cey.) M.A. (Sudan) |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01) | ஆயுட்காலத் தலைவரின் ஆசியுரை | 01 |
| 02) | கௌரவ பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | 03 |
| 03) | STAFF OF THE JAMIAH NALEEMIAH BERUWELA | 05 |
| 04) | ஆசிரிய பீடத்திலிருந்து | 07 |
| 05) | நவீன இஸ்லாமிய எழுச்சி | 09 |
| 06) | சீறாவின் ஒளியில் இஸ்லாமிய தஃவா | 15 |
| 07) | ISLAMIC VISION OF EDUCATION AND CULTURE | 21 |
| 08) | மாசோனிய இயக்கம் ஓர் அறியப்படாத உலகம் | 25 |
| 09) | தலைமைத்துவமும் இஸ்லாமும் | 33 |
| 10) | மதச் சுதந்திரம் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் | 45 |
| 11) | இஸ்லாமியப் பொருளாதாரமும் விலைக்கட்டுப்பாடும் | 49 |
| 12) | காலம் வரைந்த கடிதம் (கவிதை) | 54 |
| 13) | இபாதத், கிலாபத், இமாரத் ஆகியவற்றுக்கிடையே மனித வாழ்க்கை | 55 |
| 14) | மத. உணர்வால் ஜனித்த மதம் | 63 |
| 15) | විශ්වයේ මැවුම්කරු | 73 |
| 16) | இஸ்லாமிய ஷரீஆவின் மாறாத்தன்மையும் நெகிழ்வுத்தன்மையும் | 79 |
| 17) | மறுமை வாழ்வின் சாத்தியப்பாடும் அதன் அவசியமும் | 88 |
| 18) | கிறிஸ்தவ மதம் ஒரு விமர்சன நோக்கு | 92 |
| 19) | FAMILY PLANNING AN ISLAMIC VIEWPOINT | 100 |
| 20) | இஸ்லாத்தில் வறுமை ஒழிப்பு | 104 |
| 21) | இஸ்லாமும் இன்றைய இளஞ்சந்ததியினரும் | 109 |
| 22) | கீழைத்தேய ஆய்வுகளும் இஸ்லாத்திற்கெதிரான சதிகளும் | 113 |
| 23) | இஸ்லாத்தில் கல்வி- ஒரு வரலாற்று நோக்கு | 118 |
| 24) | මුහම්මද් නබි(සල්)තුමාගේ බහුභාර්යා ජීවිතයේ යථාර්ථය | 122 |
| 25) | மருத்துவத் துறை வளர்ச்சிக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு | 128 |
| 26) | முனைப்பும் முற்றுப்புள்ளியும் (உரை நடை) | 134 |
| 27) | ஆய்வுக் கட்டுரைகளின் தலைப்புகள் | 136 |
| 28) | NAMES AND ADDRESSES OF JAMIAH GRADUATES | 137 |
| 29) | நன்றி நவிலல். | 140 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுத்தி விடு சத்தியத் தீ
கொழுந்து விட்டெரியட்டும்
அழுத்திச் சொல் அல்லாஹ்வே
அவனன்றி எவர்க்கு மஞ்சோம்
பழுத்த கலை ஞானங்கள்
பண்பு நிறை ஒழுக்கங்கள்
உளத்தினில் தூய ஈமான்
உள்ளவரை அச்சமேனோ?

மௌலவி யூ. எம். தாஸீன் (றஹ்)
(முன்னாள் அதிபர் - ஜாமிஆ நளீமிய்யா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆயுட்காலத் தலைவரின் ஆசியுரை

ஜாமிஆ நளீமிய்யாவின் மாணவர்களால் வெளியிடப்படும் அல்ஜாமிஆ சஞ்சிகைக்கு இந்த ஆசிச்செய்தியை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இருபது வருட கால அதன் கல்விப்பணியில், ஜாமிஆவின் சிறப்பான வளர்ச்சியும் சாதனைகளும் மனித முயற்சியின் விளைவன்று. அது அல்லாஹ்வின் பேரருளேயாகும் என்பது எனது ஆழ்ந்த நம்பிக்கையாகும். அல்ஜாமிஆ எனும் சஞ்சிகை, ஜாமிஆவின் வளர்ச்சியையும் சாதனைகளையும் பிரதிபலிக்கும் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகின்றது. இச்சஞ்சிகையை வெளியிடுவதில் மிக ஆர்வத்தோடு ஈடுபட்டு உழைத்த விரிவுரையாளர்களையும் மாணவர்களையும் மனப்பூர்வமாகப் பாராட்டுவதோடு இச்சஞ்சிகையின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

**அல்ஹாஜ் எம்.ஐ.எம். நளீம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K



**AL. HAJ. ASA KAREEM**

*Chairman & Managing Director.*

**KAREEM AGENCY**


*(Sri Lanka Navy. Airforce Supplier & Transporters)*

No. 48, Forty second Lane,
Colombo - 06,
Sri Lanka.

Tel: 01 - 501023
01 - 32396



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரவ பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

'அல்ஜாமிஆ' எனும் பெயர் தாங்கி, ஜாமிஆ நளீமிய்யா மாணவர்களால் வெளியிடப்படும் சஞ்சிகை ஜாமிஆவின் அறிவப் பூங்காவின் ஒரு நறுமலர். மாணவர்களின் எழுத்தாற்றல், கருத்து வளம்; விரிவுரையாளர்களின் அறிவுத்திறன், சிந்தனைப் பாங்கு என்பவற்றை இதில் உள்ளடங்கியுள்ள கட்டுரைகள் பிரதிபலிக்கின்றன. கல்வித் துறையிலும் இஸ்லாமிய த.".வாக் களத்திலும் இரு தசாப்தங்களைப் பூர்த்தி செய்துள்ள ஜாமிஆ, கால வளர்ச்சியில் அதற்கே உரிய ஒரு சிந்தனை மரபை, கருத்தோட்டத்தை, அணுகுதலை வளர்த்துக் கொண்டுள்ளது. இச்சஞ்சிகை பொதிந்துள்ள கட்டுரைகளில் இந்த சிந்தனை மரபும் அணுகுதலும் இழையோடியுள்ளதை வாசகர்கள் இனங்கண்டு கொள்வர். இச்சஞ்சிகையைச் சிறப்புற வெளியிடச் செய்யும் முயற்சியில் மாணவர்களும் ஆசிரியர்களும் காட்டிய ஆர்வத்தையும் கரிசனையையும், அதற்காக மேற்கொண்ட கடும் உழைப்பையும் நான் அறிவேன். அவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். அல்லாஹ் இம்முயற்சியை அங்கீகரிப்பானாக.

**கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறபு, தமிழ், சிங்கள, ஆங்கில இஸ்லாமிய நூல்களுக்கு

☆

☆ ☆

இஸ்லாமிக் புக் ஹவுஸ்

இறக்குமதியாளர்,

ஏற்றுமதியாளர்,

விற்பனையகம்

77, தெமடகொட றோட்,

கொழும்பு - 09.

தொலைபேசி : 687191 பெக்ஸ் : 686030

NEW

APOLLO PHARMACY

&

GROCERS

137, GALLE ROAD, BERUWALA.

★ *Quality* ★ *Service* ★ *Price*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## STAFF OF THE JAMIAH NALEEMIAH BERUWELA

### Director
Dr. M.A.M. Shukri , B.A. Hons (Cey.), Ph.D (Edin.)

### Deputy Director
Moulana Shahidullah Kausar, Aleemi, B.A. (Pak.)

### Deans of Academic Affairs
Ash Sheikh M.A.M. Mansoor, Naleemi, B.A. Hons. (Cey.)
Ash Sheikh A.C. Agar Mohamed, Naleemi, B.A. Hons. (Cey.)

### Deans of Student's Affairs
Ash Sheikh H.I. Khairul Basher, Naleemi, B.A. Hons. (Cey.), M.A. (Sudan)
Ash Sheikh C. Ayyoob Aly, Naleemi, B.A. Hons. (Cey.), M.A. (Sudan)

### Head of Social Studies
Mr. A.C.M. Najeebdeen, Dip. in Journalism.

### Academic Staff
Moulavi M.T.M. Hilmy, B.A. (Madina)
Ash Sheikh S.H.M. Faleel, Naleemi, B.A. (Cey.)
Ash Sheikh S.M.M. Mazahir, Naleemi, B.A. Hons. (Cey.)
Mr. A.J.M. Hussain, Special Trained (English/Tamil)
Ash Sheikh M.T. Kamaruz-zaman, Naleemi, Dip. in ASL (Riyadh), Dip. in ARS (Libya)
Ash Sheikh Mahmud Salih Al-Jawhary (Licentiate) (Azhar)
Ash Sheikh S.A.K. Abdur Razick, Naleemi Dip. in ASL (Riyadh)
Ash Sheikh A.B.M. Ashraff, Naleemi, B.A. Hons. (Cey.)
Ash Sheikh A.M.M. Mihlar, Naleemi, B.A. (Cey.)
Ash Sheikh M.Z.M. Rizan, Naleemi, B.A. (Cey.)
Ash Sheikh Musthafa Seyed Umarah (Licentiate) (Azhar)
Sheikh Abdul Latiff , Special Trained (English)

### Wardens
Mr. M.L.M. Shariff - Rtd. Principal
Ash Sheikh S.L. Abdur Razzak, Naleemi, B.A. (Cey.)

### Chief Clerk
Mr. .M.B.M. Firdous



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Library Staff
**Librarian**
Ash Sheikh M.I.M. Zubair, Naleemi, B.A. (Cey.), Librarianship Grade II.

**Assistant Librarians**
Ash Sheikh H.L.M. Haris, Naleemi, B.A. Hons. (Cey.)
Mr. M.M. Rifai.

## Secretariat Staff
**Accountant**
Mr. A.M.M.Ansar, B.A. (Cey.), Dip. in Accountancy.

**Administrative Secretary**
Moulavi A.M.C.M. Buhari, Casimi, Manbaee Jui (Karachi)

**Administrative Officer**
Mr. A.L.M. Yaseen.

**Maintenance Officer**
Mr. M.B.M. Farook.

**Clerk**
Mr. M.K.M. Hisan.

**Office Assistant**
A.M.A.Gafoor.

## Publications Bureau Staff
**Publication Officers**
Ash Sheikh S.A.M. Naleem, Naleemi, B.A. (Cey.)
Ash Sheikh A.M.M Risham. Naleemi, B.A (Cey.)

**Research Section**
**Executive Officer**
Mr. A.R.A. Noor Amin.

**Typists**
Mr. A.H.M. Bishrul Haffi (English)
Mr. M.R.M. Muzammil (Tamil)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய பீடத்திலிருந்து.........

புலரும் பொழுது போல் எம்முள் எழும் சிந்தனைகள் ஏராளம். அவற்றை கருத்தாழம்மிக்க எழுத்தோவியமாக, நயக்கத்தக்க நல்லிலக்கியமாக, காலமெல்லாம் பயன்தரும் கலைப் பொக்கிஷமாகப் படைத்தளிக்கும் அறிவும் ஆற்றலும் அல்லாஹுதஆலா எமக்களித்துள்ள அருட்கொடைகளாகும்.

இருந்த போதிலும் எமது கலை, இலக்கிய முயற்சிகள் ஈமானின் நிழலில் உருப்பெற்று, சத்தியத்திற்காகத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். அப்போதுதான் அவை இறை திருப்தியையும் மறுமை வரை நற்கூலியையும் நமக்கு ஈட்டித்தரும். இத்தகைய இலட்சியங்களை மனதிற் கொண்டு நளீமிய்யா கலாபீட மாணவர்களது வெளியீடாக 'அல்ஜாமிஆ' சஞ்சிகை மலர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சத்தியத்தின் சுகந்தங்கமழும் ஆக்கப் பூக்களைச் சுமந்து, எழில் மிகு நந்தவனமாகக் காட்சியளிக்கும் 'அல்ஜாமிஆ' சஞ்சிகை அதன் கன்னியிதழையடுத்து வெளிவருகிறது. முதலாவது இதழே கணிசமான மாணவர்களினதும் அறிவுஜீவிகளினதும் அமோக வரவேற்பைப் பெற்றமை இங்கு நினைவு கூரத்தக்கது. அவ்வாறே, இரண்டாவது இதழையும் வாசகர்களது அறிவுக்கும் அகங்களுக்கும் விருந்தளிக்கும் வகையில் மிகச்சிறப்புடன் வழங்க முயன்றுள்ளோம்.

புனித இஸ்லாத்தின் சத்தியத்தூது பற்றி நாம் பெற்றுள்ள அறிவு, இஸ்லாமிய பிரசாரப்பணியில் ஈடுபடும்படி எமது உள்ளங்களுக்கு அழைப்பு விடுக்கிறது. ஏனெனில், சத்தியம் மனிதர் மத்தியில் மறைந்திருக்க விரும்புவதில்லை. அது தன்னை வெளிக்காட்டுவதில் மிகுந்த வேட்கை கொண்டது.

த:.வா பணியைப் பொறுத்தவரையில் அது இஸ்லாமிய அறப்போராட்டத்தின் பாற்பட்ட ஓர் அங்கமாக மதிக்கப்படும் அளவுக்கு மார்க்கத்தில் மகோன்னத இடத்தை வகிக்கிறது. இப்பணியைப் பலப்படுத்தப் புறப்படும் ஒவ்வொரு பிரசாரகனும் காலத்தின் தேவைகளையும் சந்தர்ப்ப சூழ் நிலைகளையும் கருத்திற்கொண்டு மிகப் பொருத்தமான பிரசார வழிமுறைகளைக் கையாள்வது வரவேற்கத்தக்கது.

உலகளாவிய ரீதியில் இஸ்லாத்தின் எழுச்சியைக் கண்டு கதி கலங்கும் அந்நிய சக்திகள் அதனை அடக்கியொடுக்குவதற்காகக் கட்டவிழ்த்துவிடும் விஷமத்தனங்கள் எண்ணிலடங்காதவை. வெகுசனத் தொடர்புச் சாதனங்களினூடாக 'கருத்துச் சுதந்திரம்' என்ற போர்வையில் புனித இஸ்லாத்தின் தூய்மையைக் களங்கப்படுத்தும், காயப்படுத்தும் நடவடிக்கைகள் நாளாந்தம் நடைபெறுகின்றன. இத்தகையதோர் அபாயகரமான நிலையில் இவற்றிற்கு எதிராக நாம் மேற்கொள்ள வேண்டிய பதில் நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி ஒவ்வொருவரும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

எமது தாய் நாட்டிலிருந்து வெளிவரும் தினசரிகளில் கூட இஸ்லாத்தை இம்சிக்கும், அதன் கோட்பாடுகளைக் கொச்சைப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படாமலில்லை. இன ஐக்கியம், பரஸ்பரப் புரிந்துணர்வு என்பன பற்றியெல்லாம் பேசும் பிற மத புத்திஜீவிகள் கூட இத்தகைய சிறுபிள்ளைத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமை கவலைக்குரிய விடயம் மட்டுமல்ல; கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.

எமது சமூகத்தில் கல்விமான்களும் கலை இலக்கிய வாதிகளும் வாழுகின்றமை பெருமைக்குரியதே. என்றாலும், அவர்களது சிருஷ்டி இலக்கிய முயற்சிகளில் ஈமானின் வாடை வீசினால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இஸ்லாத்திற்காகவும் அதற்கெதிராக வரும் சவால்களை முறியடிக்கவும் தமது சிந்தனைகளையும் எழுத்துக்களையும் அர்ப்பணித்தால் வரலாறு கூட அவர்களை மறவாதல்லவா? சத்தியத்திற்காக உழைக்கின்ற பலமான சமுதாய சக்தியாக அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரணி திரள்வார்கள் என்றால் சத்துருக்கள் சற்று அஞ்சுவார்கள்; மார்க்க விடயத்தில் முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்வார்கள் என்பது எமது துணிபு.

மேற்குலகின் கலாசார, சடவாத சிந்தனைத் தாக்கங்களால் இஸ்லாத்தின் விழுமியங்களும் ஒழுக்க மாண்புகளும் கறை படியாமல் காக்க வேண்டியது நமது பொறுப்பாகும். எனவே, வீண் சர்ச்சைகளில் காலத்தைக் கழிக்காமல் இஸ்லாத்தைப் பற்றிய போதிய தெளிவையும் சீரான அறிவையும் பெற ஒவ்வொரு முஸ்லிமும் முயல வேண்டும்; மனித சமூகத்திற்கு நன்மை பயக்கக்கூடிய அனைத்துக் கலைகளையும் கற்க வேண்டும். அப்போதுதான் நாம் முன்னேற்றப் பாதையில் பயணப்படலாம்.

எமது தனித்துவத்தையும் கலாசாரத்தையும் பேணும் விதத்தில் எமது நாளாந்த நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். இஸ்லாமிய அடிப்படையில் எமது அனைத்துச் செயற்பாடுகளும் அமைய வேண்டும். கல்வித்துறை, தொழிற்றுறை, எழுத்துத் துறை என எதுவாக இருந்த போதிலும், எமது வாழ்க்கையின் எப்பக்கத்தைப் புரட்டினாலும் அங்கே இஸ்லாம் பிரதிபலிக்குமானால், அதுவே அல்லாஹ்விடத்தில் மிகவும் விருப்புக்குரியதாக அமையும். இத்தகைய சிந்தனைகளை வாசகர்களது உள்ளங்களில் விதைக்க அல்ஜாமிஆ சஞ்சிகை எமக்குக் களமமைத்துள்ளது.

வல்லோனாம் அல்லாஹ்வின் வழிகாட்டலையும் முஹம்மத் (ஸல்) அவர்களது முன்மாதிரியான வாழ்க்கை முறையையும் அவனி மாந்தருக்கு அறிமுகம் செய்வதும் அறிவூட்டுவதும் இஸ்லாத்தைக் கற்றோரின் கடமையும் புத்திஜீவிகளின் பொறுப்புமாகும் என்ற உணர்வே இத்தகையதொரு சஞ்சிகை வெளியிட எமக்கு உற்சாகமூட்டியது.

மார்க்கக் கல்வியோடு அறிவு தேடலுக்கு முற்றுப்புள்ளி வைக்காது, அறிவெனும் ஆழ்கடலின் ஆழ்அகலங்களையெல்லாம் அறிவதற்கான வாய்ப்பினையும் வழிகாட்டலையும் நளீமிய்யா கலாபீடம் எமக்கு அளித்துள்ளமை இறைவன் எம்மீது கொண்ட அன்பின் அடையாளமென்றே கருதுகிறோம். பிரசங்க மேடைகளுக்கு மட்டும் பொருத்தமானவர்களாகவன்றி, கல்விசார் துறைகளிலெல்லாம் கலங்கரை விளக்குகளாக எம்மைக்காண வேண்டுமென்பது அன்னை நளீமிய்யாவின் ஆவலாகும். இதனை அர்த்தப்படுத்தும் வகையில், தியாக சிந்தையுள்ள ஓர் ஆசிரியர் குழாம் எம்மை ஆக்கப்பாதையில் ஆற்றுப்படுத்துவதால் எமது எழுதுகோல்களும் இஸ்லாத்தை எடுத்தியம்புவதில் முனைப்பாகவுள்ளன.

மாணவப்பருவத்து முயற்சியென்பதால் இங்கு அபார ஆற்றல்களையோ அனுபவ முயற்சியையோ கண்டு கொள்ள முடியாது. குறைகள் இங்கே குடி கொண்டிருக்கலாம் என்றாலும், எளிமையான எமது இவ்வெளியீட்டு முயற்சி காலாகாலம் பேணிப் பயன்பெறும் விதத்தில் பல்துறை சார் அம்சங்களை உள்ளடக்கியுள்ளமை நோக்கத்தக்கது.

உண்மை உலகில் நிலைக்க வேண்டுமென உழைக்கும் ஓர் இஸ்லாமிய இலக்கியவாதியின் ஆக்கங்கள், அவனது உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கும். எனவே, அவை தாக்கம் மிக்கவை; வாசகர் மனங்களில் என்றும் வாழக்கூடியவை. மார்க்க வரையறைகளைப் பேணி, சமூக நலன்களைக் கருத்திற் கொண்டு வரையப்படுவதால் காலத்தால் அழியாத உயிரோட்டத்தை அவற்றில் அவதானிக்கலாம். இத்தகைய பண்புகளைப் பெற்ற ஆக்கங்களைப் பிரசவிக்கவே எமது பேனாக்கள் பெரிதும் விரும்புகின்றன.

பார்க்கும் திசையெங்கும் பல விதமான கேளிக்கைகளும் உலோகாயத இன்பங்களும் பெருகிவிட்ட இன்றைய காலகட்டத்தில், இறை சிந்தனையின் பால் மனித மனங்களை மீட்டெடுக்க வேண்டும்; அவற்றுள் அறிவொளி பாய்ச்சி ஈமானை இலங்கச் செய்ய வேண்டும்; நாளைய சந்ததியும் இஸ்லாம் என்ற நாமத்தை வாழவைக்க வழிசெய்ய வேண்டும் என ஆசித்து "அல்ஜாமிஆ" சஞ்சிகையை வெளியிடுகிறோம். இன்றும் இனிவரும் காலங்களிலும் இச்சஞ்சிகை பலரும் பயன்பெறும் அறிவுக்களஞ்சியமாகத் திகழ அல்லாஹ்தஆலா நல்லருள் புரிவானாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன இஸ்லாமிய எழுச்சி

யூ.எல். நியாஸ் (ஆறாம் வருடம்)

இஸ்லாம் உலகை வாழவைக்க வந்த ஒரு புனித வாழ்க்கை நெறியாகும். இந்தப் பொறுப்பை மிகத் திறம்படச் செய்வதற்கான எல்லாத் தகுதிகளும் இதனிடம் மட்டுமே உள்ளன. துரதிஷ்டவசமாக அந்தப் பொறுப்பை முஸ்லிம்கள் பறிகொடுத்து விட்டனர். பல்வேறு பட்ட சதி முயற்சிகளுக்குள் சிக்குண்ட முஸ்லிம்கள், தாங்களும் கவனக்குறைவாக இருந்து விட்டதாலும் இந்தப்பணி கைமாற வேண்டிய நிர்ப்பந்தம் உருவானது. ஆனால், மனித சிந்தனையிலிருந்து உருவான எந்தச் சக்தியும் இப்பணியைச் சுமக்கமாட்டாமல் குற்றுயிராய்க் கிடக்கும் ஒருபரிதாப நிலையை இன்று தெளிவாகக் காணலாம். எனவே, இவ்வுலகை வழி நடாத்தும் பணியைப் பொறுப்பேற்கும் பல்வேறு முயற்சிகள் இஸ்லாமிய உலகெங்கும் தளிர் விட்டுக் கிளை பரப்ப ஆரம்பித்துவிட்டன. இஸ்லாமிய எழுச்சியின் அலை ஆர்ப்பரித்தெழத் தொடங்கியுள்ளது.

இன்று வளர்ந்து வரும் இந்த இஸ்லாமிய எழுச்சி உருவாவதற்கு முன்னர் உலக முஸ்லிம்களின் பொதுவான நிலைப்பாட்டை நோக்குதல் பொருந்தும்.

இதன்போது முஸ்லிம்களை இரண்டு பிரிவினராக வகுக்க முடியும். இஸ்லாத்தில் பற்றும் மதிப்பும் வைத்த ஒரு குழுவினர் இஸ்லாத்தைப் பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டு வாழ்ந்தார்கள். தங்களுக்குக் கிடைத்த இஸ்லாத்தைத் தாங்களும் கற்று, பிறருக்கும் அதனைப் போதித்துக் கொண்டிருந்தனர். ஆனால், இஸ்லாத்தைப் பற்றிய அவர்களது நோக்கிலும் போக்கிலும் தவறுகள் காணப்பட்டமையை அவர்களால் சரிவரப் புரிந்துகொள்ள முடியவில்லை. என்றாலும், இவர்களது வழிகாட்டலை நம்பிப் பெருந்தொகையான மக்கள் அவர்களைப் பின்பற்றத்தயாராக இருந்தார்கள்.

அடுத்த குழுவினர் இஸ்லாத்தில் பற்றற்றவர்களாக காணப்பட்டனர். மேற்கத்திய சிந்தனைகளால் கவரப்பட்ட அவர்கள் அதில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்தனர். பெயரும் உடையும் முஸ்லிம்கள் என்று அவர்களை விளம்பரப்படுத்தினாலும் கூட அவர்களது சிந்தனையில் மேற்கத்தேய நாகரிகம் நாற்காலி போட்டு அமர்ந்து கொண்டிருந்தது. முஸ்லிம்கள் பின்னடையக் காரணம் இஸ்லாத்தைப் பின்பற்றியமையே என்ற கருத்தை இவர்கள் ஆமோதித்தார்கள். மதம் என்பது மனிதனையும் கடவுளையும் இணைத்து வைக்கும் ஓர் **"உள்ளார்ந்த உணர்வு"** மட்டுமே என்ற கொள்கை இவர்களிடம் மேலோங்கியிருந்தது. மற்ற எந்தத் துறைகளுக்கும் மதம் ஒத்துவராது. அத்துறைகளுக்கான அனைத்துக் கோட்பாடுகளையும், ஒழுங்குகளையும் மேற்குலகிடமிருந்தே தத்தெடுக்க வேண்டும் எனக்கூறிக்கொண்டு வாழ்ந்த குழுவினராக இவர்களை இனங்காணமுடியும்.

மொத்தமாக நோக்கினால், மேலே விபரிக்கப்பட்ட முதலாவது குழுவினர் தாங்கள் இஸ்லாத்தைப் பாதுகாப்பதாக நினைத்துக் கொண்டு செயற்பட்டாலும் அது முழுமையான பணியாக அமையவில்லை. இரண்டாவது குழுவினர் இஸ்லாத்தில் அக்கறையின்றியே இருந்து விட்டனர். அதாவது, முழுமையான தூய இஸ்லாம் அந்த இரு குழுக்களாலும் விளங்கப்படவுமில்லை; விளக்கப்படவுமில்லை.

### இஸ்லாமிய எழுச்சி இயல்பானது; தவிர்க்க முடியாதது

எது எப்படி அமைந்தாலும் இஸ்லாமிய எழுச்சி என்பது இவ்வுலகில் தவிர்க்க முடியாத ஒரு நிகழ்வாகும். இறையாட்சி மீண்டும் உலகம் முழுவதும் நிலை நிறுத்தப்படுவது வியப்பிற்குரிய தொன்றல்ல.

பல வருடங்களுக்கு முன் முறிந்து விழுந்த இஸ்லாமிய சாம்ராஜ்யம் மீண்டும் ஒரு முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை தூக்கப்போவதில்லை என்று இஸ்லாத்தின் எதிரிகள் உறுதியாக நம்பினார்கள். அந்த நம்பிக்கையில் மண்ணை வாரி இறைத்து விட்டு மீண்டும் இஸ்லாம் எழுச்சியடைவதைக் காண முடிகிறது. இதைக் கண்ட அவர்களுக்கு நடுக்கம் எடுத்து விட்டது. எது நிகழக்கூடாது என்று ஒருமித்துக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்களோ அது விரைவிலேயே நிகழப்போகிறது.

எனவே, யாராவது தூய இஸ்லாத்தைப் பேசினால் அவருக்கு "அடிப்படைவாதி" எனப் பெயர் சூட்டி அடியோடு ஒழித்து விடப் பார்க்கிறார்கள். மாசுமறுவற்ற இஸ்லாம் எங்கு அமுல் நடத்தப்படுகிறதோ அங்கு எச்சரிக்கையோடு நடந்து கொள்கிறார்கள். அதற்கு "அடிப்படை வாதம்" என்று அடையாளமிட்டு இஸ்லாத்தின் எதிரிகள் அனைவரும் ஒன்று திரண்டு அதைத் தகர்த்தெறிய முனைப்போடு செயற்களத்தில் குதிப்பதைக் காணலாம். இஸ்லாமிய உலகில் பொஸ்னியா, ஆப்கானிஸ்தான், காஷ்மீர், பலஸ்தீனம், அல்ஜீரியா, செச்னியா போன்ற பல்வேறு நாடுகளில் நிகழும் போராட்டங்கள் இந்தப் பின்னணியுடன் நோக்கப்பட வேண்டியவையே.

ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரை இஸ்லாமிய எழுச்சியை நெற்றி சுருக்கிப் பார்க்க வேண்டியதில்லை. ஏனெனில் அது இம்மார்க்கத்தின் இயல்பான ஓர் அம்சமாகும். 'இஸ்லாம் ஒரு போதும் இறந்து விட மாட்டாது. இவ்வுலகின் கடிவாளம் அதன் கையிலேயே இருக்க வேண்டும். உலகம் உள்ளளவும் அது உயிர் வாழ்ந்து கொண்டே இருக்கும். அது ஒருபோதும் இருந்த இடந்தெரியாமல் ஒதுக்கித் தள்ளப்பட்டு விடாது' என்று ஒவ்வொரு முஸ்லிமும் உறுதியாக நம்ப வேண்டும். இந்த உண்மையை அல்குர்ஆன் மிக அழகாக விளக்குகிறது.

"அவன் தான், நேர்வழியையும் சத்திய மார்க்கத்தையும் கொடுத்து இவ்வுலகில் அதுவே மிகைத்ததாக இருக்க வேண்டும் என்று தனது தூதரை அனுப்பி வைத்தான்"

இவ்வசனம் இதே சொற்களில் சூறா அத்தவ்பா 33, சூறா அஸ்-ஸப்-9, சூறா அல் பத்ஹ்-28 ஆகிய மூன்று இடங்களிலும் இதே கருத்தை வலியுறுத்துவதாய் அமைந்துள்ளது.

இவ்வசனங்கள் இறங்கியமைக்கான பின்னணிகளை அவதானித்துப் பார்த்தால் இங்கே சொல்ல எடுத்துக் கொண்ட கருத்து இன்னும் தெளிவாகப் புரியும்.

"உஹத்" யுத்தம் பற்றி யாவரும் அறிவர். இந்தப்போரில் முஸ்லிம்கள் பெரும் அழிவை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சொற்ப தொகையினரான அவர்களுக்கு இஸ்லாத்தில் இருந்த நம்பிக்கை ஆட்டங்காணப் பார்த்தது. இத்தோல்வியைத் தாங்க மாட்டாமல் சில ஸஹாபாக்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப் பட்டார்கள். இந்த வேளை இறங்கிய இவ்வசனம் முஸ்லிம்களைத் தேற்றி விடுவதாய் அமைந்தது. 'உங்களது தோல்விக்குக் காரணம் இஸ்லாம் அல்ல; உங்கள் பலவீனம் தான்' என்று பாடம் சொல்லிக் கொடுத்தது. சோர்ந்து போன உள்ளங்களை உசுப்பி எடுத்துத் தூக்கி விட்டது.

அடுத்து "ஹுதைபியா" ஒப்பந்தத்தின் போது இதே வசனம் இறங்குகிறது. இதன் நிபந்தனைகளைப் படித்துப் பார்ப்பவர்கள் அதன் வெளிப்படையை வைத்து அது முஸ்லிம்களுக்குப் பெரும் இழப்பு என்றே கருதுவார்கள். ஆனால் இன்னும் சற்று ஆழ்ந்து அவதானித்தால் உண்மையில் முஸ்லிம்களுக்கே அது பெரும் வெற்றி என்பது புலனாகும். இச்சந்தர்ப்பத்தில் 'நீங்கள் பலமடைந்து விட்டீர்கள்' என்று விளக்குவதாக இவ்வசனம் இறங்கியது.

"தபூக்" யுத்தத்தின் போதும் இதே வசனம் இறுதியாக இறங்கியதைக் காணலாம். இந்த யுத்தம் அப்போதிருந்த இஸ்லாமிய இராச்சிய எல்லைகளைக் கடந்து சென்று நிகழ்ந்த ஒன்றாகும். எனவே, முழு உலகையும் தன் கைவசப்படுத்திக் கொள்ளும் சக்தியாக இஸ்லாம் மாறி விட்டது என்பதை உறுதிப்படுத்தும் ஆரம்ப அறிவுறுத்தலாக இந்த யுத்தம் அமைந்தது. இஸ்லாமானது உலகை ஆள வந்த மார்க்கமே என்பதைக் காட்ட இவ்வசனம் இச்சந்தர்ப்பத்தில் இறங்கியது.

எனவே, இஸ்லாமிய எழுச்சி என்பது இயல்பான ஓர் அம்சமாகும். அதை எச்சக்தியாலும் தடுக்க முடியாது. ஆயினும் வெறுமனே அற்புதமான முறையில் (முஃஜிசாத்களால்) மட்டும் இஸ்லாம் எழுச்சி பெறும் என்று எதிர் பார்க்க முடியாது. அது முஸ்லிம்களது உழைப்பையும் தியாகத்தையும் வேண்டி நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலபோது முஸ்லிம்கள் தங்களது மார்க்கத்தில் கவனயீனமாக இருக்கலாம்; சோர்வுற்று மடிந்து போய்க்கிடக்கலாம். இப்படியான வேளைகளில் அல்லாஹ் ஓர் ஏற்பாட்டை அமைத்து வைத்துள்ளான். தங்களது பணியை மறந்து போயிருக்கும் முஸ்லிம்களைத் தட்டியெழுப்பி, கண் விழிக்கச் செய்யும் மனிதர்களை அனுப்பி வைக்கிறான்.

"ஒவ்வொரு நூற்றாண்டின் இறுதியிலும் இந்த உம்மத்திற்கு அதன் மார்க்கத்தைப் புனர் நிர்மாணம் செய்யும் நபர்களை அல்லாஹ் அனுப்பி வைக்கிறான்" என்ற நபிவாக்கு இதையே குறிக்கிறது.

இந்த வகையில் இரண்டாம் உமர், நான்கு இமாம்கள், இமாம் கஸ்ஸாலி, இப்னு தைமியா, ஷாஹ்வலியுல்லாஹ், அஹ்மத் ஸிர்ஹிந்தி போன்ற இன்னும் பலரை வரலாற்றில் தோன்றிய 'முஜத்தித்'களாக பல இஸ்லாமிய அறிஞர்கள் இனங்காண்கிறார்கள். அதேபோல் நவீன காலத்தில் முஹம்மதிபின் அப்துல் வஹ்ஹாப், முஹம்மத் அப்துஹு, ஹஸனுல் பன்னாஹ், மௌலானா மௌதூதி, இல்யாஸ் (ரஹ்), ஸையித்குதுப், யூஸுப் அல்கர்ழாவி போன்றோரையும் இஸ்லாமிய இயக்கங்களையும் இப்பணியைச் செய்வதாக இனங்காண முடியும்.

"மார்க்கத்தைப் புதுப்பித்தல்'', ''புனர் நிர்மானம் செய்தல்'', "இஸ்லாத்தை மீள உயிர்ப்பித்தல்" என்ற அனைத்தும் இஸ்லாமிய எழுச்சியையே குறிக்கின்றன. புனர்நிர்மாணம் என்பது புதிதாக ஒன்றை நிறுவுவதல்ல. மாறாக முன்னர் நிறுவப்பட்ட ஒன்றில் படிந்துள்ள அழுக்குகளை அகற்றி, இடிந்த பகுதிகளை மீளக் கட்டியெழுப்புவதாகும். இதே போல் இந்த மார்க்கமும் அதன் தூய உருவம் சிதைக்கப்பட்டதாக இருக்கும் போது அதைச் சீரமைப்பதற்கென்று அல்லாஹ் இப்படியான ஏற்பாடுகளை அமைத்து வைத்துள்ளான்.

இன்னும் தெளிவாக நோக்கினால், இஸ்லாம் மூன்று விதமாக உருக்குலைக்கப் பட்டிருக்கும்.

1. "அறியாதவர்கள்" (ஜாஹில்கள்) மார்க்கக் கருத்துக்களுக்கு வழங்கிய பிழையான விளக்கங்களால்.

2. "குழப்பவாதிகள்" கொண்டு வந்து குவித்த புதிய விடயங்களால்.

3. "அத்துமீறியவர்கள்" ஏற்படுத்தி விட்ட திரிபுக்கருத்துக்களால்.

எனவே, இவ்வாறெல்லாம் சிதைக்கப் பட்டுள்ள மார்க்கத்தைத் தூசுதட்டித் தூய்மைப் படுத்துவதே 'முஜத்தித்'களின் பணியாகும்.

சமூகத்திலே இஸ்லாமியக் கருத்துக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பல தவறான விளக்கங் களைக் களைந்து விட வேண்டும். அவ்வாறே அதில் அறிந்தோ அறியாமலோ புதிதாகச் சேர்க்கப்பட்ட அம்சங்கள் (பித்அத்கள்) அகற்றப்பட வேண்டும். இவைகள் தவிர இஸ்லாத்தின் எதிர்ச்சக்திகளால் தூண்டப்பட்ட, அத்து மீறியவர்களால் சேர்க்கப்பட்ட பல கருத்துக்கள் இஸ்லாமியக் கருத்துக்களோடு இரண்டறக் கலந்து கிடக்கின்றன. இவைகளனைத்தையும் இனங்கண்டு அகற்றி விடுவதும் இவர்களது கடமையாகும். அத்தோடு நவீன உலகத்திற்கு ஏற்ற வகையில் இந்த இஸ்லாத்தை முழுமையாகவும், தூய்மையாகவும் எத்தி வைத்தலே இந்த "முஜத்தித்"களது மிக முக்கிய பணியாக உள்ளது.

இஸ்லாமிய உம்மத் என்பது தொடர்ந்தும் கவனக்குறைவாக இருந்து விட மாட்டாது. இப்படிச் சில போது நிகழ்ந்து விட்டால் அவர்களைத் தட்டியெழுப்பி விட வேண்டும். எனவே, அதற்கென்று ஒரு குழு இயங்குவது இம்மார்க்கத்தின் இயல்பான அம்சங்களில் ஒன்றாகும்.

**"எனது சமூகத்தில் ஒரு குழுவினர் அல்லாஹ்வின் ஏவலை எடுத்து நடந்து கொண்டே இருப்பார்கள். அவர்களை யார் கைவிட்டாலும் அவர்களோடு முரண்பட்டுக் கொண்டாலும் எந்தத் தீங்கும் ஏற்பட்டு விடாது. இறுதி நாள் வரைக்கும் அவர்கள் இப்பணியை மக்கள் மத்தியில் தொடர்ந்து கொண்டே இருப்பார்கள்".**

(புகாரி)

எனவே, இஸ்லாமிய எழுச்சி என்பது எந்தவொரு சக்தியாலும் தடுத்து விட முடியாத ஒன்று என்பது புலனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இஸ்லாமிய எழுச்சியின் சிறப்பம்சங்கள்

இப்பூமியில் ஒரு பொழுதுமே இஸ்லாம் தலைகாட்டக்கூடாது என்று இஸ்லாத்தின் எதிரிகள் இஸ்லாத்திற் கெதிராக மேற்கொண்ட சதி நடவடிக்கைகள் எண்ணிலடங்காதவை. முஸ்லிம்கள் மத்தியில் இவ்வெதிரிகளால் மேற்கொள்ளப்பட்டு வெற்றி கண்ட "சிந்தனைப் படையெடுப்பு" இவற்றுள் முக்கியமானது. இவர்களது அனேகமான செயற்திட்டங்கள் இளைஞர் மட்டத்தையே இலக்காகக் கொண்டமைந்தன. ஆனாலும் அவர்களது முயற்சிகள் இன்று தோல்வி கண்டு வருகின்றன. சதிகாரர்களது முகங்களில் கரி பூசி விட்டு, இன்று இளைஞர்களே இந்த எழுச்சியை முன்னெடுத்துச் செல்கின்ற திருப்திகரமான ஒரு சூழ் நிலை தோற்றம் பெற்றுள்ளது.

இளைஞர்கள் மேற்குலகினது நிர்வாண நாகரிகத்தை மிகக் கடுமையாக வெறுக்கின்றனர். இஸ்லாத்தையே பின்பற்ற வேண்டுமென்ற ஆர்வம் அவர்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது. ஐரோப்பிய நாடுகளின் கலாசாலைகளிலேயே கற்றுவிட்டு வருகின்ற பெரும் கல்விமான்கள் இஸ்லாமிய எழுச்சியை மேலும் ஊக்குவித்து, தாங்களே அதை முன்னெடுத்தும் செல்கின்றனர். பல இஸ்லாமிய நாடுகளில் பெருந்தொகையான இஸ்லாமியக் கல்விக் கூடங்கள் நிறுவப்பட்டு இளைஞர், யுவதிகளுக்குத் திருப்திகரமான முறையில் இஸ்லாம் போதிக்கப்படுகின்றது. உலகிலேயே அதிக எண்ணிக்கையில் நூல்களையும் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் வெளியிடும் ஒரு மகிழ்ச்சிகரமான நிலைக்கு முஸ்லிம் நாடுகள் மாற்றம் பெற்றுள்ளன. இவ்வகையான செயற்பாடுகளின் பின்னணியில் நின்று உழைப்பவர்கள் இளைஞர்களாகவே இருப்பதைக் காணலாம்.

இதை விட மேலாக, யுவதிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சி பெருமகிழ்வைத் தருகிறது. "பர்தா" அணிவதே இன்றைய முஸ்லிம் பெண்களது அதி உயர் நாகரிகமாக மாறிவிட்டது. இஸ்லாம் எதிர் பார்ப்பது போல் உடை அணிவதை எதிர்த்த பல பெண்கள் இன்று முற்றாக மாறி விட்டனர். இஸ்லாமிய எழுச்சியில் சங்கமித்துவிட்ட அவர்கள் அதன் துரித வளர்ச்சிக்குத் தங்களால் முடியுமான அனைத்துப் பங்களிப்புகளையும் வழங்குகிறார்கள்.

"இஸ்லாமிய எழுச்சியிலே நவீன யுகத்தின் எந்த யுக்திகளும் சாதனங்களும் ஏற்கப்படக் கூடாது" என்ற ஒரு மனோநிலை பலரிடம் இருந்தது. இது பெரும் விமர்சனத்திற்குட்பட்டுத் தற்பொழுது மாற்றம் பெறுவதைக் காணலாம். தங்கள் பணிக்குப் பயன்படக்கூடிய அனைத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற வகையில் பல செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. இவ்வாறான பல நிகழ்வுகள் நபி (ஸல்) அவர்களது வாழ்க்கையில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

'தங்கள் பின்னடைவுக்குக் காரணம் தாம் இஸ்லாத்தில் இருப்பதாகும்' என்ற கருத்து படித்த முஸ்லிம்கள் மட்டத்தில் பலரிடையே நிலவி வந்தது. இவர்கள் இஸ்லாத்தை வெறுப்புணர்வோடும் இரண்டாம் தரத்திலும் வைத்து நோக்கினர். இந்த மோசமான கருத்துப் போக்கிலிருந்து இப்பொழுது இவர்கள் விடுபட்டு தங்கள் பின்னடைவிற்குக் காரணம் இஸ்லாத்தை விட்டுத் தூரமானதே என்ற உண்மையை ஏற்றுக் கொள்கின்றனர்.

இன்றைய இஸ்லாமிய எழுச்சியை படித்த மட்டத்தின் எழுச்சியாகக் கருத முடியும். இஸ்லாத்தைப் பேராவலோடு தேடிப்படிக்கும் ஓர் உற்சாகமான சூழல் இவர்களிடையே நிலவுவதைக் காணமுடிகிறது. ஏனைய அனைத்தையும் விட இஸ்லாம் அமோக வரவேற்பைப் பெறும் நிலைக்கு உயர்ந்து விட்டது. உலக நாடுகளில் காணப்படுகின்ற இஸ்லாத்திற்கெதிரான சதி முயற்சிகளை முறியடிக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பின்னணியில் இப் படித்த வர்க்கத்தினர் செயற்படுகிறார்கள்.

### இஸ்லாமிய எழுச்சி எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

இப்பிரச்சினைகளை இரண்டாக வகுத்து நோக்கலாம். முதலாவது வகையானது முஸ்லிம் சமூகத்திற்குள்ளால் இருந்து வரும் பிரச்சினைகளைக் குறிக்கின்றது.

முஸ்லிம்களை ஆக்கிரமித்த ஒரு வகையான சிந்தனைப்போக்கு இஸ்லாமிய எழுச்சியின் வேகத்தை மந்தப்படுத்தவதாய் அமைகின்றது. ஆரம்பகால முஸ்லிம்கள் எச் சந்தர்ப்பத்திலும் இஸ்லாத்தைப் பிழைகாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. முஸ்லிம்கள் தோல்வியடைந்து விட்டால் அதற்குக் காரணம் அவர்களிலேயே இருக்கும் தவறுகள் தாம் என்று மிக உறுதியாக நம்பினார்கள். இஸ்லாமிய வரலாற்றில் மங்கோலியப்படையெடுப்பை யாரும் மறந்து விட முடியாது. அதில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அழிவுகள் எண்ணற்றவை. அதன்போது கூட இஸ்லாத்தில் பிழை இருக்கிறது என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படவில்லை. தங்களது தோல்விக்குக் காரணம் தாங்களே என்பதை ஏற்றுக் கொண்டார்கள்.

"நீங்கள் சோர்ந்து விடாதீர்கள்; கவலைப் படாதீர்கள்; உண்மையான முஃமின்களாக நீங்கள் இருந்தால், உலகில் உயர்ந்த அந்தஸ்துள்ள வர்கள் நீங்களே" *(3:139)*

இத்திருவசனத்தினை அம்முஸ்லிம்கள் மறந்து விடவில்லை. இதனாலேயே இஸ்லாத்தை அழிக்க வந்த அந்த மங்கோலியர்களே இஸ்லாத்தை ஏற்று அதற்காகப் பாடுபடும் நிலையை அப்போது காண முடிந்தது.

ஆனால், இன்றைய முஸ்லிம்கள் பலரிடத்தில் இந்த உண்மைக்கு இடமில்லை. தாங்களே உலகில் உயர்ந்தவர்கள் என்ற "மேலாண்மை உணர்வு" அவர்களிடம் வற்றிக் காய்ந்து விட்டது. தங்கள் கைவசம் இருக்கின்ற உயர்தரமான இஸ்லாமியப் பண்பாடுகளைப் புறக்கணித்து விட்டு மேற்குலக நாகரிகங்களில் மோகங் கொள்கின்றனர். இவ்வாறு தங்களைத் தாழ்த்திச் சீரழிந்து திரியும் இழிதரமான நிலை மனதைப் புண்படுத்துகிறது. இந்நிலை இப்பொழுது வெகுவாகக்குறைந்து வந்தாலும் முற்றாக மறைந்து விடவில்லை. எனவே, இது பரவி வரும் இஸ்லாமிய எழுச்சியின் வேகத்தை மந்தப்படுத்தும் ஒரு காரணியாக உள்ளது.

இந்த இஸ்லாமிய எழுச்சியைச் சரியான முறையில் வழிநடாத்தப் போதுமான துணைச் சாதனங்கள் இல்லை என்பது இன்னொரு பிரச்சினையாகும். அதாவது அனைத்து விதமான துறைகளிலும் முஸ்லிம்கள் பின்னடைந்து காணப்படுகின்றனர். தங்களது சொந்தக் காலில் நிற்குமளவிற்கு அவர்கள் தன்னிறைவு அடையவில்லை. "உற்பத்திச் சமூகம்" வேறொன்றாயிருக்க "நுகர்வுச் சமூகம்" என்ற பட்டத்தை இஸ்லாமிய உலகம் சுமந்து கொண்டிருக்கிறது. மத்திய கிழக்கிலே முஸ்லிம் ஒருவரின் வீட்டுக்குச் சென்று அங்கேயுள்ள ஒவ்வொரு பொருளையும் அதன் உற்பத்தி நாட்டுக்குத் திருப்பியனுப்பி விட்டால் அந்த முஸ்லிம் வெறும் பாலைவனத்தில் ஆடைகளெதுவுமின்றி நிற்க வேண்டியிருக்கும் என்ற கசப்பான உண்மையை இஸ்லாமிய உலகம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இஸ்லாத்திற்காகப் பாடுபடுவதற்கென்று இயக்கங்கள் அதிகரித்தமை இன்னொரு தடையாகும். பல தலைமைகள் உருவாக முயற்சிப்பதால் இஸ்லாமிய உலகில் ஓர் இழுபறி நிலை தோன்றியிருக்கிறது. எல்லோரையும் கவர்ந்திழுக்கும் ஆற்றல் படைத்த தலைமை ஒன்று இன்றைய அவசரத் தேவையாகும்.

முஸ்லிம்கள் மத்தியில் புரிந்துணர் வின்மையை அடுத்த பிரச்சினையாகக் குறிப் பிடலாம். இதனால் சிலர் இஸ்லாத்தின் எதிரிகளுக்குப் பகடைக்காய்களாக மாறி விடும் நிலையை சாதாரணமாகக் காண முடிகிறது. அற்ப கருத்து முரண்பாடுகளை வைத்துக் கொண்டு தங்களுக்குள்ளே பெரும் மோதல் களையும் குரோதங்களையும் வளர்த்துக் கொள்ளும் சிறுபிள்ளைத்தனமான நிகழ்வுகள் அதிகரித்து வந்துள்ளன.

இஸ்லாமிய எழுச்சி எதிர்கொள்ளும் உள்ளார்ந்த பிரச்சினைகள் இவ்வாறிருக்க வெளியார்ந்த பிரச்சினைகளை இனி நோக்குவோம்.

இஸ்லாத்தின் எதிரிகளிடம் சிக்கியிருக்கும் பொதுசனத் தொலைத் தொடர்புச் சாதனங்கள் இவ்வகையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. இஸ்லாத்தைப் பற்றி மிக மோசமான கருத்துக்களை சர்வதேச ரீதியில் இவை பரப்பி வருகின்றன. இஸ்லாத்தை ஒரு காட்டுமிராண்டித்தனமான மதமாக உருவகித்து, பரவலான ஒரு வெறுப்புணர்வை உருவாக்கி விடுவதில் இவை பெரும் வெற்றி கண்டு வருகின்றன. மாசுமறுவற்ற இஸ்லாத்தைப் பேசுபவர்கள் "அடிப்படை வாதிகள்" என்றும் "மத வெறியர்கள்" என்றும் உலகிற்குக் காட்டப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு யுக்திகளைக் கொண்டு இஸ்லாத்தின் பரம வைரிகள், சிந்தனா ரீதியான ஆக்கிரமிப்பில் இன்றும் முனைப்போடு செயற்படுவதைக் காணலாம். இவ்வாறான சதி முயற்சிகளுக்கு விலை போகும் பல கீழைத்தேய வாதிகள் இவ்வெதிரிகளின் முகவர்களாக நின்று செயற்பட்டு வருகிறார்கள். சல்மான ருஷ்தி, தஸ்லீமா நஸ்றீன் போன்றோர் இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

இவ்வாறான தடைகளுக்கு மத்தியில் தலையெடுத்து உலகளாவிய ரீதியில் விருத்தி பெற்றுவரும் இஸ்லாமிய எழுச்சி, எமது நாடான இலங்கையிலும் கணிசமானளவு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் "தஃவா" பணியின் மீதான ஆசையும் ஆர்வமும் வளர்ச்சி பெற்று வருகின்றன. அதற்கான பல்வேறு நடவடிக்கைகளும் ஆங்காங்கே நடைபெறாமலில்லை.

எனவே, 20ம் நூற்றாண்டின் இறுதி நாட்களை உலகம் எண்ணிக் கொண்டிருக்கும் இக்காலப்பகுதியில் கட்டுப்படுத்த முடியாமல் காட்டாறு போல் பாய்ந்து வரும் இஸ்லாமிய எழுச்சியைக் கண்ணுற்ற மேற்குலகிற்கு குலை நடுக்கம் எடுத்து விட்டது.

இறுதியாக, இஸ்லாத்தின் எதிரிகளுக்கு ஒன்று சொல்லிவைக்க விரும்புகிறோம். ஜன்னல்களைச் சாத்தி விடுவதால் ஆதவன் அஸ்தமித்து விட்டான் என்று அர்த்தமல்ல. கண்களுக்குக் கறுப்புக்கண்ணாடி அணிந்து கொண்டால் மட்டும் உலகம் இருண்டு விட்டதென்று தப்புக்கணக்குப் போட்டுக் கொள்ளாதீர்கள்.

**உசாத்துணைகள்:-**

1. வாகிஉனா அல் முஆசிர் (முஹம்மது குதுப்)
2. நிராகரிப்புக்கும், தீவிரவாதத்திற்கும் மத்தியில் இஸ்லாமிய எழுச்சி. (யூசுப் அல் கர்ளாவி)
3. ஹுமூமுல் முஸ்லிம் அல்முஆஸிர்.

✣✣✣✣✣

*"நீங்கள் அமைதியை திரையாகவும் உங்கள் இயக்கத்தைக் கூர்ந்து அவதானித்துக் கொண்டிருப்பவர்களைக் குருடாக்கும் புகையாகவும் எடுத்துக் கொள்ளுங்கள். இதுவே இமாம் ஹஸனுல் பன்னா (றஹ்) அவர்களது வெற்றியின் மர்மமாகும். அதனால்தான் தெள்ளிய கருத்துக்களைப் பறையடித்துப் பரப்பாமலே பிரசாரகர்களின் படையொன்றை அமைதியாகத் திரட்ட அவர்களால் முடிந்தது."*

*பேரறிஞர் முஹம்மத் அல் - கஸ்ஸாலி*

# சீறாவின் ஒளியில் இஸ்லாமிய தஃவா

ஏ.எஸ்.எம். அக்ரம் (விடுகை வருடம்)

இவ்வுலகில் மனிதனைப் படைத்த இறைவன் அத்தோடு மாத்திரம் நின்று விடாது அவன் தன் வாழ்வைச் செப்பனிட்டுக் கொள்வதற்காக ஒரு சீரிய வாழ்க்கைத்திட்டத்தையும் வகுத்துக் கொடுத்தான். அதனை நடைமுறைச் சாத்தியமாக்கிக் காட்டுவதற்காக அவ்வப்போது நபிமார்களையும் ரஸூல்மார்களையும் அனுப்பினான். இவ்வரிசையிலே இறுதியாக வந்தவரே முஹம்மத் (ஸல்) அவர்களாவர்.

நபியவர்கள், இறைவனிடமிருந்து பெற்ற இத்தூதுத்துவமானது இவ்வுலகில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனில் அப்பணியை தன்னால் மாத்திரம் நிறைவேற்ற முடியாது என்பதையும், அதற்காக இக் கொள்கைகளை ஆழமாக விளங்கி, அதன் மீது அதிக பற்றும் விருப்பமும் கொண்ட ஒரு சமூகம் உருவாக்கப்பட வேண்டும் என்பதையும், அப்போதுதான் அவர்கள் மூலம் இக்கொள்கை பிற்சந்ததியினருக்கு எத்தி வைக்கப்பட்டு ஈற்றில் வெற்றிவாகை சூட முடியும் என்பதையும் உணர்ந்திருந்தார்கள். இம்மேலான உணர்வுதான் நபியவர்கள் தம் வாழ்வு முழுவதையும் இஸ்லாத்திற்காக அர்ப்பணிக்க முன் வந்தமைக்குக் காரணமாகும்.

நபியவர்களது வாழ்க்கையைப் பொதுப் படையாக நோக்கின், சிறுபராயம் முதலே ஒரு அழைப்பாளனுடைய மனோநிலை அவரிலே காணப்பட்டதை அவதானிக்கலாம். இஸ்லாமிய தஃவா என்பது மனிதனுக்கு இவ்வுலக வாழ்வின் அர்த்தத்தைச் சொல்லிக் கொடுப்பதாகும். நபியவர்களும் இளமை முதல் அதனையே தேடியலைந்தார்கள். அன்னார் சராசரி மனிதனைப்போன்று வாழ முற்படவில்லை. அர்த்தமற்ற கேளிக்கைகளிலும், வீண் விளையாட்டுக்களிலும் வாழ்வைக்கழிக்காது அதனை அர்த்தமுள்ளதாக மாற்றியமைக்க முனைந்தார்கள். சிறு வயதில் தனது நண்பர்கள் விளையாட அழைத்த போது "நான் இதற்காக அனுப்பப்படவில்லை." எனக் கூறியமை, வாழ்வின் இலட்சியத்தை நபி (ஸல்) அவர்கள் தன் இளமைக் காலத்திலேயே அறிந்து வைத்திருந்தார்கள் என்பதை உணர்த்தி நிற்கிறது.

நபியவர்கள் தனது வாலிப வயதிலும் ஓர் அழைப்பாளனுக்குரிய ('தாஈ'க்குரிய) மனோ நிலையுடன் காணப்பட்டார்கள். நித்தம் இந்த சமூகம் சிக்கித்தவித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கும் சீர்கேடுகளுக்கும் தீர்வு யாதெனச் சிந்தித்த வண்ணமே அவர்களது பொழுது கழிந்தது. தனது முப்பதாவது வயதுக்குப் பின்னர் பெரும்பாலும் தனிமையையே விரும்பிய நபியவர்கள், தமது வியாபாரத்தைக்கூட மறந்து விட்டு சமூகத்தைப் பற்றிய சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தார்கள். இவ்வாறு பிரச்சினைகள் நபியவர்களது உள்ளத்தை அரித்துக் கொண்டிருந்த போது தான், அல்லாஹ் வஹியை இறக்கி அவர்களுக்கு மன ஆறுதலையும் தெளிவையும் வழங்கினான். இதனைப் பற்றிக் கூற வந்த அல்குர்ஆன்,

**"நாம் உமது நெஞ்சை விரிவுபடுத்தவில்லையா?"** (94:1) என பிரஸ்தாபிக்கிறது.

மேற்கூறியவற்றிலிருந்து, தனக்காகவும் தனது குடும்பத்திற்காகவும் சிந்திப்பவன் உண்மையான 'தாஈ' ஆக இருக்க முடியாது; மாறாக, சமூகத்தின் மேம்பாட்டிற்காகவும் அதன் விமோசனத்திற்காகவும் சிந்திப்பவனே உண்மையான 'தாஈ'ஆக இருக்க முடியும் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் நபியாக வந்ததன் பின்னர் அவர்களது மனோநிலை எவ்வாறு இருந்ததென அவதானிப்பின், அவர்கள் தமது சுய விருப்பு வெறுப்புக்களையும் ஆசாபாசங்களையும் ஒரு பொருட்டாகக் கருதாது தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்ததைக் காணமுடியும்.

**"போர்த்திக் கொண்டிருப்பவரே எழுந்திரும் (சென்று) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக" (74:1,2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே குறிப்பிட்ட வசனத்தில் தஃவாவிற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்ட வுடனேயே நபியவர்கள் வெளியேறிச் செல்ல முற்பட்டார்கள். அப்போது கதீஜா நாயகி அவர்கள் சிறிது உறங்கி ஓய்வெடுத்துச் செல்லுமாறு கூறவே, நபியவர்கள் "தூங்கிய காலம் முடிந்து விட்டது" எனக்கூறினார்கள். உண்மையில் ஒரு தாஈக்கு தூக்கம், பசி போன்ற உடலியற் தேவைகள் அற்பமான தாகவே தோன்ற வேண்டும் என்ற உண்மை இதிலிருந்து தெரியவருகிறது.

நபியவர்கள் மரணிக்கும் போது கூட, தான் இவ்வுலகை அனுபவிக்க வில்லையே...! சொத்துக்கள் சேர்த்து இன்பமாக வாழ வில்லையே...! என்ற கவலை அணுவளவும் அவர்களிடம் இருக்கவில்லை. மாறாக, மறுமையிலே தனக்கு வெற்றியும் நிம்மதியும் உண்டு என்ற மனநிலையுடன் இருந்ததைக் காணலாம். அவர்கள் மரணத்தறுவாயில் "நான் மேலான ஒரு வெற்றியின் பால் செல்கிறேன்" எனக்கூறியமை, ஓர் இஸ்லாமிய தாஈ தனது மரணத்தின் போது உலகில் எனது பிள்ளைகளை அநாதையாக விட்டுச் செல்கிறேனே என்ற மனோநிலையில் அன்றி, "நான் இவ்வுலகை விட உயர்ந்த இடத்திற்குச்செல்கிறேன். மரணம் கூட எனக்குப் பெரும் வெற்றியாகும்" என்ற மனோநிலையுடனேயே மரணிக்க வேண்டு மென்பதை தெளிவுபடுத்துகிறது.

நபியவர்கள் இவ்வுலகை நோக்கிய விதமானது குறிப்பிடத்தக்கதாகும். ஒருமுறை அவர், "எனக்கும் இவ்வுலகிற்கும் உரிய உதாரணம், ஒரு பிரயாணி தனது பயணத்தின் போது களைப்பாறுவதற்காக ஒரு மர நிழலில் அமர்ந்து விட்டு பின்னர் தனது பயணத்தைத் தொடர்வது போன்றது." என்றார்கள். இதன் மூலம் அவருக்கும் உலகிற்குமிடையிலான தொடர்பு எவ்வாறு காணப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், இது உலகை அனுபவிக்கக் கூடாது என்ற கருத்தைத் தராது. மாறாக, 'ஒரு தாஈ'க்கு உலகியற் தேவைகள் சிறு பகுதி ஒன்றாகவே இருக்க வேண்டும்; பிரசாரப்பகுதியே அவனது வாழ்வின் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக அமைய வேண்டும் என்ற கருத்தைத் தெளிவு படுத்துகிறது. இதைத் திறம்பட விளங்கியிருந்த ஸஹாபாக்கள் உலக வாழ்வில் அளவுக்கதிகம் பற்றற்றவர்களாக இருந்ததைக் காணலாம். வசதி இருந்தும் எளிமையாக வாழ்வதே அவர்களின் பண்பாக இருந்தது. அவர்களின் கண்ணோட்டத்தில் உலகம் தூர இருப்பதாகவும் மறுமை மிக அண்மையில் இருப்பதாகவும் தெரிந்தன.

நபியவர்கள் அவ்வப்போது செய்த பிரார்த்தனைகளை நோக்கின், அவை மறுமையையும் அதன் வெற்றியையும் அடிப் படையாகக் கொண்டமைந்திருந்தமை குறிப்பிடத் தக்கது. அன்னாரது துஆக்கள் உலக வாழ்விற்கு எந்தளவு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதையும் தஃவா பணிக்கு வழங்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தன. ஒரு 'தாஈ' மறுமையை தனது வாழ்வின் இலக்காகக் கொள்ள வேண்டும்; அற்ப உலக இன்பங்களை நோக்காகக் கொள்வது அவனுக்குப் பொருத்த மல்ல என்பதை நபியவர்களது வாழ்விலிருந்து எம்மால் புரிந்து கொள்ள முடியும்.

நபியவர்கள் தனது சமூகத்தின் நிலை கண்டு கவலை கொண்டமை அவர் கொண்டிருந்த மற்றொரு உன்னத பண்பாகும். மக்கள் ஈமான் கொள்ளவில்லையே! அவர்கள் நேர்வழி பெறவில்லையே! என சதாவும் கவலைப்பட்டவர் களாகவே வாழ்ந்தார்கள்.

***"அவர்கள் ஈமான் கொள்ளவில்லை என்பதற்காக நீர் சில வேளை கவலையால் உம்மையே அழித்துக் கொள்வீர் போல் தெரிகிறது"*** *(26:3)*

என குர்ஆன் குறிப்பிடும் அளவிற்கு அவர்கள் ஆழ்ந்த கவலை கொண்டார்கள். இந்நிலை ஓர் இஸ்லாமிய 'தாஈ' மனிதர்கள் நேர்வழி பெறாத போது மிகவும் கவலையடையக் கூடிய உள்ளத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. சமூகத்தைப் பற்றிய கவலைகளே அழைப்பாளன் ஒருவனுக்கு அதிகமாகக் காணப்பட முடியும். தஃவாவை தனது முழு நேரக் கடமையாக அமைத்துக் கொள்ளும் மனோநிலை இத்தகையவர்களுக்கே சாத்தியமானதாகும். இவ்வாறான செயற்பாடு களின்போது மட்டுமே அவனது தஃவா பூரண வெற்றி பெற்றதாக அமையும். மாறாக இரண்டாந்தர வேலையாக இதனைக் கொள்ப வர்கள் அதனது வெற்றியை எதிர்பார்க்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய தஃவாவை சுமக்க முன்னதாக, ஒருவன் அல்லாஹ்வுக்காக தனது வாழ்வை அர்ப்பணிக்க முன்வர வேண்டும். தனது மனோ இச்சைகளை விட்டுக் கொடுத்து, துன்ப துயரங்களை சகித்துக் கொள்கின்ற போது மட்டுமே தஃவா முழு நேரப்பணியாக மாறும். இதனைப் பகுதி நேர வேலையாகக் கொண்டால் இஸ்லாமும் பகுதி நேர வேலையாக அமைந்து விடும். இந்த வகையில், நபியவர்கள் மேற்கொண்ட பிரசாரப்பணியை ஆறு பகுதி களாக வகுத்து நோக்கலாம்.

1. மக்களுக்குத் தனது கொள்கைகளை எடுத்துக் கூறல்:-

இஸ்லாம் என்றால் என்ன? அதன் கொள்கைகள் கோட்பாடுகள் யாவை? அது எத்தகைய வாழ்வை வேண்டி நிற்கிறது? எனும் விடயங்களை விளக்குவதே இப்பகுதியாகும்.

**"நபியே மக்களை மதிநுட்பத்தோடும் அழகான உபதேசத்தின் மூலமும் உமது இரட்சகனின் வழியின் பால் அழைப்பீராக" (16:125)**

மேற்போந்த குர்ஆன் வசனம் அவர்களுடைய இந்த தஃவா முயற்சிக்கு அடிப்படையாக அமைந்தது. இதில் வரக்கூடிய 'ஹிக்மா' அதாவது 'ஞானம்' என்ற சொல் பரந்த கருத்தைப் பொதிந்ததாகும். சமூகச் சூழல், மக்களது அறிவுத்தரம் போன்றவற்றிற்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்; அந்தந்த சூழலுக்குப் பொருத்தமான முறையில் தஃவா முன்வைக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை இவ்வசனம் சுருக்கமாகக் காட்டுகிறது. இந்த வகையில் நபியவர்கள் தனது கொள்கைகளை முன் வைக்கும் போது இரண்டு வழிகளைக் கைக்கொண்டார்கள்.

**(1) தனி நபர் தொடர்பு:**

இது இரகசிய காலப்பிரிவு எனவும் குறிப்பிடப்படுகிறது. இது தஃவாவின் ஆரம்பக் கட்டமாதலால் நபியவர்கள் மிகவும் இரகசிய மாகவே தமது நெருங்கிய உறவினர்களிடமும் நண்பர்களிடமும் பிரசாரத்தை மேற்கொண்டார்கள். உதாரணமாக, வஹி இறங்கிய மறுகணம் தமது மனைவி கதீஜா நாயகியிடமும் தொடர்ந்து சிறிய தந்தையின் மகன் அலி (றழி)யிடமும் பின்னர் தமது நெருங்கிய நண்பரான அபூபக்கர் (றழி)யிடமும் தமது தஃவாவை எத்திவைத்தமையைக் குறிப்பிடலாம். தஃவா இரகசியமாக இருக்க வேண்டுமென்பதற்காக நபியவர்கள் அலி (றழி) அவர்களிடம், "நீர் ஏற்காவிடின் யாரிடமும் இதனைப் பற்றிக் கூறாதீர்" எனக் கூறியமை குறிப்பிடத்தக்கது. தஃவாவைப் பொறுத்தவரை இத்தகைய இரகசியப் பிரசாரமுறை இரண்டு கட்டங்களில் ஏற்படலாம்.

* பிரசாரத்தின் ஆரம்பக்கட்டம்.
* பிரசாரத்திற்கு அரசு தடைவிதிக்கும் போது.

2. பகிரங்கப்பிரசார முறை அல்லது பொதுவான பிரசாரம்

இது குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் மக்களோடு தொடர்பு கொள்ள ஏதுவாக அமையும் அனைத்து சாதனங்களையும் கையாண்டு தஃவாவை அமைத்துக் கொள்ளும் முறையாகும். நபியவர்கள் அக்காலத்தில் காணப்பட்ட அனைத்துத் தொடர்பாடல் முறை களையும் கைக்கொண்டார்கள். உதாரணத்திற்குச் சிலவற்றைக் கூறலாம்.

* விருந்துபசார வைபவங்களின் பின்னர் தஃவாவை முன்வைத்தல்.
* பல்வேறுபட்ட இடங்களில் மக்களை ஒன்று கூட்டி அழைப்பு விடுத்தல். (சபாமலை மீது ஏறி நின்று பிரசாரம் செய்தமை இதற்குச் சிறந்த சான்று)
* மக்கள் ஒன்று கூடும் இடங்களுக்குச் சென்று தஃவாவைச் செய்தல்
* தான் வாழும் பகுதியை விட்டு வேறு பிரதேசங்களுக்குச் சென்று தஃவாச் செய்தல்.
* கோத்திரத் தலைவர்களுக்கும் மன்னர் களுக்கும் கடிதங்களை அனுப்பி அழைப்பு விடுத்தல்.

நபியவர்கள் அனைத்து விடயங்களையும் ஒரே தடவையில் அனைவருக்கும் சொல்லி விடவில்லை. நுட்பமான திட்டமிடலின் அடிப்படையில் ஒவ்வொருவரது அறிவுத் தரத்தையும் கவனத்திற் கொண்டு தஃவா முன்வைக்கப்பட்டது. அவர்கள திட்டமிடல்கள் இறைவழிகாட்டலுக்கேற்பவே அமைந்து காணப்பட்டன. மக்காவில் இறங்கிய சூறாக்கள் இதனை அழகுற விளக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(2) உருவாக்கல்**

இரகசிய, பொதுப்பிரசாரங்களின் மூலம் பலர் இஸ்லாத்தை ஏற்றனர். இவர்களோடு றஸூல் (ஸல்) அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதையே 'உருவாக்கல்' என்ற பகுதி விளக்கி நிற்கிறது. அதாவது, கருத்துக்களை எத்தி வைப்பதோடு மட்டும் நின்று விடாது பூரண கொள்கைப் பற்றுள்ளவர்களாக அவர்களை மாற்றும் செயற்பாடாகும். கொள்கைகளை எடுத்துக் கூறல், அவற்றை ஏற்றோரை உருவாக்கல் என்ற இரு பகுதிகளும் மிக நெருக்கமானவை. இரண்டாவது பகுதி மூலமே முதற் பகுதி பூரணத்துவமடைகிறது. இஸ்லாமிய வரலாற்றில் முஸ்லிம்களது படிப்படியான வீழ்ச்சிக்குக் காரணம் மக்கள் இஸ்லாத்தை ஏற்கும் வேகத்தை விட அவர்களை உருவாக்கும் வேகம் குறைந்திருந்தமையே யாகும். நபியவர்களின் 'உருவாக்கல்' நடைமுறை இரு வகையில் இடம் பெற்றது.

* **ஆன்மீக ரீதியான உருவாக்கம்.**
* ***அறிவியல் ரீதியான உருவாக்கம்***

என்பவையே அவை இரண்டுமாகும். நபியவர்கள் தமது பாடத்திட்டத்தை எவ்வாறு அமைத்துக் கொண்டார்கள் என்பதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ளப்போதுமான ஆதாரம் எதுவும் கிடையாது. ஆனால், தமது தஃவாவில் தனிநபர் தொடர்பு, பொதுப்பிரசாரம் ஆகிய இரு கட்டங்களிலும் 'உருவாக்கல்' தொழிற்பாட்டை மேற் கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தனிநபர் தொடர்புக் காலத்தில் இரு வழிமுறைகள் கையாளப்பட்டன.

அ) சிறு சிறு குழுக்களாகப் பிரித்து உருவாக்கல்:- (சஃத் பின் அபீ வக்காஸ் தலைமையில் சிறு குழுவொன்றை தொழுகைக்காக மக்கா மலையடி வாரத்திற்கு அனுப்பி வைத்தமை).

(ஆ) தாருல் அர்கம் போன்ற வீடுகளில் ஒன்று கூட்டி உருவாக்கல்.

பொதுப்பிரசாரத்தில் உருவாக்கல் மூன்று வழிமுறைகளில் நிகழ்ந்தது. அவையாவன:-

(அ) பெருந்தொகையானவர்களை ஒன்று கூட்டிப் பயிற்றுவித்து உருவாக்கல். (இது பெரும்பாலும் 'தாருல் அர்கம்' இலேயே இடம் பெற்றது).

(ஆ) ஏனைய பிரதேசங்களுக்கு நபியவர்கள் சென்று உருவாக்கல் அல்லது சஹாபாக்கள் தாம் வாழும் பகுதிகளில் வசதிகள் இல்லாத போது வசதியான இடங்களுக்குச் சென்று பயிற்சிகளைப் பெறுதல்.

(இ) பொதுப்பேச்சுக்கள் (பகிரங்க உரைகள் மூலம் உருவாக்குதல்)

**(3) ஆயுதப்போராட்டம்**

இஸ்லாமிய தஃவாவிற்கெதிராக உருவாகும் தடைகளை நீக்குவதற்காகவே ஆயுதப் போராட்டம் நடைபெறும். மார்க்கத்தைப் பலவந்தமாகத் திணிக்கும் நோக்கம் அணுவளவும் இதிலில்லை. இஸ்லாத்தை ஏற்காமல் அதனை எதிர்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு எதிராகவே இது நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்காக்காலப்பிரிவில் குர்ஆன், ஹதீஸ் என்பன உத்தியோகபூர்வமாக ஆயுதப் போராட்டத்தை அனுமதிக்கவில்லை. கடுமையான துன்பங்கள் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட போதிலும் சகிப்புத்தன்மையோடு நடந்து கொள்ளும்படியே அவை வலியுறுத்தி வந்தன. இக்காலப்பகுதியில் ஆயுதப்போராட்டம் அனுமதிக்கப்படாமைக்கு இரு முக்கிய காரணங்களை முன்வைக்க முடியும்.

* போதிய ஆட்பலமும் ஆயுதபலமும் இல்லாமை.
* **ஆழ்ந்த மனப்பக்குவமும் தர்பிய்யத்தும் மனத் தூய்மையும் இல்லாமை.**

இப்பக்குவ நிலையினை அடைய முன்னர் போராட்டத்தில் ஈடுபட்டால் அது கொலைக் குற்றமாக அமைய வாய்ப்பிருந்தது.

மதீனாவிலும்கூட ஹிஜ்ரத் செய்தவுடனே போராட்டத்திற்கான அனுமதி வழங்கப்படவில்லை. அங்கும் பொறுமையைக் கடைப் பிடிக்கும்படியே பல தூண்டுதல்கள் முன்வைக்கப்பட்டன. அதன் பின்னர்தான் படிப்படியாக ஆயுதப்போராட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இறுதியில்,

**"காபிர்களை எங்கு கண்டாலும் கொலை செய்யுங்கள்" (2:191) "உலகில் எந்தவொரு பித்னாவும் இல்லாதிருக்கும் வரை போராடுங்கள்." (2:192)**

எனுமளவிற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்த வகையில் வஹியின் நேரடி வழிகாட்டலின் கீழ் நபியவர்கள் தனது போராட்டத்தை ஆரம்பித்து வெற்றி கண்டார்கள். ஆனால், தற்காலத்தில் ஓர் இஸ்லாமியக் குழுவோ அல்லது அமைப்போ இந்தப்பிரச்சினையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு அணுக வேண்டும் என்று பரிசீலிப்ப தாயின் கீழ் வரும் அடிப்படைகளைக் கருத்திற் கொள்வது அவசியமாகிறது.

* ஆயுதப் போராட்டத்திற்கு முன்பு இஸ்லாத்திற்கென்றொரு சுதந்திர பூமி இருப்பதோடு அது சில குறிப்பிட்ட பண்புகளையும் பெற்றிருத்தல் வேண்டும். அங்கு இஸ்லாமியச் சட்டங்கள் அமுலில் இருக்க வேண்டியதுடன் போராட்டத்தை மேற்கொள்ளக் கூடிய வளத்தையும் வெளிநாட்டுத் தொடர்புகளுக்குரிய பாதுகாப்பான பாதைகளையும் இயற்கைப் பாதுகாப்பு அரண்களையும் பெற்றிருத்தல் வேண்டும். இப்பண்புகள் காணப்படும் பட்சத்திலேயே போராட்டம் அனுமதிக்கப் படமுடியும். அவ்வாறு இல்லாவிடில் அப்பண்புகள் பூர்த்தி செய்யப்படும் வரை போராட்டத்தைத் தள்ளி வைத்தல் அவசியமாகும்.

* நபியவர்களின் 'தாயிப்' பயணமும் அபிசீனிய ஹிஜ்ரத்துக்களும் அன்னார் ஒரு சுதந்திர பூமியைத் தேடிக் கொண்டிருந்தார்கள் என்பதைக் காட்டு கின்றன. அத்தோடு மக்காக் காலத்தின் இறுதிப்பகுதியில் நபியவர்கள் பல்வேறு கோத்திரங்களுக்கும் சென்று பிரசாரம் செய்த போது "உங்கள் பலம் எப்படி"?, "உங்களையும் உங்கள் குழந்தைகளையும் காப்பது போல் என்னையும் காப்பீர்களா?" என்று கேட்டமையும் நபியவர்கள் குறிப்பிட்ட சில பண்புகளைக் கொண்ட ஒரு பூமியைத் தேடிக் கொண்டிருந்தார் கள் என்பதைக் காட்டுகிறது. அது போல் பிறரின் ஆதிக்கமும் அதிகாரமும் உள்ள ஒரு பிரதேசத்தில் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிப்பதை 'சீறத்' அனுமதிப்பதில்லை என்பதையும் இதிலிருந்து அறிய முடிகிறது.

* போராட்ட வீரர்கள் பூரண தகைமை அடைந்திருத்தல் வேண்டும். அல்குர்ஆன் ஜிஹாத் கடமையாவதற்கான வீரர்களின் தொகை பற்றிக்கூறும் போது பத்துக் காபிர்களுக்கு ஒரு முஃமின் என்ற அமைப்பிலும் இரண்டு காபிர்களுக்கு ஒரு முஃமின் என்ற அமைப்பிலும் கூறியுள்ளது. இவ்வாறு முரண்பட்ட விதத்தில் கூறப்படுவதற்கு இரு அம்சங்கள் காரணமாக அமையலாம்.

அ. ஈமானியத் தரத்தை வைத்து இவ்வாறு கூறியிருக்கலாம்.

ஆ. அக்காலத்தில் காணப்பட்ட பௌதீக ரீதியான வசதிகள், ஆயுத பலம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கூறியிருக்கலாம்.

முஸ்லிம் படையை விட காபிர் படை இரு மடங்காக இருப்பினும் முஸ்லிம் படை பின்வாங்காது போராடுவது கடமையாகிறது. அதே வேளை முஸ்லிம் படையை விடக் காபிர் படை பத்து மடங்காக இருப்பின் போராடுவது கூடும் எனினும் கட்டாயமில்லை. மேற்குறித்த அம்சம் ஒரு முஃமினுக்கு ஒரு காபிர் சமமாக மாட்டான் என்பதைக் காட்டுகிறது.

நபியவர்கள் இது பற்றிக் கூறிய ஹதீஸ்களும் பத்ரு யுத்தத்தில் 313 பேருடன் நபியவர்கள் போராட்டத்தை ஆரம்பித்தமையும் இரு சாராரது தொகைகளும் சமமாக அமையத் தேவையில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது. எனினும், அல்குர்ஆனும் ஹதீஸும் வரையறுத்த தொகையை அடையும் போதே போராட்டம் அனுமதிக்கப்படுகிறது. ஒரு ஹதீஸின்படி பன்னீராயிரம் பக்குவப்பட்ட போராளிகள் இருப்பின் போதுமானதாகக் கொள்ளப் படுகிறது. இஸ்லாமிய வரலாற்றிலும் கூட இந்த எண்ணிக்கையைக் கொண்ட ஒரு முஸ்லிம்படை தோல்வியடைந்ததில்லை.

4. **சமூகத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் இரகசிய நடவடிக்கையை மேற்கொள்ளல்**

இச்செயற்பாட்டில் செயற்திட்டங்கள் பற்றிய தகவல்கள் தலைமைத்துவத்தோடு மாத்திரம் சுருங்கியிருக்கவில்லை. இவற்றில் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய தகவலை மாத்திரம் அறிந்திருத்தல் போதுமானது. ஏனைய தகவல்களை தமக்கு உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்பட முன்னால் யாரும் அறிய முயலக்கூடாது. இந்தப்பண்பினை நபியவர்களின் ஹிஜ்ரத் செயற்பாட்டில் தெளிவாகக் காணலாம். அதன் முழுமையான செயற்திட்டம் நபியவர் களிடம் மாத்திரமிருக்க, பொறுப்புக்கள் ஏனையோருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

சகல விதமான செயற்பாடுகளும் ரகசியமாகவே நடக்கவேண்டும் என்பது இதன் பொருளல்ல. திட்டமிடல் பகுதி, ஆன்மீக, அரசியல் சம்பந்தப்பட்ட பகுதி ஆகிய இரு அம்சங்களில் திட்டமிடல் பகுதி மாத்திரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரகசியமாக அமைதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இரகசிய செயற்பாடு என்பது நபியவர்களது தஃவாவின் முதல் மூன்று வருடங்களில் மாத்திரமன்றி அனைத்துக் கட்டங்களிலும் காணப்பட்டுள்ளது. உண்மையில் முதல் மூன்று வருடங்களிலும் இரகசியப் பிரசாரம் நடந்திருப்பினும் சில இரகசிய செயற்பாடுகள் இறுதி வரை தொடர்ந்திருக்கின்றன. மக்காக் காலப்பகுதியை விட மதீனாக் காலப்பகுதியிலே யுத்த நடவடிக்கைகள் அநேகமாக இடம்பெற்றுள்ளதால் அங்கேயே இப்பண்பினை அதிகமாகக் காணமுடிகிறது.

### 5. எதிர் சக்திகளின் இன்னல்களின் போது பொறுமையைக் கடைப்பிடித்தல்

நபியவர்களின் சமூக அமைப்பின் ஆரம்பக் கட்டத்தில் எதிரிகளின் சவால்களை எதிர் கொள்ள அவர்களுக்குதவிய முக்கிய கருவி பொறுமையாகும். பொதுவாகப் பார்க்கும் போது, பிரபஞ்சத்தின் எந்தவொரு அம்சமும் அதன் ஆரம்ப கட்டத்தில் பலவீனமானதாகவும், எதிர்ப்புக்களைச் சமாளிக்கும் சக்தியற்றதாகவும் காணப்படுவது இயல்பாகும். இதற்கு ஆரம்ப கால இஸ்லாமிய சமூகம் விதிவிலக்காக அமைய வில்லை.

இஸ்லாமிய சமூகம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொறுமையிழந்து உணர்ச்சி வசப்பட்ட போதெல்லாம் அல்குர்ஆன் பொறுமையைக் கைக்கொள்ளுமாறு ஞாபகமூட்டி வந்துள்ளது. முஸ்லிம்கள் பௌதீக ரீதியாகப் பலம் குன்றியிருந்த மக்காக் காலப்பகுதியே இதில் முக்கியமானதாகும்.

***"உமது இரட்சகனுக்காகப் பொறுமையைக் கடைப்பிடிப்பீராக"*** *(முத்தஸிர்:7)* என்பது போன்ற மக்கி வசனங்கள் பொறுமையைப் போதிப்பதில் முதலிடம் வகிக்கின்றன. ஒரு சில சமயங்களில் சிலர் பொறுமையிழந்து நடந்து கொண்டிருப்பினும் கூட பொதுவாக நபியவர்களும் ஸஹாபாக்களும் பொறுமை யாகவே இருந்து வந்துள்ளனர்.

### 6. போராட்டத்தை விட்டும் தூரமாகுதல்

நபியவர்கள் தமது பிரசாரத்தின் ஆரம்பக் கட்டத்தில் எதிரிகளின் தீங்கிலிருந்து முஃமின்களைப் பாதுகாப்பதற்காக ஈமானை மறைத்து பொறுமையோடு இருக்கச் செய்தார்கள். அத்தோடு போராட்டத்தையும் தவிர்த்து வந்தார்கள். காரணம், அப்போது ஈமான் கொண்டிருந்த முஃமின்களில், சமூக ஒழுங்குகளை நடைமுறைப்படுத்தும் ஆற்றலிலும் மன உறுதியிலும் பல ஏற்றத்தாழ்வுகள் காணப் பட்டன. இந்நிலையில் போராட்டத்தில் இறங்கியிருப்பின் அது வீணான அழிவைத் தேடிக்கொண்டதாகவே அமைந்திருக்கும். இஸ்லாமிய சட்டங்களும் போதனைகளும் தொடர்ந்தும் வாழ வேண்டுமெனில் அவற்றைச் சுமந்த சிறிய சமூகம் பாதுகாக்கப்பட வேண்டும். இந்தக் கட்டத்தில்தான் நபியவர்கள் "இறைவா, இச்சிறு கூட்டம் அழிக்கப்பட்டு விட்டால் உலகில் நீ வணங்கப்படவே மாட்டாய்" என்று சமூகத்தின் பாதுகாப்பிற்காகப் பிரார்த்தித்தார்கள்.

போராட்டக்களத்தை விட்டுத் தூரமாதலின் ஒரு வழிமுறையாகவே ஹிஜ்ரத் செயற்பாடு அமைகிறது. இது நபியவர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு அருள் என்று கூடக்கூற முடியும். இதன் மூலமே நபியவர்கள் குறைஷிகளிடமிருந்து தமது சமூகத்தைப் பாதுகாத்தார்கள்.

***"ஈமான் கொண்ட எனது அடியார்களே, எனது பூமி விசாலமானது, (எனவே, எங்கு சென்றாலும் என்னையே வணங்குங்கள்"*** *(29:56)* ***"அல்லாஹ்வின் பூமி விசாலமானதாக இல்லையா எனவே நீங்கள் அதில் ஹிஜ்ரத் செய்யுங்கள்"*** *(4:91)*

மேற்போந்த வசனங்கள் காலத்தை வரையறுக்காததால், இக்காலத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் இந்த நடவடிக்கை மேற் கொள்ள முடியும் என்பது தெளிவாகின்றது.

இந்த வகையில், அந்த ஜாஹிலிய சமூகத்தில் திட்டமிட்ட அடிப்படையில் நபியவர்கள் தமது கொள்கைகளை முன் வைத்து, அதனை ஏற்றோரை ஆன்மீக, அறிவு ரீதியில் பலப்படுத்தினார்கள். எனவே, அந்த மக்கள் இறைவனை திருப்தியோடு ஏற்று, உலகம் போற்றும் உன்னத சமூகமொன்றாக வாழ்ந்து காட்டினார்கள். இந்த சமூகமே இஸ்லாத்தின் பிற்பட்ட கால வெற்றிகளுக்கு ஆணிவேராக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

எனவே, இஸ்லாமியப் பிரசாரகர்கள் நபியவர்களது வழியைப் பின்பற்றி நடப்பதன் மூலம் பெரும் வெற்றிகளை ஈட்டிக் கொள்ள முடியும் என்பது திண்ணம்.

***உசாத்துணைகள் :-***

1. அத்தர்க் இலா ஜமாஅதில் முஸ்லிமீன்
2. பிக்ஹுஸ்ஸீரா (ஸஈத் ரமழான் பூத்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ISLAMIC VISION OF EDUCATION AND CULTURE

By

*Dr. M. A. M. Shukri , B. A. Hons. (Cey), Ph. D (Edin.),*

*Director, Jamiah Naleemiah, Beruwela*

Man is endowed with the capacity to learn and through his efffort mould the world and his lot for the better. The basis of this effort is knowledge.

> Read! In the name of thy Lord and cherisher
> who created,
> Created man, out of a (mere) clot of congealed blood
> He who taught the use of pen,
> Taught man what he knew not
>
> (Qur'an: 96 : 1-5)

Thus man must take the initiative and harness his innate potentialities and channel them towards the onerous mission of acquisition of knowledge. In the words of Iqbal, if he does not take the initiative, if he does not evolve the inner richness of his being, if he fails to see the onward push of advancing life, then the spirit within him, hardens into stone and he is reduced to the level of dead matter. But, his life and the onward march of his spirit depend on the establishment of connection with the reality that confronts him. It is knowledge that establishes this connection.

Man, who is faced with the challenge of reality that confronts him, must unceasingly engage in the task of understanding its nature and function, and construct his individual and social life in accordance with his real nature. Knowledge which man acquires on the basis of sense-perception, reason, intuition and revelation keeps man to fulfil this noble mission. But, man attains superiority over the other creations not on the basis of his intelligence and power of reasoning. Intelligence is shared in some degree by some higher mammals. Power of reasoning may be observed and developed in some animals. It can be said that bees are intelligent, the dolphins can speak, dogs can reason, and some animals can even love. But, man is distinct from other creations and is on a higher plane because he is a conscious being. He has the faculty to know and judge, to be joyful and aware of the joy, and he has the power to think and realize the range and limits of his thought, to know that one is alive and to know that one will die. Thus a man is not a man because he can reason, but because he is conscious and aware. It is this consciousness of the self that lead to awareness of others and awareness of the world around and all it contains. It is this consciousness and awareness that create in man an urge for communication and results in the interaction with the environment. According to the Qur'an, man is entrusted with a responsibility that was offered to the heavens and the earth, when they refused and declined to accept this offer, man accepted it.

> We offered our trust to the heavens, the earth and the mountains. But, they refused to carry it and were frightened by its burden. However, man accepted to carry it
>
> (Qur'an: 33:72)

Thus though the divine will include every creation, and everything in creation partakes of the divine purposiveness, Man is the only conscious being who realizes the divine will and is gifted with the freedom to act on the basis of the knowledge he receives through his reasoning and divine revelation. It is in this sense, he is Khalifathullah or vicegerent of God on earth.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thus we can see man attains his superiority over other creations on the basis of his consciousness and freedom, and culture in its broadest sense is attainment of conscience. The more cultured a person is, the more conscious he becomes, because he possesses the awareness of the elements (moral, intellectual, technical and artistic) that make up the culture to which he belongs. Thus the quality of a civilization depends on the outstanding individuals, the leaders of thought and action, those who are more cultured because they are more aware. Culture is expressed in thought and action, and education is the process through which each generation transmits its accummulated wisdom, and cultural norms to the succeeding generation. In this sense, education functions as a vehicle of culture.

What is the nature of knowledge, its aims and objectives, its relationship with the universe, the role of human mind in acquiring this knowledge, what are its scope and functions. These are questions that had engaged the minds of social thinkers and philosophers from the time of Plato to the modern times of computers and genetic engineering. The dominant philosophical school of thought or the ideological trend of each period had its portent influence in moulding the various educational theories. Romanticism, realism, evolution, Marxian dialetics and historical materialism, Freudian psychology, Bahawarism, Existentionalism, all had their respective imprint on the educational philosophies that were formulated under dominance of their influence.

All these educational philosophies failed to view man as a total being and hence built their theories having regard for one or few aspects of human personality with total disregard for other component parts of the human individual.

An educational philosophy which is rooted in a cultural milieu or based on the superstructure of a particular philosophy or world view or which germinates out of a specific social system bear the traits and characteristics of the philosophical system, the social structure, or the world view of which it is a resultant manifestation.

Education must be purposeful and goal-oriented. Any educational endeavour which is devoid of higher values, and noble objectives, is incapable of producing a generation of value-oriented individuals. The present century has witnessed marvellous feats and stupendous achievements in the field of electrons and nuclear fission in daring surgery and wonder drugs. It is also an epoch of thinking machines and space travel. But, it is an irony that this is also a century of denial of human values, loss of human liberties, of mass murder and terrorism, a period of moral anarchy and youth revolt, drug abuse and venereal diseases. Inspite of the fact that today persons and societies are studied and directed in social laboratories and volumes of work containing the fruits of their research are being pushed in ever-increasing numbers, there is little understanding of the fundamental, moral, ethical and spiritual values of human personality. The modern education, research and the cultural system treats man as a machine and rejects the metaphysical and epistomological basis of human life. In short, modern thought has failed to view man as a total being. These many eminent thinkers of the contemporary world had almost arrived at the consensus that there is an urgency to return to the integrated concept of man. Faron calls it 'total man', Jung names it as 'complete man', Lancelet Law Whyte terms it as 'individual man, unitary man', Mumfort interprets it as 'unified man', Rene Dunbos says 'integrated man'. Thus all these are efforts to correct the twentieth century image of self-divided man.

Thus we see education and culture are very closely related to the concept of man. Islamic philosophy of education, its vision of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

culture are based on the Islamic concept of man. It is not a man-made concept or theory of human whims and fancies based on man's theoretical formulation derived from his sense, perception and the process of reasoning. Islamic philosophy of education is based on the Islamic vision of human personality. This vision derives its validity from the divine revelation which intrinsically fits into the nature in which man is created.

> So set thy face steadily and truly to the faith, (Establish) God's handiwork according to the pattern in which he has made man - kind.
>
> (Qur'an: 30:30)

Modern educational philosophy based on the secular foundation of the Western materialistic civilization functions on the basis of the wrong assumption that all knowledge based on divine revelation is dogmatic and therefore the pathway to true knowledge is emperical. Threrefore, all knowledge which is not verifiable is unconfirmable and is necessarily false. Qur'an contradicts this theory by stating that God himself is truth (Haq) and therefore the knowledge based on his revelation is absolute truth. Islam confounds skepticism, and builds its edifice of knowledge on certainty. Therefore, according to Islam, beginning of knowledge is certainty and not doubt as in the Western tradition. Knowledge is one of the divine qualities and hence the main objective of 'Ilm' or knowledge is to know God, to recognise his overlordship and supremacy and to lead a life of piety and ethical purity with the purpose of attaining divine felicity.

Man, who in Quranic terminology, is Khalifatullah or vicegerent of God on the earth is gifted with the senses, rational faculty and above all, the divine guidance.

> "God then perfected the creation of man and breathed into him of his spirit. It is God who created your hearing, your sight and your discerning heart. Little of you are greateful."
>
> (Qur'an 32:9).

> "As faculties of knowledge of your sight, your hearing and your hearts are indeed responsible."
>
> (Qur'an 17:36).

> "We shall show them our evident signs in their skills as well as within their own selves that they may be convinced that our revelation is the truth."
>
> (Qur'an 41:53).

> "We have sent down to you (Muhammed), the Book in truth. Whoever is guided by it is so to his own credit. Whoever goes astray does so to his own discredit."
>
> (Qur'an: 39: 41).

> "Islam also grants man the freedom of action within the limitation of divine injunctions and prohibitions. Say O' Muhammad the truth has come from your lord and become manifest, whoever whishes to believe, let him do so . whoever wishes to disvalue, let him do so"
>
> (Qur'an: 18:29)

Thus, man blessed with the rational faculty - divine guidance, and freedom of action by virtue of these qualities is capable of rising to great intellectual, moral and spiritual heights. and at the same time he can fall into the abysmal state of intellectual confusion and moral degradation and spiritual poverty.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In Islam, the total vision of man his personality and his life assumes a spiritual dimension. Arts and letters, politics and economics, science and philosphy, culture and civilization are clothed in a spiritual garb. Therefore, Islam is totally against, compartmentalising human life into secular and religious aspects, and contemplating life and its activities as a total phenomenon within the precincts of religion.

Education in Islamic perspective is essentially a moral and spiritual endeavour. Islam, as stated above, sanctifies human reasoning and invites man to reflect, contemplate and study the marvels of nature and there by gain the knowledge and consciousness about the supremacy of the majesty of the Creator. The wonders of nature are called Ayats or signs in the Qur'an, and the verses of the Qur'an are also named as Ayats. Hence, Qur'an invites man to study the 'Ayats' in the space and within man in the light of the Ayats of the Qur'an. Thus scientific activity, which in other words. is the study of the Ayats (signs of God ) is regarded in Islam as an act of worship.

This would ultimately lead a conscious and responsible human - being to the knowledge of God which in turn would create in him a sense of God - consciousness. This would find manifestation in the form of the pious actions and a life of moral and ethical purity. Every endeavour of life would assume an ethical character, and there will be harmonious blending between material progress and ethical edification.

Viewing from this angle, it becomes clear that the Islamic vision of education is the very anti - thesis of seculer - oriented modern western education which has neglected the moral development of the young generation, and as a result, it has created a generation of youth who are engaged in inner conflict between their inner and outer- selves, between the body and the spirit between knowledge and belief. Thus, today's youths are in revolt because they cannot find an ideal in the materalistic outlook of modern society. They have not been taught the fundamental values of their heritage, neither in the family nor in the school, neither by precept nor by example, or else, they have heard them presented in a perfunctory manner and they observe how little they are respected by their elders. They are confused and listless, some dissociate themselves from society, some escape into the world of drugs from the reality they refuse, some adopt violence as an outlet for their feeling and energy.

Thus, in the words of Iqbal "the conqueror of the solar radiation could not brighten his own destiny, the seeker of the orbit of the stars could not chalk out a course of action to himself and the master of science could not mark the difference between good and evil".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மாசோனிய இயக்கம்"

எம்.எச்.எம். பஸ்லுர் ரஹ்மான்
(ஆறாம் வருடம்)

## ஓர் அறியப்படாத உலகம்

உலகின் நாலா பக்கங்களிலும் இஸ்லாமிய எழுச்சித்தென்றல் வீசிக் கொண்டிருக்கும் இந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், அதன் வளர்ச்சியையும் செயற்பாடுகளையும் தடுப்பதற்கு அதன் எதிர்ச்சக்திகள் திட்டமிட்டு செயற்களத்தில் குதித்துவிட்டன. நபி (ஸல்) அவர்கள் தனது பிரசாரத்தை ஆரம்பித்தகாலந்தொட்டு, இன்று வரைக்கும் அவ்வப்போது பல அசத்திய அமைப்புக்கள் தோன்றி இப்பிரசாரத்தைத் தடுத்து நிறுத்தப்பல்வேறு சூழ்ச்சிகள் மேற்கொண்டுள்ளதைக் காணலாம். இந்த வகையில், இஸ்லாத்திற்குள்ளே வளர்ந்த ஷீயாஇஸம், பஹாயிஸம், காதியானிஸம், என்பனவற்றோடு வெளிரீதியான தடைகளாக கிறிஸ்தவம், யூத சியோனிஸம், சடவாத மாக்சிஸம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

***"இஸ்றாயீலின் சந்ததிகளில் எவர்கள் நிராகரித்தார்களோ அவர்கள் தாவூத், மர்யமுடைய மகன் ஈஸா என்பவர்களாலும் சபிக்கப்பட்டிருக்கின்றனர். ஏனென்றால், அவர்கள் வரம்பு கடந்தும் பாவம் செய்தும் வந்தனர். இவர்கள் செய்து வந்த எந்த விலக்கப்பட்ட காரியத்தையும் ஒருவருக்கொருவர் தடை செய்யவுமில்லை. அவர்கள் செய்து கொண்டிருந்தவை நிச்சயமாக மிகத் தீயவையே" (5:78, 79)***

யூத சியோனிஸ சகதியில் மிக முனைப்பாக வளர்ந்த இயக்கமே மாசோனியாவாகும். "சுதந்திர கட்டட நிர்மாணிகள் சம்மேளனம்" (FREE MASONRY) என வழங்கப்படும் இவ்வமைப்பு உண்மையில் கொத்தர்களினதோ, தச்சர்களினதோ ஒரு கூட்டு அல்ல. மாறாக, இது ஒரு யூத இரகசிய இயக்கமாகும். ஏனைய மதங்களை அழிப்பது, மனித ஒழுக்க மாண்புகளை நாசப்படுத்துவது, என்பவற்றை சாதாரண நோக்கங்களாகக் கொண்டாலும், மத்திய கிழக்கு முழுவதையும் உள்ளடக்கிய மக்கா, மதீனா உட்பட விரிந்த சியோனிஸ ஆட்சியை நிறுவி அதன் மூலம் சர்வதேச யூதத்தலைமையைப் பெற்றுக் கொள்வதோடு, ஜெருசலத்தில் பைதுல் முகத்தஸை நிர்மூலமாக்கி அவ்விடத்தில் "ஹைகல் சுலைமானை" (Temple of Solomon) இரண்டாம் முறையாக நிறுவும் பாரிய பணியையும் தனது பிரதான இலட்சியமாகக் கொண்டுள்ளது.

### தோற்றமும் வளர்ச்சியும்

மூடி மறைக்கப்பட்ட ஓர் இரகசிய இயக்கம் என்பதால் இதன் ஆரம்பம், தோற்றம், வளர்ச்சி என்பவற்றை எந்தவொரு வரலாற்றாசிரியராலும் சரியாக விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது. இருபதுக்கும் மேற்பட்ட அபிப்பிராயங்கள் இவ்விடயத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன. சில ஆய்வாளர்களின் கருத்துப்படி மூஸா (அலை) அவர்கள் பிறந்ததும் ஆரம்பமாகி ஹாறூன், தாவூத், சுலைமான் (அலை) என்பவர்களோடு சங்கிலித் தொடராக வளர்ந்திருக்க வேண்டுமென நம்பப்படுகிறது.

1717 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அந்தோனி சேயர் (First Grand Master Anthony Sayor) என்பவரின்தலைமையில் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு 1725 இல் உத்தியோகபூர்வமாக்கப்பட்டு வளர்ச்சி அடைந்ததென்ற ஒரு கருத்தும் உண்டு. என்றாலும் பாதர் லூயிஸ் என்போரின் கருத்தை ஓரளவு உறுதியானதாகக் குறிப்பிட முடியும். முதலாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் கிறிஸ்தவப் பிரசாரம் பரந்தளவில் வளர்ச்சி கண்டிருந்தது. இதனை விரும்பாத யூதர்கள் கி.பி.43ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10இல் ஹெறொட்ஸ் (Herodes) என்பவனின் தலைமையில் "இரகசிய சக்திகள் மன்றம்" என்ற கிறிஸ்தவ எதிர்ப்பு அமைப்பொன்றை ஆரம்பித்தார்கள். இத்தோடு மாசோனியாவின் வரலாறும் ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவர்களுக்கு சொல்லொணாத் துன்பங்களை இழைத்த ஹெறொட்ஸின் அமைப்பு ரோமானிய ஆட்சியாளன் 'நீரோ'வுக்கு மிக நெருக்கமானதாக இருந்தது. அத்தோடு நின்று விடாமல் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு கிறிஸ்தவர்களை வரலாறு நெடுகிலும் துன்புறுத்தி வந்தது. மிக இரகசியமாக இயங்கிவந்த இவ்வமைப்பு 1717 ஜுன் 24 இல் 'என்றூஸ்' என்ற யூத மதகுருவின் தலைமையில் லண்டன் நகரில் ஒன்று கூடியது. இதில் கலந்து கொண்டவர்கள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், பரஸ்பரப்புரிந்துணர்வு என்பவற்றிற்காக உழைப்பதாக உறுதி பூண்டு; தங்கள் இரகசிய செயற்பாட்டிற்கு "மாசோனிய அமைப்பு" என்ற பெயரையும் சூட்டிக் கொண்டனர். அக்காலத்தில் பிரித்தானியாவில் சுதந்திரக்கட்டடக் கலைஞர் களுக்கான அமைப்புக்கள் நிறைந்து காணப்பட்டன. இவ்வமைப்புக்களைப்பற்றி மக்களிடம் இருந்த எண்ணம் செல்வாக்கு என்பவற்றைச் சாதகமாகப்பயன்படுத்திய இவர்கள் தங்களையும் இவ்வாறான ஓர் அமைப்பாக அறிமுகப்படுத்திக்கொண்டு தங்கள் இரகசியப்பணிகளை மேற்கொள்ள வழியமைத்துக் கொண்டனர். எவ்வாறிருப் பினும் இது ஒரு யூத நாசகார இயக்கம் என்பதில் அனைத்து ஆய்வாளர்களும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளனர்.

## மாசோனியாவின் யதார்த்த நிலை

1. ***யூத உறவுகள்:-*** இந்த அமைப்பு தனது குறிக்கோளிலும் செயற்பாடு களிலும் யூதர்களோடு பின்னிப் பிணைந்த ஒன்று என்பதில் எந்த வரலாற்றாசிரியரும் கருத்து முரண்பட வில்லை. 1766ஆம் ஆண்டு இவ்வமைப்பின் தலைமைப் பொறுப் பேற்ற 'லகாக்விஜ்' என்பவரின் பின்வரும் கூற்று இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. "மாசோனியா ஒரு யூத அமைப்பு, ஆரம்பம் முதல் இறுதி வரை இதன் வரலாறு, போதனைகள், இரகசியங்கள் ஆகியவற்றில் எதுவும் யூத வரம்புகளை மீறி அமையாது" இக்கூற்றின் மூலம் மாசோனிய செயற்பாடுகள் அனைத்தும் யூதர்களின் ஏமாற்று, மோசடி, கருவறுப்பு என்ப வற்றின் அடிப்படையில் அமைந்த வையே என்பதை விளங்க முடிகிறது.

2. ***மாசோனிய எண்ணக்கருவின் அடிப்படைகள்:-*** "மாசோனிய அமைப்பு ஹைகல் சுலைமானை நிறுவுவதற்காக உருவானது போல அதன் போதனைகள் யூதர்கள் விசுவாசிக்கும் தௌராத்திலிருந்து பெறப்பட்டவை" என பஹ்மி ஸித்கி' என்ற யூத அறிஞர் குறிப்பிடுகிறார். அத்தோடு 'தல்மூத்' இலிருந்தும் பெரும்பாலானபோதனைகள் பெறப் பட்டுள்ளன. தல்மூதிலிருந்து பெறப்பட்ட சில போதனைகள் பின்வருமாறு காணப்படுகிறது.

* யூத இனம் அல்லாதவர்கள் யூதர்களுக்கு பணிவிடை செய்வதற்காகவே படைக்கப் பட்டுள்ளனர்....
* யூதர்கள், யூதர்கள் அல்லாதோரோடு நயவஞ்சகத்தனமாக நடந்துகொள்ளலாம்.
* தங்களைச் சாராதவர்களிடமிருந்து வட்டி பெறலாம்.

இவ்வாறான தல்மூதியப்போதனைகள் 'கப்பாலா' (Kabbala) க்கள் என அழைக்கப் படுகின்றன. இந்தக்கப்பாலாக்களை ஏனைய யூத அமைப்புக்களான அஸ்ஸராகீம், ஸாபிதா, தஸ்ஸீபி போன்ற இயக்கங்களும் தங்கள் அடிப்படைகளாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கப்பாலாக்களைப் பற்றி முஹம்மத் அப்துல்லா அன்னான் குறிப்பிடுகையில் "மாசோனியப் போதனைகள் யூத கப்பாலாக்களே என்பதில் சந்தேகமில்லை. யூதர்கள் தங்கள் இயக்கப்பெயரை 1717ம் ஆண்டு மாசோனியா என்று மாற்றிக் கொண்டது முதல் தங்கள் எண்ணக்கருவை கப்பாலாக்களிலிருந்தே பெற்றனர்" என்கிறார்.

## இலட்சியங்களும் அடைவுகளும்

சகோதரத்துவத்தையும் அன்பையும் விரும்புகின்ற ஒரு மனிதாபிமான அமைப்பாக மாசோனியா தன்னைக் காட்டிக் கொண்டாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னணியில் பயங்கரமான நோக்கங்கள் காணப்படுகின்றன. இந்நோக்கங்களை அடைவதற்காக அது வகுத்துள்ள திட்டங்களை குறுகிய காலத்திட்டங்கள், நீண்ட காலத்திட்டங்கள் என இரண்டாக வகுக்கலாம்.

* குறுகிய காலத்திட்டங்கள்:-

1. அனைத்து அரசியல் பிரிவுகளுக்குமான தலைமைத்துவத்தை மாசோனிய அமைப்பு மாத்திரமே பெற வேண்டும்; என்ற நோக்கோடு உழைத்தல்.
2. தனது கருத்துக்களையும் போதனைகளையும் மிக இரகசியமாகப்பரப்புதல்.
3. தனது இருப்பை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக அனைத்து வழிகளிலும் போராடுதல்.
4. இளைஞர்களிடத்தில் தனது செல்வாக்கைப் பலப்படுத்தல்.
5. நாடுகளுக்கிடையிலும் சமூகங்களுக்கிடையிலும் பிளவுகளை ஏற்படுத்தி தனது பணியை இலகுபடுத்தல்.

* நீண்ட காலத்திட்டங்கள்:-

1. இரகசியமான யூத ஒருமைப்பாட்டின் மூலம் சர்வதேச, ஜனநாயகக்குடியரசொன்றை நிர்மானித்தல்.
2. இந்நிர்மானப்பணியின் அடிப்படையாக அனைவரும் யூத நலத்தைக் கவனத்திற் கொள்ளல்.
3. நிர்மானிக்கப்படும் குடியரசு எந்தவொரு மதத்தையோ கொள்கையையோ சார்ந்திராததுடன், அவற்றைப் பற்றிய எந்த அக்கறையும் கொள்ளாதிருத்தல்.

இவ்வியக்கத்தின் மனிதாபிமானப் பிரசாரங்கள் மிக நுணுக்கமாகவும் ஆழமாகவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதன் விளைவாகப் பல இஸ்லாமிய அறிஞர்கள் கூட தங்களை இவ்வியக்கத்தோடு இணைத்துக் கொண்டு ஏமாந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இயக்கத்தின் கட்டமைப்பு

சர்வதேச மாசோனிய திட்டமிடல்அமைப்பு மூன்று பிரதான கூறுகளாக பிரிக்கப்படுகிறது. இவ்வொவ்வொன்றுக்கும் பிரத்தியேகமான குறியீடுகள், படித்தரங்கள், செயற்திட்டங்கள் என்பன காணப்படுவதால் ஒன்றைவிடஒன்று தனித்துவமான அமைப்பைப் பெற்றுள்ளது.

* முதலாம் பிரிவு:- அர்-ரம்ஸிய்யா

இதில் பல்வேறு மதங்களைப் பின்பற்றுவோரும் சேர்த்துக் கொள்ளப்படுவர். இது மனித சிந்தனைப் பாங்கை வளர்த்து விடுவதுடன் நன்மையான விடயங்களுக்குத் தூண்டுதல் அளிப்பதையும் நோக்காகக் கொண்டுள்ளது. "அல் மாசோனியா அல் ஆம்மா" எனவழங்கப்படும் இப்பிரிவு உலகின் நாலா பக்கங்களிலும் பரவிக்காணப்படுகிறது. இது தனது உறுப்பினர்களுக்கு நாட்டுப்பற்று, மொழியைக்கண்ணியப்படுத்தல் போன்ற பண்புகளைப் போதிக்கிறது. சிந்தனைச் சுதந்திரமும் செயற்பாட்டுச் சுதந்திரமும் பூரணமாகவே வழங்கப்படும் இப்பிரிவில் வித்தியாசமான அரசியல் குழுக்கள், கொள்கைகள், மதங்கள் என்பவற்றைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் ஒன்று சேர்க்கப்பட்டு அவர்களுக்கு மத்தியில் புரிந்துணர்வு, சமத்துவம், சகோதரத்துவம் என்பன தூண்டப் படுகின்றன. இதன் உறுப்பினர்களின் படித்தரங்கள் பல்வேறு பரீட்சைகளின் மூலம் தீர்மானிக்கப் படுகின்றன. 33 படித்தரங்களும் மாணவன், பணியாள், ஆசிரியர், இரகசிய ஆசிரியர் போன்ற எட்டுப் பதவிகளும் இதில் உள்ளன.

* இரண்டாம் பிரிவு:- அல்-முலூகிய்யா

இப்பிரிவில் யூதர்களைத் தவிர வேறு எவரும் உறுப்புரிமை பெறமுடியாது. முதலாம் பிரிவிலுள்ள 33 படித்தரங்களையும் தாண்டியவர்களே இதில் சேர்த்துக் கொள்ளப் படுவர். இதன் உறுப்பினர்கள் எந்த மதத்தையோ அல்லது நாட்டையோ பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக இருக்காது, மாசோனிய நலனை மாத்திரம் கருத்திற் கொள்கின்ற ஒரு மாசோனியவாதியாகவே இருக்க வேண்டும். ஹைகல் ஸுலைமானை மீட்பதும் யூத சமூகத்திற்கென்று ஒரு தேசத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவுவதுமே இதன் இலட்சியமாகும். இதில் சேர்த்துக் கொள்ளப்படும் அங்கத்தவர்கள் பின்வரும் நேர்முகப் பரீட்சைக்கு முதலில் உட்படுத்தப்படுவர்.

**மன்றத் தலைவர்:** "புதியவர்களே! நீங்கள் எதற்காக வந்துள்ளீர்கள்?"

**அங்கத்தவர்கள்:** "நீங்கள் ஹைகல் ஸுலைமானை நிறுவுவதற்காக அயராது உழைப்பதாக நாங்கள் கேள்விப்பட்டோம் இக்கீர்த்திமிகு பணியில் சேர்ந்து கொள்ளவே நாங்கள் வந்திருக்கிறோம்...." என்று அங்கத்துவப் பரீட்சைத் தொடரும்.

*** மூன்றாவது பிரிவு:- அல்-கவ்னிய்யா**

மாசோனிய இயக்கத்தின் மிக உயர்ந்த பிரிவாகிய இதன் உறுப்பினர்களாக, மிகவும் குறைந்த எண்ணிக்கையான யூதர்களே காணப்படுகின்றனர். அது மட்டுமன்றி இவர்கள் இரண்டாம் பிரிவான அல் மூலூகிய்யாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற ரோமானிய யூதர்களாகவே இருப்பர். "அல் ஹுகமா" என வழங்கப்படும் இவர்களின் தலைவர் "அல்ஹகீம் அல் அஃலம்" என அழைக்கப்படுகிறார். மாசோனிய மன்றங்கள் அனைத்தினதும் அதிகார பீடமாக விளங்கும் இப்பிரிவின் அங்கத்துவத் தராதரங்களையோ கட்டமைப்பையோ மத்திய நிலையத்தையோ எவரும் அறிய முடியாதுள்ளது. தனக்குக் கீழ் இயங்கும் முதலாம் இரண்டாம் பிரிவுகளை வழிநடாத்துவதே இதன் பிரதான பணியாகும்.

## மதங்கள் பற்றிய மாசோனிய நிலைப்பாடு

அல்லாஹ்வினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே சமூகமாக யூத சமூகத்தைக் கருதும் மாசோனிய இயக்கமானது ஏனைய சமயங்கள் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்ற தெளிவான இலட்சியத்தையும் கொண்டுள்ளது. 1891 இல் பிரான்சில் நடைபெற்ற மாநாட்டில் "எந்தவொரு மாசோனிய மன்றமும் ஏனைய மதவாதிகளை சேர்த்துக்கொள்ளக் கூடாது. எந்தவொரு மாசோனியவாதியும் ஏனைய மதங்களை ஆதரிப்பவனாக இருக்க முடியாது" என்று தீர்மானிக்கப்பட்டதாக காலித் முஹம்மத் அலி என்பவர் குறிப்பிடுகின்றார். அறியப்படாத இந்த மாசோனிய உலகம் சமத்துவம், சகோதரத்துவம் போன்றவற்றைப் போதிக்கும் ஒரு மனிதாபிமான இயக்கமாகத் தன்னைக் காட்டிக் கொண்டு; உலகில் யூதமதம் ஒன்றிற்கான இருப்பையே தேடிக் கொண்டிருக்கிறது. இதன்விளைவாகவே ஏகத்துவக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்த கிறிஸ்தவ மதம் கி.பி. 33ல் சென் பவுல் (St. Paul) என்னும் பிரான்ஸிய யூதன் மூலம் பல திரிபுகளுக்கு உட்படுத்தப்பட்டு மாசுபடுத்தப் பட்டது, இந்த யூதன் கிறிஸ்தவக் கோட்பாட்டை நாசப்படுத்தி அழித் தொழிப்பதற்காகவே திட்டமிட்ட அடிப்படையில் கிறிஸ்தவ மதத்தினுள் நுழைக்கப்பட்டான். இவ்வாறே மத்திய காலப்பகுதியில், மார்ட்டின் லூதர் (Martin Luther) (1843-1546) என்னும் யூதனும் கிறிஸ்தவத்தில் நுழைந்து அதனைக் கருவறுத்தான்.

இஸ்லாமிய வரலாற்றில் கருவறுத்தவர்களின் பின்னணியிலும் இம்மாசோனியச்சதிகள் இருந்துள்ளன என்பதைப் பல அறிஞர்கள் உறுதி செய்கின்றனர். நபி (ஸல்) அவர்கள் ஆரம்பக்கட்டத்தில் தமது பிரசாரத்தை முன்னெடுத்துச் சென்ற போது முஷ்ரிகீன்களுக்கு மறைமுகமாக உதவுபவர்களாகவும் நயவஞ்சமாக இஸ்லாத்தில் நுழைந்து அதன் தூய்மையைக் கெடுப்பவர்களாகவும் இருந்த இம்மாசோனியவாதிகள் நபியவர்களின் ஹிஜ்ரதுக்குப் பின்னால் முஹாஜிர்களுக்கும் அன்ஸாரிகளுக்குமிடையில் பிளவுகளை ஏற்படுத்தக் கூடிய சூழ்ச்சிக்காரர்களாகவும் இருந்துள்ளனர். தாயிஸ், சஃதுப்னு ஹனீப், ஸைத் பின் லஷீத், ராபிஃ போன்றோர் இஸ்லாத்துக் கெதிராகச் செயற்பட்ட யூத நயவஞ்சகர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் ராபிஃ என்பவன் மரணித்த போது "இன்று மிகப்பயங்கர நயவஞ்சகன் ஒருவன் இறந்து விட்டான்." என்று நபியவர்கள் கூறினார்கள். குலபாஉர் ராஷிதீன்கள் காலத்தில், உமர் (றழி) அவர்கள் ஆட்சியின் போது கஃப், மானிஃ' என்பவனின் தலைமையில் ஒரு யூத நயவஞ்சகக்குழு முஸ்லிம்களோடு சேர்ந்து வாழ்ந்துள்ளனர். உஸ்மான் (றழி) அவர்களின் காலத்தில் நுழைந்த 'இப்னு ஸபஃ'வும் ஒரு யூதனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வசம் ஒரு குழுவினரை வைத்திருந்த இவனே, உஸ்மான் (றழி) அவர்களின் கொலைக்கும் இஸ்லாமிய கிலாபத்தில் ஏற்பட்ட குழப்பங்களுக்கும் காரணமாக அமைந்தான். பிற்கால அப்பாஸிய ஆட்சிக் காலத்தில் கராமிதா, ஹஷ்ஷாஷீன், பராவன்தியா, தீஷானிய்யா போன்ற முரண் சிந்தனாவாத அமைப்புக்களைத் தோற்றுவித்து, இஸ்லாத்தின் நம்பிக்கைக்கோட்பாட்டையும் ஏனைய அடிப்படைகளையும் தகர்க்கும் முயற்சிகளும் இம்மசோனியர்களாலேயே மேற் கொள்ளப்பட்டன.

## ஒழுக்க மாண்புகளைத் தகர்த்தெறியும் நாசகாரம்

மனிதப் பண்புகளையும் நல்லொழுக் கங்களையும் தகர்த்தெறிவதை (Sabotage) நோக்காகக் கொண்டு மசோனியர்கள் செயற் படுகின்றனர். உலகின் தலை சிறந்த சமூகம் யூத சமூகமே என்ற பிரமையில் வாழும் இவர்கள் ஏனையவர்களை விலங்குகளை விடவும், கீழானவர்களாக்கும் விடயத்தில் கண்ணுங் கருத்துமாக இருக்கின்றனர். பண்பாடு, கலாசாரம், அறிவுப், பொருளா தாரம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் ஏனைய சமூகங்களை மிகைத்த ஒரே சமூகமாக யூத சமூகத்தை உருவாக்கும் பணிகளில் ஒன்றாகவே கலாசார சீரழிவுகளைத் தோற்றுவிக்கின்றனர்.

சுருங்கக் கூறின், "தமது இலட்சியத்தை அடைந்து கொள்வதற்காக எந்தவொரு தரம் கெட்ட, அபாயகரமான வழிமுறைகளையும் உபயோகிக்கிலாம்" - அல்ஆயா துபர்ரிருல் வஸீலா -என்ற அடிப்படையைத் தமது கொள்கையாக ஏற்றவர்களே இவர்கள். 'அப்பாஸ் முஹம்மத் அல்அக்காத்' என்ற அறிஞர் இவர்கள் மேற்கொள்ளும் கலாசார சீரழிவுகளைப் பற்றிக் குறிப்பிடும் போது, "மனித ஒழுக்க விழுமியங்களை நாசப் படுத்தும் வகையில் இடம்பெறும் எந்தவொரு நிகழ்வின் பின்னும் ஒரு யூதனின் விரல் நுனியாவது நிச்சயமாக இருக்கும்." என்கிறார். "இயற்கை ஒழுங்குகளின் படி விபசாரம் ஒரு பாவம் அல்ல. மனித சமூகம் அதன் இயல்பின் படி செயற்படும் போது அதில் பெண்களும் பங்கு கொள்வது இயல் பானதே" என்ற கருத்து 'டோர்பூவீல்' என்ற மாசோனிய வாதியினால் முன்வைக்கப் பட்டது. மாசோனியா, பெண்களுக்கான தனி மன்றங்களை உருவாக்கி அதன் மூலம் பாலியலின்பால் ஈடுபாடு கொண்ட, நலிந்த கொள்கைப்பற்றற்ற ஓர் இளம் சமூகத்தை உருவாக்க உழைக்கின்றது. இதன் விளைவு களே விவாகரத்து, குடும்ப அமைப்புச் சீர்குலைவு, பாலியல் துஷ்பிரயோகங்கள்.. போன்றன. இறுதியில் யூதர்கள் தலை நிமிர்ந்து வாழ்வதற்கான, ஆட்கொல்லி நோய்களால் பீடிக்கப்பட்ட ஒரு சமூகம் உருவாகிறது. இந்த விளைவுகளால் மாசோனிய நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

## உலக அரசியலில் மாசோனிய செல்வாக்கு

'சர்வதேச அரசியல் சதுரங்கத்தில் பச்சை விளக்கு எரியாது ஒரு காயும் நகராது' என்றால் அது மிகையல்ல. இது வரை நடந்து முடிந்த அரசியல் மாற்றங்கள், புரட்சிகள் அனைத்தின் பின்னணியிலும் இச்சக்திகள் தொழிற் படுகின்றன. பிரான்சிய சக்கரவர்த்தி நெப்போலியன் (Napolean III, 1808 -1873) கூட இந்த இரகசிய அமைப்பின் கெடுபிடிகட்கு உட்பட்டதாக வரலாறு கூறுகின்றது. கம்யூனிஸம், முதலாளித்துவம் என்ற பெயரால், அகிலம், கிழக்கு, மேற்கு என்று பிரிந்ததென்றால் அதில் மாசோனிய சக்திகளின் பங்கு நிச்சயமாகக் கணிசமானது என கலாநிதி அஹ்மத் ஷலபி' குறிப்பிடு கின்றார். "பிரான்சியப் புரட்சியை நடத்தி முடிப்பதில் மாசோனியா பாரிய ஒரு பங்கைச் செலுத்தியது. எதிர்காலத்தில் இடம் பெறவிருக்கும் எந்தவொரு புரட்சியிலும் இணைந்து கொள்வதற்கு அது தயங்காது..."

இஸ்லாமிய கிலாபத்தின் உஸ்மானியப் பேரரசு (Ottomen Empire) 1924இல் துருக்கியில் சமாதியானது இதற்கு சம்மட்டி தூக்கியவர் களும் மாசோனியர்களே....!

ஐந்து மில்லியன் தங்க 'ஜுனைகாத்'களை மாசோனியா இதற்குச் செலவிட்டது. "உஸ்மானிய அரசைக் கவிழ்க்காது சுதந்திரம் இல்லை" என்ற சுலோகத்தை ஐரோப்பா முழுதும் பரப்பியது. பொதுவாக முழு உலகும், குறிப்பாக இஸ்லாமிய நாடுகளும் விரும்பியோ விரும்பாமலோ யூத காலணித்

துவத்தின் (Jews -Imperialist Hegemony) கீழ் இருந்தே வந்துள்ளன. உண்மையில் மொஸாட்டை ஒரு நாட்டின் உளவு ஸ்தாபனம் என்பதை விட அப்பெயரில் வந்த 'சர்வதேச மாசோனிய பயங்கரவாதம்' என்று கூறுவதே மிகப் பொருத்தமானதாகும்.

**மாசோனிய மடியில் வளர்ந்தவைகள் சில**

வித்தியாசமான நோக்குகளையும் இலட்சியங்களையும் கொண்ட பல்வேறுபட்ட அமைப்புக்கள் "மாசோனிய சிந்தனை" என்ற ஒரே நேர்கோட்டில் இணைந்து செயற்படு கின்றன. பல்லாயிரக்கணக்கான இயக்கங் களாக, மன்றங்களாக, சமூக சேவை ஸ்தாபனங்களாகச் செயற்படும் இவற்றில் மிக முக்கியமானவையாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. **றோட்டரிக்கழகம் (Rotary club)**

அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் 1905ஆம் ஆண்டு சட்டத்தரணி 'ஹரிஸ்' என்பவரினால் இது நிறுவப்பட்டது. பொருளாதார, அரசியல், சமூகசேவைகள் என்ற பெயரில் உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் இவ்வமைப்பு இயங்கி வருகிறது. றோட்டரி அமைப்பின் குறிப்பிடத்தக்க அங்கத்தவன் ஒருவனே, அவன் "கொன்றாட் ஹில்டன்" என்ற மாசோனிய யூதன். சர்வதேச ரீதியில் இயங்கி வரும் 'ஹில்டன்' ஹோட்டல்கள் மாசோனிய மன்றங்களாகவே செயல்படுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கடந்த பத்து வருடங்களுக்கு முன் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி 151 நாடுகளில் 19700 கிளைகளையும் 905000 அங்கத்தவர்களையும் உள்வாங்கிய ஒரு பாரிய அமைப்பாக றோட்டரிக்கழகம் காணப்படு கின்றது.

2. **பினாய் பிரித் கழகம் (B.Nai Brith club)**

மாசோனிய உளவுத் துறையை (Espionage) கவனிக்கும் மிக முக்கிய பிரிவாக இது காணப்படுகிறது. இரண்டாம் உலகப் போரின் போது உஸ்மானிய சாம்ராஜ்ஜியத்தில் உளவு வேலைகளைச் செய்து மாசோனிய இராணுவ அமைப்புக்களுக்குத் தகவல்கள் வழங்கியதில் இதன் பங்கு மகத்தானது. 1834இல் பெர்லினில் ஆரம்பிக்கப்பட்டது. 1903இல் 80 கிளைகளைக் கொண்டிருந்த இது, தற்போது அமெரிக்காவில் தலைமையகத்தைக் கொண்டு செயல்படுகிறது.

3. **அன்வர் ஷைஸத் மாசோனியப்பிரிவு**

சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீதைப் பதவி கவிழ்ப்பதற்காக 1908 மார்ச் 31ஆம் திகதி ஸ்தாம்பூலில் 68000 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். பின், பால்கன் யுத்தத்தில் (1912 – 1914) பல்லாயிரம் உயிர்கள் பலியிடப் பட்டன. அத்தனைக்கும் காரணம் இந்த மாசோனியக் காட்டேறிகளே.

4. **லயன்ஸ் கழகம் (Lions club)**

நியுயோர்க்கில் 1951இல் ஸ்தாபிக்கப் பட்ட இவ்வமைப்பு றோட்டறிக் கழகத்தைப் போல் சமூக சேவைகள் என்ற பெயரில் பல்லாயிரம் கிளைகளை நிறுவி செயல்படுகிறது. பெரும்பாலும் இதன் அங்கத்தவர்களாக நாடுகளின் தலைவர்கள், அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள் என அந்தஸ்தும் செல்வாக் கும் கொண்டவர்களே காணப்படுகின்றனர்.

5. **மாசோனிய புனருத்தாரன முன்னனி (Masonic Reform Movement)**

மார்ட்டின் லூதர் என்பவரின் தலைமை யில் ஆரம்பமான இப்பிரிவு பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் எனப்பல புத்திஜீவிகளைக் கொண்ட ஓர் அமைப்பாகச் செயல்படுகின்றது. ஆப்கானிய மன்னன் அமானுல்லாஹ்கான், ஈரானிய சக்கர வர்த்தி அலிரிழா அல்பஹலவி, முஸ்தபா கமால், அஹ்மத் அமீர் போன்ற முஸ்லிம் புத்தி ஜீவிகளும் இதில் அங்கத்துவம் பெற்றிருப்ப தாகப் பல வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடு கின்றனர்.

இத்தாலிய விஷேட உளவுப்பிரிவு (CIES-SE) 1927இல் முசோலினியின் தலைமையில் மேற்கொண்ட புலனாய்வுகளிலிருந்து தெரிய வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாசோனிய மன்றத்தில் இணைந்து கொள்வதற்கு...**

மாசோனியா; விரும்பியவர்களை யெல்லாம் சேர்த்துக் கொள்வதற்காகத் தனது கதவை அகலத்திறந்து வைத்திருக்கும் ஒரு அமைப்பாக இதுவரை யாராலும் இனங் காணப்படவில்லை. உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதில் பல நிபந்தனைகள் விதிக்கப்படுவதுடன் அங்கத்தவர்கள் ஒவ் வொருவரினது கடந்த கால வாழ்க்கையும் ஆழ்ந்த ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. தகுதி காணப்பட்ட ஒருவன் 'தௌறாத்' வேதத்தின் மீது தனது கையை வைத்து பின்வருமாறு சத்தியப்பிரமாணம் செய்யப் பணிக்கப்படுவான்:-

"பாரிய பிரபஞ்சத்தின் படைப்பாளன் மீது சத்தியமாக...... மாசோனிய இயக்கத்தின் இரகசியங்கள், அடையாளங்கள் போதனைகள், செயற்பாடுகள் என்பனவற்றை மிக இரகசியமாகப் பாதுகாப்பேன்.....

சொல், செயற்பாடு, சைக்கினை, எழுத்து என்பவற்றால் இயக்க இரகசியங் களுக்கோ, அதன் உடன் படிக்கைகளுக்கோ மாறுசெய்யமாட்டேன்...

இன்னும் நான்.........

இயக்க இரகசியங்களில் எதையும் பகிரங்கமாக எழுதவோ பிரசுரிக்கவோ மாட்டேன் எனவும் உறுதியளிக்கிறேன்......

இந்த மேலான சத்தியத்தை நான் முறித்துக்கொண்டால்.........

எனது இரண்டு உதடுகளையும் அனல் பறக்கும் இரும்பினால் பொசுக்கி எனது இரு கைகளும் துண்டிக்கப்படுவதுடன், எனது கழுத்தையும் வெட்டி, ஏனைய மாணவர்கள் பார்த்துப் படிப்பினை பெறுவதற்காக, முண்டத்தை மாசோனிய மன்றத்தில் தொங்க விடுவதனை நான் மனதார ஏற்றுக் கொள்கின்றேன். பின், எனது உடலுக்குத் தீமூட்டி அதன் அஸ்தியைக் காற்றிலே தூவிவிடுவதற்கும் நான் உடன்படுகிறேன்......."

பின்னர் இந்த மனிதன் கடும் இருளான ஓர் அறையில் சிலகாலம் அடைக்கப்படுவான். இவ்வாறு அடைக்கப்பட்டு இருளிலே தடுமாறிக் கொண்டிருக்கும் அவனிடம் கறுப்புத் துணியினால் உடம்பு முழுவதும் போர்த்தப்பட்ட ஒரு மனிதன் வந்து, அவனது கழுத்திலே கயிறொன்றை மாட்டுவான்; அம்மனிதனின் ஆடைகள் களையப்பட்டு இரண்டு கண்களும் கட்டப்பட்டவனாக தானிருந்த இடத்திலிருந்து, மூன்று கம்பங்கள் நாட்டப்பட்ட ஓர் இடத்திற்குக் கொண்டு வரப்படுவான்; பின் அவனது நெஞ்சிலே பிரமாண்டமான ஒரு சிலுவை தொங்க விடப்படும். தொடர்ந்து...... தச்சு வேலைக்குத் தேவையான ஆயுதங்களுடன் மன்றத் தலைவர் அவனுக்கருகில் வந்தமர்ந்து, "இந்த மனிதன் எதனை விரும்புகிறான்?" என வினவுவார். அதற்கு அந்த மனிதன் "இருளிலே தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும் எனக்கு ஓர் ஒளிமயமான பாதை தேவை" என்று மிகவும் நலிந்த தழுதழுத்த குரலில் பதிலளிப்பான். இப்பதிலின் மூலம் அவன் மாசோனிய வழிகாட்டலை வேண்டுகிறான் என்று பொருள் கொள்ளப்படும். எனவே, தலைவர் ஏனைய மன்ற உறுப்பினர்களை நோக்கி "இந்த மனிதனை உங்கள் அமைப்பின் ஓர் அங்கத்தவனாக ஏற்று நேர்வழி காட்டப் பணிக்கிறேன்." என்பார். பின்னர் கட்டப் பட்டிருந்த அவனது கண்களும் கைகளும் அவிழ்க்கப்பட்டு, பிரகாசமான தொரு வெளிச்சம் அவனை நோக்கிச் செலுத்தப்படும். விழித்துக் கொள்ளும் தனக்கு முன்னால் வாளேந்திய இரு மனிதர்களைக் காண்பான். "மாசோனிய மன்றத்துக்குள் நுழைந்துள்ள நீ அதன் இரகசியங்களைப் பாதுகாக்காவிட்டால் இந்த வாள்களே பரிகாரம் கூறும்" என அவர்கள் எச்சரித்ததைத் தொடர்ந்து, மாசோனிய அங்கத்தவன் என்னும் அந்தஸ்தை அவன் பெறுவான்.

**இஸ்லாமிய ஷரீஆவின் பார்வையில் .....**

மக்காவில் அமைந்துள்ள "அல் மஜ்மஉல் பிக்ஹிய்யுல் இஸ்லாமி" எனும் இஸ்லாமிய சட்டத் தீர்ப்புகள் நிறுவனம், அஷ்ஷெய்க் அப்துல்லா பின் ஹுமீதின் தலைமையில் கூடி 10 அம்சங்களைக் காரணங்களாக முன்வைத்து, மாசோனியா பற்றிய மிகச்சரியான இஸ்லாமியத் தீர்ப்பொன்றை வெளியிட்டது. அதன் சுருக்கம் வருமாறு:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.....

இஸ்லாமியச்சட்டத் தீர்ப்புக்கள் நிறுவனம் 1978/07/15 (ஹிஜ்ரி 1398-ஷஃபான்-10) ஆம் திகதி மக்காவில் நடாத்திய கூட்டத்தின் முதலாவது தொடரில் மாசோனிய இயக்கம் பற்றியும் அதில் இணைந்து கொண்டு அதன் போதனைகளைக் கற்பது பற்றியும் இஸ்லாமியத் தீர்ப்பு பின்வருமாறு அமையும் எனக் கருதுகிறது.

"மாசோனிய இயக்கத்துடனான தொடர்பு, சர்வதேச, யூத, சியோனிஸத்தோடு ஏற்படுத்திக் கொள்ளும் உறவே என்பது மிகத்தெளிவானது. எனவே, ஒவ்வொரு முஸ்லிமும் அதனை விட்டும் தவிர்ந்து, அவ்வியக்கத்தின் செயற்பாடுகளைச் செயலிழக்கச் செய்வதில் முனைப்பாக இருக்க வேண்டும். மாசோனியச் செயற்பாடுகள், திட்டங்கள், நயவஞ்சகத்தனமான நடவடிக்கைகள் என்பவற்றை ஆராய்ந்த இஸ்லாமிய சட்டத் தீர்ப்புக்கள் நிறுவனம், முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் அழித்தொழிப்பதற்கான ஒரு அமைப்பாகவே அதனைக் காண்கின்றது. எனவே, மாசோனியத் திட்டங்கள், நோக்கங்கள் என்பவற்றை விளங்கிக் கொண்ட பின்னரும் யார் அதில் இணைந்து கொள்கிறாரோ..... அவர் காபிராவர்.

"இவர்கள் (நிராகரிப்போர்) தங்கள் வாய்களினால் ஊதி அல்லாஹ்வின் ஜோதியை அணைத்து விட விரும்புகின்றனர். இவர்கள் வெறுத்த போதிலும் அல்லாஹ் தனது ஜோதியைப் பூரணப்படுத்தி வைக்காமல் இருக்கப் போவதில்லை." (9:32)

உசாத்துணைகள்:-

* அல்-மாசோனிய்யா (முஹம்மத் ஹப்வத் அஸ் ஸகா)
* அல்-இஸ்லாம் வல் - ஹறகாதுல் ஹத்தாமா (அப்துல் ஹமீத் ஹமூதா)
* அல்-மாசோனிய்யா பைனல் ஹகீகா வஷ் ஷிஆறாத் (முஹம்மத் ஸகிய்யுத்தீன் காசிம்)
* ஷஹாதாதுல் மாசோனிய்யா (ஹுஸைன் உமர் ஹம்மாதா)
* அஸ்றாறுல் மாசோனிய்யா (நூறுத்தீன் ரிழா)
* JEWISH CONSPIRACY - IFSO - KUWAIT.
* ENCYCLOPEDIA BRITTANNICA. VOL - 14

* * * * *

சமகாலம்
இரவாக இருக்கிறது
விசுவாசியே...!
தடுமாறிக் கொண்டிருக்கும் மனிதர்களுக்காக
இந்த இரவுக்கு ஒளி பாய்ச்சு!
சத்தியம் என்ற படகு
இச்சைக்கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது
மாலுமியாகத் தகுந்தவன் நீயே!

புரட்சிக்கவி: அல்லாமா இக்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவமும் இஸ்லாமும்

விரிவுரையாளர் அஷ்ஷெய்க் - ஏ.எம்.எம்.மிஹ்ழார்

நளீமிய்யா பட்டப்பரீட்சைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளின் தலைப்புகள் பற்றிய விபரத்தை எமது சென்ற இதழிலும் இவ்விதழிலும் வாசகர்களுக்கு வழங்கியுள்ளோம். அறபு மொழியில் சமர்ப்பிக்கப்பட்ட இக்கட்டுரைகளின் மாதிரியைப் பிரதிபலிக்கும் வகையில் ஆய்வுக்கட்டுரையொன்றின் தமிழ் மொழியிலான சுருக்கம் இங்கே இடம் பெறுகிறது.

"விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள் அவ்வாறே அல்லாஹ்வினுடைய தூதருக்கும் உங்கள் தலைவர்களுக்கும் கட்டுப்பட்டு நடவுங்கள்".

விசுவாசிகளே! உங்களுக்குள் யாதொரு விடயத்தில் பிணக்கு ஏற்பட்டால் அதனை அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் ஒப்படைத்து விடுங்கள் உண்மையாகவே நீங்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசங் கொண்டவர்களாக இருந்தால் அவர்களுடைய தீர்ப்பை நீங்கள் திருப்தியாகவே ஒப்புக்கொள்ளுங்கள் இது தான் நன்மையாகவும் மிக அழகான முடிவாகவும் இருக்கும்"

(அன்னிஸாஉ : 59)

மனிதர்கள் அல்லாஹ்விற்கு வழிபட்டு, இப்பூவுலகில் அவனுக்கு அடிபணிந்து, அவனது தீனுல் இஸ்லாத்தை அதிலே நிலை நாட்ட வேண்டும்; எனும் நோக்கில் அல்லாஹ்தஆலா இம்மனித வர்க்கத்தைப் படைத்தான். இதற்காக அவனது தூதர்களை காலாகாலம் அனுப்பியதோடு தனது நேர்வழியை விளக்குவதற்காக, புவியிலே சாந்தி சமாதானம் பரப்பப்பட வேண்டும் என்பதற்காக வேதங்களையும் இறக்கி வைத்தான். அதிலே அமானிதங்கள் (தலைமைத்துவம்) அதற்கே உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இதன் மூலம் மனிதர்கள் (ஆட்சிக்குட்பட்டோர்) தங்களது உயிர் உடைமை, மானம் போன்றவற்றி லெல்லாம் பாதுகாப்பை, அமைதியை அனுபவிக்க வேண்டும்.; அவர்களது ஆட்சி நிழலின் கீழ் நீதியை சுவைக்க வேண்டும் போன்ற விடயங்களையும் குறிப்பிட்டுள்ளான்.

மேற்குறித்த அல்குர்அனின் வசனம் முஸ்லிம்கள் தங்களது விவகாரங்கள் சீராக இடம்பெற தங்களுக்குள் ஓர் தலைமைத் துவத்தை ஏற்படுத்திக் கொள்ளும் படியும் அவ்வாறு தலைமைத்துவம் தோன்றும் போது அதற்கு கட்டுப்படுமாறும், தலைமைத் துவத்திற்கு கட்டுப்படுவதானது அல்லாஹ், றசூலுக்கு கட்டுப்பட்டு நடப்பதற்கு அடுத்தாற் போலுள்ள தரத்தில் இருப்பதாகவும் அல்லாஹ்தஆலா குறிப்பிடுகின்றான்.

## வரலாற்றுப்பாதையில் தலைமைத்துவம்

வரலாற்றுப்பாதையில் பட்டதலைமைத் துவங்கள் பல தோன்றி மறைந்திருப்பதையும் அவை வற்றாத பல வடுக்களை இட்டுச் சென்றிருப்பதையும் நாமறிவோம். வரலாற்றில் தோன்றிய தலைமைத்துவங்களை இரு பெரும் பிரிவுகளாக பிரித்து நோக்கலாம்.

1. நேர்வழி நடந்து தலைமைத்துவம் (இஸ்லாமிய தலைமைத்துவம்)
2. நெறிபிறழ்ந்த தலைமைத்துவம் (வழிதவறிய தலைமைத்துவம்)

நேர்வழி நடந்த தலைமைத்துவம் நெறிபிறழ்ந்த தலமைத்துவத்திலிருந்து பிரதான நான்கு விடயங்களில் வித்தியாசப்படுகிறது.

1. அல்லாஹ்வின் திருமறையை, அவனது ஷரீஆவை மையமாகவைத்து தலைமைத் துவம் அமைந்து காணப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தலைமைத்துவத்தை நடத்தியோர் சிறந்த ஒழுக்க பண்பாட்டுப் பயிற்சியை பெற்றிருந்ததோடு, தலைமைத்துவத்தை அமானிதமாக, சுமையாகக் கருதியமை.

3. அவர்கள் மக்களை ஏகத்துவத்தின் பால் அழைத்துச் சென்றதோடு இன, பிரதேச வாதங்களை விட்டும் தூரமாகியமை.

4. மார்க்கப் பண்புகளோடு சேர்த்து ஒழுக்க, தலைமைத்துவ, அரசியல் சம்பந்தமான சிறப்பம்சங்களையும் பெற்றிருந்தமை. இதனை மையமாக வைத்து மனித இனத்தை உயர்ந்த இலட்சியத்தின் பால் இட்டுச்சென்றமை.

இந்நான்கு அடிப்படைப்பண்புகளும் இஸ்லாமியத் தலைமைத்துவத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தன. நேர்வழி நடந்த கிலாபத் ஆட்சிக்காலம் வரைதான் இப்பண்புகள் பாதுகாக்கப்பட்டு வந்தமை கவலைக்குரிய ஓர் விடயமாகும். இது பற்றி மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வி அவர்கள் குறிப்பிடுகையில் "இஸ்லாமிய ஆட்சியின் வீழ்ச்சியை நாம் குறித்துக்காட்ட விரும்பினால், அது நேர்வழி நடந்த கிலாபத் ஆட்சிக்குப் பின்னால் தோன்றிய மன்னர் ஆட்சியிலிருந்துதான் ஆரம்பமானது எனக்குறிப்பிட்ட அவர்கள், இந்த விதி கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் தவிர்ந்த ஏனைய உமையா, அப்பாஸிய ஆட்சியாளர்களுக்கும் பொருத்தமானது எனக் குறிப்பிடுவதன் மூலம் இஸ்லாமிய தலைமைத்துவத்தின் வீழ்ச்சியை குறித்துக் காட்டுகின்றார்.

இஸ்லாமிய தலைமைத்துவ வீழ்ச்சியின் பின்னால் பல சீர்கேடுகள், விளைவுகள் இஸ்லாமிய வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. தலைமைத்துவ வீழ்ச்சியினால் ஏற்பட்ட சீர்கேடுகள், விளைவுகள் பின்வருமாறு

1. மார்க்கத்தை விட்டும் அரசியல் பிரிந்தமை.

2. ஆட்சியாளர்களிடம் ஜாஹிலிய்ய உணர்வுகள் மிகைத்தமை.

3. ஆட்சியாளர்கள் இஸ்லாத்தை மோசமான முறையில் சித்திரித்துக் காட்டியமை.

4. அறிவியற் கலைகளுக்கு குறைவான முக்கியத்துவம் செலுத்தப்பட்டமை.

5. வழிகேடுகள், பித்அத்கள் உருவாகியமை.

இவ்வாறு பல விளைவுகளும் சீர்கேடுகளும் தொடர்ந்து வந்த தலைமைத்துவங்களில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தலாயின. இதனால், இன்றுவரை முஸ்லிம் சமூகம் இழிவையும் அழிவையும் தொடர்ந்தும் சந்திக்க நேரிட்டது.

இந்த வகையில் இஸ்லாமியப் பயிற்சியை முறையாகப் பெற்ற தலைமைத்துவ வறுமை ஏற்படலாயிற்று. இதனால் தகுதியற்றவர்கள் கைகளில் தலைமைத்துவங்கள் செல்லலாயின.

## தலைமைத்துவமும் அதன் முக்கியத்துவமும்

அறபு மொழியில் 'அல்கியாதத்' எனும் பதப்பிரயோகம் தலைமைத்துவம் எனும் கருத்தில் வரலாற்றில் பிரயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது. இது அர்-ரிஆஸத், அஸ்-ஸியாதத், அல்இமாமத், விலாயதுல்-அம்ர், 'அஸ்-ஸஆமத்' என்ற அறபு மொழிச் சொற்களின் ஒத்த கருத்தாக அமைந்து காணப்படுகின்றது. பொதுவாக பரிபாஷையில் 'அல்-கியாதத்' என்பது **"மனித இயல்போடு ஒன்றிச் செல்கின்ற, மனித நடத்தையில் தாக்கம் செலுத்துகின்ற, குறித்த இலக்கின் பால் வழிநடத்திச் செல்கின்ற, ஒரு கலை"** என அழைக்கப்படுகிறது.

மனிதன் சமூகத்தோடு கூடி வாழும், ஒன்றித்து வாழும், இயல்பில் படைக்கப் பட்டுள்ளான். சமூகமின்றி தனிமையாக அவன் வாழ்வது கடினம். எனவே தான் மனிதனுக்கு வழங்கப்படும் மிகப் பெரிய கொடுமை அவனை தனிமையில் சிறைவைப்பதாகும் என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த வகையில் உடலிலுள்ள ஓர் உறுப்பு இன்னோர் உறுப்பின் தேவையை வேண்டி நிற்பது போல் மனிதன் இன்னொரு

மனிதனின்பால் தேவையுடையவனாக இருக்கின்றான். இவ்வாறு மனிதர்களுக் கிடையிலான தொடர்புகள் அதிகரிக்கின்ற வேளையில் தலைமைத்துவமொன்று தேவைப்படும் நிர்ப்பந்தம் உருவாகின்றது. இன்றேல் சீரான, கட்டுக்கோப்பான சமூகமாக, சமூக அமைப்பாக அது இருக்காது.

சமூகத்திலே தலைமைத்துவமென்பது உடலிலே தலையைப் போன்றது. சமூக இலக்குகளை, அதன் செயற்பாடுகளை தலைமைத்துவமே நிர்ணயிக்கின்றது. அது பலமாக, விழிப்பாக இருக்கும் போது பலமானதாக, விழிப்பாக இருக்கும். அது பலவீனப்படும் போது சமூகமும் பலவீனப்பட்டு வீழ்ச்சியடையும்.

இந்த வகையில் இஸ்லாமும் தலைமைத்துவத்தை, அதன் அவசியத்தை விளக்குவதில் பின் நிற்கவில்லை. "உங்களில் மூவர் பயணித்தால் அவர்களில் ஒருவரைத் தலைவராக ஆக்கிக் கொள்ளுங்கள்" என்ற நபிமொழி சமூகமொன்று உருவாகும் போது அங்கு தலைமைத்துவம் தோன்றி, அதனை சீர்படுத்த வேண்டும் எனும் அவசியத்தை இஸ்லாம் எந்தளவு வலியுறுத்துகின்றது என்பதற்கு போதிய சான்றாகும்.

இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் தலைமைத்துவமென்பது இலேசான விடயமல்ல. பாரமிக்க சுமை, பாரிய பொறுப்பு வாய்ந்தது. இதன் செயற்பாடுகள் விரிவடையும் போதெல்லாம் அதன் பொறுப்புக்களும் அதிகரித்துச் செல்லும். ஏனெனில் நீங்கள் அனைவரும் மேய்ப்பாளர்கள், உங்களில் ஒவ்வொருவரும் அவரது மேய்ப்பைப்பற்றி விசாரிக்கப் படுவீர்கள். இமாம் ஒரு மேய்ப்பாளர் அவர் தனது மேய்ப்பைப்பற்றி விசாரிக்கப்படுவார்" என்ற நபிகளாரின் ஹதீஸ் இதன் பொறுப்பு சுமையானது என்பதை வலியுறுத்தி நிற்கின்றது. மேலும் இது பாரமிக்க அமானிதம் என்பதை மற்றொரு நபி மொழியின் மூலம் நாம் விளங்கிக் கொள்ளலாம். அபூதர்-அல்கிபாரி (றழி) அவர்கள் நபிகளார் (ஸல்) அவர்களிடம் தலைமைத்துவப் பதவியொன்றைக் கேட்ட போது நபி (ஸல்) அவர்கள் கூறிய பதில் இதனை வலியுறுத்துகின்றது. "அபூதர் அவர்களே! நீங்கள் ஒரு பலவீனமிக்க ஒரு நபர் நிச்சயமாக அதுவோ ஓர் அமானிதம் அது மறுமை நாளன்று இழிவையும் கைசேதத்தையும் தேடித்தரக்கூடியது. யார் அதனை ஒழுங்கான முறையில் அதன் உரிமையைப் பெறுகின்றாரோ அவரைத்தவிர"

இவ்வாறே தலைவரைத்தெரிவு செய்வதும் அமானிதமானது. ஏனெனில் "பொருத்தமானவரை பொருத்தமான இடத்தில் வைக்கவில்லை என்றால் அமானிதம் நிறைவேற்றப்படவில்லை என்று பொருள்" **விசுவாசிகளே உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களை அவற்றின் சொந்தக் காரர்களிடம் ஒப்படைத்து விடுமாறு நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான்." (அன்னிஸாஉ :59)** என்ற அல்குர்ஆனின் வாக்கு இதனைத் தெளிவு படுத்துகின்றது. அதாவது தன்மனோ இச்சையினடிப்படையில் அல்லது சுய இலாபம் கருதி தகுதியற்றவர்களிடம் தலைமைத்துவப் பொறுப்பை ஒப்படைப்பது அமானிதத்திற்கு மாறு செய்வதாகும்.

சமூக நலன் கருதி பொருத்தமான ஒருவரைத் தெரிவு செய்யும் நோக்கில் ஒருவனிடம் ஆலோசிக்கப்பட்டால் அவன் உண்மையினதும் தூய்மையினதும் அடிப்படையில் தனது கருத்தை வெளியிடாது, பொருத்தமற்ற ஒருவரைத் தலைமைத்துவத்திற்கு அல்லது பொறுப்பொன்றிற்கு தெரிவு செய்தால் அவனது நிலை பொய்ச்சாட்சியம் சொல்வதைப் போன்றதாகும். இதனை அல்குர்ஆன் சிலைவணக்கத்தோடு இணைத்துக் கூறியது, மட்டுமல்லாமல் அதனை விட்டு தவிர்ந்து கொள்ளுமாறும் கட்டளையிடுகிறது. **"விக்கிரக வணக்கத்தின் அசுத்தத்தில் இருந்து நீங்கள் தப்பிக் கொள்ளுங்கள். அன்றி, பொய்ச்சாட்சியத்திலிருந்து நீங்கள் தவிர்ந்து கொள்ளுங்கள்".**

**(அல்ஹஜ் 31)**

யார் பொருத்தமான ஒருவரைத் தெரிவு செய்யும் 'விடயத்தில் மௌனித்து தனது கருத்தை வெளியிடுவதிலிருந்து தவிர்ந்து கொள்கின்றாரோ "அவர் சாட்சியத்தை மறைத்தவர்" எனும் பட்டியலில் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறார். இதனை அல்லாஹ் எச்சரித்து பின்வருமாறு குறிப்பிடுகிறான். **"சாட்சியத்தை நீங்கள் மறைக்க வேண்டாம் எவரேனும் அதனை மறைத்தால் அவனது இருதயம் நிச்சயமாக பாவத்துக்குள்ளாகி விடுகிறது. நீங்கள் செய்யும் யாவற்றையும் அல்லாஹ் நன்கறிவான்.**

(அல்-பகறா 283)

## தலைமைத்துவத்துக்குக் கட்டுப்படல்

தலைமைத்துவம் சீராக இடம் பெற வேண்டுமென்றால் அத்தலைமைத்துவத்துக்குரிய உரிமைகள் பேணப்படல் வேண்டும். அதாவது தலைமைத்துவத்துக்கு அதன் கீழுள்ளவர்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். இக்கட்டுப்பாடு வெறுமனே வகுக்கப்பட்டதல்ல. இதற்கு ஆதாரமாக, அடிப்படையாக அல்குர்ஆன் வசனங்களும் நபிகளாரின் ஹதீஸ்களும் அமைந்து காணப்படுகின்றன.

**"விசுவாசிகளே! அல்லாஹ்விற்கு வழிப்பட்டு கட்டுப்பட்டு நடவுங்கள். அவ்வாறே உங்கள் தூதருக்கும் தலைவர்களுக்கும் கட்டுப்படுங்கள்" (அன்னிஸாஉ 59)** என்ற அல்குர்ஆன் வசனமும் **"உங்களிலே ஹபஷிய நாட்டு அடிமை தலைவராக இருந்தாலும் அவருக்குக் கட்டுப்பட்டு வழிப்பட்டு நடவுங்கள்"** என்ற ஹதீஸும் தலைமைத்துவத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

நேர்வழியில் செல்லும் தலைமைத்துவத்திற்கு எதிராக கிளர்வது, மாற்றமாக நடப்பது றசூலுக்கு எதிராக கிளர்ந்து, மாற்றமாக நடப்பதற்கு சமமாகும் என்ற விதியை இஸ்லாம் முன்வைப்பதினூடாக தலைமைத்துவத்திற்கான கட்டுப்பாட்டை மேலும் வலியுறுத்துகின்றது. **"யார் எனக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றாரோ அவர் அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டு விட்டார். யார் எனக்கு மாறு செய்கின்றாரோ அவர் அல்லாஹ்வுக்கு மாறு செய்தவராவார். யார் தங்களது தலைவருக்கு கட்டுப்படுகின்றாரோ அவர் எனக்குக் கட்டுப்பட்டவராவார். யார் தலைவருக்கு மாறு செய்கின்றாரோ அவர் எனக்கு மாறு செய்தவராவார்"** என்ற நபி (ஸல்) அவர்களின் வாக்கு, தலைமைத்துவ கட்டுப்பாட்டை விளக்கி நிற்கின்றது.

தலைமைத்துவக் கட்டுப்பாட்டை வலியுறுத்திய இஸ்லாம் அதன் கடிவாளத்தை முற்று முழுதாக விட்டு விடுவதில்லை. அதனை வரையறுத்து வகுத்தும் வந்துள்ளது. ஏனெனில் சர்வாதிகார தலைமைத்துவப் போக்கை இஸ்லாம் முற்றாக வெறுக்கின்றது. எனவே, தலைமைத்துவத்திற்கு சில நிபந்தனைகளை இடுவதினூடாக அதற்கான கட்டுப்பாட்டை வலியுறுத்துகின்றது. இந்த வகையில் பின்வரும் வரையறைகளை அது விதிக்கின்றது.

1. தலைவர் அல்லது ஆட்சியாளர் இஸ்லாமிய ஷரீஆவை அமுல் நடத்துபவராக இருக்க வேண்டும்.
2. மக்கள் மத்தியில் நீதியைக் கொண்டு தீர்ப்பளிப்பவராக இருக்க வேண்டும்.
3. மக்களை பாவத்தைக் கொண்டு ஏவுபவராக இருக்கக் கூடாது.

இந்த வகையில் மேற்குறித்த நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் தலைமைத்துவம் காணப்படும் போது, மாற்றமான முறையில் நடக்கும் போது அதற்கு கட்டுப்பட்டு அடிபணிவது கடமையல்ல. மாற்றமாக, அதற்கெதிராக கிளர்ந்தெழுவது கடமையாகும். இதனை பின்வரும் நபி மொழி தெளிவாக விளக்கி நிற்கின்றது. **"நிச்சயமாக கட்டுப்பாடு என்பது நன்மையான விவகாரங்களிலேயே தான்"**

## தலைமைத்துவப்பண்புகள்

தலைமைத்துவம் சிறப்பாக, சீரான முறையில் இடம் பெற அது தகுதிப் பண்புகளைப் பெற்றிருப்பதோடு சில குணவொழுக்கங்களையும் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. தலைமைத்துவத்தின் வெற்றி அது பெற்றிருக்கும் பண்புகளைப் பொறுத்தே அமையும் என்றால், அது மிகைப்படுத்தப்பட்ட கருத்தல்ல.

இந்த வகையில் பல்வேறு பண்புகள், குணவொழுக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இஸ்லாம் முன்வைக்கும் தலைமைத்துவப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகளை அறிவதற்கு முன்னால் உளவியலாளர்கள் குறிப்பிடும் சில பண்புகளைப்பற்றி அறிவது பொருத்தமான தாகும். அப்போது இஸ்லாம் முன்வைக்கும் தலைமைத்துவப் பண்புகள் எந்தளவு தூரம் சிறந்தது, எந்தளவிற்கு வெற்றிகரமானது, சாத்தியமானது என்பது புலனாகும்.

உளவியலாளர்கள் குறிப்பிடும் தலைமைத்துவப்பண்புகள் பின்வருமாறு:

1. தலைவராக இருப்பவர் தனது கடமைக்குப் பொருத்தமானவராக, ஆற்றலுள்ளவராக இருத்தல்.
2. தனது பொறுப்பில் கண்டிப்பானவராக, கரிசனையுள்ளவராக இருத்தல்
3. உறுதியுள்ளவராக இருத்தல்.
4. தொடர்ந்தும் பொறுப்புக்களை சுமப்பதில், முடிவுகள் எடுக்கும் விடயத்தில் தயார் நிலையில் இருத்தல்.
5. கடுமையான வேளைகளில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளச் சக்தியுடைய வராக இருத்தல்.
6. பூரணமாகத் தனது ஆளுமையுடன் செயற்படுபவராக இருத்தல்.
7. கற்பிக்கும் ஆற்றலுள்ளவராக இருத்தல்.

இன்னொரு வகையில் சில அறிவியல் உஷாத்துணை நூல்கள் பின்வரும் பண்புகளைக் குறிப்பிடுகின்றன.

ஆளுமைப்பலம், விழிப்பு, அழகிய தோற்றம், வீரம், உறுதி, திடகாத்திரம், சகித்துக் கொள்ளும் ஆற்றல், உணர்வு, தாக்கமேற்படுத்தும் ஆற்றல், பணிவு, புத்திக் கூர்மை, ஞானம், நீதி, குழுவுணர்வு, தன்னலமறுப்பு போன்ற இன்னோரன்ன பண்புகள். இதே அமைப்பில் அறிஞர் பைலட் மார்ஷல் தனிப்பட்ட விதத்தில் சில தலைமைத்துவப் பண்புகளை குறிப்பிடுகின்றார்.

இஸ்லாம் தலைமைத்துவப்பண்புகளை குறிப்பிடுவதில் எல்லாவற்றிற்குமேலாக உயர்ந்து காணப்படுகின்றது. நபி (ஸல்) அவர்கள் அதில் சிறந்த பூரண முன்மாதிரியாக திகழ்கின்றார்கள். அவர் சொல்லிலும் செயலிலும் தலைமைத்துவப் பண்புகளை விளக்கிக்காட்டினார்கள்.

**"அல்லாஹ்வையும் இறுதிநாளையும் உறுதியாக நம்புகிறவர்களுக்குரிய அழகிய முன்மாதிரி நிச்சயமாக அல்லாஹ்வினுடைய தூதரிடமே உங்களுக்கு இருக்கிறது." (அல்அஹ்ஸாப் 31)**

என்ற அல்குர்ஆன் வசனம் இதனையே உணர்த்துகின்றது. அவர் அரசியல்வாதியாக, குடும்பத் தலைவராக, நிர்வாகியாக வணக்கவாளியாக இருந்தது போன்றே சகல வழிகளிலும் வழிகாட்டக்கூடிய தலைவராகவும் விளங்கி அதன் பண்புகளை விளக்கிச் சென்றார்கள்.

நபிகளார் (ஸல்) அவர்கள் பெற்றிருந்த தலைமைத்துவபண்புகளை பின்வருமாறு தொகுத்து சுருக்கமாகக்குறிப்பிடலாம். பூரண குணஒழுக்கம், புத்திக்கூர்மையும் நல்லாட்சியும், பணிவு, பொறுமையும் சகிப்புத்தன்மையும், வாக்குறுதி நிறைவேற்றல், வீரம், உடற்பலம், நல்லுறவு, அன்புப்பரிமாற்றம், உளப்பூரிப்பு, உளப்பக்குவம், தூரதிருஷ்டி, ஆளுமை, சிறந்த முன்மாதிரி போன்ற இன்னும் பல பண்புகளைப் பெற்றிருந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் பெற்றிருந்த மேற்குறித்த தலைமைத்துவபண்புகளை மையமாக வைத்து இஸ்லாமிய அறிஞர்கள் பின்வரும் இருபது பண்புகளை தலைவராக நியமிக்கப்படுபவர்கள் கட்டாயமாகப் பெற்றிருக்க வேண்டுமென நிபந்தனையிடுகிறார்கள். அதனை சுருக்கமாக இங்கு நோக்குவோம்.

1. தூய்மையாக, விசுவாசமாக நடத்தல்
2. சீரிய புத்தி
3. நற்பண்புகள்
4. தோழமை.
5. வீரமும் பலமும்
6. உண்மை பேசுதல்
7. பணிவும் உயர்வு கொள்ளாமையும்
8. வாக்குறுதியை நிறைவேற்றல்
10. பொறுமையும் சகிப்புத் தன்மையும்
11. பிறர் பொருட்களில் ஆசை கொள்ளாமை
12. பேணுதலும், பற்றற்று இருத்தலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. நீதியும் நேர்மையும்
14. தற்புகழ்ச்சி விரும்பாமை.
15. அல்லாஹ்வின் வரம்புகளைப் பாதுகாத்தல்
16. உளச்சுத்தம்
17. உறுதியும் தளர்வும் கொள்ளாமை.
18. சீராக இயங்குதலும், பக்குவமும்
19. சத்தியத்தில் உறுதி
20. அவநம்பிக்கை கொள்ளாமை.

மேற்குறித்த பண்புகள், குணவொழுக்கங்கள் பொதுவாக ஒரு முஸ்லிம் தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டியவைகளாகும். ஆனால், ஒருவர் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்கும் போது குறிப்பாக இப்பண்புகளைப் பெற்றிருப்பது அவர் மீது கடமையாகின்றது.

## நாட்டில் தலைமைத்துவம்

நாடு என்பது மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டது.

1. குடிமக்கள்
2. நிலப்பரப்பு
3. ஆட்சியாளர் (தலைமைத்துவம்)

நாட்டில் தலைமைத்துவம் எவ்வாறு திகழ வேண்டும் என்பதற்கு முன்னால், நபி (ஸல்) அவர்கள் நாட்டின் தலைவராக இருந்து எவ்வாறு செயற்பட்டார்கள், நாட்டின் தலைமைத்துவத்தை எவ்வாறு சீரமைத்தார்கள் என்பதைப்பற்றிச் சிறிது நோக்குவதினூடாக நாட்டின் தலைமைத்துவம் எவ்வாறு திகழ வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

நபி (ஸல்) அவர்கள் ஆரம்பித்த இஸ்லாமிய ஆட்சி பின்வந்த முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கு ஓர் முன்மாதிரியாகும். எப்போது நபிகளாரின் பாதம் மதீனா பூமியில் பதிந்ததோ அன்றிலிருந்து இஸ்லாமிய அரசின் தோற்றம் உதயமாகின்றது. மதீனா சென்றடைந்த நபி (ஸல்) அவர்கள் பல்வேறு அரசியல் விவகாரங்களை மேற்கொண்டார்கள்; உள் நாட்டு வெளி நாட்டு விவகாரங்களை சீரமைத்தார்கள்; மதீனாவில் காணப்பட்ட பல்வேறு சமூகங்களுக்கும் அவர்களது உரிமைகளை வழங்குவதினூடாக இணக்கம் கண்டார்கள். முஹாஜிரீன்களுக்கும் அன்ஸாரிகளுக்குமிடையில் சகோதரத்துவ சமத்துவ உணர்வை ஏற்டுத்தினார்கள். பள்ளிவாசல்கள் வியாபார நிலையங்களை உருவாக்குவதினூடாக பொதுநிறுவனங்களை அமைக்கும் திட்டத்தை மேற்கொண்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் நிருவாகத் துறைக்காற்றிய பங்களிப்பு மகத்தானது பொருத்தமானவர்களை பொருத்தமான இடங்களில் அவர் நியமித்தமை, அவர் ஓர் சிறந்த நிர்வாகி, சிறந்த ஆட்சியாளர் என்பதற்கு சிறந்த சான்றாகும்.

**நபிகளார் நியமித்த கவர்னர்களின் பெயர்களும் அவர்கள் நியமிக்கப்பட்ட இடங்களும் பின்வருமாறு.**

1. பாதான் இப்னு சாசான்– யமன் பிரதேசம்
2. ஷஹ்ர் இப்னு பாதான்– ஸன்ஆ பிரதேசம்
3. ஹாலித் இப்னு ஆஸ் – ஸன்ஆ பிரதேசம் (ஷஹ்ரின் மரணத்தைத் தொடர்ந்து)
4. அல் முஹாஜிர் இப்னு அபீஉமையா அன்ஸாரி– ஹழர மௌத்
6. அபூ மூஸா அல் அஷ்அரி -ஸபீத் பிரதேசம்
7. முஆத் சுப்யான் ஸஹ்ர் இப்னு ஹர்ப்– – நஜ்ரான் பிரதேசம்.
8. அபூ சுப்யான் ஸஹ்ர் இன்னு ஹர்ப் – நஜ்ரான் பிரதேசம்
9. யஸீத் இப்னு அபீ சுப்யான் – தைமாஉ பிரதேசம்
10. இதாப் இப்னு உஸைத் மக்கா பிரதேசம்
11. அலீ இப்னு அபீ தாலிப் – யமன் பிரதேசத்திலுள்ள அஹ்மாஸ் பகுதி
12. அம்ருப்னுல் ஆஸ் – அம்மான் பிரதேசம்
13. அதீ இப்னு ஹாதிம் – தை பிரதேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. மாலிக் இப்னு நுவைஹறா பனூஹன்ளலா வாசிகளுக்கு கவர்னரா

கவர்னர்களாக பலரை நியமித்தது போன்றே, பல ஸஹாபாக்களை நீதிபதிகளாக, ஸகாத் பொருட்களை திரட்டும் பணியாளர் களாக பல இடங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். அவ்வாறே இராணுவப் படையை உருவாக்கி பலருக்கு தலைமைத்துவப் பொறுப்பை அதிலே வழங்கினார்கள்

அடுத்து ஒரு நாட்டுக்கு தலைவரை, ஆட்சியாளரை நியமிப்பது சம்பந்தமான மார்க்கத் தீர்ப்பைப் பொறுத்தவரை அனைத்து இஸ்லாமிய அறிஞர்களும் நாட்டு பிரஜைகள் தங்களுக்குகென்றே ஒரு தலைவரைத் தேர்ந் தெடுப்பது , நியமிப்பது வாஜிப் என்பதில் உடன்பட்டு இருக்கிறார்கள் அத்தோடு அல்குர்ஆன், அல் ஹதீஸ், இஜ்மா, அறிவியல் ரீதியான ஆதாரங்கள் இந்தத் தீர்ப்பை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

இஸ்லாமிய வரலாற்றில் ஆட்சியா ளருக்கு பல பட்டப்பெயர்கள் சூட்டப்பட்டு வந்துள்ளன. இந்த வகையில் மூன்று பெயர்கள் பிரபல்யமானவை.

1. கலீபா
2. அமீருல் முஃமினீன்
3. இமாம்

மலிக் என்ற சொற்பிரயோகமும் வரலாற்றிலே பிரயோகிக்கப்பட்டு வந்துள்ளது. அல்குர்ஆனில் அல்லாஹு தஆலா, ஆட்சி வழக்கப்பட்ட சிலரை "மலிக்" எனப் பெயரிட்டு அழைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. எவ்வாறு இருப்பினும் அஷ்ஷஹீத் அப்துல் காதிர் அவ்தா குறிப்பிடுவது போன்று கிலாபத், முல்க், இமாமத் போன்ற சொற்கள் ஒன்றுக் கொன்று வித்தியாசப்பட்டு இருப்பினும் அவையனைத்தும் உயர்ந்த தலைமைத்துவமான நாட்டின் தலைமைத் துவத்தைத்தான் குறிக்கின்றன என்ற கருத்து மிகவும் பொருத்தமானது.

இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் நாட்டின் தலைவராக வருபவர் சில நிபந்தனைகளுக் குட்பட்டவராக இருக்க வேண்டும். இந்த வகையில் இஸ்லாமிய அறிஞர்கள் பின்வருமாறு அதனை வகைப்படுத்தியுள்ளனர்.

1. முஸ்லிமாக இருத்தல்
2. பருவ வயதை அடைந்திருத்தல்
3. புத்தியுள்ளவராக இருத்தல்
4. சுதந்திரவானாக இருத்தல்
5. ஆணாக இருத்தல்
6. நேர்மையுள்ளவராக இருத்தல்
7. தகுதி, பொருத்தப்பாடு உள்ளவராக இருத்தல்
8. அறிவுள்ளவராக இருத்தல்
9. தலைமைத்துவப் பதவியை வேண்டாத வராக இருத்தல்
10. நாட்டுப் பிரஜையாக இருத்தல்
11. அங்கக் குறைபாடுகள் அற்றவராக, உணர்வு குன்றாதவராக இருத்தல்
12. குறைஷிப் பரம்பரையைச் சேர்ந்தவராக இருத்தல்

மேற்குறித்த நிபந்தனைகளில் முதல் பதினொரு நிபந்தனைகளும் இஸ்லாமிய அறிஞர்களிடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வைகளாகும். இறுதி நிபந்தனையான குறைஷிப் பரம்பரையை சேர்ந்தவராக இருத்தல் என்பதில் இஸ்லாமிய அறிஞர்களிடத்தில் கருத்து வேறுபாடு நிலவுகிறது. சரியான கருத்துப்படி "குறைஷியர்களில் இருந்துதான் ஆட்சியாளர்கள் தலைவர்கள் வருவார்கள்" என்ற நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ் அன்றைய அறேபியச் சூழலில் குறைஷிக் குலத்தினர் பலம், செல்வாக்கு, யாவரும் கட்டுப்படும் ஆளுமை போன்ற தலைமைத்துவத் தகைமைகளை பெற்றிருந்ததன் காரணமாக அன்றைய கால சூழலுக்கேற்ப கூறப்பட்ட ஹதீஸ் இது என நவீன கால இஸ்லாமிய அறிஞர்களுள் ஒருவரான கலாநிதி யூசுப் அல் கர்ழாவி அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இன்றைய கால சூழ்நிலையைப் பொறுத்தவரை குறைஷிக் குலத்தைச் சார்ந்த ஒருவர் காணப்பட்டு முதல் பதினொரு நிபந்தனைகளும் அவரிடம் காணப்பட்டால் அவர் தலைமைத்துவத்திற்கு முட்படுத்தப்

படுவார். இன்றேல் குறைஷி அல்லாத ஒருவர் முதல் பதினொரு நிபந்தனைகளைப் பெறுமிடத்து அவர் தலைமைத்துவப் பதவிக்கு பொருத்தமானவராக தெரிவு செய்யப்படுவார் இதனை கலாநிதி முஹம்மத் அப்துல் காதிர், அபூபாரிஸ் போன்ற இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆட்சியாளரின் கடமைகளைப் பொறுத்தவரை இஸ்லாமிய சட்டவல்லுனர்கள் பல கடமைகளை நாட்டின் தலைவர் மீது விதியாக்குகின்றனர். இதில் **அல்லாமா அபுல் ஹஸன் அலி அல்மாவர்தி** குறிப்பிடும் பத்து மார்க்க, பொருளாதார, அரசியல், சமூக ரீதியான கடமைகள் மிகவும் தெளிவானது அதன் சுருக்கம் பின்வருமாறு

1. தீனைப் பாதுகாத்தல்
2. சட்டங்களை தேவையானவிடத்து பிரயோகித்தல்
3. நாட்டின் இறைமையைப்பாதுகாத்தல்
4. தண்டனைகளை நிறைவேற்றல்
5. எதிர்ப்புகளை முறியடித்தல்
6. இஸ்லாத்தை எதிர்ப்போர்களுடன் ஜிஹாத் செய்தல்
7. ஸகாத், வரிகள் போன்றவற்றை சேகரித்தல்
8. பைத்துல்மாலிலிருந்து வழங்கப்படும் கொடுப்பனவுகளை நிர்ணயித்தல்
9. விசுவாசிகள், ஆலோசகர்களின் கருத்துக்களை எடுத்து நடத்தல்
10. நாட்டு விவகாரங்களில் எப்பொழுதும் கண்காணிப்புடன் இருத்தல்.

மேற்குறித்த கடமைகளை ஆட்சியாளர் நிறைவேற்றும் போது பின்வரும் உரிமைகளை அவர் பெறுகின்றார்

1. கீழ்ப்படியும் உரிமை
2. பைதுல் மாலிலிருந்து பெறும் செயல் உரிமை
3. நாட்டு மக்களின் உதவி
4. நாட்டு மக்களின் உபதேசம்.

## தலைமைத்துவமும் அதனோடு தொடர்பான சில விடயங்களும்.

தலைமைத்துவம் சீரான முறையில், சிறப்பாக நடைபெற அதனோடு தொடர்பான சில விடயங்கள் அவசியமாகின்றன. இந்த வகையில் கலந்தாலோசனை, அமானிதத்தை பேணுதல், அறிவு, சக்தியும் நிறைவேற்றும் ஆற்றலும், நீதியை நிலைநாட்டல், திட்டமிடல் போன்ற அடிப்படை அம்சங்கள் அமைந்து காணப்படுகின்றன. அதனை சுருக்கமாக இங்கு நோக்குவோம்.

### கலந்துரையாடல்

ஷூறா என அழைக்கப்படும் கலந்துரையாடலானது ஈமானோடு தொடர்பான ஒரு விடயம், முஸ்லிம்கள் பெற்றிருக்கும் சிறப்பம்சங்களில் ஒன்று, எந்த சமூகம் ஷூறாவைக் கைவிட்டதோ அந்த சமூகத்தின் ஈமான் பூரணத்துவம் பெறாது. இந்த வகையில் சமூகத் தலைவராக இருப்பவர் அதனை சமூகத்தோடு இணைத்த விதத்தில் கொண்டு செல்வது அவர் மீது கடமையாகின்றது. நீதி, நிர்வாகம், அரசியல் சட்ட உருவாக்கம்; தனிநபர், சமூக நலன்களோடு தொடர்பான அம்சங்கள் போன்ற விடயங்களிலெல்லாம் தலைவர், ஆட்சியாளர் சுயமாக முடிவெடுக்காது தனது உறுப்பினர்களோடு சேர்ந்து இறுதியான தீர்க்கமான முடிவெடுப்பது அவர் மீது கடமையாகும்.

அல்லாஹுதஆலா றசூல் (ஸல்) அவர்களைப் பார்த்து "அவர்களுடன் கலந்தாலோசனை செய்வீராக! (ஆல இம்றான் 59) எனக் கூறினான். அவருக்குப் பின்னால் வந்த அவரை முன்மாதிரியாக கொள்ளும் ஆட்சியாளர்கள் இதனை மேற்கொள்வது எந்தளவு தூரம் அவர்கள் மீது கடமையாகின்றது என்பது புலனாகின்றது.

தலைமைத்துவத்தை ஏற்றிருப்பவர் பெயரளவில் தலைவர், ஆட்சியாளர் என்றிருந்தாலும் முடிவுகள் எடுக்கும் விடயத்தில் தவறிழைக்கக்கூடும் என்ற நோக்கில் இந்தக் கலந்தாலோசனை விதிக்கப்பட்டது என்பதுடன் தலைமைத்துவப் பொறுப்பால் மாத்திரம் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புக்களை நிறைவேற்ற முடியாது. அதனோடு சேர்ந்து உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்ற ஞானத்தை இது மறைவாகக் கொண்டுள்ளது.

### அமானிதம் பேணுதல்

அமானிதத்தைப் பேணுதல், தலைமைத்துவம் அவசியம் கைக்கொள்ள வேண்டிய அடுத்த விடயமாகும். மக்கள் அல்லது உறுப்பினர்கள் தலைமைத்துவத்தின் பால் திருப்திகொள்ள இந்த விடயம் துணையாக அமைகிறது. இன்றேல் மக்களின் அதிருப்தியை, வெறுப்பை தலைமைத்துவம் பெற வேண்டிய நிலை ஏற்படும்.

அமானிதத்தைப் பேணுதல், தலைமைத்துவம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டிய பண்பு என்பதை அல்குர்ஆன் பல்வேறு இடங்களில் உணர்த்துகின்றது. நபி ஹூத் (அலை) அவர்கள் இந்தப்பண்பைப் பெற்றிருந்ததை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:

**"என் இறைவனின் செய்திகளையே நான் உங்களுக்கு எடுத்துரைக்கின்றேன். உண்மையாகவே நான் உங்களின் நம்பிக்கைக்குரிய உண்மையான உபதேசியாகவும் இருக்கின்றேன்." (அல்-அஃறாப் 28)**

என தனது சமூகத்துக்கு ஹூத் (அலை) குறிப்பிட்டார்கள். அதில் "நம்பிக்கைக்குரிய" என தனது தலைமைத்துவப் பண்பை எடுத்துக் கூறியது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறே நபி (ஸல்) அவர்கள் நஜ்றான் வாசிகளுக்கு அபூஉபைதா (றழி) அவர்களை அனுப்பி வைக்கும் போது பின்வருமாறு குறிப்பிட்டார்கள். **"உங்களுக்கு மிகவும் நம்பிக்கைக்குரிய, அமானிதமாக நடக்கக்கூடிய ஒருவரை அனுப்பி வைக்கிறேன்"** எனக்கூறியமை அமானிதம் பேண வேண்டியதன் அவசியத்தை நபிகளார் எந்தளவு தூரம் தலைமைத்துவத்துடன் சேர்த்து குறிப்பிட்டுள்ளார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

### அறிவு

பொதுவாக மனிதனுக்குக் கண் இன்றி எவ்வாறு வாழ்வது கடினமோ அவ்வாறே, அவனது கருமங்களை மேற்கொள்ள அறிவு மிக அவசியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. குறிப்பாக சமூகத்தை வழி நடாத்திச் செல்லக்கூடிய தலைமைத்துவமும் அறிவின்றி கருமமாற்றும் போது அதன் வழி செல்லும் சமூகமும் வெகுவாக பாதிப்புக்குள்ளாகின்றது. இதனால் தான் இஸ்லாமும் சமூகமும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக தலைமைத்துவத்தின் ஒவ்வொரு செயற்பாடும் அறிவின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டுமென கட்டளையிட்டுள்ளது.

தலைமைத்துவத்தை ஏற்பவர்கள் அறிவெனும் பண்பைப் பெற்றிருப்பது அவசியமென்பதை அல்லாஹ்தஆலா பின்வரும் அல்குர்ஆன் வசனத்தின் மூலம் உணர்த்துகின்றான்.

**"அவர்கள் இருவருக்கும் அறிவையும் ஞானத்தையும் நாம் கொடுத்திருக்கிறோம்". (அல்-அன்பியாஃ 79)**

அதாவது நபிமார்களாக, மக்களின் விவகாரங்களைக் கவனிப்பதற்காக அனுப்பப்பட்ட நபி தாவூத் (அலை) அவர்களும் அவர்களின் புத்திரர் சுலைமான் (அலை) அவர்களும் பெற்றிருந்த அறிவெனும் பண்பை அல்லாஹ்தஆலா இங்கு குறிப்பிட்டுக் காட்டுகின்றான்.

அவ்வாறே பனூ இஸ்ரவேலர்களுக்கு அவர்களது எதிரிகளுடன் போராடுவதற்காக அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க "தாலூத்" என்பவரை அவர்களுக்கு அனுப்பி வைத்தான். அவரது பண்பைப்பற்றி அல்லாஹ் குறிப்பிடும் போது

**"நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது ஆட்சி செய்ய அவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறான். அறிவிலும் தேகத்திலும் உங்களை விட அதிகப்படுத்தி இருக்கிறான். (அல்-பகறா 247)**

இங்கு அறிவுக்கு அழுத்தம் கொடுத்து கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சக்தியும் நிறைவேற்றும் ஆற்றலும்

தலைமைத்துவம் என்பது கடினமான ஒரு விடயம். அது பல தடைக்கற்களைக்கடக்க வேண்டியிருக்கிறது. அதன் பாதை கரடு முரடானது. எனவே, இவைகளையெல்லாம் கடந்து செல்லக்கூடிய பலத்தை, ஆற்றலை தலைமைத்துவம் பெற்றிருப்பது அவசிய மாகின்றது. பலவீனமான தலைமைத்துவத்தால் இவ்வாறான தடைகளைக்கடப்பது சாத்தி யமற்ற ஓர் விடயமாகும்.

நபி (ஸல்) அவர்களிடம் அபூதர் அல் கிபாரி (றழி) அவர்கள் தலைமைத்துவப் பதவியைக் கேட்டபோது பின்வருமாறு குறிப்பிட்டார்கள். "நிச்சயமாக நீர் ஒரு பலவீனர். அதுவோ பாரமிக்க பொறுப்பாகும்" தலைவர் அதற்குரிய பலத்தை, ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டுமென்பதை இதன் மூலம் நபியவர்கள் தெளிவுபடுத்திக் காட்டியுருப்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

## நீதியை நிலைநாட்டல்

நீதியை நிலை நாட்டல் தலைமைத் துவத்தோடு மிகவும் நெருக்கமான ஒரு விடயமாக கருதப்படுகின்றது. சுருங்கக் கூறின் சமூக உருவாக்கத்தில் நீதி, தலையாய பங்கை வகிக்கிறது. அனைத்து நபிமார்கள் றசூல்மார்களினதும் பணியாக இது அமைந்திருந்தது.

**"நிச்சயமாக நாம் நம்முடைய தூதர்களை தெளிவான அத்தாட்சிகளுடன் அனுப்பி வைத்தோம். அவர்களுடன் வேதத்தையும் நீதத்தின் நிறைகோலையும், மனிதர்கள் நீதமாக நடந்து வரும் பொருட்டு அருளினோம்" (அல்-ஹதீத் 25)**

என அவர்களைப்பற்றியும் அவர்களது பணியைப் பற்றியும் அல்குர்ஆன் குறிப்பிடு கின்றது.

தலைமைத்துவம் நீதமாக நடந்து கொள்ள வேண்டுமென்பதன் அவசியத்தை கலாநிதி அஹ்மத் ஷலபி விளக்கும் போது "தலைவர் தெரிவு செய்யப்படும் போது அது 'நீதமாக நடந்து கொள்ளல்' எனும் பண்பைப் பெற்றிருப்பது மிகவும் அவசியமானதாகும். மற்றைய இரு பண்புகளான அறிவும் வீரமும் தலைவரிடம் இல்லாதபோது உறுப்பினர் களிலுள்ள வீரர்கள், அறிஞர்கள் மூலமாக அதனை நிவர்த்தி செய்ய முடியும். ஆனால், நீதமாக நடந்து கொள்ளும் விடயத்தைத் தலைமைத்துவம் இழக்கும் போது அது அநீதியான தலைமைத்துவமாக கருதப்படு வதோடு மக்களின் அதிருப்தியை, வெறுப்பை சம்பாதித்துக்கொள்ள நேரிடும்" எனக் குறிப்பிடுகின்றார்.

எனவே, மழை எவ்வாறு மனிதர் களுக்கும் கால்நடைகளுக்கும் அவசியமோ அவ்வாறே, நீதமெனும் மழையை சமூகம் பெறும்போது செழிப்பான சமூகமாக அது திகழ்வதோடு அமைதியான திருப்திகரமான வாழ்க்கையை அது அனுபவிக்கும்.

## திட்டமிடல்

தலைமைத்துவ விடயங்களை வெற்றிகரமாக வழி நடத்திச்செல்வதில் திட்டமிடலுக்கு பாரிய பங்குண்டு. என்றால் அது மிகையாகாது.

திட்டமிடல் எனும் போது, எதிர்கால விடயங்களை ஒழுங்குபடுத்துவதற்கான, செப்பனிடுவதற்கான திட்டத்தை வகுத்தல் எனப் பொருள்படுகின்றது. வரலாற்றிலே தோன்றிய பல தலைமைத்துவங்கள் ஒழுங்கான திட்டமிடலினால் பல தலைமைத் துவங்கள் வெற்றிப்பாதையில் சென்றதையும் நாம் அறிவோம்.

நபி (ஸல்) அவர்கள் பல விடயங்களில் திட்டமிடலை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டுள்ளார்கள். கலாநிதி யூசுப் அல் கர்ழாவி அவர்கள் நபி (ஸல்) அவர்களின் திட்டமிடலுக்கு உதாரணமாக அவரது ஹிஜ்ரத் முயற்சியை சுட்டிக்காட்டுகின்றார்கள். நபி (ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் ஹிஜ்ரத் செல்வதற்காக ஹபஷாவைத் தெரிவு செய்தமையையும், ஹிஜ்ரத்தின் போது தோழர் அபூபக்கர் (றழி) அவர்களை துணையாகக் கூட்டிச் சென்றமையையும் ஹிஜ்ரத்தினிடையே "தவ்ர்" குகையை மறைவிடமாகப் பயன்படுத்தி யமையையும்; உணவு, செய்தி என்பவற்றைக் கொண்டு வருவதற்காக பொருத்தமான வர்களை நியமித்திருந்தமையும் அவரது ஆழமான, சிறந்த திட்டமிடலுக்கு போதிய எடுத்துக் காட்டுக்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்)அவர்களே திட்டமிடலின் அடிப்படையில் செயற்பட்டால் அவரைத் தொடர்ந்து வந்த தலைவர்கள், ஆட்சியாளர்கள் திட்டமிடலின் அடிப்படையில் தங்களது தலைமைத்துவ விவகாரங்களை மேற்கொள்வதில் என்ன தவறு இருக்கின்றது?

### தலைமைத்துவ வெற்றிக்கு சில வழிகாட்டல்கள்

இங்கே தலைமைத்துவப் பொறுப்பை வெற்றிகரமாகக் கொண்டு செல்வதற்கு சில வழிகாட்டல்களை, உபதேசங்களை இஸ்லாமியக்கண்ணோட்டத்தினடிப்படையில் சுருக்கமாக இங்கு தொகுத்துத் தருகிறேன்.

1. தலைமைத்துவப் பதவியை ஏற்றிருப்பவர் தனது பொறுப்பில் பூரண கவனத்துடன் இருப்பது அவசியம்

2. தனது பணியில் பூரண நம்பிக்கை கொண்டவராக இருக்க வேண்டும்.

3. தனது நோக்கங்களை சிறந்த முறையில் நிறைவேற்றிக் கொள்ள பூரண திட்டமொன்றை வகுத்துக் கொள்வது மிகவும் சிறந்தது.

4. தனது உறுப்பினர்களைப்பற்றி அறிந்திருப்பது அவசியம். இது பொருத்தமானவர்களை, பொருத்தமான இடங்களில் தெரிவு செய்ய உதவியாக அமையும்.

5. தனது நேரத்தை, பணியை ஒழுங்கு படுத்திக் கொள்ளவேண்டும்.

6. எப்பொழுதும் விழிப்பாக இருக்க வேண்டும்.

7. எதிலும் மனம் தளராது உறுதியுடனும், திடகாத்திரத்துடனும் செயற்பட வேண்டும்.

8. அதிக பேச்சுக்களை விட்டும் தவிர்ந்து கொள்வதோடு தனது முயற்சிக்கு பூரண அழுத்தம் கொடுக்க வேண்டும்.

9. ஷரீஆ சம்பந்தமான கிளைப்பிரச்சினை களில் தனது கருத்துக்களை வெளியிடு வதிலிருந்து தவிர்ந்து கொள்வது மிகவும் சிறந்தது.

10. சச்சரவுகள், குழுப்பிரச்சினைகள் இவை களிலிருந்து தனது குழுவைத் தூரப் படுத்தி வைத்திருப்பது கடமையாகும்.

11. அடிக்கடி தனது சகோதரர்களுக்கு (அங்கத்தவர்களுக்கு) அல்லாஹ்வின் கண்காணிப்பைப்பற்றி நினைவூட்டு வதோடு தூய்மையான எண்ணத்துடன் செயற்படுமாறும் உபதேசித்தல்.

12. உள்ளங்களை உற்சாகப்படுத்துவதுடன், எதிர்பார்ப்புகளை அவர்கள் மத்தியில் பரப்ப வேண்டும்.

13. நிகழ்கால விடயங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதுடன் மாத்திரம் வரையறுத்துக் கொள்ளாது எதிர்கால விடயங்கள், நிகழ்வுகள் பற்றியும் சிந்திப்பது அவசியம்.

14. இலட்சியங்கள், நோக்குகள் என்பவற்றை நிறைவேற்றுவதில் துணைபுரிகின்ற அனைத்து சாதனங்களையும் வழிமுறை களையும் தொடர்ந்தும் முன்னேற்று வதில், வளர்ப்பதில் ஆவலாய் இருக்க வேண்டும்.

15. மன சாந்திக்காக, முன்னேற்றப் பாதையில் தொடர்ந்தும் செல்வதற்காக ஒரு காலப்பகுதிக்கும் மற்ற காலப் பகுதிக்குமிடையிலுள்ள தலைமைத்துவ செயற்பாடுகளை, விளைவுகளை கணிப்பீடு செய்வது அவசியம்.

16. சக்திக்கு அப்பாற்பட்ட விதத்தில் செயற்படுவதில் இருந்தும் சக்திக்குட்பட்ட செயற்பாடுகளை குறைப்பதிலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

17. நிர்வாக விடயங்களோடு ஆன்மீகத் துறையிலும் கூடிய அக்கறை செலுத்துவது அவசியம்.

18. தலைவருக்கென்றே சில தீர்க்கமான முடிவுகள் இருப்பது அவசியம். இது தனது பணியைத் தொடர உதவியாய் இருக்கும். (குறிப்பாக எதேச்சையான நிலைமைகளில்)

19. சமூக ஒற்றுமையை, அதன் பலத்தை, தலைமைத்துவத்தின்பால் சமூகம் கொண்டிருக்கும் நம்பிக்கையை தொடர்ந்தும் பாதுகாப்பது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. எனையோரிடம் முரண்பட்டுக் கொள்வது, மோதிக் கொள்வதிலிருந்து தவிர்ந்து கொள்வதோடு இயன்றளவு பகையை வளர்த்துக் கொள்ளாதிருத்தல்.

21. சமூக உணர்வுகளை குறிப்பாக இளைஞர்களின் உணர்வுகளை ஒழுங்காக நெறிப்படுத்திக் கொள்வது அவசியம்.

22. பிளவுகளை, பிரிவுகளை ஏற்படுத்தக் கூடிய சிந்தனை முரண்பாடுகள், சிக்கல்கள் என்பவற்றை விட்டும் அணியைப் பாதுகாத்துக்கொள்ளல் வேண்டும்.

23. பிரதேசவாதம், இனவாதம் போன்ற தவறுகளைத் திருத்தி வாழக்கூடிய மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

25. எதிரிகளின் சத்தேகத்துக்குட்படுத்தும் உணர்வுகள் சூழ்ச்சிகள் இவைகளிலிருந்து அணிகளைப் பாதுகாப்பதோடு அவை பற்றிய பூரண விளக்கங்களையும் கொடுத்து விட வேண்டும்.

26. அணிகளுக்குள் பிரச்சினைகள், குழப்படிகள் தோன்றும் போது அவைகளுக்கான தீர்வுகளை அமைதியான முறையிலும் சமயோசிதமாகவும் வழங்க வேண்டும்.

27. தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் கஷ்டத்தையும் இயலாமையையும் உணரும் போது தன்னை விட பலமான, சக்தி படைத்த ஒருவரிடம் தீர்வை வேண்டுவது குறைத்து மதிப்பிடக்கூடிய ஒரு விடயமல்ல.

★★★

## *Home*

***Home is the place where the diseased world dies at the door***
***where the floor and carpet are worn by familiar feet***
***where you can close your eyes and nobody says you are blind***
***where familiarity accepts you in it's security***
***when you do not know where to go***
***home is where they never say no...***

***- Mohammed Haji Salleh -***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதச்சுதந்திரம் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்

அஷ்ஷெய்க் : எம்.எம். முன்சிர்

இஸ்லாத்தின் தூது அதன் ஆரம்ப காலத்தில் மிக வேகமாகப் பரவியது. வரலாற்றில், இவ்வேகத்தில் பரவிய வேறு எந்த மதத்தையோ, கொள்கையையோ எம்மால் காண முடியாது. இஸ்லாத்தினது இத்தகையு வளர்ச்சியின் பின்னணிக் காரணங்களைக் கண்டறியவென வரலாற்றாசிரியர்களும் ஆய்வாளர்களும் மேற் கொண்ட முயற்சிகள் எண்ணற்றவை. அவ்வாய்வுகளின் முடிவுகளும் பல்வேறுபட்டனவாக அமைவதைக் காணலாம்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் முழு மனித இனத்திற்குமே தூதராக அனுப்பப்பட்டார்கள். இஸ்லாம் குறிப்பிட்ட ஒரு குழுவோடு சுருங்கிக் கொள்ளும் மார்க்கமல்ல; இதன் தூது மண்ணில் வாழும் ஒவ்வொருவரது உள்ளத்திற்கும் எத்தி வைக்கப்பட வேண்டுமென்ற உணர்வு அதன் விசுவாசிகளிடம் காணப்பட்டமையே இவ்வேக மான பரவலுக்குக் காரணம் என்பது சில ஆய்வாளர்களின் முடிவாகும்.

இன்னும் சிலர், இம்மார்க்கம் கொண்டி ருந்த அடிப்படைகளும் பெறுமானங்களுமே இதற்கு முக்கிய காரணங்களாக அமைந்தன என்ற கருத்தை முன்வைக்கிறார்கள். துன்பத்தால் வாடுவோருக்கு நிவாரணமும் வறுமையால் வாடுவோர், அடிமைகள், பிறரால் சுரண்டப்படு வோர் போன்றோருக்கு மன நிம்மதியும் இஸ்லாத்தினால் வழங்கப்பட்டமையையே இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இந்த வகையில் இம்மையிலும் மறுமையிலும் மனிதனுக்குரிய கண்ணியத்தையும் சுபீட்சத்தையும் அளிப்பதற்கான சுதந்திரப்புரட்சியாக இஸ்லாம் வெளிப்பட்டமை தெளிவாகிறது.

உண்மையில் இஸ்லாம் அனைத்து வரை யறைகளையும் கடந்து துரிதமாக உலகெங்கும் வியாபித்தமைக்கு மேற்போந்த இரு காரணங் களும் உந்துதலாய் அமைந்துள்ளன என்றால் மிகையாகாது.

இங்கு நாம் மதச் சுதந்திரத்தைப் பற்றி விளக்க முன்னர் இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடு (அகீதா) சார்ந்த அம்சங்களுக்கான சுதந்திரம் பற்றியும் ஜிஹாதின் நோக்கம் பற்றியும் ஒரு தெளிவை வழங்குதல் இன்றியமையாததாகும்.

### கொள்கைச் சுதந்திரம்

இஸ்லாத்தை ஏற்பதற்கு எவருமே நிர்ப்பந்திக்கப்படுவதில்லை. ஆனால், இந்த இஸ்லாம் மக்களைச் சென்றடையத் தடையாக இருக்கும் அனைத்துக் காரணிகளையும் நீக்கி விடுவதில் அது ஒருபோதும் பின்நிற்கவில்லை. மார்க்கத்தில் குழப்பம் விளைவிப்பது கொலையை விடக் கொடியது என அது கருதியது. அதே போன்று இஸ்லாத்தை ஏற்கும் விடயத்தில் தெரிவுச் சுதந்திரத்தையும் மக்களுக்கு வழங்கியது.

*"நபியே நீர் கூறும், முற்றிலும் உண்மையான இவ்வேதமானது உங்கள் இறைவனால் அருளப்பட்டது. விரும்பியவர் அதனை ஏற்கலாம். விரும்பியவர் நிராகரிக்கலாம்." (18:29)*

தெரிவுச்சுதந்திரமானது அடிப்படையில் நிர்ப்பந்தக் கலப்பில்லாததாக அமைய வேண்டும். அதில் பிற தலையீடுகள் இருக்கக்கூடாது. எந்தவொரு மனிதனுக்கும் அவனது மார்க்கக் கடமைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை நடை முறைப்படுத்தும் சுதந்திரம் இருத்தல் வேண்டும். இவ்வாறு ஏற்றுக் கொண்டால் மாத்திரமே நம்பிக்கைக் கோட்பாட்டுச் சுதந்திரம் பெற்றி ருக்கின்ற மூன்று மூலங்களிலிருந்தும் அது உருவானதாக அமையும்.

அவையாவன:-

*1. பாரம்பரியங்களுக்குத்தலை வணங்காமை:-*

சிந்தனைச் சுதந்திரத்தைப் (பூரணமாக) பெற்றிருப்பதோடு, புராதன சம்பிரதாயங் களுக்கும் நவீன ஜாஹிலிய்யத்திற்கும் அவன் தலை வணங்காமல் இருத்தல் வேண்டும்.

2. கொள்கைத்திணிப்பு:-

அச்சுறுத்தல், அந்தி போன்றவற்றின் மூலமோ அல்லது தடை செய்யப்பட்ட ஒன்றைச் செய்யும்படி நிர்ப்பந்திப்பதன் மூலமோ குறித்த ஒரு கொள்கையைத் திணிப்பதற்காக பலாத்காரம் பிரயோகிக்கப்படாதிருத்தல்.

3. ஒருவன் தனது மதக் கட்டளைகளுக்கேற்ப தன் நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ளும் செயற்சுதந்திரம் வாய்ந்தவனாக இருப்பதோடு, அக்கட்டளைகளின் இயல்பான போக்குகள் அவனை நெறிப்படுத்தக் கூடியனவாக இருத்தல்.

இஸ்லாம் நிர்ப்பந்தங்களில் நம்பிக்கை வைப்பதில்லை. நிர்ப்பந்தத்தின் பேரில் மேற் கொள்ளப்படும் எந்த ஒரு செயலும் பூரணத் துவம் மிக்கதாகக் கருதப்படமாட்டாது.

**"இஸ்லாம் மார்க்கத்தில் நிர்ப்பந்தம் கிடையாது. ஏனெனில், வழிகேட்டிலிருந்து விலகி நேர்வழியை அடைவது எவ்வாறு என்று தெளிவாகி விட்டது." (2:256)**

இஸ்லாத்தின் பார்வையில் உண்மையான ஈமான் என்பது, உள்ளத்தால் ஏற்றதை நடைமுறை வாழ்வில் செயற்படுத்திக் காட்டுவதாகும். இதனை நிர்ப்பந்தத்தின் மூலமோ அல்லது பலவந்தத்தினாலோ வரவழைக்க முடியாது. அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களை அடக்க முடியும். ஆனால், இதனால் எந்தக் கொள்கையும் அவர்களது உள்ளங்களில் இடம்பிடிக்கும் என எதிர்பார்க்க முடியாது. அதிகாரப்பலத்திற்கு அஞ்சும் மக்கள் அந்த அதிகாரத்தைக் கொண்டுள்ளவர்களின் கொள்கைகளை ஏற்றுக் கொள்வதாகக்காட்டிக் கொள்ள முடியும். ஆனால் இஸ்லாத்தைப் பொறுத்தவரை இவ்வழிகளில் அதன் கொள்கைகள் ஏற்கப் படுவதை மிகக்கடுமையாக வெறுக்கிறது. மாறாக, அதன் உயர் கோட்பாடுகள் பகுத்தறிவால் பரிசீலிக்கப்பட்டு மனப்பூர்வமாக ஏற்கப்படவேண்டும் என்பதனைப் பின்வரும் அல்குர்ஆன் வசனம் எமக்கு உணர்த்துகிறது:

**"மனிதர் யாவரும் விசுவாசிகளாகி விடவேண்டும் என்று அவர்களை நீர் நிர்ப்பந்திக்க முடியுமா?" (யூனுஸ்:99)**

ஸஹாபியொருவர் தனது மகனை இஸ்லாத்தின்பால் பலவந்தமாக அழைத்தார். ஆனால், நபி (ஸல்) அவர்கள் இதனைத் தடுத்தார்கள். இஸ்லாத்தை ஏற்கும் விடயத்தில் எவரையுமே நிர்ப்பந்திக்கக் கூடாது என்பது இதன் மூலம் அந்த ஸஹாபிக்கும் ஏனையவர் களுக்கும் உணர்த்தப்பட்டது. இக்கருத்து அந்த ஸஹாபாக்களது உள்ளங்களில் எந்தளவுக்கு இளையோடியிருந்தது என்பதைப் பின்வரும் சம்பவத்தின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

ஒருமுறை கிறிஸ்தவ வயோதிப மாதொருவர் அமீருல் முஃமினீன் உமர்(றழி) அவர்களைச் சந்திக்க வந்தார். அவர் வந்த காரியம் பூர்த்தியடைந்ததும் அமீருல் முஃமினீன் அவர்கள் அம்மாதை இஸ்லாத்தின்பால் அழைத்தார்கள். அதே வேளை, தான் பலம் வாய்ந்த ஒரு தலைவராக இருப்பதால் இவ்வழைப்பானது ஒரு நிர்ப்பந்தமாக அவளுக்கு அமைந்து விடக்கூடாது என்றும் பயந்தார்கள். தொடர்ந்து, "இறைவா, நிச்சயமாக நான் அவளை நிர்ப்பந்தத்திற்குட்படுத்தவே இல்லை" என்று கூறி, "இஸ்லாம் மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லை.." என்ற வசனத்தை ஓதிக்காட்டினார்கள்.

**ஆயுதப்போராட்டம் பற்றி இஸ்லாம்....**

இஸ்லாத்தில் மதச்சுதந்திரம், கொள்கைச் சுதந்திரம் என்பன ஒவ்வொரு தனிமனிதனுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. இது இம்மார்க்கத்தின் முக்கிய சிறப்பம்சங்களில் ஒன்றாகக் காணப் படுகிறது. இந்நிலையில் இம்மார்க்கத்தை ஏற்பவர்களுக்கு ஆயுதப்போர் கடமையாக்கப் பட்டதன் நோக்கம் யாது? என்ற வினா எழுப்பப் படுவது நியாயமே. எனவே, இஸ்லாத்தில் ஆயுதப்போராட்டத்தின் இலக்கு, அதன் அடிப்படைகள்; வரையறைகள் என்பவற்றை விளக்குவதன் மூலம் இவ்வினாவுக்கான தெளிவைப் பெறலாம்.

எந்தவொரு பிரசாரமும் அதன் ஆரம்பக் கட்டத்தில் அதை எதிர்க்கும் சக்திகளை எதிர் கொள்ள வேண்டியது அவசியமாகும். இப்பிர சாரத்தை முளையிலேயே கிள்ளி எறிந்து விடுவதற்கும், அது மக்களை எட்டாது தடுப்பதற் குமான எண்ணற்ற எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இயல்பே. இப்பிரசாரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பவர்கள் பல்வேறு இன்னல்களையும் அச்சுறுத்தல்களையும் அதன் எதிரிகளிடமிருந்து ஏற்றுக் கொள்ள வேண்டி வரும்.

இஸ்லாம் இவ்வுலகில் அறிமுகப்படுத்தப் பட்டதும் அதனை அடியோடு அழித்து விட விக்கிரக வணங்கிகள் முனைப்போடு செயற்படலாயினர். இப்பிரசாரம் மக்களை எட்டி விடக்கூடாது என்பதற்காக அவர்களால் மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள் அனந்தம். அந்தக் காலகட்டத்தில் ஆரம்பகால முஸ்லிம்கள் எதிர் கொண்ட வேதனைகளும் சோதனைகளும் எண்ணிலடங்காதவை.

இந்த வகையில், இப்பிரசாரம் ஓர் ஸ்திரத்தன்மையை எய்தி மனித உள்ளங்களைக் கவர்ந்து கொள்ள வேண்டுமாயின், அதற்கென்று பிரத்தியேகமான தடைகளற்ற பாதை திறக்கப்பட வேண்டும். அப்பாதையில் குறுக்கிடும் தடைக்கற்களை இப்புனித நோக்கத்திற்காகக் களைந்தெறிய வேண்டியது அவசியமாகிறது. எனவே, தவிர்க்க முடியாத ஒன்றாக இஸ்லாமிய அறப்போர் காணப்படுகிறது. அதாவது, இஸ்லாமிய அறப்போர் என்பது அதன் அகீதாவின் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் முயற்சியாகும். பலவந்தம், நிர்ப்பந்தம் எனும் வட்டத்திலிருந்து மனிதனை வெளியேற்றி, அவன் மீது அத்துமீறுபவர்களைத் தடுத்து நிறுத்துவதே அதன் பணியாக அமைகிறது.

**"நிராகரிப்போரால் அநியாயத்திற்குள்ளானவர்களுக்கு அவர்களை எதிர்த்து யுத்தம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது." (22:39)**

இஸ்லாத்தின் கொள்கைகள் பாதுகாக்கப் படுதல், அத்துமீறல்கள் தடுக்கப்படுதல், அநீதி ஒழிக்கப்படுதல் போன்ற உயர் இலட்சியங்களுக்காக இஸ்லாத்தில் அறப்போர் அனுமதிக்கப்படுகிறது. இதே வேளை, சமாதானத்திற்காக அழைக்கப்பட்டால் அதை ஏற்றுக் கொள்ளும் படியும் போரைத் தவிர்த்துக் கொள்ளும் படியும் விசுவாசிகள் பணிக்கப் படுகின்றனர்.

**"அவர்கள் சமாதானத்தை விரும்பினால், நீங்களும் அதற்கு உடன்படுங்கள்" (8:61)**

இஸ்லாத்தை அழிக்கும் நோக்குடன் போர் தொடுக்க முனைபவர்களும் வரையறைகள், ஒப்பந்தங்கள் போன்றவற்றை மீறி நடப்பவர்களும் இதன் எதிரிகளாகக் கருதப்படுகின்றனர். தனக்கு எதிராகப் போர் தொடுக்க விரும்பாதவர்களையும் பக்கச் சார்பின்றி நடந்து கொள்பவர்களையும் சமாதான விரும்பிகளாகவே இஸ்லாம் கணிக்கிறது.

**"...ஆகவே, இத்தகையோர் உங்களுடன் யுத்தம் புரியாது விலகி இருந்த உங்களிடத்தில் சமாதானத்தைக் கோரினால் அதனை நீங்கள் அங்கீகரித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், இத்தகையோர் மீது யுத்தம் புரிய அல்லாஹ் யாதொருவழியையும் வைக்கவில்லை." (4:90)**

இஸ்லாம் விதியாக்கிய யுத்தத்தின் தாற்பரியங்களும் கொள்கைச் சுதந்திரமும் ஒருபோதும் முரண்படுவதில்லை. இந்நிலையில் இப்போர் தொடர்பாக இஸ்லாத்தின் மாண்புகளைக் கறைப்படுத்தும் நோக்கில் அதன் எதிரிகளால் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் வரலாறு நெடுகிலும் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. "இஸ்லாம் வாள் முனையின் வலிமையால் பரப்பட்ட மதம்; அதிகார வெறியர்களது பலத்தால் உலகில் காலூன்றிய கொள்கை" என்ற குற்றச்சாட்டு இங்கு குறிப்பிடத்தக்கது. உண்மையில் இது ஆழமான ஆய்வுகள், அவதானங்களினூடாக பெறப்பட்ட ஒன்றல்ல. வரலாற்றை யதார்த்த பூர்வமாக அணுகாதோரின் யூகங்கள் இவை என்பதை கீழ்வரும் அல்குர்ஆன் வசனம் தெளிவு படுத்துகிறது.

**"நபியே, நீர் மனிதர்களை நளினமாகவும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டும் உம் இறைவன் பால் அழைப்பீராக! அன்றி, அவர்களுடன் தர்க்கிக்க நேரிட்டால் அழகான முறையில் தர்க்கம் செய்வீராக" (16:125)**

அந்த சூழ்ச்சியாளர்கள் உண்மைக்குப் புறம்பான பெரும் அபத்தத்தை உருவாக்கினார்கள். அவர்கள் நிதானத்தை இழந்து தீவிரப்போக்கைக் கைக்கொண்டனர். எவர் வரலாற்று உண்மைகளை உற்றுநோக்குகிறாரோ அவர், "முஸ்லிம்கள் அத்துமீறி எவரையும் தம் கொள்கையில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகப் போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுக்கவில்லை" என்பதை அறிந்து கொள்வார். உண்மையில் அவர்கள் அத்துமீறல்களுக்கெதிராகக் குரல் கொடுப்பவர்களாகவும் தஃவாப்பணியைக் காத்திரமானதாக ஆக்குவதற்காகவும் கொள்கைச் சுதந்திரத்தைப் பேணுவதற்காகவுமே போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றனர்.

தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள் ஏற்படும்போதே இஸ்லாம் யுத்தப்பிரகடனம் செய்வதை ஆகுமாக்குகிறது. மனித வாழ்க்கைக்கு மிக அத்தியவசியமான ஒருபொருள் அழிவதை விரும்பாத ஒருவன் அதனைக் காப்பதில் கொள்ளும் வேட்கை போலவே இஸ்லாம் போராட்டத்தின் கோர விளைவுகளிலிருந்து மனித இனத்தைப் பாதுகாக்க மேற் கொள்ளும் முயற்சியின் அழுத்தமும் அமைந்துள்ளது. பொதுவாக யுத்த சந்தர்ப்பங்களின் போது குழந்தைகள், வயோதிபர்கள், பெண்கள் முதலானோரைக் கொலை செய்யவோ துன்புறுத்தவோ கூடாது எனவும், பயன்தரும் மரங்களை வெட்டுவதும் எரிப்பதும் தகாது என்றும், ஜீவ காருண்யத்தோடு நடந்து கொள்ள வேண்டுமெனவும் அதியுயர்ந்த யுத்த தர்மங்களை இஸ்லாம் இயம்பியுள்ளது.

"உங்களோடு எதிர்த்துப்போர் புரிபவர்களை எதிர்த்து அல்லாஹ்வின் பாதையில் நீங்களும் போராடுங்கள். இவ்விடயத்தில் நீங்கள் அத்துமீற வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் அத்துமீறுபவர்களை நேசிப்பதில்லை."

இவ்விளக்கங்களிலிருந்து "இஸ்லாம் இயற்கையின் மார்க்கம்; அது பகுத்தறிவோடு இயைந்து செல்வது" என்ற முடிவுக்கு வரலாம். இஸ்லாம் அழகிய நல்லுபதேசங்களைக் கொண்டு நேர்வழியின் பால் மக்களை அழைக்கும் உன்னத மார்க்கமாகும். சுதந்திரம், ஒற்றுமை, நீதி, நியாயம், சமத்துவம், சகோதரத்துவம், சாந்தி, சமாதானம், நல்லுறவு, அபிவிருத்தி ஆகியவற்றைத் தன்னுள்ளே பொதிந்து விளங்குகிறது. பல்வேறுபட்ட மனித சிந்தனைகள் கொள்கைகள், கோட்பாடுகள், சித்தாந்தங்கள் போன்றவற்றால் தாக்கத்திற்குள்ளான மனித வாழ்வைப் புடம் போட இஸ்லாத்தினால் மாத்திரமே முடியும். ஏனெனில் அது சத்தியப்பாதையின் பால் மானிட சமுதாயத்தை இட்டுச்செல்லும் பேரொளியாகும். சுபீட்சத்தையும் உயர்வையும் உறுதி கூறும் அதி உன்னத நெறிமுறை அது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**உஷாத்துணைகள்:**

* ஷ"பகாதுன் ஹவ்லல் இஸ்லாம். (முஹம்மத் குதுப்)
* மபாதிஉல் இஸ்லாம் (மௌலானா அபுல் அஃலா மௌதூதி)
* மஜல்லதுல் யகீன் (மலர்33, இதழ் 14)

*****

# இஸ்லாமியப் பொருளாதாரமும் விலைக்கட்டுப்பாடும்

எம்.எச்.எம்.நளீம் (ஆறாம் வருடம்)

இஸ்லாம் மனிதனுக்குரிய மார்க்கம். ஏனைய மதங்கள் போல் அது அவனைப்பேசும் மிருகம் என்று கருதாது. ஏனைய படைப்புக்கள் அனைத்தை விடவும் அவன் சிறப்பு மிக்கவன் என்று இயம்புகிறது. அத்தோடு நின்று விடாமல் மனித சமுதாயத்தின் உன்னத இலட்சியத்தை அவனுக்கு உணர்த்தியும் வைத்துள்ளது. இஸ்லாத்தின் அனைத்துப் போதனைகளும் இந்த உயர்ந்த இலட்சியத்தின்பால் அவனை வழிநடாத்திச் செல்வனவாக அமைந்துள்ளன. இதனடியாகவே இஸ்லாம் தனிமனிதனோடு அல்லது சமுதாயத்தோடு தொடர்புறுகின்ற பிரதான துறைகள் அனைத்தையும் தனது இலட்சியத்திற்கு முரணாகாத வகையிலும் மனித நலனை பாதிக்காத முறையிலும் சீராக நெறிப் படுத்தியுள்ளது. இதனை நடுநிலைமையிலிருந்து இஸ்லாத்தை அவதானிக்கின்ற எந்தப் புத்தி ஜீவியும் இலகுவாக விளங்கிக் கொள்வான்.

இஸ்லாம் ஆன்மீக, லௌகீக வாழ்க்கைக்கான கோட்பாடுகளை ஸ்திரத்தன்மையோடும் என்றும் பொருந்தக்கூடிய வகையிலும் வழங்குவதில் தன்னிகரற்றதொரு மார்க்கம். இத்தகைய சிறப்பியல்புகளை அத்திவாரமாகக் கொண்ட இம்மார்க்கத்தின் பொருளாதாரக் கொள்கையும் அச்சிறப்பியல்புகளின் ஆதிக்கத்துக்கு உட்படுவது இயல்பானதே. இஸ்லாம் முன்வைக்கும் இப்பொருளாதார சிந்தனையை நோக்கும் ஒருவன், இஸ்லாம் என்பது முழு உலகிற்கும் தேவையான சர்வதேச பொருளாதாரக் கொள்கையை வகுத்துக் கொடுப்பதற்கு வந்த மார்க்கமோ என்று ஐயப்படும் அளவுக்கு விரிவானதாக அமைந்துள்ளது. சடவாதத்தை அடிப்படையாகக் கொண்ட மேற்குலகப் பொருளாதாரக்கொள்கைகளை விடவும் பல சிறப்பியல்புகளை இது கொண்டுள்ளது. அவற்றுள் சில பின்வருமாறு:

* தெய்வீகத்தன்மை வாய்ந்தது:- இஸ்லாமியப் பொருளாதாரம் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்த இறைவனிடமிருந்து வந்ததாகும். எனவே, குறையறிவு படைத்த மனித சிந்தனையின் தாக்கம் இதில் இடம் பெறுவது அசாத்தியமானது.

* அதன் தெய்வீக இலக்கு:- முழுமனித சமூகத்தையும் படைத்தவன் பால் இட்டுச் செல்வதே இதன் இலட்சியம்.

* ஏக காலத்தில் ஆன்மீக, லௌகீகக் கண்காணிப்புக்களைக் கொண்டது:- தனது பொருளாதார நடவடிக்கைகளை இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணமும் தான் தவறு விட்டால் உலகியல் சட்டங்கள் கண்டிக்கும் என்ற அச்சமும் ஒரே நேரத்தில் மனிதனில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

* அதன் சமநிலைத்தன்மை:- இஸ்லாம் கூறுகின்ற பொருளாதார செயற்பாடுகள் உலகியல் தேவைகளை நிறைவேற்றுவதோடு 'இபாதத்'தாகவும் அமைகின்றன.

* அதன் நடைமுறைச் சாத்தியம்:- எல்லாக் காலப்பிரிவுகளிலும் தோன்றக் கூடிய மனிதர்களின் இயல்புகளை அறிந்த இறைவனால் முன்வைக்கப்பட்டுள்ள இப் பொருளாதாரக் கொள்கை, எல்லாக் காலப்பிரிவுகளையும் அனுசரிப்பதாகவே அமைந்துள்ளது.

பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்ட இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கையின் சந்தை அமைப்பில் இஸ்லாமிய அரசு தலையிடுகிறது. இவ்வாறான அரச தலையீடு இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கையில் மட்டுமன்றி ஏனைய பொருளாதாரக் கொள்கைகளிலும் பொதுவாகக் காணப்படுகிறது. இத்தலையீட்டின் ஓர் அம்சமான விலைக் கட்டுப்பாட்டினை இஸ்லாம் எவ்வாறு அணுகுகின்றது என்பதை நாம் இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குவோம். (இதில் குறிப்பிடப்படும் கருத்துக்கள் இஸ்லாமிய சந்தை ஒன்றை அடிப்படையாகக் கொண்டே அமைந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.)

### இஸ்லாமியப் பொருளாதாரத்தில் விலைக்கட்டுப்பாடு

மனித நலன்கருதி, குறிப்பிட்ட ஒரு பொருளின் விலையை அல்லது பெறுமதியைக் குறிப்பிட்டதொரு அளவில் வைத்திருப்பதையே பொதுவாக விலைக்கட்டுப்பாடு என்பர். இஸ்லாம், சந்தையைச் சுதந்திரமாகவும் அதன் இயல்புகளுக்கு அமையவும் இயங்குவதற்கு அனுமதிக்கிறது. அதுமட்டுமன்றி இயல்பான கேள்வி நிரம்பலுக்கு ஏற்ப சந்தை மாற்றங்கள் நிகழ வேண்டும் என்றும் அது விரும்புகிறது. இதையே நபியவர்களுடன் தொடர்பான பின்வரும் சம்பவங்கள் உணர்த்துகின்றன.

* நபியவர்கள் காலத்தில் ஒரு முறை சந்தை விலைகள் அதிகரித்தன. இதனை ஸஹாபாக்கள் நபியவர்களிடம் முறையிட்டதோடு விலைகளைக் குறைப்பதற்கு ஆவன செய்யுமாறும் வேண்டினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், **"அல்லாஹ்வே விலையை அதிகரிக்கச் செய்பவன்; அவனே அதனைக் குறைத்துத் தன் அருளை விசாலப்படுத்தி, மக்களுக்கு 'ரிஸ்க்' அளிப்பவன். உங்களில் ஒருவர் -நான் இழைத்த அநீதியை இட்டு- என்னிடம் (மறுமையில்) நியாயம் கேட்காத நிலையில் அல்லாஹ்வைச் சந்திக்க விரும்புகிறேன்"** என்று கூறினார்கள். **(ஆதாரம்: திர்மிதி, இப்னுமாஜா, தாரமி. இமாம் திர்மிதி இந்த ஹதீஸை ஹஸன் ஸஹீஹ் என்று குறிப்பிடுகின்றார்.)**

* ஒரு மனிதர் நபியவர்களிடம் வந்து பொருட்களின் விலையைக் குறைக்கச் செய்யுமாறு வேண்டினார். அவ்வாறே இன்னொரு மனிதர் விலைக்குறைப்புக்காக அல்லாஹ்விடம் பிரார்த்திக்குமாறு கூறினார். அதற்கு நபியவர்கள் **"அல்லாஹ்வே விலை குறைப்பவனும் அதிகரிப்பவனும் ஆவான். நான் உங்களில் ஒருவருக்கும் கொடுமை இழைக்காத நிலையிலேயே அல்லாஹ்வைச்சந்திக்க விரும்புகிறேன்."** என்று கூறினார்கள்.

***(ஆதாரம்: அபூதாவூத், அறிவிப்பவர் அபூஹுரைரா (றழி))***

* நபியவர்கள் காலத்தில் ஒரு முறை பொருட்களுக்கான விலைகள் அதிகரித்தன. அவ்வேளை ஸஹாபாக்கள் நபியவர்களிடம் வந்து, **"அல்லாஹ்வின் தூதரே! பொருட்களின் பெறுமதிக்கேற்ற விலைகளைத் தாங்கள் நிர்ணயித்துத் தருவீர்களா? என வினவினர். அதற்கு நபியவர்கள் "நான் இழைத்த ஓர் அநீதியை யிட்டு உங்களில் ஒருவர் என்னிடம் நியாயம் கேட்காத நிலையில் உங்களை விட்டுப் பிரிவதையே நான் விரும்புகிறேன்"** என்று கூறினார்கள்.

**(ஆதாரம்: இப்னு மாஜா. அறிவிப்பவர்: அபூஸயீத் (றழி))**

### விலைக்கோட்பாடு பற்றிய இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துக்கள்

விலைக் கோட்பாடு பற்றிப் பல இஸ்லாமிய அறிஞர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். மேற்குறித்த ஹதீஸ்களை ஆதாரமாகக் காட்டும் அவர்கள், ஆட்சியாளன் சந்தைப் பொருட்களின் விலையைத் தன்னிச்சையாகக் கட்டுப்படுத்துவது ஹறாம் என்றும், அவ்வாறு தலையிடுவது விற்பனையாளனுக்கு இழைக்கப்படும் அநீதி என்றும் கூறுகின்றனர்.

உண்மையில் தன்னிச்சையான விலைக் கட்டுப்பாடுகள் மக்களின் சுதந்திரமான பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிக்கக் கூடாது; நுகர்வோன் நலன் விற்பனையாளன் நலனை விட உயர்வாகக் கொள்ளப்படாது, இருவரது நலன்களும் சமமாகக் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும் என்றே இஸ்லாம் கருதுகின்றது.

இது பற்றி இமாம் முஹம்மத் (றஹ்) அவர்கள், "பொருட்களை விற்பனை செய்யும் முஸ்லிம்கள்மீது விலைக்கட்டுப்பாடு விதிக்கப் படக் கூடாது; அது அவசியமற்றதும் கூட" என்று கூறுகின்றார். இக்கருத்தையே இமாம் அபூஹனீபாவும் இன்னும் சில (ஹனபி மத்ஹபைச் சேர்ந்த) இஸ்லாமிய சட்டத்துறை வல்லுனர்களும் கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய அரசுகள் குடி மக்களின் ஆதரவோடு தங்கள் ஆட்சியை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக விற்பனையாளனின் நலனைக் கருத்திற் கொள்ளாது நியாயமற்ற விலைக் கட்டுப்பாடுகளை மேற்கொள்கின்றனர். அத்தோடு தம் எதிரிகளை அடக்கும் ஆயுதமாகவும் இதனைப் பயன்படுத்துவதால், அனைத்து வியாபாரிகளும் பாதிக்கப்படுவதோடு சிலர் தொடர்ந்தேர்ச்சியான பாதிப்புக்களையும் எதிர் நோக்குகின்றனர். மேலும், அரசாங்கங்களின் மாற்றங்களுக்கேற்ப நாட்டின் பொருளாதாரக் கொள்கையும் அடிக்கடி மாற்றங்களுக்குட்படுவதால் நாட்டின் அபிவிருத்தியும் ஸ்திரத்தன்மையும் பாதிக்கப்படுகின்றன. ஆனால், இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கையோ இவ்வாறான தன்மைகளற்றது. இஸ்லாமிய அரசில் ஆட்சியாளர்கள் மாறினாலும் அதன் திட்டங்களோ அடிப்படைப் பொருளாதாரக் கொள்கைகளோ மாற்றத்திற்குட்படுவதில்லை. அது மட்டுமன்றி, புதிய அரசு முன்னைய அரசை விட உத்வேகத்துடனும் புத்துணர்சியுடனும் இறை பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தக் கூடியதாக அமையும். இப்பண்பானது நாட்டின் பொருளாதார அரசியல் ஸ்திரத்தன்மைகளுக்கு உத்தரவாதம் அளிக்கிறது. இது பற்றி இஸ்லாமிய அறிஞரான இமாம் 'அஷ்ஷௌகானி' பின்வருமாறு கூறுகின்றார்: மக்கள் தமது சொத்துக்கள் மீது பூரண அதிகாரம் கொண்டவர்கள். அவர்களின் இந்நியாயமான அதிகாரத்தில் விலைக்கட்டுப்பாடு தலையிடுகின்றது. இஸ்லாமிய அரசின் தலைவர் பொது மக்களின் நலனைக் கருத்திற் கொண்டே எப்போதும் செயற்படுவாராகையால், நுகர்வோரின் நலனுக்காகப் பொருட்களின் விலையைக் குறைக்கவோ விற்பனையாளனின் நலனுக்காகப் பொருட்களின் விலையைக் கூட்டவோ விரும்பமாட்டார். இவ்விருவரினது நலன்களும் ஒன்றுக் கொன்று முரண்படும் பட்சத்தில் அவற்றிற்கிடையே சமநிலைத் தன்மையையும் இணக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக இருவரும் பொருந்திக் கொள்ளக்கூடிய ஒரு விலையை நிர்ணயிக்க முனைவதே அவரது பணியாகும். அரச தலைவரின் இந்தப்பணிக்கு பின்வரும் குர்ஆன் வசனம் ஆதாரமாக அமைகிறது.

**"ஈமான் கொண்டவர்களே! உங்களில் ஒருவருக்கொருவர் பொருந்திக் கொள்ளும் வியாபாரமல்லாமல் ஒருவர் மற்றவரின் பொருட்களைத் தவறான முறையில் உண்ணாதீர்கள்" (4:29)**

இது பற்றித் தொடர்ந்து கூறியுள்ள இமாம் அஷ்ஷௌகானி, விலைக்கட்டுப்பாடு தொடர்பான ஹதீஸ்கள் அனைத்தும் பொதுவாகவே வந்துள்ளதாகவும், அவை எந்தவொரு பொருளையும் வரையறுக்கவில்லை எனவும், பிற்காலத்தில் தோன்றிய சில ஸைதிய இமாம்களே 'மனிதனதும் கால் நடைகளினதும் உணவுப் பொருட்களைத் தவிர ஏனையவற்றில் விலைக்கட்டுப்பாட்டை மேற் கொள்ள முடியும்' என்ற கருத்தைக் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கின்றார். இக்கருத்தை மறுத்துரைத்த 'அஸ்ஸிமார்' என்ற நூலின் ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்: "மேற்கூறியவாறு சில பொருட்களில் மட்டும் விலைக்கட்டுப்பாடு விதிக்க முடியும் என்று பிரித்து நோக்குவதற்கு அல்குர்ஆனிலோ அஸ்ஸுன்னாவிலோ எவ்வித ஆதாரமும் இல்லை. ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்த ஒரு தெளிவான ஆதாரம் அல்குர்ஆனிலோ அஸ்ஸுன்னாவிலோ காணப்பட வேண்டும் என்பது இஸ்லாமிய சட்டக்கலையின் நிபந்தனையாகும். அவ்வாறு ஆதாரம் இல்லாத போது ஒரு சட்டத்தை எடுத்து நடத்தல் கூடாது."

விலைக்கட்டுப்பாடு சம்மந்தமான சில சட்டங்கள் மேலுள்ளவாறு கூறப்பட்டிருப்பினும், சில சந்தர்ப்பங்களில் பதுக்கல், செயற்கையாக பொருட்களின் கேள்வியை அதிகரிக்கச் செய்தல், வேண்டுமென்றே விலைத்தளம்பலை ஏற்படுத்துதல் என்பன போன்ற நியாயத்திற்கு முரணான சில காரணிகள் சந்தையில் நுழைந்து பொருட்களின் விலைகளை அதிகரிக்கச் செய்வதுமுண்டு. இவ்வாறான நிலைகளில் ஏழை நுகர்வோன் கொள்வனவுச் சக்தி அற்றவனாக மாறுவதால் அவனது வாழ்க்கை கவலைக்கிடமான முறையில் பாதிக்கப்படுகிறது. அதே வேளை செல்வந்தர்கள் கறுப்புச் சந்தை மூலம் அல்லது குறுக்கு வழிகள் மூலம் தமக்குத் தேவையானவற்றை அடைந்து கொள்வதால் சமூக நிலை பாதிக்கப்பட்டுப் பாரியதொரு ஏற்றத்தாழ்வு ஏற்பட வாய்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகிறது. இந்நியாயமற்ற ஏற்றத்தாழ்வை நீக்க முற்படும் இஸ்லாமிய அரசானது, சில தனிநபர்களின் நலனைக் கருத்திற் கொள்ளாது, சமூக நலனைப் பாதுகாக்கும் நோக்கோடு சந்தை முறையில் தலையிட்டு ஒவ்வொரு பொருளுக்கும் ஏற்ப புதிய விலைகளை நிர்ணயிக்கும்.

இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படாத நாடுகளின் அரசுகள் தமது நலன்களைப்பாதுகாக்கும் நோக்கோடு விலை மாற்றங்களைச் செய்வதால், பாதிக்கப்படும் விற்பனையாளன் அல்லது நுகர்வாளன் பல புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறான். எனவே, எந்தவோர் அரசும் விலைக்கட்டுப்பாட்டினை மேற் கொள்ளும் போது கால சூழ் நிலைகளை ஆராய்ந்து மேற் கொள்வது அவசியமாகிறது. அப்போதுதான் விலைக் கட்டுப்பாடானது புதிய பிரச்சினை களுக்குக் காரணமாக அமையாததாகவும் எதிர் காலத்தில் ஏற்டும் நெருக்கடிகளுக்குத் தீர்வாக அமையக் கூடியதாகவும் விளங்க முடியும்.

இமாம் 'அல்முர்ஈனானி' (றஹ்) அவர்கள் தமது 'அல்ஹிதாயா' என்ற நூலில் "இஸ்லாமிய ஆட்சியாளன் அல்லது நீதிபதி, பொருட்களின் சொந்தக்காரர்கள் அத்துமீறினாலேயன்றி விலைக்கட்டுப்பாட்டை அவர்கள் மீது விதிக்கலாகாது" என்று குறிப்பிடுகிறார். இவ்வாறே இமாம் மாலிக் அவர்களும் ஷாபிஈ மத்ஹபைச் சேர்ந்த சஈத் இப்னு முஸய்யப், றபீஆ இப்னு அப்துர்ரஹ்மான், யஹ்யா இப்னு ஸஈதுல் அன்சாரி போன்றோரும் சில நிபந்தனை களோடு விலைக்கட்டுப்பாட்டை அனுமதித் துள்ளனர். அவை பின்வருமாறு:

(1) *பொதுமக்களின் நலனுக்காக விலையைக் கட்டுப்படுத்தல்.*

சிலபோது அத்தியாவசியப் பொருட்களின் விலை பாதகமான முறையில் உயரலாம். பொதுமக்கள் பாதிக்கப்படும் இச்சந்தர்ப் பங்களில், இஸ்லாமிய அரசு அல்லது நீதிமன்றம் பொதுமக்களின் நலனைக்கருத்திற் கொண்டு குறிப்பிட்டதொரு விலைக்கு அப்பண்டங்களை விற்பனை செய்யும் படி விற்பனையாளர்களை வற்புறுத்தும். இவ்வாறு கட்டுப்படுத்தப்பட்ட விலையில் பொருட்களை விற்பதன் மூலம் விற்பனையாளர்களுக்கு நஷ்டம் அல்லது பாதகம் ஏற்படுமாயின், அதனை நிவர்த்தி செய்ய அரசு அவர்களுக்கு மானியம் வழங்கும். அல்லது பொருட்களின் தட்டுப் பாட்டை நீக்கக் கூடிய வகையில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற் கொள்ளும். இந் நடவடிக்கைகள் மூலம் நுகர்வோன், விற்பனையாளன் ஆகிய இருவரது நலன்களும் பாதுகாக்கப்படும்.

(2) *நியாயமற்ற முறையில் விலை அதிகரிப்பதனைத் தடுக்க விலையைக் கட்டுப்படுத்தல்*

விலை அதிகரிப்பதற்கான சட்டரீதியற்ற காரணிகளாக பதுக்கல், செயற்கையாகப் பொருட்களில் தட்டுப்பாட்டை ஏற்படுத்தல், வேண்டுமென்றே விலையைத் தளம்பலடையச் செய்தல் போன்றன காணப்படுகின்றன. இவற்றைத் தடுப்பதற்காகவும் விலைக் கட்டுப்பாட்டைக் கைக்கொள்ளலாம்.

எனவே, மேற்குறித்த ஹதீஸ்களையும் கருத்துக்களையும் முழுமையாக நோக்கும் போது இஸ்லாம் பொதுவாக விலைக் கட்டுப்பாட்டை அனுமதிப்பதில்லை என்பதையும், ஒரு தீமையை அல்லது அநியாயத்தை அகற்றுவதற்காகச் சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் அதனை அனுமதிக் கிறது என்பதையும் விளங்கிக் கொள்ள முடிகிறது. இவ்வடிப்படையில் நவீன இஸ்லாமிய அறிஞர்கள் விலைக்கட்டுப்பாட்டை இரண்டாக வகுத்து நோக்குவர்.

(1) இஸ்லாம் தடுத்த (நியாயமற்ற) விலைக்கட்டுப்பாடு.

(2) இஸ்லாம் அனுமதித்த (நியாயமான) விலைக்கட்டுப்பாடு.

இவற்றில் முதலாவது அம்சம் மக்களுக்குத் தீங்கு ஏற்படுத்தக்கூடியதாகவும் அவர்கள் விரும்பாத விலைக்கு ஒரு பொருளை நுகரும் படி அல்லது விற்கும் படி நிர்ப்பந்திப்பதாகவும் அமைவதால், இஸ்லாம் இதனை முழுமையாகத் தடை செய்கிறது.

இரண்டாவது அம்சம் ஒரு பொருளைக் கூடியவிலையிலோ குறைந்த விலையிலோ கொள்வனவு விற்பனவு செய்ய இடமளிக்காது, குறிப்பிட்ட பொருளை அதன் சமநிலை விலையில் விற்கவும் நுகரவும் நிர்ப்பந்திப்பதால், பொதுமக்கள் நலன் கருதி இஸ்லாம் இதனை அனுமதிப்பதோடு அவசியமானதாகவும் கருதுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தமது பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் போது சில வேளைகளில் இயற்கையாக நிரம்பல் குறைந்து, கேள்வி அதிகரிப்பதனால் சந்தையில் விலை மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. இவ்வாறு விலை மாற்றம் ஏற்படுவது அல்லாஹ்வின் செயலாகும். இதனால் தான், நபியவர்கள் கூட அல்லாஹ்வின் செயலில் – நாட்டத்தில் தலையிடுவதை விட்டும் தம்மைப் பாதுகாத்துக் கொண்டார்கள். எனவே, விற்பனையாளனை அல்லது கொள்வனவாளனை குறிப்பிட்ட ஒரு விலையில் விற்க அல்லது நுகர நிர்ப்பந்திப்பது அறிவுக்குப் பொருந்தாதது மட்டுமன்றி அநியாயமுமாகும்.

**உஷாத்துணை நூல்கள்:**

* நய்லுல் அவ்தார். (இமாம் அஷ்ஷவ்கானி)
* முவத்தா (இமாம் மாலிக்)
* அல் ஹிதாயா (இமாம் அல் பர்ஆனி அல்– முர்ஈனானி)
* பதலுல் ஜுஹூத் பீ ஹல்லி அபீ தாவுத் (அல்லாமா கலீல் அஹ்மத்)
* அவ்னுல் மஃபூத்–ஷறஹ்– (சுனன் அபீதாவூத்)

♣♣♣♣♣


*FOR THE LATEST IN*

* NECKLANCES
* EARRINGS
* BANGLES
* RINGS
* PENDANTS

*wonderfully worked out ..... in genuine sovereign gold .... embodying the latest Filigrec and sanded cut designs Live it up ....go places ....with jewellery by*

**BULLION EXCHANGE**

**JEWELLERS**

521, Galle Road, Bambalapitiya Junction,
**COLOMBO 4.**
*Telephone*: 581507




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் வரைந்த கடிதம்

ஏ.எம். மிஹ்ழார் (விடுகை வருடம்)

காலம் எனக்கொரு கடிதம் வரைந்தது
கடமை யுணர்வுள்ள இளைஞர்கள் தேவையாம்
ஞாலத்தை நேரான பாதையில் நடத்தும்
ஞானம் படைத்த தியாகிகள் தேவையாம்

*

தொழுகையால் அழகுறும் இறை இல்லங்கள்
திடமான சமூகத்தின் அடித்தளமாதல் தேவையாம்
ஒழுக்கமும் அறிவும் இருவிழியென மதிக்கும்
உயர் குடிகளை உருவாக்கும் பெற்றோர் தேவையாம்

*

பலமான ஈமானியப் பண்புகளைப் பெற்ற
புத்திஜீவிகளின் பணியே இப்போது தேவையாம்
இலக்குடன் பயன்தரும் கலைகளை யெல்லாம்
ஆழமாக முஃமின்கள் அறிந்திடல் தேவையாம்

*

அவனியில் வாழினும் சுவனமே நோக்கென்று
அறங்களால் வாழ்வை அலங்கரிப்போர் தேவையாம்
தவறாமல் ஐவேளை தொழுவது போலவே
தன் இல்லறம் காத்திடும் நல்லார் தேவையாம்

*

பாவங்களைக் கண்டு ஊமையாக இராமல்
போராடத் தூண்டும் உள்ளங்கள் தேவையாம்
ஆவலோடு நன்மைகள் ஆயிரம் செய்தாலும்
அல்லாஹ்விடமே கூலியை வேண்டுவோர் தேவையாம்

*

உடம்புக்கு ஊட்டம் தரும் உணவு போலவே
ஆன்மாவுக்கு ஈமானிய ஆகாரம் தேவையாம்
சடங்கு சம்பிரதாயங்களுக்கு சன்மார்க்கத்தை விற்காத
சிந்தனைத் திறன்மிக்க அன்னையர் தேவையாம்

*

பொழியும் மழைபோல் பொது நலன் பேணும்
பொருளாதாரப் பலம் பெற்றோர் தேவையாம்
அழியா அன்பும் அமைதியும் நிலைக்க
அகங்களில் சகோதரத்துவம் மலரல் தேவையாம்

*

மக்களை மதிப்பிட தக்வா ஒன்றே
மேலான அளவீடென உணரல் தேவையாம்
இக்குவலயத்தை வென்று வாழும் கொள்கை
இஸ்லாம் என்று உழைப்போர் தேவையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இபாதத், கிலாபத், இமாரத் ஆகியவற்றிற்கிடையே மனித வாழ்க்கை

எம்.முஹம்மத் ஜவாத் (ஆறாம் வருடம்)

சூழ்ந்து சூழன்று கொண்டிருக்கும் இப்புவிக்கோளத்தில் ஓர் இயக்க சக்தியை வழங்குதற்பொருட்டு காரண காரிய வாதங்களின் அடிப்படையில் மனித இனம் படைக்கப் பட்டுள்ளது. உயர் குறிக்கோளோடு சிருஷ்டிக்கப் பட்ட மனிதனுக்கு தன் படைப்பின் பின்னணியைத் தெளிந்து இலக்கை அடையும் கடப்பாடு உண்டு. அதை இலகுபடுத்துவதற் காகவே காலத்துக்குக் காலம் ஒவ்வொரு சமூகத்துக்கும் நபிமார்களும் றஸூல்மார்களும் அனுப்பப்பட்டனர். எனவே, அவர்கள் சுட்டு விரல் நீட்டிய பாதையில் பயணிப்பதுவே விடியலைத் நோக்கிய தேடலாக அமைய முடியும்.

தன் அறிவாலும் உணர்வாலும் இறைவன் விதித்த வரையறைகளை மனிதன் தாண்ட முடியாது. தன் சக்திக்கு அப்பால் எதனையும் சாதிக்க வேண்டுமென்ற வற்புறுத்தலும் மனிதனுக்கில்லை.

**"எந்த ஓர் ஆத்மாவும் அதன் சக்திக்கப்பால் நிர்ப்பந்திக்கப் படுவதில்லை" (2:233)**

என்கிறது திருமறை. எனவே இபாதத் எனும் வழிமுறையை ஏற்படுத்தி சீர்கேடுகள், நெறி பிறழ்வு என்பவற்றில் இருந்து மனிதனைக் காக்கிறது இஸ்லாம்.

## இபாதத்

'இபாதத்' என்ற பதம் பொதுவாக **'வணக்கம்'**, **'வழிபாடு'** என்ற பொருள்களில் கையாளப்படுகிறது. அறபு மொழியில் 'அப்து' என்றால் அடிமை என்று பொருள். எனவே, இதனடியாகப் பிறந்த இபாதத் எனும் சொல்லுக்கு அடிபணிதல், கட்டுப்படுதல் என மொழி ரீதியாகப் பொருள் கொள்ள முடியும். அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையிலான தொடர்பைக் குறிப்பதாக இச்சொல் அமைவதால் பௌதீக விதியோடு இயைந்து செல்வதையும் அவதானிக்கலாம். இவ்வாறு மொழிக்கருத்தில் நோக்கினும் இஸ்லாத்தின் பார்வையில் இபாதத்தின் வட்டம் மிக விசாலமானதாகும்.

## இபாதத்தின் தத்துவங்கள்

இபாதத் எனும் சொல் தன்னுள் உள, உடல் ரீதியான பல தத்துவார்த்தங்களைப் பொதிந்துள்ளது. மனிதனுக்கும் இறைவனுக்கு மிடையிலான தொடர்பில் விரிசல்கள் ஏற்படாமல் காப்பதில் இபாத்தின் பணி மகத்தானது. இந்த ஆத்மார்த்த தொடர்பின் மூலமே மனிதன் இறைவனையும் அவனது ஆற்றலையும் சரிவரப் புரிந்து கொள்கிறான். தலைமைத்துவக் கட்டுப்பாடு, கடமையுணர்ச்சி போன்றவற்றை இபாதத் மூலம் மனிதன் பெறுகிறான். மற்றும் சமூகத்தின் மீதான தனிமனிதனின் பொறுப் புக்களை உணர்த்துவதன் மூலம் ஒவ்வொரு வனையும் சமூகப்பிரக்ஞையுள்ளவனாகவும் ஒற்றுமையெனும் உன்னத பண்பை எய்தப் பெற்றவனாகவும் மனிதனைப்புடம் போட இபாதத்தால் முடியும் இவை அடிப்படைக் கிரியைகளான தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ் போன்றவற்றின் பெறுபேறுகள் மட்டுமே. அறிவியல் துறைகளில் ஈடுபடும் போது இறைவனுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடப்பதற்கான ஒரு பயிற்சியை வழங்கவே இந்த அடிப்படைக் கிரியைகள் ஏற்படுத்தப்பட்டன.

படைப்பினங்களனைத்தும் அல்லாஹ்வைத் துதிக்கின்றன. அவற்றின் தன்மைக்கும் இயல்புக்கு மேற்ப அவனை நினைவு கூருகின்றன. இதனை அல்லாஹ்

**"வானங்களும் பூமியும் அவை இரண்டிலுமுள்ள அனைத்தும் அவன் நாமத்தைத் துதி செய்கின்றன. என்றாலும் அதனை நீங்கள் விளங்கிக் கொள்ள மாட்டீர்கள்." (17:44)**

என பொதுப்படையாகக் கூறி விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மனு, ஜின் இனங்களை என்னை வணங்குவதற்காகவே படைத்தேன்" (51:56)** என்று குறிப்பாகச் சுட்டுகிறான்.

அல்லாஹ் மலக்குகளை விட மனிதனை மேலாகக் கருதக்காரணம், அவன் மீது பொறுப்புக்கள் சுமத்தப்பட்டிருப்பதே. இவற்றை நிறைவேற்றும் போது அல்லாஹ்வை நினைவு கூருவது அசாதாரணமாகும். எனவே தான் வாழ்க்கையையே வணக்கமாக்கிக் கொள்ளும் வழிமுறைகளை இஸ்லாம் காட்டித்தருகிறது. ஒரு காரியம் ஏக காலத்தில் இபாதத்தாகவும் நோக்கப்படும் வகையில் அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### ஈமானும் அமலும்

இஸ்லாம் இயற்கை மார்க்கமாகும். எனவே தான் அது உயிரோட்டமுள்ளதாகவும் நடைமுறைச்சாத்தியமானதாகவும் விளங்குகிறது. அதன் போதனைகளை வெறுமனே சடங்குகளாக நோக்க அது இடமளிக்கவில்லை. சட்டங்கள், விதிகள் ஆகிய அனைத்தும் வாழ்வில் பிரதிபலிக்க வேண்டுமென அது எதிர் பார்க்கிறது. மனிதனுக்கு சுபீட்சத்தை அளிக்காத எத்தகைய அம்சத்திலும் இஸ்லாம் நம்பிக்கை வைப்பதில்லை. ஏனெனில் மனிதனின் ஆசை, அபிலாஷைகளை அடையாளம் கண்டு அவற்றைப் பூர்த்தி செய்யும் சாதனங்களை செயற்களத்தில் காண இறை சட்டங்கள் மாத்திரமே அருகதையுள்ளவை என்பதில் அது அசையாத நம்பிக்கை கொண்டுள்ளது. எனவே தான் நிலையான வாழ்க்கைக்கு செயற்பாடு இன்றியமையாதது என்பது இஸ்லாத்தின் கருத்தாக உள்ளது.

அல்குர்ஆனின் பல இடங்களில் ஈமானோடு செயலும் இணைத்துக் கூறப் பட்டுள்ளதைக் காணலாம். இதன் பொருள் யாதெனில், ஈமானிய அம்சங்கள் அவை சுட்டும் செயல்களை வேண்டி நிற்கின்றன என்பதாம். ஈமானின் பூரணத்துவம் செயலிலேயே தங்கியுள்ளது என்பது இங்கு புலனாகின்றது. இவை இரண்டுக்குமிடையே ஒரு கூட்டுறவு உண்டு. தனித்து நின்று எதனையும் சாதிக்க முடியாத கூறுகள் இவை. எனவே தான் நபி (ஸல்) அவர்கள் தமக்குக் கிடைக்கப்பெற்ற வேத வெளிப்பாட்டை உடனுக்குடன் நடைமுறைப்படுத்தும் செயற்றிறன் வாய்ந்தவராக விளங்கினார்கள். அன்னாரின் பண்புகள் பற்றி அன்னை ஆயிஷா (றழி) அவர்களிடம் வினவப்பட்ட போது,

**"அவரது நடைமுறைகள் குர்ஆனாகவே இருந்தது"** என்றார்கள். இந்த அடிப்படையில் நோக்கின் இஸ்லாம் இயம்பும் இபாதத்கள் வெறுமனே மறுமையோடு மாத்திரமன்றி இவ்வுலகத் தொடர்புகளாலும் வரிக்கப்பட்டவை என்ற உண்மை புலனாகும். இவ்வாறு ஆத்மீக, உலோகாயுத நடைமுறைகள் இஸ்லாம் கூறும் இபாதத்தில் இழையோடக்காணலாம். ஈமானின் பிரிவுகள் மனிதனின் அன்றாட நடவடிக்கை களோடு சம்பந்தப்பட்டவை என்பதாலும் மனிதன் இறைவனுக்கும் சக மனிதனுக்கும் நிறைவேற்ற வேண்டிய கடமைகளோடு தொடர்புறுவனவாக அமைவதாலும் மனித நடவடிக்கைகள் இபாதத்தாகப் பரிமாணம் பெறுகின்றன. ஒரு செயல் வணக்கம் என்ற அந்தஸ்தை அடைய வேண்டுமாயின் அதில் கீழ்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.

அவையாவன:

(1) குறித்த செயல் ஷரீஅத்தால் அங்கீகரிக்கப் பட்டதாயிருத்தல்.

(2) தூய எண்ணத்தோடு அச்செயல் மேற் கொள்ளப்பட்டிருத்தல்.

(3) செயல் நேர்த்தியாகவும் சிறப்புடனும் இடம்பெற்றிருத்தல்.

(4) அல்லாஹ் விதித்த வரையறைகளை மீறாதவண்ணமும், ஏனையோரின் உரிமைகளைப் பாதிக்கும் மோசடி, அநீதி போன்ற துர்ச்செயல்கள் கலக்காத விதத்திலும் செயல் நிகழ்ந்திருத்தல்.

5) அச்செயல் மார்க்கத்தின் அடிப்படைக் கடமைகளை விட்டும் மனிதனைத் திசை திருப்பாதிருத்தல்.

இந்நிபந்தனைகள் பூர்த்தியான எச்செயலும் அல்லாஹ்விடத்தில் வணக்கமாகக் கருதப்படும். இச்செயற்பாடுகள் அனைத்தையும் மொத்தமாக உள்ளடக்கியதும், அல்லாஹ் மனிதன் மீது கடமையாக்கியதுமான இரு பொறுப்புக்கள் உள்ளன. கிலாபத், இமாரத் என்பனவே அவையாகும். அவற்றைத் தனித்தனியே பகுத்து நோக்குதல் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிலாபத்

**"கிலாபத்"** என்ற பதம் பொதுவாக 'பிரதிநிதித்துவம்' என்ற கருத்தில் பயன்படுத்தப்படுகிறது. **'கலீபா'** என்றால் **'பிரதிநிதி'** என்று பொருள். அதன் பன்மை **'குலபாஉ'** என்பதாகும். நபி (ஸல்) அவர்களது மறைவின் பின் அவரது பணியைத் தொடர வந்த நான்கு ஸஹாபாக்களும் 'குலபா உர்ராஷிதீன்' எனப்படுகின்றனர். அதே போல் நபி (ஸல்) அவர்களது மரணத்தைத் தொடர்ந்து முப்பது வருட கால ஆட்சி **'கிலாபத்துர்ராஷிதா'** (நீதியான ஆட்சி) என அழைக்கப்படுகிறது. இங்கு 'கிலாபத்' எனும் சொல்லுக்கு 'ஆட்சி' எனப்பொருள் கொள்ளப்பட்டாலும் நபி (ஸல்) அவர்களுக்குப் பகரமான பிரதிநிதித்துவத்தையே குறிக்கிறது.

மனிதனை இஸ்லாம் அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற அந்தஸ்தில் வைத்து நோக்குகிறது. **"நான் பூமியில் எனது பிரதிநிதியைப்படைக்கப்போகிறேன். (2:30)**

என அல்லாஹ் மலக்குகளை விளித்தமை இதற்குத்தக்க சான்றாகும். எந்தப்படைப்பினத்திற்கும் வழங்கப்படாத அமானிதத்தை மனிதனுக்களித்து, தன் உள்ளமையைப் பூமியில் உண்மைப்படுத்தும் பொறுப்பை அல்லாஹ் மனிதனிடம் விட்டதோடு அதனை அவன் செவ்வனே நிறைவேற்றுகிறானா என்பதை அவதானித்துக் கொண்டுமிருக்கிறான்.

**"அவர்களுக்குப் பின்னர் நாம் உங்களைப் பூமிக்கு அதிபதிகளாக்கினோம். நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்று கவனித்தும் வருகிறோம். (10:14)** என திருமறை பிரஸ்தாபிக்கிறது.

இவ்வுலகில் மனிதனை ஒதுங்கி வாழும் ஓர் இனமாக இஸ்லாம் கருதவில்லை. மாறாக அனைத்தையும் தம் ஆளுகைக்குட்படுத்தி தனித்துவமான இறையாட்சியை ஏற்படுத்துவதே அவனது பிரதான பணியெனக் கூறுகிறது. பொறுப்புக்களை சுலபமாக ஏற்று திறம்பட நடத்தும் ஆற்றலை மனிதன் எப்போது பெறுகிறானோ அப்போதிருந்தே அவன் மரணிக்கும் வரை தம் கிலாபத் பொறுப்பை நிறைவேற்ற உழைப்பது கடமையாகும். இதன் மூலம் இஸ்லாமிய ஷரீஆவையும் இறை நீதியையும் இம்மண்ணுலகில் அமுல்படுத்த மேற்கொள்ளும் முயற்சியே கருதப்படுகிறது. இப்பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றியது பற்றி ஒவ்வொரு மனிதனும் மறுமையில் வினவப்படுவான். எனவே, மனிதன் தனது உரிமைகள், கடமைகள் என்பவற்றை கிலாபத்தை நிறைவேற்றும் ஊடகங்களாகக் கொள்வதிலேயே அவனது ஈடேற்றம் தங்கியுள்ளது. வாழ்க்கை முழுவதும் விரவி நிற்கின்ற இவ்வசனத்தை தனிநபர், குடும்பம், சமூகம் என்ற அடிப்படையில் ஒவ்வொரு கணமும் சீர் தூக்கிச் சரிகாணும் வகையில் மனித நடவடிக்கைகள் இடம் பெற வேண்டும்.

'கிலாபத்' எனும் மாபெரும் இபாதத்தை நிறைவேற்ற விரும்பும் மனிதன், வெறுமனே கிரியைகளில் மாத்திரம் தங்கியிருத்தல் தவறாகும். இதற்காக உழைத்த நபித்தோழர்கள் இறை திருப்தியை அடைந்து கொள்ளும் வகையில் வாழ்க்கைச் சாதனங்களை வசப்படுத்திக் கொண்டனர். தொழுகை மீது அவர்கள் காட்டிய சிரத்தை, தொழில், முயற்சி, ஜிஹாத் ஆகியவற்றின் மீதான அவர்களின் பொறுப்புணர்வை விட அதிகமானதல்ல.

உலகில் மனித வாழ்வு இறை நியதியின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அந்நியதிகளுக்கு ஏதுவான முறையில் செயல்கள் அமையும் போதே கிலாபத்தை நிறைவேற்றுவது சாத்தியமானதாக மாறுகிறது. இறை நீதியையும் சட்டத்தையும் நிறைவேற்றுதல், மார்க்கத்திற்கெதிரான பகைவர்களின் சூழ்ச்சிகளுக்கும் அத்துமீறல்களுக்கும் முகம் கொடுத்து அவற்றை முறியடித்தல் என்பன கிலாபத்தின் சில அம்சங்களாகும். "அல் அஃமாலுஸ்ஸாலிஹாத்" என குர்ஆனும் சுன்னாவும் குறிப்பது கால, தேச விகற்பங்களுக்கேற்ப இறை திருப்தியை ஏக இலக்காகக் கொண்ட செயல்களையேயாகும்.

## உலக வாழ்வும் மறுமையும்

உண்மையில் இஸ்லாத்தின் பார்வையில் உலகியல் அம்சங்கள், மறுமை விவகாரங்கள் என்ற பாகுபாடு கிடையாது. ஏனெனில் ஒன்றின் இலட்சியத்தை அடையும் வழி முறையாக மற்றையது அமையப்பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருங்கக் கூறின் இவையிரண்டும் ஒரே பாதையின் இரு முனைகள் எனலாம். இவ்வுலகில் மேற்கொள்ளப்படும் செயல்கள் மறுமை விமோஷனத்தை நோக்காகக் கொண்டு அமைய வேண்டுமென்பது இஸ்லாத்தின் கருத்தாகும். உண்மை என்னவெனில், **'இவ்வுலகம் மறுமையின் விளைநிலமாக'** அமைந்துள்ளதால் அது செயற்பாட்டுக் களமாகக் காணப்படுதல் வேண்டும். மனிதனின் செயல்களுக்கான நற்கூலியும், தண்டனையும் வழங்கப்படும் இடமாக மறுமை தயார் படுத்தப்பட்டுள்ளது. நிலையான இன்பத்தையும் நிஜமான வெற்றியையும் அடைந்து கொள்ள விரும்பும் மனிதன், இறை கட்டளைகளுக்கு இயைய இவ்வுலகில் தன் வாழ்வை ஸ்திரப்படுத்திக் கொள்வது அவசியமானதாகும். கீழ்வரும் அல்குர்ஆன் வசனத்தின் மூலம் மேற்போந்த உண்மை தெளிவாகின்றது.

**"(ஜும்ஆ) தொழுகை முடிவுற்றால் (பள்ளியிலிருந்து வெளிப்பட்டு) பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வுடைய அருளைத் தேடிக் கொள்ளுங்கள்" (62:10)**

## இமாரத்

**'இமாரத்'** என்ற பதம் **'வளப்படுத்தல்'** என்ற கருத்தைத் தரும். வாழ்வு முழுவதையும் வணக்கமாக்கிக் கொள்ள வேண்டுமாயின், எண்ணங்கள் மூலம் செயல்கள் வணக்கமாகி அவை நடைமுறைப்படுத்துவது அவசியமென மேலே கண்டோம். இந்தப்பின்னணியில்தான் 'இமாரத்' என்ற பூமியை வளப்படுத்தும் பணியும் அமைகிறது.

**"அவனே பூமியிலிருந்து உங்களைப் படைத்து அதனை வளப்படுத்துமாறும் வேண்டிக்கொண்டான்" (11:61)** என அல்குர்ஆன் கூறுகிறது.

இவ்வசனம் ஏற்கனவே கூறப்பட்ட இபாதத், கிலாபத் ஆகிய பிரிவுகளோடு ஒன்றியதே. ஒரு சமூகம் சிறப்புற்று விளங்குவதற்கு தனித்துவமானதொரு நாகரிகம் அவசியமாகும். நாகரிகமே குறித்த சமூகத்தின் உண்மையான நிலைப்பாட்டைப் பிரதிபலிப்பதாக அமைவதால் அதன் இயல்பை ஒட்டியே சமூகத்தின் மதிப்பும் அமைகிறது. முன்னேற்றத்தை விரும்பும் ஒரு சமூகமானது நாகரிகத்தின் தோற்றுவாய்களைத் தன்னுள் பொதிந்திருத்தல் வேண்டும். உடல், உளரீதியான நாகரிகத்தை அடிப்படையாக வைத்தே ஒரு சமூகம் எழுச்சி பெறுகிறது. இதனைச் சார்ந்தே 'இமாரத்' பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டமும் அமைந்துள்ளது.

**"வானங்களிலும் பூமியிலும் உள்ளவைகளை நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு வசப்படுத்தித் தந்திருக்கிறான் என்பதையும், அவன் தன் அருட் கொடைகளை மறைவாகவும் வெளிப்படையாகவும் உங்கள் மீது சொரிந்திருக்கிறான் என்பதையும் நீங்கள் பார்க்கவில்லையா..." (21:20)**

எனவே, வசப்படுத்தித் தரப்பட்டுள்ள இவ்வளங்களை உரிய முறையில் பயன்படுத்தி ஏற்றம் காண்பது மனிதனின் பொறுப்பாகும். உலகத்தையும் அதிலுள்ள சாதனங்களையும் புறக்கணித்து விட்டு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வது சாத்தியமற்றது.

**"உலகத்தில் உனக்குள்ள பங்கை மறந்து விடாதே!" (28:77)**

தூய நோக்குடன் மனிதன் தன்னாலியன்ற வரை பூமியின் வளம் ஓங்க உழைப்பது நன்மை பயப்பதாகும். மாறாக சீர்கேடுகளை ஏற்படுத்தி பூமியின் சமநிலையை குழப்புவ தானது குறித்த பணிக்கு சவாலாக அமைகிறது. இவ்விதிகளைக் கருத்திற் கொண்டு இஸ்லாமிய சமுதாயம் செயற்பட்ட காலத்தில் அது வளர்ச்சிகளின் உச்ச நிலையை எய்தியிருந்தது. தெய்வீக சிந்தனைப் போக்குகளில் ஆதார பூர்வமான போதனைகள் அவை முன்வைத்த மூலாதாரங்களோடும் அடிப்படைகளோடும் இணைந்து அறிவியல் விருத்தியுறுவதற்கு உகந்த சமூக உறவுகளுக்கான அத்திவாரங்களை இட்டன.

அக்காலத்தில் பொதுவாக உலக நாகரிகத்திற்கும் குறிப்பாக கீழ்த்திசை நாகரீகங்களுக்கும் தலைமை வகித்தது இஸ்லாமிய நாகரிகமேயாகும். இந்நிலை படிப்படியாக ஸ்திரப்பாட்டை இழந்து வந்தது. உலோகாயுதம் பற்றிய தவறான கண்ணோட்டத்தால் முஸ்லிம் சமூகம் படிப்படியாக வீழ்ச்சியை நோக்கிச் சென்றது. வணக்கம் என்ற வட்டத்தினுள் மார்க்கக் கிரியைகளை மாத்திரம் அடக்கியமையே இந்நிலைக்குக்

காரணமெனில் அது மிகையல்ல. இதனை நபி (ஸல்) அவர்கள் அப்போதே எதிர்வு கூறியிருந்தார்கள்.

**"பசித்த மிருகம் தன் இரையை நோக்கிப்பாய்வது போல அந்நிய சமூகங்கள் உங்களை நோக்கிப் பாயும் ஒரு காலம் வரும்"** என நபிகளார் கூற **"அல்லாஹ்வின் தூதரே அப்போது நாங்கள் சிறு தொகையினராகவா இருப்போம்?"** என ஸஹாபாக்கள் வினவினர். அதற்கு நபியவர்கள் **"இல்லை, நீங்கள் அதிக எண்ணிக்கையுடையோராக இருப்பீர்கள். இருந்தும் வெள்ளத்தில் அடிபட்டுச் செல்லும் சருகுகளைப்போல அவர்கள் முன் சக்தியிழந்து நிற்பீர்கள்."** அவ்வேளை **எதிரிகளின் உள்ளங்களிலிருந்து உங்கள் மீதான அச்சத்தை அல்லாஹ் நீக்கிவிடுவான். உங்கள் உள்ளங் களிலே 'வஹ்ன்'ஐ ஏற்படுத்துவான்** என்றார்கள். அதற்கு ஸஹாபாக்கள் **அல்லாஹ்த ஆலாவின் தூதரே 'வஹ்ன்' என்றால் என்ன?"** என வினவினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் **"உலகின் மீது பற்று வைப்பதும் மரணத்தை வெறுப்பதுமாகும்"** என விடையளித்தார்கள்.

நவீன உலகில் முஸ்லிம்களின் நிலைப்பாட்டை இந்நபி மொழி தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

மனித அறிவும் புவியின் இயல்பும் இணைந்து செயற்படும் போதே "இமாரத்" இடம்பெறுகிறது. எனவே, இங்கு பகுத்தறிவுப் பிரயோகம் அவசியமாவதால் 'இமாரத்' மனிதன் மீது கடமையாக்கப்பட்டுள்ளது எனலாம். ஷெய்க் அல் ஜாஹிர் அவர்கள் இது பற்றிக் குறிப்பிடும் போது "புவியையும், அதன் வளங்களையும் அல்லாஹ் பாரிய திட்டமிடலின் அடிப்படையிலே படைத்துள்ளான். எனவே, அவை படைப்பினங்களின் நலனுக்காகப் பிரயோகிக்கப்படுவது அவசியமாகும். பூமியை வளப்படுத்தும் பணியின் மகத்துவத்தையும் நற்கூலியையும் மனிதன் புரிந்து கொண்டால் அல்லது அதனைப் புறக்கணிப்பதால் ஏற்படும் இழப்புக்களை அறிந்தால் சீக்கிரமே அதனை வளப்படுத்தும் முயற்சியில் ஈடுபட முயல்வான்" என்கிறார்.

## உடல், அறிவு, ஆன்மா

இஸ்லாத்தின் பார்வையில் இமாரத்தின் நிலைப்பாடு இம்மூன்று அடிப்படையம் சங்களையும் மையமாகக் கொண்டுள்ளது.

உடலுக்கும் ஆன்மாவுக்கும் இடையிலானதொடர்பை விளக்க ஆரம்ப காலத் தத்துவஞானிகளும் உளவியலாளர்களும் கடும் பிரயத்தனங்களை மேற் கொண்டது போலவே அண்மைக் காலத்தில் நவீன உளவியலாளர் களாலும் இவ்விவகாரத்தில் பரவலாக முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இருந்தும் இவ்விரு சாராரின் முடிவுகளிலும் பாரிய முரண்பாடுகள் காணப்படுகின்றன. இவை வாழ்க்கையமைப்பில் தலைகீழ் மாற்றத்தை ஏற்படுத்துமளவுக்கு முதிர்ச்சி பெற்றன. இறுதியாக உளவியல் அனுபவக் கொள்கையானது உடலே அனைத்துக்கும் அடிப்படையானதும் நிதர்சன மானதுமாகும்.' எனும் தவறான கருத்தை முன் வைத்தது. தூர நோக்கற்ற இவ்வாதப்பிரதி வாதங்களுக்கு மத்தியில் உடல், அறிவு, ஆன்மா பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு பரந்து பட்டதாகும். நடைமுறைச் சாத்தியமானதொரு வாழ்க்கையமைப்புத் திட்டத்தின் உருவாக்கத்திற்கு ஒன்றுடனொன்று மாறுபடும் இக்கூறுகளை இஸ்லாம் ஒன்றிணைக்க முயல்கிறது.

மனிதன் இறைவனின் கண்ணியமான சிருஷ்டியாகையால், ஏனைய படைப்பினங்களை விட அவன் மேம்பட்டு விளங்குகிறான். விண்ணகமும் மண்ணுலகும் மலைகளும் ஏற்க மறுத்த மாபெரும் பொறுப்பை மனிதன் சுமந்து கொண்டமையே இதற்கு அடிப்படைக் காரணமாகும். அதுவே அல்லாஹ்வால் வழங்கப்பட்ட அமானிதங்களுள் அதி முக்கியத்துவம் வாய்ந்த பகுத்தறிவும் செயற் சுதந்திரமுமாகும்.

தன் மனவிகற்பங்களையும் அகவுணர்வு களையும் ஆழமான ஆத்மீக விதிகளினடிப் படையில் பெறுமானமுள்ளவனாக மாற்றிக் கொள்வாண வேண்டி உயர்ந்த ஆன்மாவும் மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ளது. உடல் எனும் காட்சியோடு அறிவு, ஆன்மா எனும் எண்ணக்கருக்களும் இணையும் போதே மனிதன் தன்னில் பூரணத்துவமடைகின்றான். இம்மூன்று பகுதிகளும் மனிதனில் செலுத்தும் செல்வாக்கின்

காரணமாக ஒப்பீட்டு ரீதியில் அவனது வாழ்க்கையின் போக்கில் பல இயல்பான மனித மாண்புகள் காணப்படுவது அவசிய மாகிறது. எனவே, சார்பு நிலையை விடுத்து அவனது நடவடிக்கைகளில் நொதுமற்றன்மை பேணப்படுவது இன்றியமையாததாகும்.

உடலுக்கும் ஆன்மாவுக்குமிடையில் பகுத்தறிவு ஒரு பிணைப்பை ஏற்படுத்துகிறது. இம்முக்கூட்டுக்களாலான மனிதன் தனக்கேற் படும் உடலியல், ஆன்மீகத் தேவைகளைப் பகுத்தறிவின் ஒளியில் இனங்காணும் கடப்பாடுடையவனாகிறான். இவ்வகைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கோடு அவற்றுக்குக் கொடுக்கப்படும் அழுத்தம் வாழ்வின் சமநிலையைப் பேணுவதாய் அமைதல் வேண்டும். வாழ்க்கையின் போக்கில் சீரான நுகர்வைத் தோற்றுவிக்க இச்செயற் பாடுபெரிதும் துணை புரிகிறது. மாறாக மறுதலிப்பு, பேராவல் போன்ற முரண்பட்ட சக்திகளின் தன்னாதிக்கம் இலட்சிய வாழ்வை எதிர்வு கூறுவதில் தடைகளையேற்படுத்து கின்றது.

இஸ்லாத்தின் நோக்கில் உடல், அறிவு, ஆன்மா என்பவற்றைக் கூறுபோட முடியாது. ஒன்றின் தீர்வு மற்றையதின் பிரதியீடாக அமையுமளவுக்கு அவற்றிற்கிடையே ஒரு பரஸ்பர இணைப்புண்டு. உடல் ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்ய மனிதன் உட் கொள்ளும் உணவு, உள, சிந்தனா தேவை களையும் ஏக காலத்தில் நிறைவேற்றும் பாங்கு கவனிக்கத்தக்கது.

ஆன்மாவின் தூண்டுதல்களே, உடலுறுப் புக்கள் வழியாக செயலுருவம் பெறுகின்றன. அதே போல் புறச்செயல்கள் ஆன்ம சிந்தனையின் பரிணாமமே. எனவேதான் நபி (ஸல்) அவர்கள் தன் வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் உடல், ஆன்மா ஆகியவற்றின் தேவைகளை அறிவார்த்தமாக அணுகி வாழ்வுக்கு இலக்கணம் வகுத்தார்கள். இவ்வாறு இஸ்லாம் இவற்றுக்கிடையிலான மறைவான உடன்பாடுகளை விளக்கித் தன் நோக்கைத் துல்லியமாய்ப் பிரதிபலிக்கிறது. இங்கு ஷரீஅத்தின் தீர்க்க தரிசன நோக்கு தெள்ளிதிற் புலனாகிறது.

## இரு தீவிரவாத நிலைகள்

உடல், அறிவு, ஆன்மா என்பன வழங்கப்பெற்ற மனிதன் அவற்றுக்குரிய உரிமைகளை நீதியான முறையில் வழங்குவதன் மூலமே வாழ்வின் சமநிலையைப் பேண முடியும். இதில் தவறு நிகழும் போது அது இருவித தீவிரவாத நிலைக்கு இட்டுச் செல்கிறது. சடவாதம், துறவறம் ஆகிய இரண்டுமே அந்நிலைகளாகும்.

**"உலக வாழ்வில் மட்டற்ற மோகம் கொண்டோராக யூதர்களை நீர் காண்பீர்" (2:96)** என யூதர்கள் பற்றி அல்குர்ஆன் கூறுகிறது.

யூதர்கள் கோபத்திற்குள்ளாகக் காரணமாக அமைந்தவைகளுள், உலகின் மீது அவர்கள் கொண்டிருந்த மட்டற்ற மோகமும் ஒன்றாகும் என்பது இதன் மூலம் புலனாகிறது. அதன் காரணமாக அவர்கள் விடயத்தில் இறைத் தூதுத்துவப் பணி வெளிப்படையான தோல்விகளைச் சந்திக்க நேர்ந்தது. அதே போன்று கிறிஸ்தவர்கள் தங்கள் உலக விவகாரங்களைப் புறக்கணித்து விட்டு 'கலப்பற்ற ஆத்மீகமே மீட்சிக்கு வழி' எனக் கொண்டனர். இதனால் வாழ்வியலின் ஒரு பகுதி தேக்க நிலையையடைந்தது. இது பற்றி அல்லாஹ் அல்குர்ஆனில்,

**"நான் அவர்கள் மீது துறவறத்தைக் கடமையாக்கவில்லை. மாறாக அவர்களே அதனைப் புதிதாக ஏற்படுத்திக் கொண்டார்கள்" (57:27)** எனப் பிரஸ்தாபிக்கிறான்.

**"நீங்கள் உங்கள் மார்க்கத்தில் அளவு கடந்து செல்ல வேண்டாம்" (4:171)** எனவும் இயம்புகிறான்.

அவர்களின் வழிகேட்டுக்கு ஏதுவாயமைந்த காரணிகளுள் சமய அனுஷ்டானங்கள் மீதான தீவிரவாதமும் உலகியல் யதார்த்தங்களைப் புரிந்து கொள்ளத் தவறியமையும் அடங்கும். இவ்விரு சாராரினதும் வழிமுறைகளை விடுத்து நேரான வழியைப் பின்பற்றிச் செல்லும் பொருட்டு தன்னிடம் பிரார்த்திக்குமாறு அல்லாஹ் எம்மைப் பணித்திருப்பதோடு, நடுநிலைமையான சமூகமாகவும் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தை ஆக்கினான்.

**"உங்களை நாம் நடுநிலையான சமூகமாக ஆக்கினோம்" (2:143)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி (ஸல்) அவர்கள் தன் பயிற்சிப் பாசறையில் வளர்ந்த தோழர்களை வாழ்வின் நியதிகளுக்கேற்ப வழி நடாத்திச் சென்றார்கள். நெறிபிறழாத மத்திமமான போக்கு அவர்கள் வாழ்வில் கடைப்பிடிக்கப்பட்டது. புனித இஸ்லாத்தைக் காக்க பகலில் போர்க்களம் புகும் அவர்கள் இரவில் இறைவன் சந்நிதானத்தில் விழித்திருந்து விழிகள் கரைய அழுது தொழுதனர். அரசியல், குடும்பத் தலைமைப் பொறுப்பு, வர்த்தக நடவடிக்கைகள், நீதி நிர்வாக விவகாரங்கள் போன்றவற்றில் ஆழமாகக் காலூன்றி இருந்த அதே வேளை மத அனுஷ்டானங்கள், கிரியைகள் என்ப வற்றிலும் கருத்தாக இருந்தனர்.

**"உனது வாழ்வு நீட்சியுடையது என எண்ணிக் கொண்டு இவ்வுலக விவகாரங்களில் ஈடுபட்டு, நாளையே மரணம் உன்னைத் தழுவிக் கொள்ளும் என உறுதி பூண்டு மறுமைக்காக உன்னைத் தயார் செய்து கொள்"** என்ற அலி(றழி) அவர்களின் வாசகத்திற்கு பீடிகையாக அமைந்தது பெருமானாரின் வழிகாட்டலே.

தூக்கத்தைத் துறந்து விழித்து வணங்க முயன்றவர், உணவை மறந்து தொடர்ந் தேர்ச்சியாக நோன்பிருக்க விழைந்தவர், உடலிச்சையை நிராகரித்து பிரமச்சரியம் காக்க திடசங்கற்பம் பூண்டவர் ஆகிய மூவரையும் நபி (ஸல்) அவர்கள் கண்டித்தது மட்டுமன்றி அவர்களின் முடிவுகளை ஆட்சேபித்து அவர்களை ஆற்றுப்படுத்தினார்கள்.

"இஸ்லாத்தில் துறவறம் கிடையாது" என்ற நபி வாக்கைக் கருத்திற் கொண்டு ஓர் இடைநிலைப்போக்கைக் கைக்கொண்டதாலேயே உன்னத மனிதர்களாக ஸஹாபாக்கள் உயர முடிந்தது.

சடவாதம், துறவறம் ஆகிய இரு துறைகளையும் நாம் ஆழ்ந்து நோக்கின் பல சீர்கேடுகளை இனங்காண முடியும்.

துறவின் காரணமாக மனிதனது ஆற்றல்கள், சக்தி என்பன சமூக வாழ்விலிருந்து தூரமாகி விடுவதால் அறிவியல் துறைகளில் ஒரு தேக்க நிலை ஏற்படுகிறது. மறைமுகமான இவ்வடிமைத்துவம் இஸ்லாத்தின் பார்வையில் நிராகரிக்கத்தக்கதாகும். துறவின் விளைவாக ஆளுமை மிக்க மனிதர்கள் கூட்டு வாழ்விலிருந்து பிரிந்து வாழ்வதால், சமூகம் அதிகரிக்கும் அநியாயத்திற்கும் உள்ளாகிறது. அத்தோடு மனித இயல்புகளுக்கெதிராக இப்போராட்டம் நரம்புத்தளர்ச்சி, ஒழுக்க வீழ்ச்சி போன்ற தீமைகளுக்கும் இட்டுச் செல்லும்.

மறுபுறம், மனிதன் இவ்வுலக இன்பங் களை இயன்றவரை அனுபவித்து மரணிப்பதுவே சடவாதத்தின் நோக்கமாகும். இன்று முழு உலகத்துக்கும் அச்சுறுத்தலாக விளங்கும் 'எயிட்ஸ்' இத்தீவிரவாத சிந்தனைப்போக்கின் விளைவுகளி லொன்றாகும். நவீன பொருளாதார அமைப்புக்களின் அநீதிகளையும் இதனுள் அடக்கலாம்.

எனவே, ஏனைய மதங்கள் மனிதனால் உருவாக்கப்பட்ட கொள்கை, கோட்பாடுகள் போன்றவற்றிற்கு முன்னால், மனிதனதும் உலகத்தினதும் அபிவிருத்திக்காக இஸ்லாம் இயம்பும் கொள்கைத் திட்டங்கள் உன்னத மானவை என்பது இதன் மூலம் புலனாகின்றது.

**உஷாத்துணைகள்:-**


* அல்குர்ஆன்
* அல்இபாதா பில் இஸ்லாம் - கலாநிதி யூசுப் அல் கர்ழாவி
* பிந்நப்ஸி வல் முஜ்தமஃ - முஹம்மத் குதுப்
* மபாஹீம் யன்பஹீ அன் துஸஹ்ஹஹ் - முஹம்மத் குதுப்
* அல் வஃயுல் இஸ்லாமி ஆகஸ்ட் 1994
* தூது ஜூலை செப்டம்பர் 1992


☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With The Best Compliments From**

# FAR EAST ENTERPRISES

&

Electronic Equipments Branch:
Dealers in Watches, Clocks, Radio

147,2nd Cross Street,
Colombo - 11.

Colombo Street,
Kandy.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத உணர்வால் ஜனித்த மதம்

## -ஒரு சிற்றாய்வு-

பி.எம்.முஹம்மது இர்பான் (ஐந்தாம் வருடம்)

உலகில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வழங்கி வரும் மதங்களுள் இந்து மதமும் ஒன்று. இதன் ஸ்தாபகர் யார்...? எப்போது ஸ்தாபிக்கப்பட்டது...? என்ற கேள்விகளுக்குத் திட்டவட்டமான விடைகள் வரலாற்றில் இல்லை. எனினும், வரலாற்று நூல்களை வாசிக்கும் போது கி.மு. 1500 ஆம் ஆண்டுகளில் ஆரியர் எனப்படும் ஓர் இனத்தவர் இந்தியாவுக்கு வந்து குடியேறிய பின்னரேயே இம்மதம் தோற்றம் பெற்றுள்ளது என்று தெரிகிறது. ஆரியர்களின் இவ்வருகைக்கு முன்னால் கி.மு. சுமார் 3000 ஆண்டளவில் செமித்தியர் எனப்படும் வந்தேறு குடிகள் இந்திய சுதேசிகளான திராவிடர்களோடு கலந்து வாழ்ந்திருப்பினும், ஆரியர் வருகைக்குப் பின்னுள்ள வரலாற்றையே ஓரளவுக்குத் தெளிவாக இனங்காண முடிகிறது. மத்திய ஆசியாவிலிருந்து வந்த இவ்வாரியர்கள், ஏற்கனவே இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருந்த திராவிடர்களையும் செமித்தியர்களையும் வெற்றி கொண்டு செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

இந்திய சுதேசிகளால் மரபு வழியாகப் பின்பற்றப்பட்டு வந்த வழிபாட்டு முறைகளும் கிரியைகளும் ஆரியர் கொண்டு வந்த வழிபாட்டு முறைகளோடும் கிரியைகளோடும் கலந்த போது, கால ஓட்டத்தில் புதியதொரு சிந்தனை தோற்றம் பெற்று அதுவே இந்து மதமாக உருப் பெற்றுள்ளது. இதன் மூலம், இந்திய சுதேசிய மரபுகள் இந்து மதமாக மாறுவதற்கு ஆரியர்கள் மிக முக்கிய பங்கெடுத்துள்ளதை உணர முடிகிறது.

இவ்விதம் தோற்றம் பெற்ற இந்து மதத்தைப் பல கவிஞர்களும் ரிஷிகளும் துறவு பூண்ட ஞானிகளும் கால சூழ் நிலைகளின் பரிமாணங்களுக்கேற்ப வளர்த்து வந்துள்ளனர். இம்மதம் பிற்கால இந்தியாவில் தோற்றம் பெற்ற அனைத்து மதங்களையும் மிகைத்து இன்றும் நிலை பெற்றுள்ளதெனில் அதற்குக் காரணம், அது ஒரு மதம் என்பது மட்டுமன்று. அது பல்வேறு மரபுகளையும் சிந்தனைகளையும் கொண்ட தொகுப்பு; பரம்பரை பரம்பரையாக இந்தியர்கள் பின்பற்றி வருகின்ற உணர்வு ரீதியான, சிந்தனா ரீதியான, சமூக ரீதியான பாரம்பரியம். நவீன காலத்தில் அதன் வடிவம் பௌத்த, சமண, இஸ்லாமிய சமயங்களின் செல்வாக்குகளைப் பல்வேறு வடிவங்களில் உள்வாங்கி வந்திருக்கும் அதே வேளை, பௌத்த; சமண சமயங்களிலும் இந்திய முஸ்லிம்களின் சிந்தனைப்பாங்கிலும் இந்து மதம் பல்வேறு விகிதங்களில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புக்களையும் மறுக்க முடியாது.

இந்து மதத்தின் தோற்றம்— வளர்ச்சி பற்றி இவ்வாறு மிகச்சுருக்கமாக நாம் கூறினாலும், அதன் நீண்ட வரலாறு பல்வேறு மாற்றங்களையும் திரிபுகளையும் கொண்டது. இந்து மதத்தைக் கோட்பாட்டு ரீதியில் விளக்குவதை நோக்காகக் கொண்டு எழுதப் பட்டுள்ள இக்கட்டுரை அம்மாற்றங் களையும் திரிபுகளையும் முழுமையாக விவரிக்க இடமளிக்காதாகையால், சில முக்கிய மாற்றங்களை மட்டும் அவசியமான இடங்களில் பார்ப்போம்.

கரைகள் புலப்படாத பெரும் சமுத்திரம் போன்ற இந்து மதம் ஒரு பழம் பெரும் தர்மம் என்ற வகையில் அதன் முக்கியமான கோட்பாடுகளை இனி ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

### கடவுள் பற்றிய கோட்பாடு

இந்து மதத் தோற்றத்துக்கு முன்னர், மழை, காற்று, ஆறு, நெருப்பு போன்ற இயற்கைச் சக்திகளால் கவரப்பட்டிருந்த ஆரம்ப கால இந்தியர்கள் அவ்வியற்கைச் சக்திகளைப் போற்றிப் புகழ்ந்து நன்றி செலுத்தி வந்துள்ளனர். காலப்போக்கில் தம்மைப்போலவே அவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரும் ஆன்மாவும் கொண்டவை என உருவகித்து, அவற்றை வழிபடவும் அவற்றுக் காகப் பலியிடவும் தொடங்கினர். இயற்கைச் சக்திகளுக்கு இவ்வாறு அவர்கள் மகத்து வமளிக்கக் காரணம், "ஒவ்வோர் இயற்கைச் சக்திக்கும் பொறுப்பாக ஒவ்வொரு கடவுள் இருக்கிறார்" என்ற ஆழ்ந்த நம்பிக்கையே ஆகும்.

இந்து மதத் தோற்றத்தின் பின், ஆரியக் கடவுளர்களும் திராவிடக் கடவுளர்களும் சேர்ந்து கடவுளர்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகியது. இவர்களுள் வருணன், இந்திரன், அக்கினி போன்றோர் முதன்மையானவர்களாக வேதத்தில் காட்டப்படுகின்றனர்.

இப் பலதெய்வ வணக்கத்துக்கு மத்தியில் ஏக தெய்வக் கொள்கையும் இந்துக்களிடம் தலை காட்டியுள்ளது. ஒரு கடவுளைப்போற்றி வழிபடும் போது, அக்கடவுள் ஏனைய கடவுளர் களுக்கெல்லாம் கடவுளாக அவர்களுக்குத் தோன்றினார். இதனால் அக்குறிப்பிட்ட கடவுளுக்குத் தாம் விரும்பிய பெயர்களையும் மகத்துவப் பண்புகளையும் வழங்கி வழிபட்டனர். வேறொரு சந்தர்ப்பத்தில் மற்றொரு கடவுளை வணங்கும் போதும் இதே நிலையே காணப் பட்டது. சாதாரண கண்ணியப் படுத்தலாக இருந்த இந்த வழிமுறை பல நூற்றாண்டுகளின் பின்னர் உறுதியான நம்பிக்கையாக மாறியது. அதாவது, "கடவுளர்களுக்குக் கடவுளாக ஒருவர் இருக்கிறார்; அவருக்குக் கட்டுப்பட்டே அனைத்தும் இயங்குகின்றன" என்று நம்பத் தொடங்கினர்.

கி.மு. 8ஆம் நூற்றாண்டளவிலேயே 'எல்லாக் கடவுளர்களும் ஒரே கடவுளே' என்ற சிந்தனை முன்வைக்கப்பட்டது. "அந்த ஒரே கடவுள் தன் மெய்மை நிலையிலிருந்து உலகைப் படைத்தார். அவரே அதனைக் காத்து, இறுதியில் அழித்து விடுவார்" என்று இந்துக்கள் நம்பினர். இந்த ஒரே கடவுள் தான் புரிகின்ற மூன்று பணிகளைப் பொறுத்தும் மூன்று தோற்றங்களில் உருவகிக்கப்பட்டார்.

1. பிரம்மா (படைப்பவர்)
2. விஷ்ணு (காப்பவர்)
3. சிவன் (அழிப்பவர்)

இவ்வொவ்வொரு தோற்றத்திலும் கடவுளானவர் வெவ்வேறு மனைவியரையும் சந்ததியையும் கொண்டவரராகக் கொள்ளப் பட்டார். இம்மூவருள்ளும் காப்பவரான விஷ்ணு மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், கண்ணன், புத்தர், கல்கி ஆகிய அவதாரங்கள் கொண்டவர் என்றும் நம்பப்பட்டார்.

சித்தாந்த ரீதியாக இதில் உடன்பாடு காணப்பட்டாலும், நடைமுறையில் எண்ணற்ற கடவுச் சிலைகள் வணங்கப்படுகின்றன. 'குலதெய்வம்' என்ற பெயரில் ஏதோ ஓர் உருவை மாத்திரம் முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்ற முரண்பட்ட பல குழுக்களும் இந்து மதத்தில் காணப்படு கின்றன. முக்கியமாக, சிவனை முழு முதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்ற சைவர்களையும் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்ற வைஷ்ணவர்களையும் குறிப்பிட முடியும்.

## 2. அண்டவுற்பத்திக்கோட்பாடு

இந்து மத அண்டவுற்பத்திக் கோட் பாடானது பௌத்த, சமண சமயங்களின் அண்டக் கொள்கையின் தோற்றத்தின் பின்னரேயே முழுமையான வடிவைப் பெற்றதாக நம்பப்படுகிறது.

இக்கோட்பாட்டின் படி, ஆரம்பத்தில் அண்டமானது சூன்ய நிலையிலேயே இருந்தது. பின்னர், பரம்பொருளாகிய இறைவன் இவ்வண்டத்தைக் கட்புலனாகும் வகையில் படைத்து, அதில் பல மூலக்கூறுகளையும் ஏனைய அடிப்படைகளையும் உருவாக்கினான். பிரபஞ்சச் சடப்பொருட்களிலிருந்து பல்வேறு உயிரினங்களைப் படைக்க "பிரம்ம ஞானம்" தேவைப்பட்டதால் முதலில் நீரைப் படைத்து, தன்னிலிருந்து ஒரு ஜீவ அணுவை அதில் இட்டான். அது பொன்னிறமானதொரு முட்டையாக மாறியது. அதன் உள்ளடக்கம், படைப்பினங்களின் தந்தையான பிரம்மாவின் தோற்றத்தில் இருந்தது. அந்த முட்டைக்குள் பிரம்மா ஒரு 'பிரம்ம வருடம்' இருந்த பின்னர், பரம் பொருளாகிய இறைவன் அதனை இரண்டாகப் பிளந்து வானமாகவும் பூமியாகவும் ஆக்கினான். மேலும், பிரம்மன் மூலமாகப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு தெய்வங்களையும் கண்ணுக்குப் புலப்படாத உயிரினங்களையும் கால்நடைகளையும் காலத்தையும்; அதன் பிரிவுகளையும் கிரகங்கள், கடல்கள், ஆறுகள், மலைகள் போன்றவற்றையும் படைத்தான். ஒவ்வொரு படைப்புக்கும் ஒவ்வொரு பெயரையும் வழங்கினான்.

இவ்வாறு அண்டவுற்பத்தி பற்றிக் கூறும் இந்து மதம், அதன் ஆயுட்காலம் பற்றியும் பல்வேறு கொள்கைகளைக் கொண்டுள்ளது.

இந்து மதக்கொள்கையின்படி, இவ்வண்டம் முடிவில்லாது எண்ணிறந்த காலச்சக்கரங்களுக்கூடாகச் செல்லக் கூடியது. அவற்றுள் மிகக்குறுகிய காலப்பகுதி 'கற்பம்' எனப்படுகிறது. பிரம்மனின் ஒரு பகற் பொழுதாகக் கருதப்படும் இக்'கற்பம்' 432 கோடி மனித ஆண்டுகளுக்கு ஒப்பானது. பிரம்மனின் இரவுப்பொழுதும் இதே அளவு நீளம் கொண்டது. இத்தகைய 360 நாட்களே ஒரு 'பிரம்மவருடம்' எனப்படும். பிரம்மன் இவ்வாறான 100 ஆண்டுகள் ஆயுள் கொண்டவனாகையால், இவ்வண்டம் ஆகக் கூடிய காலமாகிய 31104000 கோடி ஆண்டுகள் நிலை பெற்ற, பின்னர், மீண்டும் ஒரு படைப்புக் கடவுள் தோன்றும் வரை பரமான்மாவாகிய இறைவனுள் ஒடுங்கி நிற்கும். பிரம்மன் தற்போது தனது 51 ஆவது ஆண்டை அடைந்துள்ளான் என்று கூறப்படுகிறது.

பிரம்மனின் ஆயுள் முடியும் போது அண்டத்தைத் தன்னுள் அடக்கும் பரம் பொருள் சிவனே எனச் சைவரும், விஷ்ணுவே என வைஷ்ணவரும் கூறுவர்.

உலக ஊழிக் காலம் பற்றிய இக் கொள்கையுடன் இன்னும் பல கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன. ஒவ்வொரு கற்பத்திலும் 14 மன்வந்தரங்கள் உண்டு. ஒவ்வொரு மன்வந்தரமும் 30672000 மனித ஆண்டுகளைக் கொண்டது. இம்மன்வந்தரங்களுக்கிடையில் நீண்ட இடைவெளிகளும் உண்டு. இவ்விடை வெளிகளில் உலகம் மீண்டும் புதுப்பிக்கப்படுவதோடு, மானிட இனத்தின் புதிய 'மனு'வும் தோன்றுவான். தற்போது மானிட இனம் கற்பத்தின் ஏழாவது மன்வந்தரத்தில் உள்ளது. இம்மன்வந்தர 'மனு' 'வைவேசுவதன்' எனப்படுகிறான்.

ஒவ்வொரு மன்வந்தரத்திலும் 71 மகாயுகங்கள் உள்ளன. 1000 மகாயுகங்கள் ஒரு கற்பமாகும். ஒவ்வொரு மகாயுகமும் கிருத யுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என நான்கு யுகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த யுகங்கள் முறையே 4800, 3600, 2400, 1200 தேவ ஆண்டுகளைக் கொண்டவை. ஒவ்வொரு யுகத்திலும் அன்பு, அறம், ஆற்றல், மாண்பு, ஆயுள், இன்பம் முதலியவை படிப்படியாகக் குறைந்து கொண்டு செல்லும். கலியுக முடிவில் வகுப்புக்களிடையே கலகம் விளைதல்; நிலையான மரபமைதிகள் வீழ்ச்சியடைதல்; சமயச்சடங்குகள் நிறுத்தப்படல்; அந்நிய நாட்டுக் கொடுங்கோன் மன்னர்களின் ஆட்சி ஏற்படல் போன்றவை நிகழும் என்றெல்லாம் பல இந்து மதக் காவியங்கள் கூறுகின்றன. உண்மையில் இந்தியாவின் பெரும் பகுதியில் வேற்று நாட்டவர் ஆட்சி செய்து, புற நெறிகளான பௌத்தம், சமணம் போன்றவற்றால் இந்து மரபமைதிகள் தளர்வுற்ற, கிறிஸ்து காலத் தொடக்கமளவிலுள்ள நூல்களே இக்கருத்துக்களை வலியுறுத்துகின்றன.

இந்து மத மரபுப்படி, மகாபாரதப் போர் தொடங்கிய ஆண்டெனப்படும் கி.மு. 3102 ஆம் ஆண்டிலேயே கலியுகம் பிறந்தது என்று தற்போது கொள்ளப்பட்டாலும், மகாபாரதப் போர் கி.மு. 900 ஆம் ஆண்டளவில் நடந்தது என முன்னர் கருதப்பட்டுள்ளது. இம்முன்னையக் கணிப்பீட்டை வைத்து, கலியுகத்தின் 1200 தேவ ஆண்டுகளையும் மனித ஆண்டுகளாகக் கொண்டால் தற்போது கலியுகம் முடிந்திருத்தல் வேண்டும். இவ்வச்சத்திலிருந்து விடுபடுவதற்காகவே, முன்னர் மனித ஆண்டுகளாகக் கொள்ளப்பட்ட நான்கு யுகங்களின் ஆண்டுகளும் பின்னர் தேவ ஆண்டுகளாக மாற்றப்பட்டுள்ளன. (ஒரு தேவ ஆண்டு 360 மனித ஆண்டுகளுக்கு ஒப்பாகக் கொள்ளப்படுகிறது) இதன் மூலம் யுக முடிவுக் காலம் போதியளவு தள்ளிப் போடப்பட்டது.

இவ்வாறு உலக ஊழி பற்றிய இந்து மதச் சித்தாந்தமானது ஒன்றுக்கு மேற்பட்ட கொள்கைகளைக் கொண்ட செப்பமற்ற தொகுப்பாகவே காணப்படுகிறது. இச் சித்தாந்தத்தை விரிவாக ஆராய்ந்தோமேயானால் அதன் பாரிய பல குறைபாடுகள் தெளிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. புனித நூல்கள்

இந்து மதப் புனித நூல்கள் எனும் போது, எண்ணிறந்த தொகுப்புக்கள் விரிந்து செல்வதைக் காண முடிகின்றது. இப்புனித நூல்கள் இறை கட்டளையாக எழுந்தவை யல்ல. அது மட்டுமன்றி, செய்யுள் வடிவில மைந்த இந்நூல்களுள் அநேகமானவற்றிற்கு ஆசிரியர் யாரெனத் தெளிவாக அறியப்பட வில்லை. இந்நூல்கள், பல்வேறு பட்ட காலப்பிரிவுகளில் பல்வேறு ஆசிரியர்களால் மேற் கொள்ளப்பட்ட முயற்சிகளின் பயனாக முழு வடிவம் பெற்றனவாகலாம்.

ஏராளமான நூல்கள் புனிதமாகக் கருதப்பட்டாலும், அவற்றில் 'வேத'மே மகோன்னத நூலாகக் கருதப்படுகின்றது. இது இந்து மதம் உருவாவதற்கு முன்னால் ஆரியர்களால் உருவாக்கப்பட்டதென வரலாற்றாசிரியர்கள் கூறுவர். இந்நூலின் அடிப்படையிலேயே இந்து மதம் கட்டியெழுப் பப்பட்டுள்ளது. ஆசிரியர் யாரென அறியப்படாத இந்நூல், இருக்கு, சாமம், யசூர், அதர்வம் ஆகிய வேதப்பிரிவுகளையும், அவற்றின் பிற்சேர்க்கைகளான பிராமணங்களையும், அவற்றினது பிற்சேர்க்கைகளான ஆரணியங் களையும் உபநிடதங்களையும் உள்ளடக்கிய இலக்கியப் பரப்பாக அமைகிறது. இந்நூலில் பல்வேறுபட்ட நம்பிக்கைக் கோட்பாடுகளும் மரபு வழியான சட்டங்களும் காணப்படுகின்றன. இந்துமதம் பல நூற்றாண்டுகளாகப் படிமுறை வளர்ச்சி கண்டதாகையால், அதன் வேத நூலின் உள்ளடக்கத்திலும் இப்பிரதிபலிப்பைக் காணமுடிகிறது. நாடோடிப் போக்கிலிருந்து தத்துவ உணர்வுகளை நோக்கிச்செல்லும் பகுத்தறிவின் படிமுறை வளர்ச்சி இதில் காணப்படுகிறது; இறைவனைப் பற்றிய தேடல், ஐயம் தொனிக்கும் பாடல்களில் ஆரம்பித்து 'எல்லாம் அவனே' என்று முடிகின்றது.

இந்து மதத்தின் மற்றோர் உன்னத நூலாகக்கருதப்படுவது "மனுதர்ம சாஸ்திரம்" ஆகும். பல்வேறுபட்ட இந்து மதக் குழுக்களாலும் பின்பற்றப்படுகின்ற சட்ட திட்டங்களை உள்ளடக்கிய இந்நூல் மிகப் புராதனமானது. இதன் ஆசிரியர் யார் என்பது பற்றி முரண்பட்ட கருத்துக்கள் இருப்பினும், கி.மு. 2ஆம் 3ஆம் நூற்றாண்டுகளில் பலரின் முயற்சிகளின் பேரில் இயற்றப்பட்டது என்பதே மிகச் சரியான கருத்தாகக் கொள்ளப்படுகிறது. எவ்வா றிருப்பினும், ஆட்சி, அதிகாரம், பெண் விவகாரம், பொருளாதாரம் போன்றவை தொடர்பாக இதில் காணப்படுகின்ற சட்ட திட்டங்களை இன்றுவரை இந்துக்கள் பெரும்பாலும் பின்பற்றி வருகின்றனர்.

வேதம், மனு தர்மம் தவிர மகாபாரதம், பகவத் கீதை, யோக வசிஸ்டம், இராமாயணம் ஆகிய மற்றும் நான்கு புராண நூல்களும் புனித நூல்களின் சிகரங்களாகக் கொள்ளப்படுகின்றன. கதைகளையும் சம்பவங்களையும் கூறுவதன் மூலம் வாழ்வியலோடு சம்மந்தப்பட்ட பல தத்துவங்கள் இவற்றில் போதிக்கப்படுகின்றன.

## 4. மனித வாழ்வு பற்றிய நம்பிக்கைகள்

இந்து மதம், மனித வாழ்வு குறித்து நான்கு முக்கிய நம்பிக்கைகளைக் கொண்டுள்ளது. கர்மா, மறுபிறப்பு, வீடுபேறு, அத்வைதம் ஆகிய இந்நான்கு அம்சங்களும் பின்வருமாறு.

### 1. கர்மா:-

"மனித இச்சைகள் பலமான சக்தி படைத்தவை. ஒரு மனிதனின் இச்சைகள் அவனோடு மாத்திரம் நின்று விடாமல் ஏனையோரிலும் நன்மையாகவோ தீமை யாகவோ தாக்கம் விளைவிக்கின்றன. இவ்வாறான இச்சைகளால் அவன் செய்கின்ற நன்மை, தீமைகளுக்கான கூலி இவ்வுலகிலேயே அவனை வந்தடைந்து விடும்; அதிலிருந்து அவனால் தவிர்ந்து கொள்ளவே முடியாது" என்பது ஆரம்ப கால இந்து மத நம்பிக்கை. எனினும் இந்த நம்பிக்கை யதார்த்த பூர்வமாக நடைமுறை வாழ்வோடு ஒத்துப் போகவில்லை. அநேகமாக, நன்மை செய்தவனும் தீமை செய்தவனும் தத்தமக்குரிய பிரதி பலன்களை அனுபவிக்காமலேயே மரணிக்கின்றனர். இதை உணர்ந்த இந்துக்களிடம் மறு பிறப்பு பற்றிய சிந்தனைகள் தோற்றம் பெறலாயின. ஒருவன் செய்யும் நன்மை தீமைகளுக்குரிய பிரதி பலனை, தான் வாழும் காலத்திலேயே அடையாவிட்டால் மறுபிறப்பிலாவது அனுபவிப்பானென்று நம்பத் தொடங்கினர். இதன்படி ஒருவன் தன் வாழ்நாளில் அனுபவிக்கும் இன்பமும் துன்பமும் முற்பிறப்பின் தொடர் என்று கருதப்படுகின்றன. இதுவே 'கர்மா'வாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மறுபிறப்பு:-

இம்மறுபிறப்புக் கொள்கைக்கு இரண்டு முக்கிய காரணங்கள் காட்டப்படுகின்றன.

1. ஒரு மனிதனின் ஆன்மா உடலை விட்டு வெளியேறினாலும் சட உலகோடு தொடர்புபட்ட ஆசைகள் அதற்கிருத்தல்.
2. ஏனைய மனிதர்களோடு தொடர்புபட்ட கடமைகளும் உரிமைகளும் தனக்கு உள்ள நிலையிலேயே குறிப்பிட்ட மனிதனின் ஆன்மா பிரிதல்.

இவ்விதம் ஒரு பிறப்பின் பயனாய் விளையும் மறுபிறப்பில் குறிப்பிட்ட ஆன்மா தேவர், மிருகம், மனிதர், நாகர் ஆகிய பிறப்புகளுள் ஏதாவதொன்றாகப் பிறக்க முடியும். எனினும், சில பக்குவமடைந்த ஞானிகளைத் தவிர ஏனையோருக்குத் தம் மறுபிறப்புப் பற்றிய உணர்வோ, ஞாபகமோ இருக்காது என்பது இந்துக்களின் ஆழிய நம்பிக்கை. இந்து மெய்யறிவாளர் சிலரின் கருத்துப்படி, அவரவர் செய்கின்ற பாவ புண்ணியங்களை ஒப்பு நோக்கியே அவர்களின் ஊழ்வினைப்பயனைக் கணிக்க முடியும். இஸ்லாம் போன்ற சமய நெறிகள் இவ்வுலகைப் பரீட்சைக்களமாவும் மறு உலகை விசாரணை அல்லது கூலி கொடுக்கும் களமாகவும் கொள்ள, இந்து மதமோ இரண்டுக்கும் களமாக இவ்வுலகே அமையும் என்று கூறுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

3. வீடு பேறு (முக்தி):-

"ஒருவன் தான் புரிகின்ற பாவ; புண்ணியங்களின் விளைவாகவே மறுபடி மறுபடி பிறக்கிறான்; ஆகையால்,மறுபிறப்பை ஏற்படுத்தக் கூடிய எந்தச் செயலையும் செய்யாத போது பிறவித் துன்பத்திலிருந்து விடுபட்டு 'வீடு பேறு' அடைகிறான்; இதன் மூலம் பரம் பொருளாகிய இறைவனோடு இரண்டறக்கலந்து ஐக்கியமாகும் தகுதியைப் பெறுகிறான்" என இந்து மதம் கூறுகின்றது. பாரியதொரு சமுத்திரத்துடன் ஒரு துளி நீர் கலந்து விடுவது போல், ஆன்மாவானது பரம்பொருளோடு கலந்து விடுவதே வாழ்க்கையின் இறுதி இலட்சியமாக அமைய வேண்டுமெனவும் அது போதிக்கின்றது. பிறவித்துன்பத்திலிருந்து கிடைக்கும் இவ் விமோசனத்தைப் பாவ; புண்ணியங்கள் தடுத்து விடும் என்பதால், அனைத்தையும் விட்டொதுங் கக்கூடிய துறவறமே முக்திக்கான உன்னத வழிமுறையாகக் கொள்ளப்படுகிறது.

4. அத்வைதம்:-

"கடவுளிலிருந்தே பிரபஞ்சமும் ஜீவராசிகளும் தோன்றின" என்று இந்து மதம் நம்புவது போலவே, "மனித ஆன்மாவானது இறுதியில் கடவுளோடு இரண்டறக்கலந்து அத்வைத மடைகிறது" எனவும் உறுதியாக நம்புகிறது. இந்த அம்சம் பற்றி 'வேதம்' மிக விரிவாகக் கூறியுள்ளது. இந்த அத்வைத சிந்தனை இந்து மதத்தில் எவ்வாறு தோன்றியது என்ற வினாவுக்கு இந்தியத் தத்துவ மரபு படிமுறையாக விளக்கம் தருகிறது.

ஆரம்பக் கட்டமாக, பிரபஞ்சத்தின் உருவாக்கத்திற்குப் பின்னால் மாபெரும் சக்தியொன்று மறைந்துள்ளது என்றும் அதனை வழிபாட்டின் வாயிலாகவும் பலியிடுதல் மூலமாகவும் நெருங்க முடியும் என்றும் இந்துக்கள் நம்பினார்கள். இம்மாபெரும் சக்தியை 'பிரம்மா' என்று அழைத்தார்கள்.

அடுத்த கட்டமாக, இடைத்தரகர்களற்ற வழிபாடும் பலியிடலும் அர்த்தமற்றவை என்றும், உண்மையில் சூரியன், நெருப்பு, காற்று போன்ற இயற்கைச் சக்திகளே தங்களைக் கடவுளுடன் தொடர்புபடுத்தும் சக்தி படைத்தவை என்றும் எண்ணி, அவற்றை வழிபடலாயினர்.

மூன்றாவது கட்டமாக, எல்லாவற்றையும் விட்டு தமது ஆன்மாவை இறைவனுக் காகப்பலியிடுவதே அவனை நெருங்குவதற்கான வழி எனக் கருதினர்.

இறுதியாக, "இறைவனுக்கும் தமக்கு மிடையில் நெருக்கத்தை ஏற்படுத்தல்" என்ற நோக்கம் மறைந்து, உலகெங்கும் வியாபித்துள்ள அந்த மாபெரும் சக்தி தாங்களே என எண்ணமிடத் தொடங்கினர். பிரபஞ்சத்திலுள்ள அனைத்துக்கும் ஊற்றுக் கண்ணாகிய பிரம்மா, தாமே என்ற நம்பிக்கையால் சிந்திப்பவனையும் சிந்திக்கப்படும் பொருளையும் ஒன்றாகக் கொண்டனர். இந்த அத்வைதக் கருத்தை வலியுறுத்தும் பொருட்டு இந்தியப் பேராசிரியர் ஒருவர் பின்வருமாறு கூறுகின்றார்: "கடவுளிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று பண்புகளும் மனிதனுக்குள் மறைந்துள்ளன. அவன் சிந்தனைகளையும் கோட்பாடுகளையும் படைக்கிறான். அவற்றைப் பாதுகாக்கிறான். வேறோர் அமைப்புக்குக் கொண்டு வருவதற்காக அவற்றை அழிக்கவும் செய்கிறான்"

இந்த அத்வைத சிந்தனையே பிற்காலத்தில் இஸ்லாத்தை விட்டும் நெறிபிறழ்ந்த சில பிரிவுகளால் வித்தியாசமான வடிவங்களில் உள்வாங்கப்பட்டுள்ளன.

மனித வாழ்வின் இறுதி இலக்கு முக்தியே என்று வலியுறுத்தும் இந்து மதம், அம்முக்தியை அடைவதற்கும் பல வழிகளைக் கூறுகின்றது. முதலில் சராசரி மனித வாழ்வை 100 ஆண்டுகளாகக் கொண்டு, 25 வருடங்கள் கொண்ட நான்கு கட்டங்களாக அது பிரித்து நோக்குகின்றது.

ஒரு மனிதனின் முதல் 25 ஆண்டுகளை உடல், உள, ஆன்மீக வளர்ச்சிக்குரிய காலமாகவும் அடுத்த 25 ஆண்டுகளை இல்லற வாழ்க்கைக்காலமாகவும் கூறுபோடுகின்றது. இவற்றில், இரண்டாவது கட்டத்தில் ஒருவன் திருமணம் முடித்து, தாம்பத்தியத்தில் ஈடுபட்டு, இல்வாழ்வானின் கடமைகளைச் செய்து வாழ வேண்டும். மூன்றாவது கட்டத்தில் அவனும் அவனது மனைவியும் தாம்பத்திய உறவை விடுத்து, எவ்வித சுயநல நோக்குமின்றி சமூகப்பணியில் ஈடுபட வேண்டும். நான்காவது கட்டமாகிய துறவறத்தில் அனைத்து உலக பந்தங்களிலிருந்தும் விடுபட்டு ஆன்மீகப் பக்குவத்தை அடைவதற்கு, ஓர் இந்து மிகவும் பிரயத்தனம் எடுத்துக்கொள்ள வேண்டுமென இந்து மதம் எதிர்பார்க்கிறது. அதிகமாக விரதமிருந்து, இரவில் விழித்து, பலவித துன்பங்களையும் தன் ஆன்மாவின் மீது சுமத்திக் கொண்டு, கவலையோடு வாழ்வதோடு மரணத்தை விரும்பாதவனாகவும் அவன் இருக்க வேண்டும். ஏனெனில், மறுபிறப்புக்குக் காரணமான மரணம் அவனது முக்திக்குத் தடையாக அமைந்து விடும்.

மேற்கூறிய ஆன்மீகப் பக்குவத்தோடு முக்தியடைவதற்கு ஆறு முக்கிய வழிமுறைகளை இந்து மதம் போதிக்கிறது.

* நையாயிகம் * வைசேடிகம்
* சாங்கியம் * யோகம்
* மீமாஞ்சை * வேதாந்தம்

5. வருணப் பாகுபாடு:-

இந்து மத சமூக மரபில் முக்கியதொரு அம்சமாக விளங்கும் இவ்வருணப்பாகுபாடு ஆரியர்கள் ஏற்படுத்திய வழிமுறையே என்பதை வரலாற்றாய்வாளர்கள் உறுதி செய்கின்றனர். தங்கள் மேன்மையைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கோடு ஆரியர்கள் உருவாக்கிய இப்பாகுபாடு இந்துச் சமூக மரபில் ஆழப்பதிந்த ஓர் அம்சமாக மாறியுள்ளது.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தபோது குடும்பங்களாகவும் குழுக்களாகவும் வந்தார்களாகையால், ஆரம்பத்திலேயே அவர்கள் சுதேசிகளுடன் திருமண உறவை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அதற்கு மாறாக, தங்களை எதிர்த்து நின்ற சுதேசிகளைக் காடுகளுக்கும் மலைகளுக்கும் துரத்தி விட்டு, தங்களுக்குக் கீழ்ப்படிந்தவர்களைத் தங்களோடு சேர்த்துக் கொண்டனர். ஆரிய இலக்கியங்களில் இவர்கள் 'அடிமைகள் சமூகம்' என அழைக்கப்படுகின்றனர்.

முன்னர் செமித்தியரின் உடற்கூறுகளைப் பெற்றிருந்த சுதேசிகள், தொடர்ந்து வந்த காலங்களில் ஆரியரின் மொழி, பண்பாடு, மதம் போன்றவற்றைப் பின்பற்றத் தொடங்கினர். ஆரியர்கள் தங்கள் இனத்தை ஏனைய இனங்களோடு கலந்து விடாமல் பாதுகாத்து வந்தாலும், காலப்போக்கில் அது சிரமமானதாக மாறியது. இதனடியாக இந்தியாவின் வடமேற்கில் அவர்களோடு செறிந்து வாழ்ந்த சுதேசிகளில் அவர்களது உடற்கூறுகளும் முகவெட்டுக்களும் மெல்ல மெல்ல விழத் தொடங்கின. செமித்தியர்கள் தென்னிந்தியாவிலேயே அதிகம் வாழ்ந்ததால் தென்னிந்திய சுதேசிகளிடமே அனேகமாக அவர்களின் உடற்கூறுகள் இடம்பெற்றிருந்தன. இக்கலப்புக்களின் விளைவாகவும் வித்தியாசமான காலநிலைகளின் விளைவாகவும் வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் எழுந்த உடற்கூறு முரண்பாடுகளை இன்றும் காண முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதம் இனங்களின் கலப்பு தவிர்க்க முடியாது போனாலும் ஏனைய இனங்களுடன் முழுமையாக ஐக்கியமாக ஆரியர்கள் விரும்பாததால், ஏற்கனவே அவர்களுக்கு மத்தியில் சிறிய அளவில் நிலவி வந்த வர்ணப்பாகுபாட்டு உணர்வு, வலுப்பெற்று வளரத் தொடங்கியது. இதன் விளைவாக, ஆரியர்களிலிருந்து வேள்வி செய்தல், வேத மோதுதல், அதனைக்கற்பித்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய பிராமணரும்; அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான சத்திரியரும் தோன்ற, வணிகர்களும் விவசாயிகளுமான வைசியர் செமித்தியர்களிலிருந்து தோன்றினர். இவ்வினங்களோடு கலந்து வாழ்ந்த சுதேசிகளிலிருந்து முன்னைய மூன்று வர்ணத்தவருக்கும் பணிவிடை செய்வதைத் தொழிலாகக் கொண்ட சூத்திரர் தோன்றினர். ஏற்கனவே மலைகளிலும் காடுகளிலும் தஞ்சமடைந்திருந்த சுதேசிகள் சமூகத்தை விட்டுத் தொடர்ந்தும் ஒதுக்கப்பட்டவர்களாகவும் வருணப்பாகுபாட்டுக்குள் அடக்கப்படாதவர்களாகவும் வாழ்ந்தனர். 'தீண்டத்தகாதோர்' என ஒதுக்கப்பட்ட இவர்களே தற்காலத்தில் 'ஹரிஜனர்கள்' எனப்படுகின்றனர். இந்துச் சமூகத்தில் இவர்கள் அனுபவித்த; அனுபவித்து வருகின்ற கொடுமைகளை யாவரும் அறிவர்.

ஆரியர்களிடம் இயல்பாக அமைந்த ஆதிக்க உணர்வால் தோற்றுவிக்கப்பட்ட இவ்வருணப்பாகுபாட்டுக்கு தெய்விக அந்தஸ்துக் கொடுக்கும் நோக்குடன், கி.மு.3ஆம் நூற்றாண்டளவில் மனுநீதி நூலில் முதன் முதலாக இது பற்றிய வாசகங்கள் இடம்பெறத் தொடங்கின. பிரம்மாவின் படைப்புகள் பற்றிக்கூறும் மனுநூல் ஓரிடத்தில், "பிரம்மா தன் வாயிலிருந்து பிராமணர்களையும், முழங்கையிலிருந்து சத்திரியர்களையும், தொடையிலிருந்து வைசியர்களையும், பாதத்திலிருந்து சூத்திரர்களையும் படைத்தார். இவ்வடிப்படையிலேயே ஒவ்வொரு வர்க்கத்தினது அந்தஸ்தும் அமையும்" என்று கூறுவதாக வரலாற்றாய்வாளர் 'அஹ்மத் ஷலபி' தனது "அத்யானுல்-ஹிந்த்-அல்-குப்றா" என்ற நூலின் நான்காம் பாகத்தில் குறிப்பிடுகின்றார்.

இவ்வருணப்பாகுபாட்டு முறையில், பிராமண வர்க்கம் மாத்திரமே தனது தனித்துவத்தை நீண்ட காலம் பாதுகாத்து வந்திருக்கிறது. எஞ்சிய மூன்று வர்க்கங்களிலிருந்தும் ஏராளமான பிரிவுகள் பிற்காலத்தில் தோற்றம் பெற்றுள்ளன. தற்போது நூற்றுக்கணக்கான வர்க்கங்கள் இந்துக்களிடையே காணப்படுகின்றன.

## 6. வழிபாட்டு முறையும் கிரியைகளும்:-

இந்து மதத்தின் ஆரம்பமாகிய வேதகாலச்சமயம் வேள்வியை முதன்மை வழிபாடாகக் கொண்டிருந்தாலும், பிற்கால இந்து மதத்தில் பூஜை வழிபாடே முதன்மையம்சமாகத் திகழ்கின்றது. இந்து மதத்தில் இறைவன் பொதுவாகச் சிலை வடிவிலேயே பூஜிக்கப்படுகிறான். இச்சிலை சில சிறப்பமான அபிஷேக முறைகளால் பிரதியட்சை செய்யப்படுகிறது. இதன் மூலம் இறைவன் அச்சிலையில் இடங்கொள்வான் என்பது நம்பிக்கை. பெரும்பாலும் அடியார்கள் வரம்வேண்டியே கடவுளை வணங்கினாலும், உண்மையில் பூஜை என்பது வரம் வேண்டுவதாக அல்லாமல், கடவுளை வணங்குவதற்கும் வரவேற்பதற்குமுள்ள செயலெனவே இந்து மதத்தில் கொள்ளப்படுகிறது. இப்பூஜை வழிபாட்டில் கடவுள் என்பவன் ஒரு பெரும் மனிதரைப்போலவே நடத்தப்படுகிறான். இந்துக்கள், பெரியவர் ஒருவரை உபசரிப்பது போல, கடவுளுக்கும் பாதம் கழுவி, மலரும் வெற்றிலையும் வழங்குவர். விடியற்காலையில் மணி அடித்தும் சங்கூதியும் இறைவன் துயிலெழுப்பப்படுகிறான். பின்னர் சிலை வடிவான அவனுக்கு நீராட்டி, ஈரந்துவட்டி, உடையணிவித்து, மலர் தூவி, மாலையணிவித்து, நறும்புகையூட்டி, விளக்கேற்றிச் சிறப்புச் செய்யப்படுகிறது; அமுதும் பழமும் உணவாக வைக்கப்படுகின்றன. அவற்றில் "நுண்ணுணவை அவனருந்தி, பருவுணவை அடியார்கள் உண்ணவோ, வறியவர்களுக்கு வழங்கவோ விட்டுவிடுவான்" என்பது ஐதீகம். திருவிழாக்காலங்களில் அடியார்கள் தேரிழுக்க, பல சிறு தெய்வங்கள் தத்தம் தேரில் பின்னால் வர, இசைக்கலைஞர்கள் இசையமைக்க, சாமரையும் வெண்குடையும் ஆலவட்டமும் தாங்குவோர் புடை சூழ, எழில் மிகு தேரில் ஊர்வலம் கொண்டு வரப்படுகிறான். பல கோயில்கள் இரவு வேளைகளில் கடவுட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலையானது தன் மனைவியுடன் அல்லது மனைவியருடன் துயில்வதற்காகப் படுக்கை யறைக்கு எடுத்துச் செல்லப்படுவதாக கலாநிதி: ஏ.எல். பஸாம் தனது 'வியத்தகு இந்தியா' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

தினசரிப்பூஜைகள் வீடுகளிலும் நடைபெற முடியுமாதலால், ஒவ்வொரு வீட்டிலும் விக்கிரகம் அல்லது உருவப்படம் வைக்கப் பட்டிருக்கும்.

கோயிலில் அல்லது வெட்டவெளியில் நடைபெறுகின்ற திருவிழாக்கள் சில மணி நேரத்தில் முடிவடைவதுமுண்டு; பல நாட்கள் தொடர்வதுமுண்டு. சில திரு விழாக்கள் ஆறு, மழை, பயிர்களோடு சம்பந்தப்படுத்தியும் கொண்டாடப்படுகின்றன.

'வேள்வி' வழிபாட்டைப் பொறுத்த வரையில், வேதகால விலங்குப்பலி முறை படிப்படியாக மறைவுற்றதெனினும், ஆரியர்க ளல்லாத பழங்குடிகளிடமிருந்து பெறப்பட்ட தெனக் கருதப்படும் புதியதொரு குருதிப்பலி முறை இடைக்காலத்தில் பரவலாகத் தோன்றி யுள்ளது. எருது, வெள்ளாடு, செம்மறியாடு, சேவல் முதலியனவே பெரும்பாலும் பலியாக வழங்கப்பட்டன. அத்தோடு பெண்களும் சிறுவர்களும் சட்டவிரோதமாகக் கடத்திச் செல்லப்பட்டு நரபலியாக வழங்கப்பட்டுள்ளனர். இந்நரபலி முறையினை இந்துக்கள் அனைவருமே அங்கீகரித்துள்ளனர் என்று கூற முடியாது.

### 7. ஒழுக்கவியற் கோட்பாடு:-

இந்து மத ஒழுக்க நூல்கள் அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பயன்களையுமே பெரும்பாலும் அடிப்படையாகக்கொண்டுள்ளன. அத்தோடு, ஒவ்வொரு வகுப்பினரும் வயதினரும் வெவ்வேறு கடமைகளையும் ஒழுக்க நியமங்களை யும் உடையவர் என்பதை வலியுறுத்துகின்றன.

ஒரு துறவி உலக பந்தங்களிலிருந்து மனதைத் துண்டித்து வாழ வேண்டிய வனாகவும், இல்வாழ்வான் தனது மதம், தொழில், இம்மையின்பம் என்பவற்றைச் சிறந்த முறையில் இணைத்து வாழும் கடமைப்பாடு கொண்டவனாகவும் உணர்த்தப்படுகின்றனர்.

"மன்னனொருவன் பொய்மை, வஞ்சனை, பிறர்மனைவிழைதல், (இறைச்சி மட்டுமன்றி இழிகுலத்தார் தீண்டியவை உட்பட) உண்ணத்தகாதன உண்ணல், இழுக்காறு, இழிகுலத் தொடர்பு ஆகியவற்றைத் தவிர்த்து; கடவுளர்களை வணங்கி; விருந்தினரை ஓம்பி; ஆசான் முன் பணிந்து; நோன்பு நோற்று; தீர்த்தமாடி; வறியார், அனாதைகள், விதவைகள், தன் புற்றோர், சுற்றத்தார், பணியாட்கள் ஆகியோருக்கு நல்லுண வூட்டி; தன்னை வந்தடைந் தோரைக் காத்தல் வேண்டும்"

என"மானசோல்லாசம்" என்ற நூலில் குறிப்பிடப்படுவதாகவும், இது இந்து மத ஒழுக்கக்கோட்பாட்டைச் சுருக்கமாக விளக்கும் வகையில் அமைந்திருப் பதாகவும் கலாநிதி ஏ.எல்.பஸாம் குறிப்பிடுகின்றார்.

அருளுடைமை, பொறையுடைமை போன்ற அறப்பண்புகள் இந்து மதத்தில் முதன்மை பெற்றிருப்பினும், பொதுவாக இம்மதம் சமத்துவ நோக்குடையதாய் அமையவில்லை. பல்வேறு கடமைகளை ஆற்றும் வகுப்புக்களாகப் பிரிந்திருந்த சமூகத்தின் தேவைகளுக்கேற்பவே அதன் பொது நோக்கும் அமைந்துள்ளது. ஒருவனது ஒழுக்க நியமங்கள் அவனது சமூக நிலைக்கேற்ப வேறுபடுகின்றன. உதாரணமாக,பிராமணனின் ஒழுக்கமான வேதமோதல் சூத்திரனுக்கு ஒவ்வாது; அவ்வாறே மதுவருந்தலாகிய சூத்திரனின் ஒழுக்கம் பிராமணனுக்குக் கூடாது.

"அந்தணர்களுக்கு அழகு அறிவுடைமை; அரசர்களுக்கு அழகு ஆண்மை; வணிகர்களுக்கு அழகு தாளாண்மை; சூத்திரர்களுக்கு அழகு தொண்டு. ஒருவன் எவ்வருணத்தவனாயினும் தன் கடமையிலிருந்து வழுவாது கடவுட் பற்றுடன் தன்னலங்கருதாது பணியாற் றினால், அவன் மோட்சம் அடைவான்" என்பதே இந்து மதத்தின் புனித நூல்களில் ஒன்றான பகவத் கீதையின் சாரம் எனவும் கலாநிதி: ஏ.எல். பஸாம் கூறுகிறார்.

சில பரந்த தத்துவங்கள் அனைவருக்கும் பொதுவாக அமைந்தாலும், விரிவான ஒழுக்க விதிகள் அனைவரையும் கட்டுப்படுத்தா என்பது இந்து மத ஒழுக்கவியலில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முற்றுப்புள்ளிக்கு முன்னால்....

மத உணர்வு என்பது மனித உள்ளத்தில் இயல்பாகவே ஏற்படுத்தப் பட்டுள்ளதோர் எழுச்சி. நெறிப்படுத்தப்படாத பல மத உணர்வுகளின் கூட்டுக்கலவையால் உலகில் ஜனித்த மதங்களுள் இந்து மதமும் ஒன்று. மனித அறிவே இம்மதத்தைக் கட்டியெழுப்பிய தென்பதால், குறைபாடுகள் தவிர்க்க முடியாதவை. கௌதம புத்தர் பௌத்த மதத்தையும் மகாவீரர் சமண சமயத்தையும் தோற்றுவித்தமைக்கு, இந்து மதத்திலுள்ள குறைபாடுகளால் ஏற்பட்ட அதிருப்தியும் ஒரு முக்கிய காரணமாகும். இவ்விரு சமயங்களும் தோன்றிய கால கட்டத்தில் இந்து மதம் சற்றுப் பலவீனமுற்ற போதும் தளர்ந்து விடவில்லை. விரைவிலேயே புத்தெழுச்சி பெற்றது. பௌத்த, சமண சமயங்களோடு போராடி மீண்டும் வெற்றி கண்டது. எனினும், ஆரம்பத்தில் கடுமையும் முரட்டுத்தனமும் கொண்டோராகச் சித்திரிக்கப்பட்ட இந்து மதக் கடவுளர்கள் இவ்விரு சமயங்களின் பாதிப்புக்களாலும் ஓரளவு மென்மை பெற்றார்கள். கற்கால மனிதனின் வன்ம உணர்வுகளுக்கு வடிவம் கொடுப்பதாக சிலைகளின் கரங்களில் செருகப் பட்டிருந்த போராயுதங்களுக்கு தர்மமென்றும் நீதியென்றும் பல்வேறு சமாதானங்கள் சொல்லப்பட்டன.

தன் வரலாற்றுப் பாதையில் பல திருப்பங்களைச் சந்தித்த இம்மதத்தின் சில மரபுகள் நவீன சிந்தனை மரபோடு முற்றாக முரண்படுகின்றன. குறிப்பாக வருணப் பாடுபாடு, உடன்கட்டை ஏறுதல், அறியாவயதில் குழந்தைகளுக்குச் செய்து வைக்கப்படும் பாலியல் திருமணம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். நவீன சிந்தனை மரபின் தாக்குதலிலிருந்து தன்னைக் காத்துக் கொண்டு உயிர் வாழ்வதற்காக, இந்து மதம் இம்மரபுகளைப் படிப்படியாக ஓரங்கட்டி வருவதையும் அவதானிக்க முடிகிறது. இவ்விதம் தொடர்ந்தும் தேவைக்கேற்பத் தன் ஆடைகளை மாற்றிக் கொண்டு செல்லுமானால், எதிர் காலத்திலும் அது வாழலாம். போகும் வேகத்தைப் பார்க்கும் போது ஆடை மாற்றும் அவசரத்தில் தன்னையே மாற்றிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**உஷாத்துணை நூல்கள்:-**

1. அத்யானுல் - ஹிந்த் - அல் - குப்றா (4ஆம் பாகம்) - அஹ்மத் ஷலபி
2. வியத்தகு இந்தியா- ஏ.எல். பஸாம் B.A,Ph.D,F.R.A.S.
3. அத்-தியானாத் வல் - அகாயித் பீ முஃதலிபில் உஸூர் (1ம்பாகம்)

   அஹ்மத் அப்துல் - கபூர் அத்தார்.
4. HINDUISM - K.M.SEN
5. OH! YOU!! HINDU AWAKE!!! DR. CHATTERJEE. M.A,Ph.D.

* * *

**REKNOWNED SPOT**

*For All Your Needy*

*Islamic Literatures*

* HOLY QURAN
* BIOGRAPHICAL SKETCHES OF SAHABAS ETC.
* CEYLON & INDIAN ISLAMIC WEEKLIES & MONTHLIES
* THAFSEER IN ENGLISH, TAMIL & SINHALA

**WELL REKNOWNED BOOK DEPOT**

FOR

BEAUTIFULLY LETTERED

PAKISTAN & INDIAN EDITIONS OF THE HOLY QURAN IN GALORE.

# HATHEE BOOK DEPOT

**52/7, 2nd CROSS STREET,**

**COLOMBO - 11**

Cable: "HATHEE BOOK" Telephone: 697768

FAX 692432 332672

# LANKA PEN CO

*Stationary, Ball Point Pens, All types of refills,*

*Gift items, School needs etc.*

*Lanka Pen Co.*

***

**LANKA PEN CO.,**

**44, SECOND CROSS STREET,**

**COLOMBO - 11**

**TEL: 24921**

*Also*

*We undertake*

*Printing Names*

*Logo etc.*

*on Pens,*

*Minimum Order*

*50 Please*

**YOU NEED A PEN TO WIN**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# විශ්වයේ මැවුම්කරු

ෆලූල් මොහොමඩ් ඉර්ෆාන් (5 වන වසර)

විසි එක්වන සියවසට පා තබන්නට සූදානමින් සිටින වත්මන් මානවයා විද්‍යා තාක්ෂණ ක්ෂේත්‍රයේ ලබා ඇති අභිවෘද්ධිය හිමාලයේ මුදුනටම ගොස් තිබේ. නවීන විද්‍යා ක්ෂේත්‍රය භෞතික වාදය පදනම් කරගෙන බිහි වූ එකකි. එහි ධර්මයට හෝ අදෘශ්‍යමාන වූ දේවල් පිළිබඳ විශ්වාසයට කිසිදු වැදගත්කමක් හෝ ස්ථානයක් නොමැත. එමනිසා අපි මෙම චින්තනය අනුගමනය කරන්නන් ද්‍රව්‍යවාදීන් නොහොත් අදේවවාදීන් යනුවෙන් හඳුන්වමු.

ඔවුහු දෙවි කෙනෙක් සිටින බව විශ්වාස නො කරන අතර මොලොවත් අනන්තයක් නොමැති විශ්වයත් කෙනෙකුගේ මැවීමකින් තොරව ඉබේම පහළ වූ බව තරයේ විශ්වාස කරති. තවද ඔවුහු, මිනිසා මවනු ලැබූ ජීවියෙකු නොවේ. ඔහු වඳුරාගෙන් පැවතෙන්නෙකි. යන පරිනාමවාදී චින්තනය අනුගමනය කරති. නමුත් මෙවන් අදහස් උදහස් ඇති භෞතික වාදීන්ගේ වාදවල කිසිම පදනමක් හෝ සත්‍යයක් නොමැති බව අපි තරයේ මතක තබා ගත යුතුය.

මෙම ලිපිය තුළින් විශ්වයේ මැවුම්කරු යන මාතෘකාව ප්‍රධාන උප මාතෘකා තුනක් යටතේ විග්‍රහ කරනු ලැබේ. එනම්

(01) යුරෝපයේ බිහි වූ අදේවවාදී චින්තනයේ පසුබිම කුමක්ද?

(02) අදේවවාදි චින්තනය පිළිගත හැකිද?

(03) අදේවවාදී චින්තනය කිසිදු පදනමක් නැති සංකල්පයක් බව නවීන විද්‍යාව ඔප්පු කරන්නේ කෙසේද?

## (01) යුරෝපයේ බිහි වූ අදේවවාදී චින්තනයේ පසුබිම

අදේවවාදී චින්තනය 19 වන සියවසරේ හා ඊට පෙර යුරෝපයේ ලැව් ගින්නක් සේ ව්‍යාප්ත වී ගියේය. අදේවවාදී විෂකුරු අදහස් මතුවීමට මූලික හේතුව වූයේ යුරෝපයේ දක්නට ලැබුණු ක්‍රිස්තියානි මිෂනාරී සභාව ක්‍රියාත්මක කළ ක්‍රියා පටිපාටියයි. එනම් ක්‍රිස්තියානි මිෂනාරී සභාව එම වකවානුවේ යුරෝපයේ අසත්‍යය තහවුරු කරමින් සත්‍යය සමග සටන් කරමින් සිටියේය. තවද අඥානය ස්ථාපිත කළ අතර විද්‍යාත්මක සත්‍යයන් ද ප්‍රතික්ෂේප කළේය. රදල පන්තියට විශේෂ වරප්‍රසාද ලබා දී ඔවුන්ට කුඩම්මාගේ සැළකිලි ද ලබා දෙන ලදී. නීතිය හා සමානාත්මතාවය හමස් පෙට්ටියේ දැමූහ. මෙම කිතුනු මිෂනාරි සභාව නියෝජනය කළ උදවිය මහජනතාව සුඛිත මුදිත කර රාජාණ්ඩු ක්‍රමය ස්ථාපිත කළ අතර විද්‍යාත්මක සත්‍යයන් හා චින්තනයන් ප්‍රතික්ෂේප කොට මිථ්‍යා විශ්වාසයන් තුළ එල්බ ගෙන සිටියහ.

තවද මෙම මිෂනාරී සභාව දහස් ගණන් උගතුන්ගේ හා චින්තකයින්ගේ ශරීර ඇණ වලින් සිදුරු කරන්නට සලස්වා ඔවුන් සමූල ඝාතනය කර දැමූහ. මෙයට කදිම නිදසුනක් හැටියට පෘථිවිය ගෝලාකාර බව පැවසූ නිසා නක්ෂත්‍ර විද්‍යාඥයෙක් වන ගැලිලියෝ ගැලිලි ගින්නේ දමා පුළුස්සා දමනු ලැබූ සිද්ධිය සඳහන් කිරීමට හැකිය.

මේ සියල්ල මෙම ක්‍රිසතියානි මිෂනාරි සභාව ධර්මයේ නාමයෙන් හා ජේසු තුමාගේ නාමයෙන් සිදු කළ අතර මෙය දුටු නිදහස් චින්තකයින් මෙම මිෂනාරි සභාවේ හා එය නියෝජනය කළ උදවියගේ දෙවියන් වහන්සේ ප්‍රතික්ෂේප කළහ. එම කාල පරිච්ඡේදය තුළ යුරෝපයේ ද්‍රව්‍යවාදය හා මිනිසාගේ පංචේන්ද්‍රින්ට හසු වන දේවල් පදනම් කර ගෙන විවිධ දර්ශන හා සංකල්ප බිහි විය. ස්වර්ගය, නිරය, අවසන් දිනය, දේව දූතයින්, දේව පණිවිඩ හා දේව සංකල්පය යන අදෘශ්‍යමාන වූ දේවල් පිළිබඳ විශ්වාසය සහමුලින්ම ප්‍රතික්ෂේප කරන ලදි.

මාක්ස්වාදය අදේවවාදයේ මුදුනටම සම්ප්‍රාප්ත විය. "ආගම මිනිසාගේ අබින් වේ" යැයි කාල් මාර්ක්ස් පැවසූ අතර දෙවියන් වහන්සේ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මිනිසා නොමැවූ අතර මිනිසා විසින්ම දෙවියන් මවා ගන්නා ලදී" යැයි තව දුරටත් සඳහන් කළහ.

## (02) අදේවවාදී චින්තනය පිළිගත හැකිද?

"එඩ්වර්ඩ් හාර්මන්" නමැති දාර්ශනිකයා තමාගේ "අල් මද්හබ් අද්දාවිනී" නමැති ග්‍රන්ථයේ චාල්ස් ඩාවින්ගේ වාදය පිළිබඳව මෙසේ සඳහන් කරයි". විශ්වය කිසිම අරමුණක් ඉලක්කයක් මුල් කර නො ගෙන ඉබේම බිහි විය යන ඩාවින් වාදීන්ගේ මතය කිසිම සත්‍යයක් හෝ පදනමක් නොමැති එකකි. තවද එම මතය විද්‍යාත්මක හා ඥානාන්විත වශයෙන් කිසිම පදනමක් හෝ යථාර්ථයක් නොමැති මනඃකල්පිතයන්ය".

එම නිසා මිනිසා මවනු ලැබූ ජීවියෙකු නොවේ. හේ වඳුරා ගෙන් පැවතෙන්නෙකි. ජීවින්ගේ ආරම්භය "ඇමීබා " නමැති ක්ෂුද්‍ර ජීවියාගෙන් සිදු වූ බව හා මෙලොව කිසි කෙනෙකුගේ මැවීමකින් තොරව ඉබේම බිහි විය යන ඩාවින්ගේ වාදය සාවද්‍ය බව අපට මින් සක් සුදක් සේ පැහැදිලි වේ. විශ්වයට මැවුම්කරුවෙක් සිටින බව අපට අවිවාදයෙන් සඳහන් කිරීමට හැකිය. එය ඉර හඳ මෙන් ප්‍රත්‍යක්ෂ වූ දෙයකි. අල්ලාහ් දෙවියන් වහනසේ අල් - කුර්ආනයේ තමා පිළිබඳව පවසන විට "අහස් ගැබ් හා පොළොව මැවූ අල්ලාහ් දෙවියන් වහන්සේ පිළිබඳව ඔබලාට චකිතයක් විචිකිච්චාවක් තිබේද? " යනුවෙන් සඳහන් කරයි.

"අහස හා එයට ඉහලින් ඇති (සෞරග්‍රහ මණ්ඩල, චක්‍රාවාට) දේවල් වෙත ඔවුහු තමන්ගේ බැල්ම යොමු කරන්නේ නැද්ද?"

"පොළොවේ හා අහස් ගැබ්වල (අල්ලාහ් තආලා පෙන්වන ) සාධක කෙතරම් තිබේද ඒවා ඔවුහු (මිනිස්සු) දකිති. නමුත් ඔවුහු ඒවා පිළිබඳව කල්පනා නො කරති."

ඉහත සඳහන් කළ ශුද්ධ වූ අල් - කුර්ආන් වැකි වලින් අපට ප්‍රත්‍යක්ෂ වනුයේ අල්ලාහ් තආලා සහ ඔහුගේ බලමහිමය හඳුනා ගත හැක්කේ ඔහුගේ සැලසුම් ගත කරනු ලැබූ මැවිම් පිළිබඳව නිසියාකාරව අධ්‍යයනය කිරිම තුළින් බවයි. ඒ මොකද විශ්වයේ දක්නට ලැබෙන පරමාණුවේ පටන් ග්‍රහ වස්තූන් ඇතුළු සියලුම මැවිම් මෙම විශ්වයට මැවුම් කරුවෙකු සිටින බව පැහැදිලි ව සාක්ෂි දරන බැවිනි.

උත්තම නබි (සල්) තුමාණෝ මෙසේ සඳහන් කළ සේක "ඔබලා අල්ලාහ් ගැන කල්පනා නො කරන්න. නමුත් අල්ලාහ් මැවිම් පිළිබඳව සිතන්න. එවිට අල්ලාහ් හඳුනා ගත හැකිය. ඇත්ත වශයෙන්ම ඔබලාට අල්ලාහ්ගේ බලමහිමය ඥානය තක්සේරු කළ නොහැකිය."

මිනිසාගේ ඥානය සීමා සහිත වූ එකකි. එමගින් මිනිසාට සිතිය හැකි වනුයේ එක්තරා සීමාවක් දක්වා වූ දේවල් පිළිබඳව පමණකි. ග්‍රහ මණ්ඩල, හා විශ්වය පිළිබඳ ව මිනිසා දැනට ලබා ගෙන ඇති දැනුම අබමල් රේණුවක් තරම්ය. එම නිසා මේතරම් සූක්ෂම අයුරින් සැලසුම් ගත කරනු ලැබූ මැවිම් පිළිබඳව අසම්පූර්ණ දැනුමක් ඇති මිනිසාට විශ්වය නිර්මාණය කර පෝෂණය හා පරිපාලනය කරන්නා වූ සූක්ෂම තීක්ෂණ විචක්ෂණ ප්‍රඥාවෙන් යුක්ත සර්ව බලධාරි විශ්ව නිර්මාපකයා හඳුනා ගැනීම එතරම් ලෙහෙසි පහසු දෙයක් නොවේ. අල්ලාහ් තආලාගේ මැවිම් පිළිබඳවත් ඒවායේ ගැබ් වි තිබෙන ආශ්චර්යන් ප්‍රයෝජනයන් හා සූක්ෂමභාවය පිළිබඳවත් කල්පනා කිරීම තුළින් ඒවා මැවූ සර්ව බලධාරියා හා ඔහුගේ බලමහිමය, ශ්‍රේෂ්ඨත්වය තර්කානුකූලව හඳුනාගත හැකිය.

අල්ලාහ් ශුද්ධ වූ කුර්ආනයේ "අල්ලාහ්ගේ ගැත්තන් අතරින් ඔහුට අධික වශයෙන් බිය වනුයේ බුද්ධිමතුන්ය" යනුවෙන් සඳහන් කරයි. මෙහිදී කුර්ආනය භාවිතා කරන "අල් උලමාහු" යන පදයට "විද්‍යාඥයෝ" යන අදහස අල්-කුර්ආන් විවරණකරුවෝ සඳහන් කරති. විද්‍යාඥයෝ අල්ලාහ්ට අධික වශයෙන් බිය වීමටත් ඔහු විශ්වාස කරන්නටත් හේතුව වනුයේ ඔවුහු අල්ලාහ් ගේ මැවීම් අධ්‍යයනය කිරීම තුළින් එහි අන්තර් ගතවී තිබෙන සූක්ෂමයන්, විශ්මයන් දැන ගන්නා අතර ඒවා ඉබේම ඇති වී තිබේ යැයි නො පිළිගෙන ඒ සියල්ලක්ම මැවූ මැවුම්කරුවෙක් සිටින බව විශ්වාස කරති. මෙම කාරණය අතීතයේ විද්‍යාඥයෙන් ඉස්ලාම් ධර්මය වැළඳ ගැනීමටත් වර්තමානයේ දී ඉස්ලාමය වැළඳ ගනිමින් සිටිමටත් හේතු කාරක වී තිබේ.

ඥානයේ සාගරය වන ඉමාම් ගස්සාලි (රහ්) තුමාණෝ "මිනිසාට ස්වභාවික මැවීම් තුළ ඉතාමත් පැහැදිලි සාධක සාක්ෂින් තිබියදිත් මිනිසා කුමක් නිසා මැවුම්කරුවා (අල්ලාහ්) විශ්වාස නො කරන්නේද? යනුවෙන් ප්‍රශ්න නගති.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

උද්ධෘත කොට දැක් වූ කරුණු මගින් අදේවවාදි මතය කිසිම හේතුවක් මත හෝ පිළිගත නොහැකි බවත් විශ්වයට මැවුම්කරුවෙක් සිටින බවත් අපට සත් සුදක් සේ පැහැදිලි වේ. අපි විමසා බලන්නට යන තුන්වන උප මාතෘකාව මගින් විශ්වයේ මැවුම් කරු යන කරුණ තව දුරටත් විද්‍යාත්මකව හා තර්කානුකූලව විමසා බලනු ලැබේ.

## (03) අදේවවාදි චින්තනය පදනම් විරහිත සංකල්පයක් බව නවීන තාක්ෂණ විද්‍යාව ඔප්පු කරන්නේ කෙසේද?

නවීන විද්‍යාව යම් කිසි දෙයක් පිළිගන්නට නම් විශ්වාස කරන්නට ඒවා විද්‍යාත්මකව හා තර්කානුකූලව ඔප්පු කිරීම අත්‍යවශ්‍ය වේ. ඉස්ලාම් ධර්මයද එහි මාර්ගෝපදේශයන් විද්‍යාත්මකව හා තර්කානුකූලව ඉදිරිපත් කරයි. ඒ නිසා විද්‍යාව හා ඉස්ලාමය අතර ඇත්තේ සෘජු සම්බන්ධතාවයකි. ඉස්ලාම් ධර්මයේ මූලික සිද්ධාන්ත මුස්ලිම්වරු හැටියට අපි කිසිම සාධකයක් නොමැතිව විශ්වාස කරමු. ඇත්ත වශයෙන් ම විශ්වයට දෙවි කෙනෙක් සිටින බව විශ්වාස කිරීමට සාක්ෂීන් අවශ්‍ය නැත. හේතුව කෙනෙක් දවල් කාලය හඳුනා ගැනීමට නො එසේ නම් විශ්වාස කිරීමට සාධකයක් අවශ්‍ය යැයි පැවසීම බුද්ධි ගෝචර නොවන බැවිනි. නමුත් නවීන විද්‍යාවේ චකිතය, කුතුහලය සංසිඳුවීම පිණිස මේ හා සම්බන්ධ විද්‍යාත්මක සාධක විග්‍රහ කරනු ලැබේ. මෙම උපමාතෘකාව තව දුරටත් අනුමාතෘකා පහකට බෙදා විස්තර කරමි.

### මිනිස් ස්වභාවය හා සම්බන්ධ සාධක

සෑම මිනිසෙකුගේම යටි හිත තුළ දෙවියන් වහන්සේ කෙනෙක් පිළිබඳ හැඟීමක් ගැබ් වී තිබේ. එම හැඟීම මතු වන්නේ මිනිසා විශාල අනතුරකට අකරතැබ්බයකට මුහුණ දී ඔහු තමාව එයින් නිදහස් කර ගැනීමට ආරක්ෂා කර ගැනීමට දරන සියලුමඋත්සාහයන් අසාර්ථක වී හෙතෙම මරණ මංචකයට ළගා වෙන විටදීය. මෙය අපට උදාහරණයක් මගින් පැහැදිලි ලෙස වටහා ගත හැකි වේ.

එනම් මිනිසෙක් මුහුදේ නැවකින් යාත්‍රා කරමින් සිටී. ඒ අවස්ථාවේ දී කුණාටු සුළි සුළං වේගයෙන් හමා යයි.දැඩි වර්ෂාව ඔහු ගමන් කරන මුහුදු මාර්ගය ඔස්සේ පතිත වේ. එය හේතුකොට ගෙන ගොදුරක් පසුපස හඹා යන රෞද්‍ර සතෙකු මෙන් බිය ජනක මුහුදු රැළි තදින් ඉහළට කැළඹී මෙම පුද්ගලයා ගමන් කරන නැව පෙරළන්නට මාන බලයි. එවිට මෙම පුද්ගලයා පිහිට පතා මොර දෙයි. ඔහුගේ මෙම කැඳවීමට පිළිතුරු දෙන්නෙකු දක්නට නොලැබේ. දැන් හේ පසුවන්නේ මරණයත් ජීවිතයත් අතර පවතින උග්‍ර සටනකය. ඒ අවස්ථාවේදි මෙම පුද්ගලයා දැඩි අදේවවාදි මතධාරියෙක් වුවත් ඔහුගේ අවසාන ප්‍රයත්නය වශයෙන් විශ්වාසයෙන් යුතුව තමාගේ දෑත් ඔසවා තමා මරණයෙන් ගලවා ගන්නා ලෙස දෙවියන් වහන්සෙගෙන් අයැද සිටී. මෙම සත්‍යය කිසි කෙනෙකුට ප්‍රතික්ෂේප කළ නොහැකිය. එය ඉර හඳ මෙන් විශ්වාස වූ කරුණක් වේ. මේ පිළිබඳව ශුද්ධ වූ අල් - කුර්ආනය මෙසේ සඳහන් කරයි. "නැවේ ගමන් කරන ඔවුන්ව කුණාටු චණ්ඩ මාරුත තදින් හැඹීම හේතු කොට ගෙන සතර දිගින්ම ඉහලට කැළඹෙන මුහුදු රැළි වට කර ගතහොත් ඔවුහු විශ්වාසයෙන් හා භක්තියෙන් යුතුව දෙවියන් (අල්ලාහ්) අයදින්නෝය"

"හෙන්රි නමැති සුප්‍රසිද්ධ දාර්ශනිකයා මෙසේ පවසයි "කලාව, ඥානය හා දර්ශනය රහිත සමාජයන් ඉතිහාසයේ දක්නට ලැබේ. නමුත් ආගමක් රහිත සමාජයක් ඉතිහාසයේ දක්නට නො ලැබේ" එම නිසා ආගම්වල ඉතිහාසය අධ්‍යයනය කරන්නෝ මිනිසා දැනුම අතින් හා සදාචාර අංශයෙන් කෙතරම් දියුණු තත්ත්වයකට පත්වූවත් ඔහුට ආගමෙන් හා විශ්වාසයෙන් ඈත් වී සිටීමට නො හැකි බව අවධාරණය කරයි.

### විශ්වය හා සම්බන්ධ සාධක

විශ්වය ඉතාමත් සූක්ෂම අයුරින් සැලසුම් කර තිබීමත් විශ්වයට නිර්මාතෘවරයෙක් සිටින බව ප්‍රකාශ කරන තවත් බලවත් සාධකයකි. දෙවි කෙනෙක් සිටින බව විද්‍යාඥයෝ කරුණු 7 ක් නිසා විශ්වාස කළ යුතු බව නිව් යෝර්ක්හි පිහිටා තිබෙන විද්‍යා ආයතනයේ හිටපු සභාපති "ක්‍රිසී මොරිසන් නැමැත්තා සඳහන් කරයි. එනම්

(1) විශ්වය : මෙය කිසිදු අවහිරතාවයකින් තොරව ක්‍රමානුකූලව සූක්ෂම හා දියුණු බුද්ධියකින් සමන්විත එක්තරා බලවේගයක් මගින් නිර්මාණය කරනු ලැබ එය නිසියාකාරව නඩත්තු කරනු ලබන බව අපට ස්ථිර කළ හැකිය.

* පෘථිවියේ භ්‍රමණය : පෘථිවිය තමාගේ අක්ෂය වටා පැයට සැතපුම් 1038 ක වේගයකින් ගමන් කරයි. එය පැයට සැතපුම් 100 ක වේගයකින් භ්‍රමණය වේ නම් අපගේ දිවා රාත්‍රිය දැනට තිබෙනවාට වඩා 10 ගුණයකින් දීර්ඝ වේ. දවල් කාලය දීර්ඝ වීම නිසා එහි අධික සූර්ය රශ්මිය හේතු කොට ගෙන ශාක වර්ග දැවී විනාශයට පත් වේ. එසේම රාත්‍රි කාලය දීර්ඝ වීම නිසා එහි අධික වූ සීතලය හේතු කොට ගෙන ජීවීන්ට ජීවත් වීමට නොහැකි තත්ත්වයක් උදුවේ.

* සූර්ය රශ්මිය : පෘතුවියේ ජීවීහු ජීවත් වීමට සුදුසු පරිසරය ඇති වීමට බලපෑ සූර්යාගේ උපරිම උෂ්ණත්වය ෆැරන් හයිට් $12^0$ දහසකි. පෘතුවිය සූර්යාගේ සිට උචිත වූත් අවශ්‍ය වූත් දුර ප්‍රමාණයෙන් පිහිටා තිබීම නිසා දැඩි සූර්ය රශ්මියට ලක් නොවී එහි උෂ්ණත්වය තුලනය වී දක්නට ලැබේ. දැනට පවතින සූර්ය රශ්මියේ මුළු ප්‍රතිශතයෙන් ප්‍රතිශත භාගයක් හෝ අඩු වූයේ නම් අපි සීතලයෙන් මිදී යන්නෙමු. එසේම සූර්ය රශ්මියේ මුළු ප්‍රතිශතයෙන් ප්‍රතිශත භාගයක් හෝ වැඩි වූයේ නම් අපි සියලු දෙනාම දැවී යන්නෙමු.

* චන්ද්‍රයාගේ පිහිටීම : අපගේ චන්ද්‍රයා පෘථිවියේ සිට දැනට පිහිටා ඇති දුරට වඩා තව සැතපුම් 50 දහසක් පමණ ඇතින් පිහිටා තිබුණේ නම් මුහුදු රළ ඉහළට කැළඹී දවසකට දෙවතාවක් සියලුම මහද්වීප ජලයෙන් යට වේ.

* මුහුදේ ගැඹුර : මුහුද තවත් අඩි කිහිපයක් ගැඹුරු වී පිහිටා තිබුණේ නම් ඔක්සිජන් හා කබන්ඩයොක්සයිඩ් යන වායු උරා ගනු ලබන අතර පෘථිවියේ ශාක වර්ග වර්ධනය වීමට නොහැකි තත්ත්වයක් උදවනු ඇත.

* වායුගෝලය : වායු ගෝලය දැනට තිබෙන ප්‍රමාණයට වඩා සියුම්ව දක්නට ලැබුනේ නම් සෑමදම වායු ගෝලයේ දැවී ගල් අගුරු කැබැලි බවට පත් වී ලක්ෂ සංඛ්‍යාත ධූම කේතූන් පෘථිවියේ සෑම ප්‍රදේශයක් සමගම ගැටී එය දැවී යන්නට සලස්වයි.

* පෘථිවියේ පිහිටීම : පෘථිවිය තමාගේ අක්ෂයේ අංශක 23 1/2 ක් ඇලව පිහිටා තිබීම නිසා පෘථිවියේ ඍතු විපර්යාස ඇති වේ. එය එසේ ඇලව පිහිටා නොතිබුණේ නම් මුහුදේ සිට මතුවන ජල වාෂ්ප උතුරු හා දකුණු දිශා කරා ගමන් කිරීම නිසා පෘථිවිය හිමෙන් වැසී යයි.

(ii) ස්වභාවික හැඟීම : වාල්මොන්'' නමැති එක්තරා මසුන් වර්ගයක් තිබේ. උන් ගංගාවල බිහි වෙති. පසුව තමන්ගේ තරුණ කාලයේ අවුරුදු කිහිපයක් මුහුදේ ගත කරයි. ඉන් අනතුරුව නැවත තමන්ගේ නිජ බිම වන ගඟට පැමිණේ. මොවුන්ව එය (ගඟ) වෙත මඟ පෙන්වූයේ කවු ද ? එම මසුන් වර්ගයා අල්ලාගෙන මුහුදට දැමුව ද උන් නැවත සූක්ෂම ලෙස තමන්ගේ පරණ මාවත සොයා ගෙන ගඟට පැමිණේ.

(iii) ජාන : ජීවීන්ගේ බිහිවීම රඳා පවතින්නේ මෙම ජාන මතයි. (නමුත් මෙය පරිනාම වාදය ඉදිරිපත් කළ ඩාවින් දැන ගෙන සිටියේ නැත.) මෙම ජාන මැව්වේත් එක්තරා බලවේගයක් බව අපට නිගමනය කළ හැකිය. මෙම ජාන අපගේ පියවි ඇසට නොපෙනේ. එතරම් දුරට ඒවා කුඩාය. ලෝකයේ වෙසෙන මිනිසුන්ගේ ජාන එක් තැනකට එක්රැස් කළ ද ඒවා මගින් එක් කුඩා පෑන් මූඩියක් පවා පුර වන්නට නොහැකි වේ.

ඇල්ට්‍රා අන්වීක්ෂයක් මගින් ජාන හා ''කොරාමෝසොම්'' දැක බලා ගත හැකි වේ. මේවා මගින් තමන්ගේ මුතුන් මිත්තන්ගේ ගති ලක්ෂණ පරම්පරාවෙන් පරම්පරාවට ගෙන යෑම සිදු වේ. මෙතරම් කුඩා ජීවාණු තුළ අධික වශයෙන් මිනිස් ගති ලක්ෂණ ගැබ් වී තිබිය හැක්කේ කෙසේ ද ?

(iv) ප්‍රජනනය : ලෝකයේ ජීවීන්ගේ ප්‍රජනන ක්‍රියාවලිය එක්තරා ආකාරයකින් සීමා වී තිබේ. මෙම ක්‍රියාවලියට මූලික හේතුව එය පාලනය කරන එක්තරා බල වේගයක් බව අපට සක් සුදක් සේ පැහැදිලි වේ.

(v) මූල ද්‍රව්‍ය : පොළෝ තලයේ ජීවීහු ජීවත් වීමටත් පොළොව බිහි කිරීමේ අරමුණ ඉටු කිරීම සඳහාත් අවශ්‍ය වූ මූල ද්‍රව්‍යයන් සැපයුවේ කවු ද ? හේ විශ්වය ඇති කළ මහා බලැති මැවුම්කරුවා. ප්‍රාණය යනු කුමක් ද ? එයට බරක් හෝ ප්‍රමාණයක් හෝ නොමැත. නමුත් එයට ශක්තිය තිබේ. මිනිසා ජීවත් වීම සඳහා ඔහුට අවශ්‍ය ජලය සුළඟ, භූමිය යනාදී අත්‍යවශ්‍ය දේ සපයා දෙන ලදී.

(vi) චින්තන බලය : මෙය සත්ත්වයින්ට නොමැති මිනිසාට ඇති විශේෂ වූත්, උසස් වූත් ගුණාංගයකි. සතුන්ට කල්පනා කිරීමට හෝ ගැණීමේ හැකියාව හෝ නොමැති අතර මිනිසා තුළ පමණක් මෙම ගුණාංග දක්නට ලැබේ. එසේ නම් මිනිසාට කල්පනා කිරීමේ හා ගැණීමේ හැකියාව ලබා දුන්නේ කවු ද ?

(vii) දේව විශ්වාසය : දේව විශ්වාසය මිනිසාගේ මානසික ශක්තිය තුළින් බිහි වූ එකකි. අපි මෙම මානසික ශක්තියට පරිකල්පනාව යැයි හඳුන්වමු. මිනිසාගේ මානසික ශක්තිය තුළින් පමණයි පිය වී ඇසට නොපෙනෙන අදෘශ්‍යමාන වූ දේවල් හා එහි සාධක හඳුනා ගන්නට හැකි වනුයේ. කෙනෙකුගේ නිරවද්‍ය පරිකල්පනාව එම පුද්ගලයාගේ ආධ්‍යාත්මික යථාර්ථය වේ. මෙය විද්‍යාත්මක වශයෙන් පමණක් නොව පරිකල්පනාව අතින් ද සත්‍ය වූ එකකි.

යට දැක් වූ කරුණු මගින් "කිරසි මාරිසන්" අන්තයක් නොමැති මෙම විශ්වය මැවූ මැවුම්කරුවෙක් සිටින බව ඔප්පු කරයි. අපගේ විශ්වය විවිධ අයුරින් සකස් වී පිහිටා තිබිය හැකිය. එහි දැනට දක්නට ලැබෙන දේවල් නො තිබෙන්නට පුළුවනි. එවගේම ඒවා ගුණාංගයක් හෝ ගුණාංග රාශියකින් සමන්විත වී තිබෙන්නට පුළුවනි. ස්ථානය ගත් කළ එය වෙනත් ස්ථානවල හෝ වෙනත් දිශාවල පිහිටා තිබිය හැකිය. එසේම වස්තූන්ගේ ප්‍රමාණයන් විවිධාකාරයෙන් සකස් වී තිබෙන්නට හැකිය. මේ අයුරින් විවිධාකාරයෙන් විශ්වය පිහිටා තිබිය හැකි වුවද එයින් උචිත වූත්, සුදුසු වූත් එක් පිහිටීමකින් සකස් වී තිබීමට එක්තරා බලවේගයක උපකාරයත්, චේතනාවත්, සැලසුම් කිරීමත් අවශ්‍ය වේ. එසේ නම් එම බලවේගය කුමක් ද ? එය විශ්වයේ සැලසුම්කරු, නිර්මාතෘකරු වේ. එම නිසා විද්‍යාඥයෝ දෙවි කෙනෙක් සිටින බවට ස්ථිරවම විශ්වාස කිරීමට මෙම විශ්වයේ සැලසුම් භාවයත්, ක්‍රමවත් භාවයත් ප්‍රධාන හේතු කාරක හැටියට අපට අවිවාදයෙන් සඳහන් කිරීමට හැකිය.

**විශ්වය සදතතික නොවීම.**

විශ්වය සදතතික නොවේ. එයට අවසානයක් හෝ ආරම්භයක් තිබීම විශ්වයට මැවුම් කරුවෙක් සිටී යන්න තව දුරටත් තහවුරු කරන සාධකයකි. අද විද්‍යාඥයෝ විශ්වයට අවසානයක් තිබෙන බවත් එය විනාශයට පත් වෙන බවත් සොයා ගෙන තිබේ. එනම් 19 වන සියවසට පසු විද්‍යාඥයින් විසින් සොයා ගන්නා ලද "දෙවන උෂ්ණත්ව සංක්‍රමණික ක්‍රියාවලිය" (The Second law of Thermo Dynamics) මෙය ඔප්පු කරයි. උෂ්ණත්වය වැඩි උෂ්ණත්වය ඇති වස්තුවේ සිට අඩු උෂ්ණත්වය ඇති වස්තුව කරා ගමන් කරන අතර මේ නිසා විශ්වයේ රසායනික හා ජීව ක්‍රියාවලි සිදු වේ. මෙම ක්‍රියාවලිය සිදු වීම අඩපණ වූ විට විශ්වයේ රසායනික හා ජීව ක්‍රියාවලි ක්‍රියාත්මක නොවන අතර ඒ නිසා විශ්වයේ ජීවීන් හා අජීවීන් විනාශයට පත් වේ."

මෙම විද්‍යාත්මක සත්‍ය තව දුරටත් තහවුරු කළ ප්‍රසිද්ධ විද්‍යාඥයෙක් වූ "සර් ජේම්ස් ජීන්ස්" තමාගේ 'The Mysterious Universe' නමැති ග්‍රන්ථයේ 133 වන පිටුවේ මෙසේ සඳහන් කරයි. "නවීන විද්‍යාව උෂ්ණත්වය වැඩි උෂ්ණත්වය ඇති වස්තුවේ සිට අඩු උෂ්ණත්වය ඇති වස්තුව කරා ගමන් කරන උෂ්ණත්ව සංක්‍රමණික ක්‍රියාවලිය පිළි ගනී. උෂ්ණත්වයේ මුළු ශක්තිය වැය වන තුරු මෙම ක්‍රියාවලිය සිදු වේ. මෙම ක්‍රියාවලිය තමාගේ අවසන් අදියරට තවම ළඟා වී නොමැත. එය එසේ වී නම් අද අප මෙලොවේ ජීවත් වී නොසිටිමු."

ඉහත සඳහන් කළ විද්‍යාත්මක නිගමන වලින් විද්‍යාමාන වනුයේ මෙම විශ්වයට අවසානයක් තිබෙන බවයි. විශ්වයට අවසානයක් තිබේ නම් අනිවාර්යෙන්ම ආරම්භයකුත් තිබිය යුතුය. එම නිසා මෙලොවේ, විශ්වයේ ආරම්භය කෙසේ සිදු වීද ? යන ප්‍රශ්නය අප තුළ මතු වේ. විශ්වය ඉබේම බිහිවිය. එහි ඇති වූ හදිසි ගැටීම්, පිපිරීම් හේතුකොට ගෙන විශ්වය එහි දක්නට ලැබෙන ග්‍රහ වස්තූන් ඉබේම බිහි විය. යනුවෙන් භෞතික වාදීහු හා ආදේවවාදීහු විශ්වයේ ආරම්භය පිළිබඳව අදහස් දක්වති. ඇත්ත වශයෙන්ම මෙම මතය සාවද්‍ය වූත් කිසිදු පදනමක් රහිත වූත් වාදයකි. තව ද මෙම අදහස විශාල බොරුවකි. විශ්වය ඉබේම බිහි වුණා ද ? යන්න පිළිබඳ විග්‍රහ කිරීමට ආ මහාචාර්ය "එඩ්වින්" තමාගේ ' The Evedence of God' නමැති ග්‍රන්ථයේ 174 වන පිටුවේ මෙසේ සඳහන් කරයි. ජීවීන්ගේ ආරම්භය ඉබේම ඇති වූ සිදුවීමක ප්‍රතිඵලයකින් ඇති වීමක් යැයි පැවසීම. එක් මුද්‍රණාලයක බලාපොරොත්තු නොවූ අන්දමින් සිදු වූ පිපිරීමක් හේතු කොට ගෙන විශාල වූ විශ්ව කෝෂයක් ඉබේම බිහි විය යැයි පැවසීමට සමාන වූ දෙයකි."

මෙම කරුණ තවදුරටත් නිදසුනක් සහිතව පැහැදිලි කරන්නේ නම් ශ්‍රී ලංකාවේ පිහිටා තිබෙන රුවන් වැලි සෑය ගෘහ නිර්මාණ ශිල්පීන්ගේ උදව් රහිතව ඉබේම නිර්මාණය විය යැයි මෙම ඉලෙක්ට්‍රොනික් යුගයේ කෙනෙකු පැවසුවහොත්



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අපි ඔහු පිළිබඳව එළඹෙන නිගමනය කුමක් ද ? හෙතෙම පරිණත බුද්ධියකින් තොර වූ මන්ද බුද්ධියකයෙක් විය යුතුය. නැතහොත් හේ සත්‍ය නොදත් බේගල්කරුවෙකි. මෙයට වඩා ඉතාමත් කුඩා වස්තුවක් වුව ද ඉබේම බිහි විය යැයි සිතීමට අපගේ බුද්ධිය කිසිසේත් ඉඩ නොදේ. එසේ නම් ඉතාමත් සූක්ෂම ලෙස සැලසුම් ගත කරනු ලැබ ක්‍රමවත් අයුරින් ක්‍රියාකරන මෙම අති මහත් විශ්වය ඉබේම කිසි කෙනෙකුගේ මැදිහත් වීමකින්, මැවීමකින් තොරව බිහි විය යන අදහස් අපට පිළිගත හැක්කේ, විශ්වාස කළ හැක්කේ කෙසේ ද ? එම නිසා විශ්වයට අවසානයක් හා ආරම්භයක් තිබීම විශ්වයට නිර්මාතෘවරයෙකු සිටින බව පෙන්වන තවත් ප්‍රබල වූ සාක්ෂියකි.

## විශ්වයේ නිර්මාතෘ පිළිබඳව නවීන විද්‍යාඥයින්ගේ අදහස්

විශ්වයට නිර්මාපකයෙක් සිටින බව ප්‍රවීන විද්‍යාඥයෝ පිළි ගනිති. ඔවුන්ගේ සමහර දෙනෙකුගේ අදහස් උදහස් කෙටියෙන් ගෙනහැර දක්වමි.

විශ්වයේ මැවුම්කරුවා පිළිබඳව සැක නොකරන්න. ඇත්ත වශයෙන්ම මෙම විශ්වයේ ක්‍රියාකාරිත්වයට හේතුව ඉබේම ඇති වූ බලයක් බව පැවසීම බුද්ධි ගෝචර නොවේ'' යනුවෙන් සර් අයිසැක් නිව්ටන් පවසයි. විශ්වය තව දුරටත් විශාල වී යෑම සදතනික වූ මැවුම්කරුවෙක් සිටින බවට බලවත් සාධක හා සාක්ෂීන් ද අධික කරයි. ඔහුගේ ශක්තියට කිසිදු සීමාවක් නොමැත. ඔහුට අවසානයක් ද නොමැත. භූගෝල විද්‍යාඥයින්, නක්ෂත්‍ර විද්‍යාඥයින් පරිසර විද්‍යාඥයින් විසින් බිහි කළ උසස් විද්‍යා දැනුම දෙවි කෙනෙකුගේ බල මහිමය හා උත්කෘෂ්ඨත්වය පිළිබිඹු කරයි.'' යනුවෙන් නක්ෂත්‍ර විද්‍යාඥයෙක් වූ හර්ෂල් සඳහන් කරයි.

## විශ්වයේ නිර්මාතෘගේ ඒකීයභාවය

විශ්වයේ නිර්මාතෘගේ ඒකියභාවය තර්කානුකූලව කරුණු දෙකක් මගින් ඔප්පු කළ හැකිය. එනම් පළමුවැන්න යම් කිසි දෙයක් අහිමි වූ පුද්ගලයෙකුට එම අහිමි වූ දෙය තවත් කෙනෙකුට දිය නොහැක'' එසේ නම් අපගේ අවධානය මදකට මිනිසා වෙත යොමු කර බලන විට හේ ඇසීම, පෙනීම, කල්පනා කිරීම, සිතීම, කථා කිරීම යනාදී ගුණාංග වලින් සමන්විත වූ මැවීමක් බව අපට හැඟී යයි. උද්ධෘත කොට දැක් වූ ගුණාංග වලින් මනා ලෙස පරිපූර්ණ වූ ද අඩුපාඩුවකින් තොර වූ ද මිනිසා සතු පංචෙන්ද්‍රියයන් තීක්ෂණ වූත් සූක්ෂම වූත් කාර්යක්ෂම වූත් ගුණාංග වලින් යුක්ත වූ නිර්මාපකයෙකුගෙන් මිනිසාට ඉහත දැක් වූ ගුණාංග හා ලක්ෂණ ලැබී තිබෙන බව අපට වටහා ගත හැකිය. ඒ මොකද එම නිර්මාපකයා එවන් ගුණාංගයන් අහිමි වූවෙකු නම් ඔහුගේ මැවීම් තුළ එවැනි ගුණාංග අන්තර්ගත වී නොතිබෙන බව අපට විදහාමන වේ. මෙම මුල් කරුණෙන් අපට පැහැදිලි කරන්නේ විශ්වයට මැවුම්කරුවෙක් සිටින බව හා ඔහු එක්කෙනෙක් බවයි.

දෙවැනි කරුණ වනුයේ විශ්වයේ බහු දේවාදය දක්නට නොලැබීම. එනම් අප නිදසුනක් වශයෙන් විශ්වයේ වැඩ කටයුතු භාරව දෙවිවරු තිදෙනෙක් සිටිතියි'' යැයි සිතමු. එයින් එක් දෙවි කෙනෙක් විශ්වය බිහි කිරීමටත්, තවත් කෙනෙක් විශ්වය පරිපාලනය කරන්නටත් තුන්වැන්නා විශ්වය විනාශ කිරීමටත් භාරව සිටිතියි. යැයි ද සිතමු. මෙහිදී එක් දෙවියෙකු සතුව පවතින බලය හා කාර්‍ය්‍ය අනෙක් දෙවිවරු සතුව නොතිබේ. ඒ එක් දෙවි කෙනෙකුට අනෙක් දෙවිවරු දෙදෙනාගේ බලය හා කාර්යයන් අහිමි වේ. බහු දේවවාදය විශ්වයේ දක්නට ලැබුණේ නම් දැන් විශ්වයේ පවතින ක්‍රමවත් භාවය නැති වී යයි. එයට හේතුව මෙම තිදෙනාගෙන් කෙනෙකු යම් අදහසකට එකඟ නොවුණේ නම් ඇත්ත වශයෙන්ම විශ්වයේ අහිතකර බලපෑම් හා විනාශයන් ඇතිවිය හැකිය. එම නිසා විශ්වයේ බල ව්‍යාප්තිය විවිධ දෙවිවරුන් සතු වීම විශ්වයේ පැවැත්මට හිතකර නොවේ. සියලුම බල මහිමයන් පරිපාලන කටයුතු එක් කෙනෙකු සතුව තිබීම විශ්වයේ ක්‍රමවත් භාවයටත් පැවැත්මටත් අත්‍යවශ්‍ය වූ කරුණක් බව අපට මනා ලෙස වැටහේ.

යට දැක් වූ කරුණු වල සම්පිණ්ඩනය ගත් කළ අපට ප්‍රත්‍යක්ෂ වනුයේ මෙම විශ්වයට මැවුම්කරුවෙක් (දෙවි කෙනෙක්) සිටින බව හා සර්ව බල මහිමයන්ගෙන් සමන්විත වූ ඔහුගේ ඒකීය භාවයත් ය. හේ ඒකයකි. අසමසමය. සර්ව ලෝ පෝෂකයාය. අපි ඔහුව අල්ලාහ් නමැති අසමසම නමයෙන් හඳුන්වමු.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய ஷரீ ஆவின் மாறாத்தன்மையும் நெகிழ்வுத்தன்மையும்

இஸ்லாம் எல்லாக்காலங்களுக்கும் எல்லா சமூகங்களுக்கும் ஏற்ற வழிகாட்டல் களைக் கொண்ட மதம் எனும் கருத்தை ஜீரணிக்க முடியுமா? பதினான்கு நூற்றாண்டு கள் பழைமை வாய்ந்த இம்மதம் நவீன உலகுக்கு எங்ஙனம் வழிகாட்டமுடியும்? பரிணாம வளர்ச்சியும் தொடர்ந்தேர்ச்சியான மாற்றமும் இவ்வுலக வாழ்வின் இயல்பான பண்புகளாக விளங்கும் போது எப்படி இஸ்லாம் முழு மனித சமுதாயத்திற்கும் வழிகாட்டும் வல்லமையைப் பெறமுடியும்?

இவை போன்ற வினாக்கள் உலகின் பல பாகங்களிலும் பரவலாக எழுப்பப்படு கின்றன. இஸ்லாத்தின் யதார்த்த நிலையையும் அதன் இயல்பான பண்புகளையும் அதில் பொதிந்துள்ள சிறப்பியல்புகளையும் புரியாத புத்திஜீவிகளின் உள்ளங்களில் குடிகொண்ட ஐயங்களின் வெளிப்பாடே இவ்வினாக்கள்.

விரிவுரையாளர் அஷ்ஷெய்க் : எஸ்.ஏ.கே. அப்துர்ராஸிக்

தனித்துவமான பல பண்புகளைப் பெற்றிருக்கும் இஸ்லாமிய ஷரீஅத், ஒரே நேரத்தில் மாறாத் தன்மையையும் நெகிழ்வுத் தன்மையையும் பிரதி பலிப்பதன் மூலமே யுகமுடிவு நாள் வரை தோன்றப் போகும் முழு மனித சமூகத்துக்கும் வழிகாட்டும் வல்லமையைப் பெற்றிருக்கிறதெனும் உண்மையை உணராமையின் விளைவாகவே இத்தகைய வினாக்கள் எழுப்பப்படுகின்றன.

இஸ்லாமிய ஷரீஅத் கொண்டுள்ள இம்மகத்தான பண்பு சிறப்பாக விளக்கப்பட வேண்டும். அப்போதுதான் அது எக்காலத் துக்கும் எல்லா சமூகங்களுக்கும் பொருத்த மான தீர்வுகளை முன்வைக்கும் ஆற்றல் பெற்றது எனும் கருத்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியும். இந்நோக்கிலேயே இக்கட்டுரை எழுதப்படுகிறது.

### *இஸ்லாத்தின் பார்வையில் படிமுறை வளர்ச்சி பற்றிய சிந்தனை*

இவ்வுலக வாழ்வின் இயல்பு படிமுறை வளர்ச்சியைப் பெறும் பண்பினைக் கொண்டது. கால, சமூக, சூழ்நிலை மாற்றங்களோடு மனித வாழ்க்கையின் அமைப்பிலும் தொடர்ந் தேர்ச்சியான பல மாற்றங்கள் இடம் பெறுவது தவிர்க்க முடியாத ஒன்று. எனவேதான் இஸ்லாம் உலக வாழ்வில் இடம் பெறும் படி முறை வளர்ச்சி பற்றிய சிந்தனையை அங்கீகரித்து, அதனோடு இயைந்து செல்லும் வகையில் தன் வழிகாட்டல்களை முன் வைக்கின்றது.

அல்குர்ஆனை நாம் உற்றுநோக்குமிடத்து, பிரபஞ்சப் பொருட்களை ஆராயுமாறும் பயன்படுத்துமாறும் கூறும் எண்ணற்ற வசனங் களைக் காணலாம். அல்குர்ஆன் கூறுகின்றது:

"உறுதி கொள்வோருக்குப் பூமியில் பல அத்தாட்சிகள் உள்ளன; எங்களிடமும் உள்ளன. நீங்கள் (அவற்றை) அவதானிக்க வில்லையா?" (51: 20,211). "உலகின் பல்வேறு பகுதிகளிலும் பல அத்தாட்சிகளை நாம் காண்பிப்போம்." (41:53)

உண்மையில், மனித சிந்தனையாலும் ஆராய்ச்சியாலும் பல்வேறு கண்டுபிடிப்புகள் நிகழும்; அதனூடாக வாழ்வில் பல்வேறு மாற்றங்கள் தோன்றும் என்ற உண்மையை அல்குர்ஆன் கீழ்வருமாறு கூறுகின்றது

**"குதிரைகள், கோவேறு கழுதைகள் என்பவற்றை நீங்கள் ஏறிப்பிரயாணம் செய்யவும் அழகுப் பொருளாகவும் படைத்தான். நீங்கள் அறியாத இன்னும் பலவற்றை படைப்பான்." (16:08)**

மேலுள்ள வசனங்கள் குறிப்பிடுவது போல் மனித வாழ்வில் பல்வேறு மாற்றங் களும் வளர்ச்சியும் ஏற்பட முடியும் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக் கொள்கின்ற இஸ்லாம், அவற்றோடு இயைந்து செல்லும் வகையில் அதன் பெரும்பாலான சட்டங்களை வளர்ச்சிக்கும் நெகிழ்ச்சிக்கும் உட்படும் தன்மையுடையனவாக ஆக்கியுள்ளது. இது இஸ்லாமிய ஷரீஅத்திற் கேயுரிய தனியான சிறப்பம்சங்களுள் ஒன்றாகும்.

### ஷரீஆவின் இயல்பை மறந்து வரம்பு மீறுவதன் விளைவுகள்

இஸ்லாம், தன் சட்டங்களில் பிரதிபலிக்கும் நெகிழ்ச்சிக்கும் மாறாத் தன்மைக்குமிடையே சமநிலை போக்கினைக் கடைப்பிடிக்கிறது. இச்சமநிலை பாதிப்புறும் வகையில் ஒருதலைப்பட்சமாக வரம்புமீறிச் செயற்படும் போது இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்கள் ஏனைய சட்டங்களைப் போல் மாறி, அதன் தனித்துவத்தை இழந்து விடும் அபாயநிலை உருவாகின்றது.

சிலர் 'மத்ஹபு' வெறியினாலும் குருட்டுத்தனமான பின்பற்றலினாலும் (தக்லீத்) தம் மூதாதையர்களின் வார்த்தைக்கு குர்ஆன் சுன்னாவின் அந்தஸ்தை அளித்து, கால சமூக சூழ்நிலை மாற்றங்களையும் மறந்து, இஸ்லாமிய கிலாபத்தின் வீழ்ச்சிக் காலப் பிரிவில் கூறப்பட்ட கருத்துக்களிலேயே முடங்கிக்கிடக்கின்றனர். இஸ்லாத்தின் இயல்பை அறியாத இத்தகைய பழைமை விரும்பிகளின் வரம்பு மீறிய போக்கினால் இஸ்லாம் காலத்திற்கொவ்வாதது என்ற கருத்து வலுப்பெறும் அபாயநிலை உருவாகின்றது. இதன் விளைவாக, இஸ்லாத்தை நெருங்க வேண்டிய அந்நியர்கள் விரண்டோடுகின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலையை நாம் நடைமுறையில் காணமுடிகிறது.

இதன் எதிர்திசையில் மற்றொரு பிரிவினர், இஸ்லாமிய சட்டங்கள் பிரதிபலிக்கின்ற நெகிழ்ச்சிப் பண்பிணை தம் இலக்கை அடைவதற்கான ஒரு சாதனமாகப் பயன்படுத்துகின்றனர். நெகிழ்ச்சி என்ற பெயரில் தாம் விரும்பியவை அனைத்தையும் 'ஹலால்' எனக் கூறி, உண்மையில் இஸ்லாம் தடுத்துள்ள அம்சங்களைக் கூட ஆகுமாக்க முயற்சி செய்கின்றனர். இத்தகையோரின் போக்கு இஸ்லாத்தைக் கருவறுக்கத் திட்டமிடும் சர்வதேச எதிரிகளின் நடவடிக்கைகளுக்குத் துணையாக அமைகின்றது.

இத்தகையோர், இஸ்லாமிய ஷரீஆவில் மாறாத்தன்மை பிரதிபலிக்கும் பகுதிகள் எவை? நெகிழ்ச்சித் தன்மையின் செல்வாக்கிற்கு உட்படும் பகுதிகள் எவை? என்பதனை சரியாக விளங்கிக் கொள்ளாமையின் விளைவாக ஷரீஆவில் மாற்றமே புகமுடியாத பகுதிகளில் நூதன அனுஷ்டானங்களை ஏற்படுத்த முனைகின்ற அதே வேளை, இஸ்லாம் வாயிலை திறந்துவிட்டிருக்கின்ற, நெகிழ்ச்சியின் செல்வாக்கினால் வளர்ச்சியடையக் கூடிய உலகியல் விவகாரங்கள், அறிவியற் துறைகள் போன்றவற்றில் முஸ்லிம் சமூகம் முன்னேற்றம் அடைவதற்கு முட்டுக்கட்டையாக அமைகின்றனர்.

இஸ்லாமிய ஷரீஆவின் இயல்பை மறந்த இத்தகைய வரம்பு மீறிய போக்கினால் இஸ்லாமிய ஷரீஆவின் யதார்த்த நிலையும், அது எல்லாக் காலங்களுக்கும் எல்லா சமூகங்களுக்கும் வழிகாட்டத் தகுதியான ஒரு மார்க்கம் என்பதும் உலகறிய உணர்த்தப்பட முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

### இயல்போடு இயைந்து செல்லும் மார்க்கம்

இஸ்லாம் முழு மனித சமூகத்திற்கும் வழிகாட்ட வந்த தெய்வீக மார்க்கம் என்ற வகையில், பிரபஞ்சத்தின் இயல்போடும் அதன் பிரதானமான அங்கமாக விளங்குகின்ற மனித இயல்போடும் இயைந்து செல்லும் வகையில் அமைந்துள்ளது. மனிதனின் இயல்பூக்க உணர்வுகள், ஒழுக்கவியற் பெறுமானங்கள் என்பன ஒரு போதும் மாற்றமுறுவதில்லை. எனவே, மனித சமூகத்திற்கு வழிகாட்ட வந்த இஸ்லாமிய ஷரீஅத்தும் அதன் நோக்கங்களிலும் அடிப்படை அம்சங்களிலும் மாறாத்தன்மையைக் கையாண்டுள்ளது. ஏனைய கிளை அம்சங்களில் நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டுள்ளது. கற்காலத்தில் வாழ்ந்த மனிதனாயினும் சரி, இன்றைய நவயுகத்தில் வாழும் மனிதனாயினும் சரி அவனது இயல்பான மனித உணர்வுகள் ஒரே தன்மை வாய்ந்தனவாக விளங்குவதால், அவ்வுணர்வுகளை நெறிப்படுத்த இஸ்லாமிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷரீஆத் முன்வைக்கும் ஒழுக்கவியற் கோட்பாடுகளும் மாறாத்தன்மை கொண்டனவாகக் காணப்படுகின்றன. அதேவேளை மனித அறிவினாலும் ஆராய்ச்சியாலும் பல்வேறு கண்டு பிடிப்புக்கள் தோன்றி வாழ்க்கை அமைப்பிலும் வழிமுறைகளிலும் சாதனங்களிலும் பாரிய மாற்றங்கள் ஏற்படும் போது, அம்மாற்றங்களோடு இயைந்து செல்லும் வகையில் இத்துறைகளில் இஸ்லாம் முன்வைக்கின்ற சட்டங்கள் நெகிழ்ச்சித் தன்மை கொண்டிருப்பதனை நாம் காணலாம்.

இந்த வகையிலும் இஸ்லாம் ஷரீஅத், அது கொண்டிருக்கின்ற இச்சிறப்பியல்பின் காரணமாக எல்லாக் காலங்களிலும் வாழும் மனித சமூகங்களின் இயல்போடு இயைந்து செல்லும் தன்மை கொண்டதாக விளங்குகின்றது.

மனித இயல்போடு இயைந்து செல்லாத எந்தவொரு கொள்கையும் சட்டமும் கால வோட்டத்தில் காலாவதியான கொள்கையாக, சட்டமாக மாறிவிடும் என்பது வரலாறு சான்று பகரும் தெளிவான உண்மையாகும்.

### நெகிழ்வுக்கும் மாறாத்தன்மைக்குமிடையே இஸ்லாத்தின் சமநிலை

இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களைப் பொறுத்தவரையில், அவை முன்னைய ஷரீஅத் சட்டங்களைப்போல் முழுமையான மாறாத் தன்மை கொண்டனவாகவோ, அல்லது நவீன மனித சட்ட யாப்புக்களைப்போல் பூரண நெகிழ்ச்சித்தன்மை கொண்டனவாகவோ விளங்க வில்லை. மாறாக, இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களில் நெகிழ்ச்சிக்கும் மாறாத்தன்மைக்குமிடையே சமநிலை பேணப்பட்டுள்ளது. ஷரீஆவின் மாறாத்தன்மை கொண்ட பகுதிகள் எவை? கால மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கு மேற்ப நெகிழ்ந்து கொடுக்கும் சட்டங்கள் எவை? என்பதனைத் தெளிவாக வரையறை செய்வது அவசியமாகும்.

### ஷரீஆவின் மாறாத்தன்மை கொண்ட பகுதிகள்

*1. நம்பிக்கைக் கோட்பாடுகள்:-*

இறைவன், பிரபஞ்சம், மனிதன், வாழ்வு என்பன பற்றி இஸ்லாம் முன்வைக்கின்ற நம்பிக்கைக் கோட்பாடுகள் ஒருபோதும் மாற்றமுறாது மாறாத் தன்மையைப் பிரதிபலிக்கின்றன. இஸ்லாத்தின் அடிப்படையாக விளங்குகின்ற அல்லாஹ், அவனது அமரர்கள், அவன் இறக்கிய வேதங்கள், அவனது தூதர்கள், மறுமை நாள் என்பவற்றின் மீதான நம்பிக்கை யுகமுடிவு நாள்வரை மாறாத்தன்மையுடனேயே இருக்கும்.

*2. வணக்கவழிபாடுகள் (இபாதத்):-*

வணக்க வழிபாடுகளின் அமைப்பில் காலமாற்றம், வளர்ச்சி என்பன எந்த மாற்றத்தினையும் ஏற்படுத்த முடியாது. ஏனெனில் வணக்க வழிபாட்டு அமைப்புக்கள் எந்தவொரு மாற்றத்தினையும் வேண்டி நிற்காது, எக்காலத்திலும் நிறைவேற்றப்படக் கூடிய வகையிலேயே இறைவனால் அமைக்கப்பட்டுள்ளன.

*3. அடிப்படை ஒழுக்கப்பண்பாடுகள்:-*

இஸ்லாம் வலியுறுத்தும் நல்லொழுக்கப் பண்புகளான உண்மை, வாய்மை, நேர்மை, கற்பு நெறி, ஒற்றுமை, தியாகம், பிறருக்கு உதவுதல், வாக்குறுதியை நிறைவேற்றல், அமானிதத்தைப் பாதுகாத்தல், பெற்றோருக்கு நன்றி உபகாரம் செய்தல் போன்ற நற்பண்புகள் எக்காலப் பிரிவுக்கும் தேவையானவை. காலமாற்றமோ, சமூக வளர்ச்சியோ, இத்தகைய நற்பண்புகளை ஒரு போதும் தீய பண்புகளாக மாற்றிடாது. அவ்வாறே, விபசாரம், மோசடி, ஏமாற்று, பொய், களவு போன்ற தீய பண்புகள் ஒருபோதும் நற்பண்புகளாக மாறப்போவதில்லை.

*4. சமூகப்பண்பாடுகள்:-*

சமூகத்தில் என்றுமே நிலைத்திருக்கக் கூடிய அடிப்படையான பண்புகள் ஒரு போதும் மாற்றமுறுவதில்லை. சாப்பிடும்போது கைகழுவுதல், பிஸ்மில்லாஹ் கூறுதல், ஸலாம் கூறுதல் போன்றவற்றை இங்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

*5. சட்டத்தின் அடிப்படைக்கோட்பாடுகள்:-*

ஒவ்வொரு சட்டத்திற்கும் அடிப்படையான சில கோட்பாடுகள், கொள்கைகள் காணப்படும். அவை மாற்றமுறுமாயின், குறிப்பிட்ட அவ்வமைப்பே மாற்றமுற்றதாகக் கொள்ளப்படுமே தவிர, வளர்ச்சிக்கேற்ப நெகிழ்ந்து கொடுத்ததாக கொள்ளப்பட மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக,

அ. குடும்ப அமைப்பு: இதன் அடிப்படை உண்மைகள் ஒருபோதும் மாற்றப்படா. (உதாரணம், நிர்வாகத் தலைமை ஆணுக்குரியது, அவனே செலவுக்குப் பொறுப்பாளன். தலாக் சட்ட பூர்வமானது.)

ஆ. வாரிசுரிமை: வாரிசுச் சொத்தில் பெண்ணுக்கு வழங்கப்படுவதைப் போன்ற இருபங்கு ஆணுக்கு வழங்கப்பட வேண்டும். இதுபோன்ற அடிப்படை உண்மைகள் ஒருபோதும் மாற்றமுறா.

இ. குற்றவியல் சட்டங்கள்: குறிப்பிட்ட பாரிய சில குற்றங்களுக்கான தண்டனைகளை இஸ்லாம் வரையறுத்துக் கூறியுள்ளது. அத்தண்டனைகள் தொடர்பான சட்டங்கள் ஒருபோதும் மாறாமல் இருக்கும்.

ஈ. செல்வம், ஆட்சி, சர்வதேச சட்டம் என்பன தொடர்பான அடிப்படைக் கொள்கைகளும் கோட்பாடுகளும் ஒரு போதும் மாற்றமுறாது. ஸ்திரமாகவே இருக்கும்.

## நெகிழ்வுறும் பகுதிகள்

மேற்குறிப்பிட்ட அடிப்படையான அம்சங்கள் தவிர்ந்த ஏனைய கிளை அம்சங்கள், உலக அறிவியல் விவகாரங்கள், பல்வேறு துறைகளிலும் பயன்படுத்தப்படும் சாதனங்கள், வழிமுறைகள் என்பன தொடர்பான சட்டங்கள் யாவும் வளர்ச்சிக்கும் நெகிழ்ச்சிக்கும் உட்படும் தன்மை வாய்ந்தனவாக விளங்குகின்றன.

இத்தகைய அம்சங்கள் தொடர்பான சட்டங்களை இஸ்லாமிய ஷரீஅத் வரையறுத்துக் கூறாது கால சூழ்நிலைக்கேற்ப, குர்ஆன் சுன்னாவின் நிலைக்களனில் அவற்றுக்கான சட்டங்களை உருவாக்கும் உரிமையை தகுதி வாய்ந்த முஜ்தஹிதுகளிடம் ஒப்படைத்துள்ளது. இந்த வகையில் பழக்க வழக்க மாற்றங்களால் தோன்றும் ஒழுங்குகள், இபாதத்துக்களை நிறைவேற்றப்பயன்படுத்தும் சாதனங்கள் போன்றன கால சூழ்நிலை மாற்றங்களோடு இயைந்த வகையில் மாற்றமடைந்து கொண்டே செல்லும். உதாரணமாக:

1. பழக்க வழக்க மாற்றங்களால் தோன்றும் ஒழுங்குகள்: (மேசையில் அமர்ந்து சாப்பிடுதல், ஸக்காத் சேகரித்து, ஒழுங்குபடுத்தி, விநியோகிப்பதில் நவீனமுறைகளைக் கையாளல், ஹஜ்ஜை நிறைவேற்ற மக்கா செல்வதற்கு நவீன போக்குவரத்துச் சாதனங்களைப் பயன்படுத்தல், கூட்டங்கள் கூடிப் பேசுதல் போன்றன)

2. சட்டத்தின் அடிப்படைக்கோட்பாடுகளை பல்வேறு காலப்பிரிவுகளில் வேறுபட்ட பல தோற்றங்களில் நடைமுறைப் படுத்துதல், உதாரணம்:

* கொடுக்கல் வாங்கல்களில் பரஸ்பர திருப்தி அடிப்படை விதியாகும். இது கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல்வேறு தோற்றங்களைப் பெறும்.

* 'ஷூறா' அரசியற் கொள்கைகளில் ஒன்று. அது எவ்வமைப்பில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்கு குறிப்பிட்ட ஒரு வரையறை கிடையாது.

* எதிரிகளை எதிர்கொள்ள ஆயுத பலத்தைத் தயார்படுத்துமாறு இஸ்லாம் கட்டளையிட்டாலும் அதற்கும் ஒரு குறிப்பிட்ட தோற்றம் வரையறை செய்யப்படவில்லை.

* மக்களுக்கு நலன் பயக்கும் வகையில் அரசையும் சமூகத்தையும் ஒழுங்கு படுத்தும் பொறுப்பு, ஆட்சியைப் பொறுப்பேற்பவர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது.

எனவே, நாகரிக வளர்ச்சியால் தோன்றும் சமூகத் தேவைகளும் தொடர்ந்தும் வளர்ந்து செல்லும். இஸ்லாத்தின் பொதுவான அடிப்படைகளோடு ஒத்துச் செல்லும் வரை அவற்றை அங்கீகரித்து ஏற்பதை இஸ்லாம் மறுக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அடிப்படை மூலாதாரங்களிலிருந்து ஆதாரங்கள்

இஸ்லாமிய ஷரீஅத் ஒரே நேரத்தில் மாறாத்தன்மையையும் நெகிழ்ச்சிப்பண்பினையும் கொண்டிருக்கின்றதென்பதை உறுதிப்படுத்தும் வகையில் அல்குர்ஆனிலும் ஹதீஸிலும் ஸஹாபாக்களின் நடைமுறை வாழ்விலும் பல்வேறு ஆதாரங்கள் நிறைந்திருப்பதை நாம் காணலாம்.

* அல்குர்ஆன்:

**"நீங்கள் மனிதர்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்கினால் நீதியை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பளியுங்கள்" (5:58)**

**"நீர் அவர்களுக்கு மத்தியில்அல்லாஹ் இறக்கியதைக் கொண்டு தீர்ப்பளியும். அவர்களது மனோ இச்சையை பின்பற்ற வேண்டாம்" (5:49)**

இத்தகைய வசனங்களில் நீதியை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்திக் கூறும் அல்குர்ஆன், எந்த அமைப்பில் நீதி பரிபாலனம் அமைய வேண்டும்? நீதி மன்றங்கள் எத்தனை படித்தரங்களைக் கொண்டிருக்க வேண்டும்? போன்ற விடயங்களை ஒரு குறிப்பிட்ட தோற்றத்தில் வரையறை செய்யவில்லை. மாறாக, சமூக நலன் பேணும் வகையில் சந்தர்ப்ப சூழ்நிலைக் கேற்ப வழிமுறைகளைக் கையாள்வதற்கு அல்குர்ஆன் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இங்கு நீதியை அடிப்படையாகக் கொண்டே தீர்ப்பு வழங்க வேண்டுமென குறிப்பிடுகின்ற கட்டளையில் எவ்வித மாற்றமும் நுழைய முடியாத வகையில் மாறாத்தன்மை பிரதிபலிக்கின்ற அதே வேளை, ஏனைய அம்சங்களில் பூரண வளர்ச்சிக்கும் நெகிழ்ச்சிக்கும் அல்குர்ஆன் வழிவிட்டுக் கொடுத்திருப்பதனை நாம் காணலாம். இது போன்ற பல ஆதாரங்கள் அல்குர்ஆனில் நிறைந்து காணப்படுகின்றன.

* சுன்னா:

இஸ்லாமிய ஷரீஅத் கொண்டிருக்கின்ற இம்மகத்தான பண்பின் பிரதிபலிப்பை நபிகளாரின் வாழ்வில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நாம் காணலாம்.

உதாரணமாக: ரஸூல் (ஸல்) அவர்களின் பிரசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் குறைஷிக் காபிர்கள் சமரசப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கும் பேரம் பேசுவதற்கும் முனைந்த போதெல்லாம் ரஸூல்(ஸல்) அவர்கள் அசைக்க முடியாத உறுதியுடன் தன் கொள்கையில் மாறாமலே இருந்தார்கள். **"என் வலக்கரத்தில் சூரியனையும் இடக்கரத்தில் சந்திரனையும் கொண்டு வந்து வைத்த போதிலும் என் கொள்கையில் நெகிழ்ந்து கொடுக்க மாட்டேன்"** என உறுதியாகக் கூறினார்கள். அவ்வாறே பொய் நபித்துவத்தைக் கோரி வாதம் புரிந்த முஸைலமாவின் விடயத்திலும் மாறாத்தன்மை யோடு செயற்பட்டார்கள்.

ஆனால், ஹுதைபிய்யா உடன்படிக்கை யின் போது எவ்வளவு தூரம் விட்டுக் கொடுத்து எதிரிகளின் வேண்டுகோளுக்கு இயைந்து சென்றார்கள் என்பதனை நாம் வரலாற்றில் காண்கின்றோம்.

மேலும், உயர்ந்த குலத்துப்பெண் திருடிய போது பரிந்து பேச முற்பட்ட உஸாமாவை கடுமையாகக் கண்டித்து, தன் மகள் பாத்திமா திருடியிருந்தாலும் கூட கையைத் துண்டித்திருப்பேன் எனக்கூறிய நபியவர்கள் யுத்த நிலைமைகளைக் கருத்திற் கொண்டு "யுத்தத்தில் கைகள் வெட்டப்படக் கூடாது" எனக்கூறினார்கள். இங்கு முதற்கட்டத்தில் மாறாத்தன்மையும் இரண்டாம் கட்டத்தில் நெகிழ்ச்சித்தன்மையும் பிரதி பலிப்பதைக் காணலாம்.

அவ்வாறே வணக்க வழிபாடுகளில் நூதன அனுஷ்டானங்கள் தோன்றுவதையும் புதிய வழிமுறைகள் உருவாக்கப்படுவதையும் மிகக்கடுமையாக எச்சரித்துத் தடுத்த றஸூல் (ஸல்) அவர்கள் உலக விவகாரங்களிலும் உற்பத்தி நடவடிக்கைகளிலும் புதிய வழிமுறைகளைக் கையாள அனுமதியளித் துள்ளார்கள்.

* ஸஹாபாக்களின் நடைமுறைகள்:

நபிகளாரின் பாசறையில் வளர்ந்த ஸஹாபாக்களின் வாழ்விலும் மாறாத்தன்மையும் நெகிழ்ச்சிப் பண்பும் பிரதிபலிக்கும் பல்வேறு சந்தர்ப்பங்களைக் காணலாம். உதாரணமாக:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸகாத் கொடுக்க மறுத்தோருடன் போர்த்தொடுக்கத் தயாரான அபூபக்கர் (றழி) அவர்கள், தான் கொண்ட முடிவில் உறுதியோடு செயற்பட்டார்கள். ஆனால் 'ரித்தத்' போரின் போது காலித் பின் வலீத் (றழி) அவர்கள் மாலிக் பின் நுவைறாவை தவறுதலாகக் கொல்ல நேர்ந்த சந்தர்ப்பத்தில் அன்றைய சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு அபூபக்கர் (றழி) அவர்கள் காலிதுடைய விடயத்தில் விட்டுக்கொடுத்து நடந்து கொண்டார்கள்.

அவ்வாறே, பஞ்சமும் வரட்சியும் நிலவிய காலப்பிரிவில் ஸகாத் வசூலிப்பதைத் தாமதப்படுத்தியும் களவாடியவர்களின் கைகளைத் துண்டிப்பதை தற்காலிகமாக இடைநிறுத்தியும் வைத்த உமர் (றழி) அவர்கள் இத்தகைய செயல்களில் நெகிழ்ச்சித் தன்மை பிரதிபலித்தாலும், தளராத உறுதியோடு ஸ்திரமாக நின்று செயற்பட்ட பல சந்தர்ப்பங்களையும் அவரின் ஆட்சிக் காலப்பிரிவில் நாம் காணலாம்.

### சட்ட மூலாதாரங்களின் நெகிழ்ச்சித்தன்மை

இஸ்லாமிய சட்டங்களின் அடிப்படை மூலாதாரங்களாக அல்குர்ஆனும், சுன்னாவும் விளங்குகின்றன. அவை இரண்டினதும் நிலைக்களனில் பெறப்பட்ட, ஏற்றுக் கொள்ளத்தக்க மூலாதாரங்களாக இஜ்மாஉ, கியாஸ், இஸ்திஹ்ஸான், இஸ்திஸ்லாஹ், இஸ்திஸ்ஹாப், உர்ப் என்பன விளங்குகின்றன.

இம்மூலாதாரங்கள் யாவும் பொதிந்துள்ள நெகிழ்ச்சித்தன்மை, கால வளர்ச்சிக் கேற்ப இயைந்து செல்லும் பண்பு, நவீன முன்னேற்றங்களுக்கும் வளர்ச்சிக்குமேற்ப உருவாக்க இடம் அளிக்கும் பண்பு என்பவற்றின் மீது இஸ்லாமிய ஷரீஆவின் நீடித்த ஆயுளின் இரகசியம் தங்கியுள்ளது.

* அல்குர்ஆன்

குர்ஆனிய வசனங்களை ஆழ்ந்து நோக்குமிடத்து அவை பல்வேறு கோணங்களில் நெகிழ்ச்சிக்கு உட்படும் தன்மையினைக் கொண்டிருப்பதைக்காணலாம்.

1. குர்ஆனிய வசனங்கள், மொழி அடிப் படையில் நேரடியாகக் கொடுக்கின்ற கருத்துக்களோடு மாத்திரம் நின்று விடுவதில்லை. ஆழ்ந்து நோக்குகின்ற சட்டவல்லுனர்கள், ஒவ்வொரு வசனத்தி லிருந்தும் பல்வேறு கோணங்களில் பல கருத்துக்களைப்பெற முடியுமான வகையில் வசனங்கள் அமைந்துள்ளன. (அதாவது முதஷாபிஹான வசனங்கள்)

2. பெரும்பாலான சட்ட வசனங்கள் அக்குறிப்பிட்ட சட்டங்கள் விதியாக்கப் பட்டதற்கான காரணங்களையும் இணைத்துக் குறிப்பிடுகின்றன. ஷரீஆவின் நோக்கங்களை மையமாக வைத்து அக்குறிப்பிட்ட சட்டம் உருவாக அடிப் படையாக அமைந்த காரணத்தைப் பெற்றிருக்கும் புதிய பிரச்சினைகளுக்கு சட்டமியற்ற உதவுகிறது.

* சுன்னா:

ரஸூல் (ஸல்) அவர்களின் சுன்னாவின் மூலம் வந்துள்ள சட்ட வசனங்களைப் பொறுத்தவரையில், ஒன்றில் அவை குர்ஆனில் வந்த சட்டமொன்றை உறுதிப்படுத்துவதாக அமையும் அல்லது மிகச்சுருக்கமாக குர்ஆனில் குறிப்பிட்ட ஓர் அம்சத்திற்கான விளக்கமாக அமையும் அல்லது குர்ஆனில் குறிப்பிடப் படாத சட்டத்தை விதியாக்குவதாக அமையும். எவ்வகையைச் சார்ந்ததாக இருந்தாலும் அவை கால சமூக சூழ்நிலை மாற்றங்களுக் கேற்ப நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையினைப் பெரும்பாலும் பிரதிபலிப்பதை நாம் காணலாம்.

* இஜ்மாஉ:

குர்ஆன், சுன்னாவுக்கு அடுத்த ஸ்தானத்தைப் பெறும் மூலாதாரம் இஜ்மாஉ ஆகும். இதனடிப்படையிலேயே ஸஹாபாக்கள் தாம் எதிர் நோக்கிய பெரும்பாலான பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றனர். பல்வேறு காலப்பிரிவிலும் தோன்றும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப்பெறுவதற்கு வழிகோலும் வளமிக்க மூலாதாரமாக இஜ்மாஉ விளங்குகிறது. இதன் மூலமும் இஸ்லாமிய ஷரீஆ எல்லாக் காலத்திற்கும் ஏற்ப தீர்வுகளை முன்வைக்கும் ஆற்றலைப் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* **கியாஸ்**

ஏனைய மூலாதாரங்களை விட மிகவும் வளம்மிக்க ஒன்றாக கியாஸ் விளங்குகின்றது. பெரும்பாலான சட்டங்கள் அவை சட்டமாக்கப் பட்டதற்கான (இல்லத்) காரணங்களை இணைத்தே கூறப்பட்டன. சட்டம் சொல்லப் பட்ட ஓர் அம்சம் கொண்டிருக்கின்ற அதே காரணத்தைப் புதியதொரு பிரச்சினைக்கும் வழங்க முடியும். புதிதாகத் தோன்றுகின்ற பிரச்சினைகளை ஒப்பிட்டு நோக்க முடியுமான வகையில் வேறு ஏதோ ஒரு சட்டம் சொல்லப்பட்டிருப்பதனை நாம் தெளிவாக அவதானிக்கலாம்.

எனவே, சட்ட மூலாதாரங்களின் நான்காம் இடத்தைப் பெறும் கியாஸ் யுக முடிவு நாள்வரை தோன்றப்போகும் பல்வேறு பிரச்சினைகளுக்குமான தீர்வுகளை வழங்கப் பயன்படும் ஒரு வளம்மிக்க அடிப்படையாகத் திகழ்கிறது.

* **ஏனைய மூலாதாரங்கள்:**

இவை தவிர, முஜ்தஹதீன்களால் சட்டமியற்றுவதற்கு அடிப்படையாக கொள்ளப் படுகின்ற மூலாதாரங்களாக இஸ்திஹ்ஸான், மஸ்லஹதுல் முர்ஸலா, இஸ்திஸ்ஹாப், உர்ப், ஸத்துத் ஸரீஆ, ஷறாயிஉ ஸஸாபிகா போன்றன விளங்குகின்றன. இவையாவும் குர்ஆன், சுன்னாவில் இருந்து பெறப்பட்ட ஏற்றுக்கொள்ளத்தக்க மூலாதாரங்களாகும். இம்மூலாதாரங்கள் யாவும் மனித இனத்தின் நலன்கள் பாதுகாக்கப்படும் வகையில் இறுதி நாள் வரை தோன்றப்போகும் பல்வேறு நவீன பிரச்சினைகளுக்குமான தீர்வுகளை முன்வைக்கும் தகுதியைப் பெற்றுள்ளன. இன்றைய நவீன உலகில் தோன்றும் புதிய பிரச்சினைகளுக்கும் இத்தகைய மூலாதாரங் களின் அடிப்படையிலேயே தீர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்லாமிய சட்டத்துறையில் மாறாத்தன்மையினதும் நெகிழ்ச்சித் தன்மையினதும் செல்வாக்கு

இஸ்லாமிய சட்டத்துறையைப்பொறுத்த வரையில், அதன் மூலாதாரங்களின் வெளிச் சத்தில் சட்டங்களைப் பெறும் புகஹாக்கள் ஷரீஆவின் இயல்பினையும், அடிப்படை மூலாதாரங்களின் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையினையும் கருத்திற் கொண்டே செயற்படுகின்றனர். புகஹாக்கள் தங்கள் பகுத்தறிவைப் பிரயோகிக்காது, குர்ஆன், சுன்னாவில் வந்துள்ள சட்ட வசனங்கள் கூறும் சட்டங்களை அப்படியே எடுத்து முன்வைப்பதுதான் அவர்களது பணி என இஸ்லாம் கூறவில்லை. மாறாக, ஷரீஅத் விதித்திருக்கும் வரையறைகளின் எல்லைக்குள் நின்று, அடிப்படைக்கோட்பாடுகளை மீறாத வகையில் கால சூழ் நிலைகளுக்கேற்ப சட்டங்களை உருவாக்கும் பொறுப்பை இஸ்லாம் முஜ்தஹித்களிடம் ஒப்படைத் துள்ளது.

சட்டமியற்றும் அதிகாரம் அல்லாஹ் வுக்கு மாத்திரம் உரியதென்பது இஸ்லாத்தின் பிரதான அடிப்படைகளுள் ஒன்றாக விளங்குவதனால், குர்ஆனும் சுன்னாவும் என்றுமே மாற முடியாத வகையில் வரை யறுத்துக் கூறியுள்ள அடிப்படைச் சட்டங்கள் ஒருபோதும் மாறாது ஸ்திரமாகவே இருக்கும். இத்தகைய அடிப்படைச் சட்டங்கள் யாவும் மாறாத்தன்மையைப் பிரதி பலித்தாலும், புகஹாக்கள் தங்கள் சிந்தனையைப்பயன்படுத்தி சட்டங்களைப் பெறுவதற்கான இரு பகுதிகள் விரிவாக விடப்பட்டுள்ளன. இவை கால சூழ் நிலைகளுக்கேற்ப சட்டங்களின் வளர்ச்சிக்கு இடமளிக்கும் விரிவான பகுதிகளாகும்.

### 1. சட்டம் சொல்லாது விடப்பட்டுள்ள வெற்றுப்பகுதி:

இறைவன் தானாக விரும்பி சில பகுதிகளை சட்டமியற்றாது விட்டு வைத்துள் ளான். முழு உலகுக்கும் வழிகாட்ட வந்த சர்வதேச மார்க்கமாக இஸ்லாம் விளங்குவதே இதற்குக் காரணமாகும். இதனைப் பின்வரும் நபி மொழி தெளிவுபடுத்துகின்றது.

"அல்லாஹ் தன் வேதத்தில் ஆகுமாக்கியுள்ளவை ஹலாலாகும். அவன் தடுத்துள்ளவை ஹறாமாகும், அவன் எதுவும் கூறாது விட்டிருப்பவை மன்னிப்பாகும். அவன் மன்னிப்பாக உங்களுக்கு வழங்கியுள்ள வற்றை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட ஹதீஸில் வரும் 'அப்வ்' என்ற அறபுச் சொல் சட்டமியற்றாது விடப்பட்டுள்ள பகுதியையே குறிக்கின்றது. இப்பகுதியில் இஸ்லாமிய ஷரீஆவின் நெகிழ்ச்சித்தன்மை பூரணமாகத் தொழிற் படுகின்றது. புகஹாக்கள் தம் சிந்தனையைப் பயன்படுத்தி இஜ்திஹாத் செய்வதற்குரிய விசாலமான பகுதியாக இது விளங்குகின்றது.

இவ்வாறு சட்டமியற்றாது விடப் பட்டுள்ள பகுதி, கியாஸ், இஸ்திஹ்ஸான், மஸ்லஹதுல் முர்ஸலா, உர்ப் போன்ற சட்ட மூலாதாரங்களினூடாக கால சூழ்நிலைகளின் தேவைகளுக்கேற்ப நிறைவு செய்யப்படுகிறது.

2. *பல்வேறு கருத்துக்களுக்கு இடம்பாடான சட்டவசனங்கள்:*

அல்லாஹ், தன் ஆழ்ந்த ஞானத்தின் காரணமாக பல சட்ட வசனங்களை பல்வேறு கருத்துக்களுக்கு இடம்பாடானவையாக ஆக்கி வைத்துள்ளான். இதன் காரணமாக ஒவ்வொரு காலப்பிரிவிலும் தோன்றும் முஜ்தஹிதுகள் தம் கால, சூழ்நிலைகளுக் கேற்ப சட்டத்தைப் பெறக்கூடியதாகவுள்ளது.

இதன் காரணமாகவே, பிக்ஹ் கலையில் கருத்து வேறுபாடுகளும் பல்வேறு மத்ஹபுகளும் தோற்றம் பெற்றன. அவ்வாறே இஸ்லாமிய பிக்ஹ் துறையில் வளம் மிக்க ஒரு பொக்கிஷமாகத் திகழ்வதற்கும் இதுவே காரணமாகும்.

### காலசூழ்நிலை மாற்றங்களுக்கேற்ப சட்டங்கள் மாறுதல்

காலம், இடம், சூழ்நிலை, வழக்காறு என்பன மாறுவதற்கேற்ப பல சட்டங்கள் மாறும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை விதிகளில் ஒன்று. ஷரீஅத் சட்டங்கள் இறக்கி வைக்கப்பட்ட நோக்கம் நிறைவேற வேண்டுமாயின், இவ்விதி செயற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும் என்பது புகஹாக்களின் முடிவாகும்.

அல்லாமா இப்னு ஆபிதீன் அவர்கள் குறிப்பிடுவது போல், கால சூழ்நிலை மாற்றங்களுக்கேற்ப நெகிழ்ச்சியின் செல்வாக் கிற்கு உட்படும் சட்டங்கள் மாறாவிடில் அது மனிதர்களுக்கு சங்கடத்தையும் கஷ்டத்தையும் மனக்குழப்பத்தையும் ஏற்படுத்தும். இவற்றை நீக்கி மனிதர்களின் நலன்களை பாதுகாக்கும் நோக்கிலேயே இஸ்லாமிய ஷரீஅத் அருளப்பட்டுள்ளது. எனவே, அத்தகைய சட்டங்கள், அல்லது சட்டங்களின் அடிப் படையில் வழங்கப்படும் தீர்ப்புக்கள் மாற்ற மடைய வேண்டியது இன்றியமையாததாகும்.

இவ்வாறு சட்டங்கள் அல்லது சட்டத் தீர்ப்புக்கள் மாற்றமுறுவதென்பது புதிதாக ஷரீஅத்தில் தோற்றுவிக்கப்பட்ட ஒரு வழிமுறையல்ல. மாறாக, றஸூல் (ஸல்) அவர்களின் நடைமுறை வாழ்விலும், ஸஹாபாக்கள், தாபிஈன்களது முன்மாதிரி யான வாழ்க்கையிலும் இவ்வாறு சட்டங்கள் கால சூழ்நிலை, வழக்காறு மாற்றங்களுக் கேற்ப மாற முடியும் என்பதற்கான ஆதாரங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

றஸூல் (ஸல்) அவர்களும், அவர்களது பாசறையில் வளர்ந்த ஸஹாபாக்களும் ஒரே விடயம் பற்றிக் கேட்டு வந்த பல மனிதர் களுக்கு அவர்களின் நிலைமைகளை அவதானித்து, வேறுபட்ட பத்வாக்களை வழங்கியிருப்பதனை நாம் இங்கு குறிப்பிடலாம்.

இதன் பொருள், ஷரீஅத் சட்டங்கள் யாவும் கால சூழ்நிலை மாற்றங்களுக்கேற்ப தொடர்ந்தேர்ச்சியான மாற்றத்திற்கு உட்படும் என்பதல்ல. மாறாக கியாஸ், மஸ்லஹத்துல் முர்ஸலா போன்ற சட்டமூலாதாரங்களின் அடிப்படையில் முஜ்தஹிதுகளின் சிந்தனையைப் பயன்படுத்திப் பெறப்பட்ட சட்டங்கள் மாத்திரமே மாற்றமுறும் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சட்டங்கள் மாறுவதற்கு வழிகோலும் முக்கிய காரணிகளாக இரண்டைக் குறிப்பிடலாம்.

1. கால மாற்றமும் சமூகங்களின் வளர்ச்சியும்
2. மக்களின் ஒழுக்கப்பண்பாடுகளில் ஏற்படும் வீழ்ச்சி

மக்களுடைய ஒழுக்க நிலை காலப் போக்கில் வீழ்ச்சியடைந்து, குறிப்பிடத்தக்க மாற்றம் சமூகத்தில் தோன்றும் போது அத்தகைய சூழல்களில் வழங்கப்படும் சட்டத் தீர்ப்புக்கள், முன்னைய சூழலில் வழங்கப்பட்ட சட்டத் தீர்ப்பை விட வித்தியாசமானதாக அமைய வேண்டியது அவசியம். இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக, காணாமற் போன ஒட்டகை தொடர்பாக றஸுல்(ஸல்) அவர்களின் காலத்தில் நடைமுறையிலிருந்த சட்டத்தை உஸ்மான் (றழி) அவர்கள் தமது ஆட்சிக் காலப்பிரிவில் மாற்றியமைத்ததைக் குறிப்பிடலாம்.

அவ்வாறே, சமூக முன்னேற்றம், நவீன கண்டுபிடிப்புக்கள் காரணமாக நிர்வாக ஒழுங்கு முறைகளிலும் அங்கு பயன் படுத்தப்படும் சாதனங்களிலும் பாரிய மாற்றங்கள் ஏற்படும் போது அவற்றோடு தொடர்புபட்ட பல சட்டங்கள் மாற்றமுற வேண்டியது தவிர்க்க முடியாதது. இத்தகைய ஷரீஅத்தில் நெகிழ்ச்சித் தன்மையின் செல்வாக்கிற்கு இடமிருப்பதால் இங்கு சட்டங்கள் மாறுவதற்கு இஸ்லாம் இடமளிக்கிறது.

இவை மட்டுமன்றி, திட்டவட்டமான ஒரு சட்டவசனத்தின் மூலம் உறுதிப்படுத்தப் படாத 'ழன்னிய்யா'வான சட்ட வசனங்களின் அடிப்படையில் பெறப்பட்ட சட்டத் தீர்ப்புக்கள் கூட கால, சூழ்நிலை, வழக்காறு என்பவற்றின் மாற்றங்களுக்கேற்ப மாற்றப்பட முடியும் என்பது புகஹாக்களின் முடிவாகும்.

## முடிவுரை

'இஸ்லாமிய ஷரீஆவின் மாறாத்தன்மையும் நெகிழ்ச்சித்தன்மையும்' எனும் தலைப்பிலான இக்கட்டுரையிலிருந்து நாம் பின்வரும் உண்மைகளைப் புரிந்து கொள்ள முடியும்:

* இஸ்லாமிய ஷரீஅத், அது கொண்டிருக்கும் இம்மகத்தான பண்பின் காரணமாக எல்லாக் காலங்களுக்கும் எல்லா சமூகங்களுக்கும் பொருத்தமான சட்டங்களையும் வழிகாட்டல்களையும் முன்வைக்கும் தகுதியைப் பெறுகின்றது.
* ஷரீஅத் சட்டங்கள் குறிப்பிட்ட சில பகுதிகளில் மாறாத்தன்மையைப் பிரதி பலித்தாலும், பெரும்பாலான பகுதிகள் நெகிழ்ச்சித்தன்மையின் செல்வாக்கிற்கு உட்படுவனவாக விளங்குகின்றன.
* இவ்வாறு இஸ்லாமிய ஷரீஅத் ஒரே நேரத்தில் மாறாத்தன்மையையும் நெகிழ்ச்சிப் பண்பினையும் பிரதிபலிப் பதன் காரணமாக தன் அடிப்படை அம்சங்களை இழந்து அசல் உரு மாறாமலும், கால மாற்றம், சமூக மாற்றம், சமூக வளர்ச்சி போன்றவற்றிற்கு ஈடு கொடுக்க முடியாமல் காலாவதியான சட்டமாக மாறாமலும் தொடர்ந்து நிலைத்து நின்று வழிகாட்டும் ஆற்றலைப் பெறுகின்றது.
* ஷரீஆவில் மாறாத்தன்மை பிரதி பலிக்கும் பகுதிகள் எவை? நெகிழ்ச் சிக்கும் வளர்ச்சிக்கும் உட்படும் பகுதிகள் எவை? என்பதனை முஸ்லிம் சமூகம் மிகச் சரியாகப் புரிந்து கொள்ளாமையின் காரணமாகவே இபாதத்துக் களில் நூதன அனுஷ்டானங்களைத் தோற்றுவிக்கின்ற அதே வேளை, உலகியல் நடவடிக்கைகளில் நவீன சாதனங்களைப் பயன்படுத்தி முன்னேற் றமடையாது பிற்போக்கு நிலைக்கு முஸ்லிம்கள் தள்ளப்பட்டுள்ளனர்.
* இஸ்லாமிய ஷரீஅத் பிரதிபலிக்கின்ற, அதன் சட்டங்கள், நெகிழ்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் உட்படும் பண்பினை மிகச்சரியாக விளங்கி, அதனடிப் படையில் முஸ்லிம் சமூகம் நவீன காலப்பிரச்சினைகளையும், துரித வேகத்தில் முன்னேறிச் செல்கின்ற சமூக முன்னேற்றத்தையும் எதிர் கொள்ளுமாயின், நிச்சயமாக இஸ்லாம் எல்லாக் காலத்திற்கும் எல்லா சமூகங்களுக்கும் பொருத்தமான ஒரு மார்க்கம் என்பதனை உலகறிய உணர்த்தி விட முடியும்.

**உஷாத்துணை நூல்கள்:**


1. அல்ஹஸாயிஸ் அல்- ஆம்மா லில் இஸ்லாம் -கலாநிதி யூசுப் அல்கர்ழாவி
2. அல் இஜ்திஹாத் பீ அஷ்ஷரீஆ அல் இஸ்லாமிய்யா - கலாநிதி யூசுப் அல் கர்ழாவி
3. தாரீஹ் அத்தஷ்ரீஃ அல் இஸ்லாமிய் - கலாநிதி அப்துல் அழீம் ஷரபுத்தீன்
4. அத்தத்வுறு வஸ்ஸபாத் - பேராசிரியர் முஹம்மத் குதுப்
5. ஷரீஅதுல் இஸ்லாம் - கலாநிதி யூசுப் அல் கர்ழாவி
6. அல் இஸ்லாம் இன்திலாகுன் லா ஜுமூதுன் - முஸ்தபா அர்-ராபிஈ
7. அல் மத்ஹல் லிதிராஸதில் பிக்ஹில் இஸ்லாமிய-கலாநிதி முஹம்மது யூசுப் முஸா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுமை வாழ்வின் சாத்தியப்பாடும் அதன் அவசியமும்

எம். றஸீன் ஹசன்

மனித இனம் தோன்றியது முதல் போராட்டங்களும் முரண்பாடுகளும் இருந்து வருவதை வரலாறு கூறிக் கொண்டிருக்கிறது. பலவீனமான மனித அறிவின் அடியாக எழுந்த மதங்கள், கொள்கைகள், சித்தாந்தங்கள் என்பன மனித வாழ்வு பற்றிய சரியான கணிப்பீட்டை வழங்கத் தவறியமையே இப்போராட்டங்களுக்கும் முரண்பாடுகளுக்கும் பெரும்பாலும் காரணமாக அமைகிறது. இதன் மூலம் மனிதனை விட மேலான ஆற்றல் பொருந்திய ஒரு சக்தியினாலேயே இப்பணி சாத்தியமாகும் என்பது தெளிவாகின்றது.

இஸ்லாம் தவிர்ந்த ஏனைய அனைத்து மதங்களும் கொள்கைகளும் ஒன்றில் தூய துறவறத்தையோ அல்லது முழுமையான சடவாதத்தையோ போதித்து, மனித வாழ்வின் இலட்சியத்தை அலட்சியப்படுத்தி விட்டதையும் அதன் பிரதி விளைவுகளையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அல்லாஹ் வினால் அருளப்பட்ட இஸ்லாம் இந்த இரு துருவ சிந்தனைகளிலிருந்தும் வேறுபட்ட தனியானதொரு சிந்தனையை மனித இயல்பினைக் கருத்திற் கொண்டு முன் வைக்கிறது. மனித இயல்பு எனும் போது உடல், பகுத்தறிவு, ஆன்மா ஆகிய மூன்று கூறுகளினதும் கலப்பையே குறிக்கிறது. சடவாதத்தைப்போல உடலை மட்டும் கருத்திற் கொண்டு ஆன்மாவைப் புறக்கணித்தோ, அல்லது துறவறத்தைப் போன்று ஆன்மாவை மட்டும் கருத்திற் கொண்டு உடலைப் புறக்கணித்தோ தனது கொள்கையை முன் வைக்காது உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்றினையும் இஸ்லாம் கருத்திற் கொள்கிறது.

"உமது இரட்சகன் மலக்குகளை நோக்கி, "நான் மண்ணினால் மனிதனைப் படைக்கப் போகிறேன். அவ்வாறு படைத்து சீரமைத்து, அவனில் என்னிடமிருக்கிற ரூஹை ஊதினால் நீங்கள் அவனுக்கு ஸஜ்தா செய்யுங்கள், (என்றான்)." (38:70,71)

மேற்போந்த இறை வசனத்தின் மூலம் மனிதன் களிமண்ணினால் படைக்கப் பட்டதிலிருந்து அவனுக்கு சில லௌகீகத் தேவைகள் இருப்பது போலவே, அவனில் விஷேட ஆத்மா அமையப் பெற்றிருப்பதால் அவனுக்கு சில ஆத்மீகத் தேவைகளும் இருக்கின்றன என்பது புலனாகின்றது. அதாவது, மனிதன் படைக்கப்பட்டுள்ள இயற்கை அமைப்பே அவனிடம் சில ஆன்மீக, லௌகீகத் தேவைகளை வேண்டி நிற்கின்றது. ஆத்மா பற்றிக்கூற வந்த கலாநிதி 'ரொயின்', "மனிதனை நோக்குமிடத்து, அவனுள் ஓர் ஆன்மா அல்லது கண்களால் பார்க்க முடியாத இன்னொரு சக்தி இருக்கிறது என்பது உறுதியாகிறது" என்கிறார்.

சடவாதம் மனிதனது ஆன்மீகத் தேவைகளைப் புறக்கணிக்க, துறவறமோ அவனது லௌகீகத் தேவைகளைப்புறக்கணித்து அவனை அவனது இயல்பிலிருந்து தூரப் படுத்த முயல்கிறது. உண்மையில் சடவாதி களோ, துறவிகளோ மனிதனைப் படைக்க வில்லை. எனவே, அவர்களுக்கு மனித இயல்புக்கு இயைய ஒரு சிறந்த கொள்கைத் திட்டத்தை எப்படி முன்வைக்க முடியும்? இதற்கு மாறாக படைப்பாளனான அல்லாஹ் மலக்குகளுக்கும் மிருகங்களுக்குமிடைப்பட்ட மத்திமமான நிலையில் ஆன்மீக லௌகீகத் தேவைகளை உடையவனாக மனிதனைப் படைத்து அவ்வியல்புகளுக்கு ஏற்ற வழிகாட்டலை 'வஹி'யினூடாக வழங்கினான்.

இப்படிப்பட்ட ஒரு கொள்கைதான் மனிதனை இலட்சிய புருஷனாக மாற்ற வல்லது. மனிதனின் இலட்சியம் நல்லதா? கெட்டதா? என்பதில்தான் அவனது வாழ்வின் யதார்த்தம் தங்கியுள்ளது. அது போன்றே ஒரு சமூகத்தின் எழுச்சியும் வளர்ச்சியும் அதன் இலக்கையும் தூர நோக்கையுமே பெரிதும் சார்ந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை உறுதியானதாக அமையும் பட்சத்திலேயே அதன் மீது எழுப்பப்படும் மதங்கள், கொள்கைகள், கோட்பாடுகள் என்பன அவற்றின் இறுதி இலக்கை அடைவது சாத்தியமாகும். இந்த வகையில் இஸ்லாம் இட்டுள்ள அடித்தளங்கள் ஆழமானவையும் உறுதி மிக்கவையும் ஆகும். அது மனித வாழ்வை அர்த்தப்படுத்துவதற்காக இட்ட முக்கிய அடிப்படைகளாக ஏகத்துவம் (தௌஹீத்), தூதுத்துவம் (ரிசாலத்), மறுமை நம்பிக்கை (மஆத்) என்பன காணப்படுகின்றன. இவற்றுள் ஏகத்துவம், மறுமை, நம்பிக்கை ஆகிய இரண்டும் அதி முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். எனவேதான் பல அல்குர்ஆன் வசனங்களிலும் ஹதீஸ்களிலும் இவையிரண்டும் இணைக்கப்பட்டு, "யார் அல்லாஹ்வையும் மறுமைநாளையும் விசுவாசம் கொள்கிறாரோ...." எனக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

இந்த வகையில், மனித வாழ்வை அர்த்தப்படுத்துவதில் மறுமை பற்றிய கோட்பாட்டின் முக்கியத்துவம் யாது? அது பகுத்தறிவோடு ஒத்துவரக் கூடிய ஒரு கொள்கையா? அவ்வாறான ஒரு நிகழ்வு சாத்தியமா? என்பன போன்ற வினாக்களுக்கு நாம் விடைகாண வேண்டியுள்ளது. இஸ்லாத்தின் பார்வையில் உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளிலும் உயர்ந்த படைப்பாக மனிதன் காணப்படுகிறான். இப்பிரபஞ்சமும் அதிலுள்ள அனைத்தும் அவனுக்காகவே சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. இங்கு நாம் மனிதனின் அந்தஸ்து பற்றிய இஸ்லாத்தின் கருத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். அல்லாஹ் மனிதனைக் கண்ணியப்படுத்தி, தனது பிரதிநிதியாக அவனை ஆக்கியிருப்பதே அவன் மீதான இறைவனின் மதிப்பை எடுத்தியம்புகிறது. இத்தகைய கண்ணியம் பொருந்திய மனிதனது இறுதி முடிவும், எவ்விதப்பொறுப்புக்களும் சுமத்தப்படாத ஏனைய படைப்பினங்களது முடிவும் ஒரே தன்மை வாய்ந்தனவாக அமைவதை பகுத்தறிவு ஒருபோதும் அங்கீகரிக்காது. வாழ்வின் அர்த்தம் மரணத்தோடு மறைந்து போவதை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்.? இவ்வினாக்கள் மறுமை ஏற்படுவது அவசியம் என்பதை வலியுறுத்துவனவாய் உள்ளன.

உதாரணமாக, ஓர் உயர்ந்த பதவிக்காக தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் நோக்கோடு ஒரு போட்டிப்பரீட்சை நடத்தப்படுகிறது; சில பரீட்சார்த்திகள் மிகவும் சிரத்தையோடு பரீட்சையை எழுதுகின்றனர்; இன்னும் சிலர் அலட்சியப்படுத்துகின்றனர். இந்த இரு சாராரையும் ஒன்றுபோலக் கருத பரீட்சை தர்மம் எவ்வாறு இடங் கொடுக்காதோ அவ்வாறே இவ்வுலக வாழ்வில் நன்மை செய்தவனும் தீமை செய்தவனும் ஒரே முடிவை அனுபவிக்க இறை நியதி இடமளிக்காது.

அடுத்த அம்சமாக, மறுமை பற்றிய நம்பிக்கைக் கோட்பாடு மனித வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கத்தினையும் அதன் முக்கியத்துவத்தையும் நாம் அறிவது அவசியமாகிறது. இக்கோட்பாடு மனித வாழ்வின் சில பகுதிகளோடு மாத்திரம் வரையறுக்கப்படாமல் முழு வாழ்க்கையுடனும் தொடர்புபட்டதொன்றாக அமைந்துள்ளது. ஒரு முஃமினின் சகல நடவடிக்கைகளும் இதனை மையமாகக் கொண்டே அமைவதால் அவற்றில் அவன் இறை திருப்தியை எதிர் பார்க்கிறான். தான் இம்மையில் புரிகின்ற நற்செயல்களுக்கு நிறைவான சன்மானமும் தீச்செயல்களுக்கு முழுமையான தண்டனையும் நிச்சயம் மறுமையில் கிடைக்கும் என உறுதியாக நம்புவதால், நன்மையான அம்சங்களில் போட்டி போடக்கூடியவனாகவும் தீமையான அம்சங்களை விட்டும் தவிர்ந்து கொள்ளக் கூடியவனாகவும் திகழ்கின்றான். அவனது இந்த இயல்பு மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும் அமைகிறது.

இவ்வாறான நம்பிக்கை இல்லாத நிலையில், சராசரி மனிதனொருவனுக்கு துன்பங்களும் சோதனைகளும் ஏற்பட்டால் அவன் பெரும் விரக்தி நிலைக்கே தள்ளப்படுவான் என்பதில் ஐயமில்லை. இதன் உடனடி விளைவாக நற்செயல்களில் இருந்து தன்னைத் தூரப்படுத்தி, சமூக விரோத செயல்களில் அவன் ஈடுபடுவதற்கு வாய்ப்பேற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையானது தனது மரணத்துடன் முற்றுப்பெறுகின்றது என நம்பும் மனிதன், அவனது குறைந்த ஆயுளுக்குள் எல்லா விதமான இன்பங்களையும் அனுபவித்து விட வேண்டும் என்ற வெறியோடு செயற்களத்தில் குதித்து விடுவதைக் காணலாம். தான் விசாரிக்கப்படும் சந்தர்ப்பமொன்று தனக்கு ஏற்படாது என்ற நம்பிக்கையில் செயற்படும் இம்மனிதன் எத்தகைய தீய செயலையும் தயங்காமல் செய்து விடுகிறான். இவனது எந்தக்காரியத்திலும் கலப்பபற்ற சுயநலமே முன்னால் நிற்கும். இந்த நம்பிக்கையோடு உலகில் ஒரு குழுவினர் செயற்படும் போது சத்தியம், நீதி, நேர்மை போன்ற அனைத்தும் செயலிழந்து போய் விடுகின்றன. இச்சிந்தனையைத்தான் சடவாதம் போதிக்கிறது.

இவைகளை வைத்து நோக்குகின்ற போது மனிதனை நெறிப்படுத்தி, இம்மையை அர்த்தப்படுத்தி, இஸ்லாம் அறிமுகப்படுத்தும் மறுமை பற்றிய கோட்பாடு எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதைக் காணலாம். எனவே, மறுமையின் சாத்தியம் பற்றி அறிவியல் ரீதியில் ஆராய்வது பொருத்தமானதாகும்.

19ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட 'வெப்பக்கடத்தல் விதி', "வெப்பமானது வெப்பம் கூடிய பொருளிலிருந்து வெப்பம் குறைந்த பொருளுக்கு தொடர்ந்தும் கடத்தப்படுகின்றது. ஒரு கட்டத்தில் அது நின்று விடும்போது உலகம் அழிவுறும்" என்று கூறுகின்றது. இது குறித்து பிரபல விஞ்ஞானியான 'ஜேம்ஸ் ஜீன்ஸ்' தனது THE MYSTRIOUS UNIVERSE என்ற நூலில் 133ஆம் பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "நவீன விஞ்ஞானம் வெப்பக்கடத்தல் விதியை ஏற்றுக் கொள்கிறது'. இவ்விதி தனது இறுதிக்கட்டத்தை இன்னும் அடையவில்லை. அவ்வாறு அடைந்திருந்தால் நாம் தற்போது இப்பூமியில் இருந்திருக்க மாட்டோம்" இதன் மூலம் இப்பூமியானது என்றோ ஒரு நாள் அழிந்து விடத்தான் போகிறது என்பது உறுதியாகின்றது.

இந்த உலகில் மனிதர்களில் சிலர் தங்கள் வாழ்வை நேர்மையோடும் சத்தியத்தோடும் அமைத்துக் கொண்ட போதிலும் அதிகமான சோதனைக்கு உள்ளாகின்றனர். அசத்தியவாதிகளும் அநியாயக்காரர்களும் எவ்விதக்கவலையும் இன்றி ஏனையோரைச் சுரண்டி படாடோபமாக வாழ்ந்து மரணிக்கின்றனர். பல சந்தர்ப்பங்களில் சத்தியத்தை அசத்தியம் மண்டியிட வைத்து விடுவதையும் காண்கிறோம். இந்த அம்சம் மனிதனது சாதாரண நியாய உணர்வுக்கு முரணானதாகும். எனவே, இவற்றிற்கெல்லாம் உண்மையாகத் தீர்ப்பளிக்கும் பாரபட்சமற்ற ஒரு விசாரணை நாள் அவசியத்தேவை என்பது உணரப்படுகிறது.

மனிதன் இயல்பிலேயே பல ஆசைகளைக் கொண்டவனாக இருப்பினும் அவற்றையெல்லாம் இவ்வுலகிலேயே அவனால் அடைந்து கொள்ள முடிவதில்லை. இத்தகைய அவனது ஆசைகளை நியாயமான முறையில் அடைந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டியுள்ளது. இது மறுமையின் அவசியத்தை உணர்த்துவதாக அமைகிறது.

இவ்வுலகின் சடப்பொருட்களும் சுக போகங்களும் தண்டனை முறைகளும் வரையறுக்கப்பட்டு இருப்பதால், ஒருவனுக்கு பொருத்தமான தண்டனையோ வெகுமதியோ வழங்குவதற்கு இவ்வுலகம் பொருத்தமற்றது. உதாரணமாக: நூறு கொலைகள் செய்த ஒருவனை ஒரே ஒரு முறையே கொலை செய்ய முடியும் என்பது உலக நியதியாகும். இவ்வாறான தீர்ப்புகள் குறைபாடானவை என்பதால் இக்குறைபாடுகள் அற்ற தீர்ப்பு வழங்கப்படுவதற்கு மறுமை அவசியம் என்பது தெரியவருகிறது.

ஒருவருக்குத் தெரியாத ஒரு விடயம் பற்றி அவரிடம் கேட்கப்படும் போது, அவர் அதை அறியா விட்டால், அவ்விடயம் தனக்குத் தெரியாது என்று கூற முடியுமே தவிர அப்படியொரு விடயம் இல்லை என்று மறுக்க முடியாது என்பது ஓர் எளிய தர்க்கவியல் உண்மையாகும். இது போலவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்விடமிருந்து வஹி மூலம் அறிவிக்கப்பட்ட மறுமையை மனிதன் தன் கண்களால் கண்டிருக்காவிட்டாலுங்கூட அதை மறுதலித்து விட முடியாது.

எல்லா விடயங்களும் புலனுணர்வுக்குத் தட்டுப்பட வேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது. அவ்வாறே குறைபாடுகள் கொண்ட மனிதப்புலனுணர்வுகள் எல்லா அம்சங்களையும் கிரகிக்கும் ஆற்றல் படைத்தவை என்று கூறவும் முடியாது. இந்நிலையில், ஒரு விடயத்தை நம்புவதற்கு தொடுகை, பார்வை என்பவற்றோடு நம்பத்தகுந்த ஒருவரின் வாயிலாகவும் குறித்த விடயத்தின் உண்மைத்தன்மை ஊர்ஜிதப் படுத்தப்படுகிறது. நம்பத்தகுந்தவரான நபியவர்கள் கூறியுள்ள மறுமையும் அவ்வாறே அமைகிறது.

உலகில் மனிதன் பேசுகின்ற அனைத்து வார்த்தைகளும் ஒலிகளும் அலை வடிவாக பதிவாகியுள்ளன. அவற்றை நவீன கருவிகள் மூலம் மீளவும் செவிமடுக்க முடியும் என்கிறது நவீன விஞ்ஞானம். இது எவ்வாறு சிற்றறிவு படைத்த மனிதனுக்கு சாத்தியமாகிறதோ அது போன்றே மறுமையை ஏற்படுத்துவது பேரறிவு படைத்த இறைவனுக்குச் சாத்தியமாகும்.

உடல், ஆன்மா ஆகிய இரு அம்சங்களால் பின்னப்பட்டுள்ள மனிதன் மரணித்த பின் அவனது உடல் மண்ணோடு கலந்து விடுகிறது. ஆனால் அவனது ஆன்மாவின் முடிவு என்ன என்பது கேள்விக்குறியாகவே அமைகிறது. இவ்வாறு ஆன்மாவானது சூட்சுமமாக மறைந்து விடுவது மறுமை என்ற உண்மை சாத்தியம் என்பதை உணர்த்துகிறது.

பிரபஞ்சத்தின் பிரமாண்டத்தன்மையை அதில் நிறைந்துள்ள மர்மங்களும் நுட்பங்களும் அவைகளுக்குப்பின்னால் ஒரு பெரும் சக்தியும் ஓர் அர்த்தமுள்ள இலட்சியமும் இருப்பதை உணர்த்துகின்றன. அந்த இலட்சியமே மறுமையாகும்.

எது எவ்வாறு இருப்பினும், முஃமின் என்பவன் தன் அறிவையும் புலனுணர்வு களையும் மாத்திரம் நம்பியிருக்கும் சடவாதியல்ல. அவற்றிற்கப்பால் 'வஹி' மூலம் அவனுக்கு வழங்கப்பட்டுள்ள அம்சங்களையும் அவன் நம்புகிறான். இந்த வகையிலேயே அவனது மறுமை பற்றிய நம்பிக்கையும் அமைகிறது.

***"அது (அல்குர்ஆன்) தக்வா உடையவர்களுக்கே நேர்வழி காட்டும். அவர்கள் (புலன்களுக்கப்பாற்பட்ட) மறைவான அம்சங்களை நம்பக்கூடியவர்கள்" (2:2,3)***

உஷாத்துணைகள்:-

* மபாதிஉல் இஸ்லாம் (அபுல் அஃலா மௌதூதி)
* அல் இன்ஸான் பை(B)னல் மாத்திய்யா வல் இஸ்லாம் (முஹம்மத் குதுப்)
* இஸ்லாம் என்றால் என்ன? (மௌஹறுத்தீன் சித்தீகி)

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ மதம் - ஒரு விமர்சன நோக்கு

எஸ். எம். ஏ. உமர் பாரூக் (நான்காம் வருடம்)

இன்று சர்வதேச ரீதியில் கிறிஸ்தவர்கள் தமது மதப்பிரசாரங்களைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர். அதில் அவர்கள் பெரும் வெற்றியும் கண்டுள்ளனர். கிறிஸ்தவ மதத்தைத் தழுவுவோரில் பெரும்பாலானோர் முஸ்லிம் நாடுகளைச்சேர்ந்தவர்களாக இருப்பது பெரும் கவலைக் குரியதாகும். குறிப்பாக இந்தோனேசியா, பங்களாதேஸ் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களே இக்கவலைக்கிடமான நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர். முஸ்லிம்களைக் கிறிஸ்தவர்களாக மாற்றுவது ஒவ்வொரு கிறிஸ்தவர் மீதும் கட்டாயக் கடமையாகும்[1] என மிஷனறிகள் கிறிஸ்தவர்கள் மத்தியில் தீவிரப்பிரசாரங்களை மேற்கொள்ளுகின்றன. இந்தவகையில் இலங்கையிலும் கிறிஸ்தவ மதப் பிரசாரம் முடுக்கி விடப்பட்டுள்ளதை எம்மால் அவதானிக்க முடிகிறது. எனவே, ஒவ்வொரு முஸ்லிமும் கிறிஸ்தவ மதத்தைப் பற்றி அறிந்திருப்பது இன்றியமையாததாகும்.

அல்லாஹ் மானிட சமூகத்திற்கு வழிகாட்டும் பொருட்டுப் பல இறைத் தூதர்களை இவ்வுலகிற்கு அனுப்பினான். அதில் குறிப்பாக நால்வரைத் தெரிவு செய்து அவர்களுக்கு வேதங்களையும் அருளினான். அந்த வகையில் மூஸா (அலை) அவர்களுக்கு தவ்ராத் வேதமும், தாவூத் (அலை) அவர்களுக்கு ஸபூர் வேதமும், ஈஸா (அலை) அவர்களுக்கு இன்ஜீல் வேதமும், இறுதியாக முஹம்மது (ஸல்) அவர்களுக்கு புர்கான் வேதமும் வழங்கப்பட்டன. முதல் மூன்று வேதங்களும் இஸ்ரவேலர்களுக்கே வழங்கப் பட்டன. தற்போது அவை அனைத்தும் அம்மக்களால் திரிபு படுத்தப்பட்டு, அசல் தன்மையை இழந்து காணப்படுகின்றன.

**"நிச்சயமாக நாம் மூஸாவுக்கு ஒரு வேதத்தைக் கொடுத்தோம். அவருக்குப்பின் தொடர்ச்சியாகப் பல தூதர்களையும் அனுப்பிவைத்தோம். மரியமுடைய மகன் ஈஸாவுக்குத் தெளிவான அத்தாட்சிகளைக் கொடுத்து, ஜிப்ரீல் எனும் பரிசுத்த ஆவியைக் கொண்டு அவரைப்பலப்படுத்தினோம். ஆனாலும், உங்கள் மனம் விரும்பாத யாதொன்றையும் நம்முடைய எந்தத் தூதர் உங்களிடம் கொண்டு வந்த போதிலும் நீங்கள் கர்வம் கொண்டு விலகிக் கொள்ள வில்லையா? அன்றியும் அத்தூதர்களில் சிலரை நீங்கள் பொய்ப்படுத்தி, சிலரைக் கொலை செய்தும் விட்டீர்கள். (2.87)**

மூஸா (அலை) அவர்கள் யூத சமூகத்தின் மத்தியில் தமது ஏகத்துவப் பணியை மேற்கொண்டார்கள். எனினும் கடின சித்தம் கொண்டயூதர்கள் அவரையும் அவரது போதனைகளையும் நிராகரித்து, சொல்லொணாக் கொடுமைகளையும் அவருக்கு ஏற்படுத்தியதை வரலாறு கூறுகிறது. மூஸா (அலை) அவர்களது மரணத்தைத் தொடர்ந்து வழிபிறழ்ந்த யூதர்கள், தங்கள் மனம் போன போக்கில் வாழலாயினர். எனவேதான் ஈஸா (அலை) அவர்கள், அவ் வழிபிறந்த யூதர்களை நேர் வழிப்படுத்த அச்சமூகத்தாருக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

## ஈஸா (அலை) அவர்களின் பிறப்பு

ஈஸா (அலை) அவர்களின் பிறப்புக் குறித்து அல் குர்ஆன் முன்வைக்கும் கருத்துக்கள் சிலவற்றை நோக்குவோம். தனது வாழ்நாளில் திருமணமே செய்யாத, கற்பு நெறி தவறாத மரியமெனும் பரிசுத்தமான பெண்ணின் கருவில் தந்தையின்றி, இறைவனின் அற்புதசக்தியால் ஈஸா (அலை) அவர்கள் உருவானார்கள். இதன்பின் இவர்களைப் பெற்றெடுத்த மரியம் தனது ஊருக்கு வரவே அவரைப்பற்றி அவ்வூரார் அவதூறு கூறினார்கள். அதற்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் அப்பச்சிளங் குழந்தை, "தான் இறைவனின் சக்தியால் உண்டான ஒரு குழந்தை எனவும், தனக்கு ஒருவேதம் அருளப்பட இருப்பதாகவும் கூறியது" என சூரத்து மரியமின் (28-35) வசனங்கள் இச்சம்பவம் குறித்து விபரிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸா நபியின் பிறப்புக் குறித்து கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள கருத்தாவது: இயேசு பலஸ்தீனத்தின் தென்பகுதியில் பெதலகேமில் (Bethlehem) புனித கன்னி மரியாளுக்குப் பிறந்து, 'நஸரோத்' Nazareth எனும் ஊரில் வாழ்ந்தார் என்பதாகும்.[II] ஈஸா நபியின் அற்புதப்பிறப்பு குறித்து கிறிஸ்தவர்களின் வேதத்திலோ வரலாற்றிலோ குர்ஆன் விபரிப்பது போன்ற ஆச்சரியம் நிறைந்த, தெளிவான தகவல்களைக்காண முடியாதுள்ளது.

## ஈஸா நபியின் தூதும் பணியும்

ஈஸா நபியின் தூது குறித்து கிறிஸ்வர்கள் இவ்வாறு நம்புகிறார்கள். அதாவது, ஆதிபிதா ஆதம் செய்த தவறின் காரணமாக முழு மனித சமுதாயமும் பாவியாகக் காணப்படுவதால், இறைவனோடு உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது. எனவே இந்நிலையைநீக்கி, பாவிகளான மனிதர்களை இரட்சிப்பதற்காக இறைவன் தன்னை ஏசுவாக மேரி மூலம் மனித உருவில் வெளிப்படுத்தினான் எனவும், ஆண்டவர் ஏசுகிறிஸ்து இயற்கைக்கு அப்பாற்பட்ட, 30க்கும் அதிகமான அற்புதங்களை நிகழ்த்தும் ஆற்றல் பெற்றிருந்தார் எனவும் நம்புகின்றனர்.[III] இவ்வாறு அவர்கள் நம்பினாலும் தான் நிச்சயமாக இறைவனால் அனுப்பப்பட்ட ஒரு தூதர் என்றும்; தனக்கு இறைவன் அறிவித்ததைத் தவிர வேறு எதுவும் தெரியாது எனவும், தான் கடவுள் அல்ல என்பதையும் வலியுறுத்தும் விதத்தில் ஏசு கூறியதாக பைபிளில் வரும் சில வசனங்களின் கருத்துச்சுருக்கங்கள் வருமாறு:

* "பரலோகத்தில் இருக்கும் இறைவனின் கட்டளைப்படி செயல்படுபவனே சுவர்க்கம் புகுவானேயன்றி என்னை நோக்கிக் கடவுளே..கடவுளே..என்று கூறுபவன் அல்ல." மேலும், மறுமையில், என்னைக் கடவுள் என்றழைத்தவர்களை "நான் ஒரு போதும் உங்களை அறியவில்லை.. அக்கிரமக் காரர்களே என்னைவிட்டும் விலகிச் செல்லுங்கள்" என ஏசு கூறுவார்.

(மத்தேயு–7ம் அத்தியாயம் 21–23)

* "இறைவனால் அனுப்பப்பட்ட நான், என்னை அனுப்பிய இறைவனை விடப் பெரியவன் அல்லன்."

(யோவான்–13,16)

* "மறுமை நாள் ஏற்படும் என்பதை நானோ அல்லது வேறு தீர்க்க தரிசிகளோ அறியமாட்டோம்; இறைவன் மாத்திரமே அறிவான்."

(மாற்கு–13:32)

* "நான்எதையும் சுயமாய்ச்செய்யவில்லை; என்னை அனுப்பிய இறைவனின் கட்டளைப்படியே செய்கிறேன்."

(யோவான் 5:30)

இந்த இடத்தில் இஸ்லாம், ஈஸா நபியின் பணி குறித்துக் கொண்டுள்ள கருத்து நோக்கத்தக்கது. ஈஸா (அலை) வளர்ந்து உரிய வயதை அடைந்த போது அல்லாஹ் அவரைத் தனது தூதராக்கி இன்ஜீல் எனும் வேதத்தையும் அருளினான். இவருக்குப் பல சீடர்கள் இருந்தார்கள். அவர்களுடன் ஈஸா (அலை) பல இடங்களுக்கும் சென்று, எதிரிகளின் எதிர்ப்புகளுக்கு அஞ்சாது ஏகத்துவப் போதனையைச் செய்துவந்தார். கடினமனம் படைத்த அம்மக்களுக்கு இறை போதனையை முன்வைக்க ஈஸா நபிக்கு அல்லாஹ் பல அற்புதமான அத்தாட்சிகளை வழங்கினான். அவற்றில், இறந்தவர்களை உயிர்ப்பித்தல்; குருடு, செவிடு, ஊமை வெண்குஷ்டம், சப்பாணி போன்ற நோய்களைக் குணப்படுத்தல்; களிமண்ணால் பறவையைச் செய்து உயிரூட்டல் போன்றன குறிப்பிடத்தக்கவை. இவ்வாறான அற்புதங்களை ஈஸா(அலை) அவர்கள் செய்து காட்டியும் கூட யூதர்கள் இறைபோதனையை நிராகரித்து, அவையாவும் சூனியம் என உதறித்தள்ளி, நபி ஈஸா(அலை) அவர்களைக் கொல்வதற்கும் முயற்சித்தனர். அவ்வற்புதங்களை நம்பிய கிறிஸ்தவர்களோ நாளடைவில் அவரையும் அவரது தாயையும் கடவுள்களாக எடுத்துக் கொண்டனர். இது குறித்து ஈஸா நபியிடம், **"உம்மையும் உமது தாயாரையும் கடவுள்களாக எடுத்துக் கொள்ளுமாறு மனிதர்களுக்கு நீர் கூறினீரா?"** என மறுமையில் அல்லாஹ் கேட்பான். அதற்கு ஈஸா நபி.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ எனக்கு ஏவிய பிரகாரமே நான் அவர்களை நோக்கி, 'நீங்கள் எனக்கும் உங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வையே வணங்குங்கள்' என்று கூறினேனே அன்றி வேறொன்றையும் கூறவில்லை. நான் அவர்களுடன் இருந்த வரையில் அவர்களின் செயலைப்பார்த்துக் கொண்டிருந்தேன். நீ என்னைக் கைப்பற்றிய பின்னர் நீதான் அவர்களைக் கவனித்தவனாய் இருந்தாய். யாவற்றுக்கும் நீயே சாட்சியாளனாக இருந்தாய்" எனக் கூறுவார்கள்.

(5:116)

## ஏசு சிலுவையில் அறையப்பட்டாரா?

ஏசு 'கெதரோன்' ஆற்றுக்கு அருகில் பன்னிரண்டு சீடர்களோடு இராப்போசனம் அருந்தி இறுதிப்பிரசங்கம் நிகழ்த்திக் கொண்டிருந்த வேளை, அவரது சீடர்களில் ஒருவனான 'யூதாசின்' என்பானின் உதவியோடு, யூத மதத்தலைவர்களாலும் எதிரிகளாலும் கைது செய்யப்பட்டு நீதிக்கு முரணாகச் சிலுவையில் அறையப்பட்டார் என யோவான் 18ம் அத்தியாயத்தில் 1- 40. வரையான வசனங்கள் விபரிக்கின்றன. எனினும் ஏசு சிலுவையில் அறையப்பட்டமை தொடர்பாகவும் அவர் மூன்றாம் நாள் திரும்பவும் உயிர் பெற்று எழுந்தது தொடர்பாகவும் பைபிளிலேயே பல முரண்பாடுகள் காணப்படுகின்றன.

'யூதாஸ்' என்பவன் ஏசுவின் நெற்றியில் முத்தமிட்டு, 'இவர்தான் ஏசு' என்று எதிரிகளிடம் காட்டிக் கொடுத்தான். இதனையே 'மத்தேயு' 26:48இல் காணலாம். இதற்கு முரணாக ஏசுவே தம்மை அடையாளம் காட்டிக் கொண்டதாக 'யோவான்', 18,5-8இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தம்மைப் பிடிக்க வந்தவர்களுடன் ஏசு போர்புரியக் கத்தியை வைத்திருந்ததாகவும் தம்மைக் காட்டிக் கொடுத்தவர்களைச் சபித்து, இறைவனிடம் தாம் சிலுவையில் அறையப் படுவதிலிருந்து பாதுகாக்கும் படி மன்றாடியதாகவும் சிலுவையில் அறையப்படும் போது "தேவனே, தேவனே... ஏன் என்னைக் கைவிட்டீர்?" என அவலக்குரல் எழுப்பியவராக உயிர் நீத்தார் எனவும் 'மத்தேயு' 16:24, 37,38,39 இலும் 'மத்தேயு' 27:46,50 இலும் 'லூக்கா' 22:1,38,42 இலும் காணப்படுகிறது.

கிறிஸ்வதவர்கள், ஏசு மனிதர்களின் பாவத்தைப் போக்குவதற்காகச் சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீத்ததாகக் கூறுகின்ற அதேவேளை, ஏசுவோ தாம் சிலுவையில் அறையப்படுவதை ஒருபோதும் விரும்பவில்லை என்பதை மேற் கண்ட வசனங்கள் மூலம் விளங்கிக் கொள்ளலாம். மேலும் 'யோனா' 3 இரவுகளும் 3 பகல்களும் மீனின் வயிற்றில் இருந்தது போல், நானும் பூமியின் இருதயத்தில் மூன்று இரவுகளும் மூன்று பகல்களும் இருப்பேன்" என ஏசு கூறியதாக மத்தேயு 12:4ல் காணப்படுகிறது. இதற்கு முரணாக 'மகலதலேனா மரியாள்' ஞாயிறு காலை, ஏசு அடக்கம் செய்யப்பட்ட தாகக் கூறப்படும் கல்லறைக்கு வந்தபோது, அங்கு ஏசுவைக் காணவில்லை. அவர் உயிர் பெற்று எழுந்து விட்டதாக யோவான் 20:1 இல் காணப்படுகிறது. ஏசு வெள்ளிக்கிழமை காலை அடக்கம் செய்யப்பட்டதாக கிறிஸ்தவர்கள் கூறுகின்றனர். எனவே, யோவானின் 20:1 இன் கருத்தின் பிரகாரம் ஞாயிறு ஏசு உயிர்த்திருந்தால், 2 இரவுகளும் 1 பகலுமே பூமியின் இருதயத்தில் இருந்திருந்திருப்பாரே யன்றி, மத்தேயு 12:4 இல் குறிப்பிட்டது போன்று 3 இரவுகளும் 3 பகல்களும் இருக்கவில்லை.

இவ்வாறு ஏசு சிலுவையில் அறையப் பட்டதாகக் கூறும் அனைத்துக் கருத்துக்களும் முரண்பாட்டுக்கும் சந்தேகத்துக்கும் உட்பட்டி ருந்தாலும் கூட, தற்போதைய கிறிஸ்தவர்கள் 'ஏசு சிலுவையில் அறையப்பட்டார்' என்றே நம்புகின்றனர். எனினும், பூர்வீகக் கிறிஸ்த வர்களான 'பஸிலிடன்ஸ்' (Bacilidans), 'ஸிரிந்தியன்' (Syreindian), 'நஸரேனர்' (Nazarener) போன்றோர் 'ஏசு சிலுவையில் அறையப்படவில்லை' எனவும், 'யூதாஸ் கெரியோத்' என்பவனே அறையப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றனர்.[IV] மேலும், 'பர்னபாஸ்' தனது சுவிசேஷத்திலும், ஏசுவை ஒத்த சாயலைக் கொண்ட 'யூதாஸ்'தான் சிலுவையில் அறையப்பட்டதாகக் கூறுகின்றார்.[V]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளை வைத்து நோக்கும் போது உண்மையில் ஏசு சிலுவையில் அறையப் படவில்லை என்றே தெரிகிறது. அல்குர் ஆனும் இதனை வலியுறுத்தும் வகையில் பின் வருமாறு குறிப்பிடுகிறது:

**"ஈஸாவை அவரது எதிரிகள் சிலுவையில் அறையவுமில்லை, கொல்லவு மில்லை. இது விடயத்தில் அவர்கள் தவறான கருத்தையே கொண்டுள்ளனர். ஈஸாவை அல்லாஹ் தன் பால் உயர்த்திக் கொண்டான். எனினும் அவரை ஒத்த ஒருவரையே அவ்வெதிரிகள் சிலுவையில் அறைந்தனர்.**

**(4:157,158)**

## கிறிஸ்தவர்களின் வேதநூல்

இன்றைய கிறிஸ்தவர்களின் வேத நூலாக 'பைபிள்' காணப்படுகிறது. அது ஒரு புத்தகம் அன்று. மாறாக, பல புத்தகங்களைக் கொண்ட ஒரு கோவையாகும். இந்த முழுக்கோவையும் இரண்டு பாகங்களாகப் பிரிகிறது. ஒன்று 'பழைய ஏற்பாடு' (old testament) இதில் மூஸா நபியவர்களின் தவ்றாத்தும், தாவூத் நபியவர்களின் ஸபூரும் அடங்கி இருக்கின்றன. மற்றையது 'புதிய ஏற்பாடு' (New testament). இதில் ஈஸா நபியவர்களின் உபதேசங்களும், மற்றும் பலரின் கடிதக் கோவைகளும் காணப்படுகின்றன.

இன்று எம் மத்தியிலுள்ள பைபிளானது அதன் புனிதத்தன்மையை இழந்து, வரலாறு நெடுகிலும் மனிதக் கரங்களால் பல மாற்றங்களுக்குட்பட்டு வந்துள்ளது. கி.பி. 4ஆம் நூற்றாண்டில் st'jerone என்பவர் கிரேக்க மொழியிலிருந்த பைபிளை பல மாற்றங்களுக்குள்ளாக்கி இலத்தீன் மொழியில் Latin Vulagte என்ற பைபிளை உருவாக்கினார். இந்த பைபிளே இன்று தாய்ப்பிரதியாகக் கருதப்படுகிறது.[IV] இதனடிப்படையிலே பல பைபிள் தொகுப்புக்கள் இன்று காணப்படு கின்றன. அவற்றில் ஒன்றுதான் Canon என்றழைக்கப்படும் தொகுப்பாகும். இன்று (Catholicans) கத்தோலிக்கர்களிடம் காணப் படுவது இதுவேயாகும். இதில் பழைய ஏற்பாட்டின் 46 புத்தகங்களும், புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களும் இருக்கின்றன. கத்தோலிக்கத்திலிருந்து பிரிந்த புரட்டஸ் தாந்தினர் பழைய ஏற்பாட்டிலிருந்து 7 புத்தகங்களை நீக்கி விட்டு, மீதமுள்ள 39 புத்தகங்களையும் புதிய ஏற்பாட்டில் 'கெனன்' தொகுப்பிலுள்ள 27 புத்தகங்களையும் தங்களுடைய பைபிளாக எடுத்துக் கொண்டனர்.[VII]

இன்று காணப்படும் புதிய ஏற்பாட்டில், ஈஸா (அலை) அவர்களின் உபதேசங்க ளடங்கிய பல சுவிசேசங்களில் 'மத்தேயு' (MATTHEW) மார்க் (MARK) லூக்கா (LUKE) யோவான் (JONA) போன்ற 4 சுவிசேசங்கள் மாத்திரமே காணப்படுகின்றன. மற்றும் St' Paul இன் உபதேசங்களான 14 புத்தகங்களும் கத்தோலிக்க உபதேசங்களான 7 புத்த கங்களும் லூகாவின் உபதேசம், யோவானின் கனவு என்று எல்லாமாக 27 புத்தகங்கள் காணப்படுகின்றன. இஞ்ஜீலின் சுவிசேஷத்தை எழுதிய மத்தேயு, மார்க், லூக்கா, யோவான் ஆகியோரில் யோவான் மாத்திரமே ஏசுவை நேரடியாகக் கண்டவராவார். ஏனைய மூவரும் ஏசுவை நேரில் காணவில்லை.[VII] எனினும் ஏசுவைக் காணாத இம்மூவரும், அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் அடக்கம் செய்யப் பட்டதையும் குறித்து, விவரிக்கின்றனர். அத்தோடு இவர்கள் தங்கள் சுவிசேஷத்தை ஏசு மறைந்து பல வருடங்களுக்குப் பின்னரே எழுதினார்கள்.

இவ்வாறு ஏசுவைக் கண்ணால் காணாமல் ஏசுவைப்பற்றியும் அவரது பணிகள் பற்றியும் அவரது மரணம் குறித்தும் எழுதியுள்ள இச்சுவிசேஷக்காரர்கள் நால்வரும் ஒரே விடயத்தை வெவ்வேறு விதமாகக் கூறுகின்றனர். இவர்களது தொகுப்புக்களில் எண்ணற்ற முரண்பாடுகள் காணப்படு கின்றன. உதாரணமாக: ஏசு 'திபேரிக்' கடற்கரையில் சில மீனவர்களைச் சந்தித்து, அவர்களுடன் உரையாடி உணவருந்தியதாக பைபிளில் காணப்படுகிறது. இந்நிகழ்ச்சி ஏசு உயிரோடு இருக்கும்போது நடந்ததாக லூக்கா 5:1–11ல் குறிப்பிடுகிறார். ஆனால் இந்நிகழ்ச்சி ஏசு உயிர்த்தெழுந்த பின் நடந்ததாக, யோவான் 21:1–14இல் குறிப்பிடுகிறார். மேலும், இப்போது புழக்கத்திலுள்ள பழைய, புதிய ஏற்பாடுகளில் 50,000 தவறுகள் (ERRORS)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதாக 1957 செப்டம்பர் 8 இல் வெளியான பிரபல்யமான 'எவேக்' (AWAKE) என்ற கிறிஸ்தவ சஞ்சிகை குறிப்பிடுகிறது.[IX]

இன்றைய இந்த பைபிளில் எண்ணற்ற முரண்பாடுகளும் தவறுகளும் எவ்வாறு ஏற்பட்டன என்பதைச் சில வரலாற்றுத் தகவல்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

கி.பி.140ம் ஆண்டுவரை கிறிஸ்தவ வேதநூல் என்று சொல்லக்கூடிய ஒரு நூல் இருக்கவில்லை. கி.பி.150ம் ஆண்டிலேயே St.justin என்ற பாதிரி, கோயிலில் (eucharist) ஜெபம் செய்யும் போது சுவிசேஷங்களிலிருந்து சில வசனங்களைப் படித்தார் என 'ட்ரிக்கொட்' (Tricot) என்ற மத ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றார்.[X] மேலும் கி.பி.150 வருட காலப்பகுதிக்குள் ஈஸா நபியின் போதனைகள் குறித்தும் அவரது வாழ்க்கை பற்றியும் பல்வேறு மொழிகளில் பல நூல்களை எழுதினார். இவைகளே சுவிசேஷங்கள் எனப்படுகின்றன. இவ்வாறு பலராலும் எழுதப்பட்டாலும் குறிப்பிட்ட சில சுவிசேஷங்களே அங்கீகரிக்கப்படுகின்றன. 'பர்னபாஸ்' (BARNABAS) என்ற ஏசுவின் நெருங்கிய சீடர் எழுதிய சுவிசேஷத்தில் 'அஹ்மத்' என்ற தீர்க்கதரிசி வருவார் என்று குறிப்பிடப் பட்டிருந்தமையாலும், அச்சுவிசேஷம் குர்ஆனின் கருத்தை ஒத்திருந்தமையாலும் அதனையும், இன்னும் பல சுவிசேஷங்களையும் கிறிஸ்தவ திருச்சபை அன்றே நிராகரித்து விட்டது.[XI] இவ்வாறு நிராகரிக்கப்பட்ட சுவிசேஷங்கள் Apocrypha என அழைக்கப்படுகின்றன.

கி.பி.325 இல் நடைபெற்ற Nicene council என்ற திருச்சபைக் கூட்டத்தில், 'ஹிப்ரு' (Hebrew) மொழியில் எழுதப்பட்ட சுவிசேஷங்கள் யாவும் அழிக்கப்பட வேண்டும்; இத்தீர்மானத்தை மீறி யாரிடமாவது ஒரு பிரதியேனும் காணப்பட்டால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படும்' என எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 270 சுவிசேஷங்கள் தீயிலிட்டு எரிக்கப்பட்டன.[XII] இதன் பின்னும் Bishop chailoner என்பவரால் கி.பி.1749, 1750, 1752 ஆகிய ஆண்டுகளில் Clementine Vulgate எனும் அப்போதிருந்த பைபிள் மூன்று முறை திருத்தி அமைக்கப்பட்டது. இதன் பின்னும் பைபிள் பல தடவைகள் திருத்தியமைக்கப்பட்டதாக The Revised standard version 1971இல் வெளியிட்டது. இதனை Ahamad deedat தனது Is the bible god's word? என்ற நூலில் பதினோராம் பக்கத்தில் குறிப்பிடுகிறார். எனவேதான் கிறிஸ்தவத் திருச்சபையினாலும் பாதிரிமார் களாலும் காலத்துக்குக் காலம் மாசுபடுத்தப் பட்டுத் தனது புனிதத் தன்மையை இழந்த நிலையில் இன்றைய பைபிள் காணப்படுகிறது.

**"அற்பக் கிரயத்தைப் பெறுவதற்காகத் தம் கரங்களாலேயே நூலை எழுதி வைத்துக் கொண்டு, பின்னர் அது அல்லாஹ் விடமிருந்து வந்தது என்று கூறுகிறார்களே.... அவர்களுக்குக் கேடுதான். அவர்களது கரங்கள் இவ்வாறு எழுதியதற்காகவும் அவர்களுக்குக் கேடுதான். அதிலிருந்து அவர்கள் ஈட்டும் சம்பாத்தியத்திற்காகவும் அவர்களுக்குக் கேடுதான்."**

(2:79)

## கிறிஸ்தவ மதத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

நபி ஈஸா (அலை) அவர்களின் மறைவுக்குப் பின் அவர்களது சீடர்களான அப்போஸ்தலர்கள் தங்களை ஒரு கூட்டமாக அமைத்து, ஈஸா (அலை) கொண்டு வந்த போதனைகளைப் பரப்பி வந்தனர். இந்த வகையில் ஏசுவின் சீடர்களில் ஒருவரான பர்னபாசும் (Barnabas) பவுலும் (St' paul) கிறிஸ்தவப் போதகர்களாக 'அந்தியோக்' என்ற ஊருக்குச் சென்றனர். இவ்வூரில்தான் ஏசுவைப் பின்பற்றுபவர்களுக்கு கிறிஸ்தவர்கள் என முதன்முதலில் பெயர் சூட்டப்பட்டது.[XIV] இவ்வாறு கிறிஸ்தவத்தைப்பரப்பி வந்த இவ்விருவருக்குமிடையே விருத்த சேதனம் (கத்னா) என்னும் மதச்சடங்கைச் செய்யும் விடயத்தில் சர்ச்சை எழுந்தது. பவுல் 'விருத்த சேதனம் செய்யத் தேவையில்லை' என்று கூற, பர்னபாசோ வழமை போலவே விருத்த சேதனம் செய்ய வேண்டுமென்று கூறினார். இந்த சர்ச்சையின் விளைவாக பர்னபாசினால் யூதக் கிறிஸ்தவம் (Jodeo Christianity) என்றும் பவுலினால் பவுல் கிறிஸ்தவம் (Pauline



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Christianty) என்றும் இருபிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன. எனினும் ஏசுவின் நெருங்கிய உறவினர்கள் யூத கிறிஸ்தவத்திலேயே அங்கம் வகித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பவுல் கிறிஸ்தவத்தைத் தோற்றுவித்த 'பவுல்', ஏசுவை ஒருபோதும் நேரடியாகக் கண்டதில்லை. அதுமட்டுன்றி, ஏசுவின் போதனைகளை அவர் வாழும் போதே கடுமையாக எதிர்த்தவராவார். எனினும், ஏசு மறைந்த பின்னர் மீண்டும் உயிர்த்தெழுந்து வந்து கிறிஸ்தவத்தைப் பிரசாரம் செய்யும்படி தன்னிடம் வேண்டிக் கொண்டதாக வாதம் புரிந்து, கிறிஸ்தவத்தில் தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டார். இவ்வாறு 'பவுல்' தாபித்த பவுல் கிறிஸ்தவத்தைப் பின்பற்றியவர்கள் விருத்த சேதனம் செய்தல், ஓய்வுநாள், தெய்வபலி (குர்பான்), பன்றி இறைச்சித்தடை முதலியவற்றிலும் வணக்க முறைகளிலும் சலுகைகளைப் பெற்றனர். இவரது சலுகைகளால் கவரப்பட்டுக் கிறிஸ்தவத்தைத் தழுவியவர்களின் எண்ணிக்கை பெருகவே, பர்னாபாசினாலும் ஏசுவின் நெருங்கிய உறவினர்களாலும் வழி நடாத்தப்பட்டு வந்த யூதக் கிறிஸ்தவம் செல்வாக்கிழந்து, பவுல் போதித்ததுதான் கிறிஸ்தவம் என்ற நிலை ஏற்பட்டது. இந்தப் பவுல்தான் தூய கிறிஸ்தவத்தைச் சிதைத்து, ஈஸா நபியின் சீடர்கள் அறிந்திராத சிலை வணக்கம், பாவ இரட்சிப்புக் கோட்பாடு, நூதன அனுஷ்டானங்கள் ஆகியவற்றைக் கிறிஸ்தவத்தில் புகுத்தினார். இன்று காணப்படும் அனைத்துக் கிறிஸ்தவ மதப்பிரிவுகளுக்கும் இவரே தந்தையாகக் கருதப்படுகின்றார்.[XVI]

கிறிஸ்தவ மதத்தில் இன்று காணப்படும் கிறிஸ்தவத் திருச்சபை (The church) என்னும் அமைப்பானது தனக்கு ஞான வெளிப்பாடு உள்ளதாகக்கூறி, தனது கொள்கைக்கு இசைவான கருத்துக்களை ஏற்று ஏனையவற்றை நிராகரித்தும் வருகிறது. "ஆண்டவரான ஏசுகிறிஸ்து மனித குலத்தை இரட்சிக்கவென மனிதராகப் பிறந்து, மக்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பதற்காகக் கிறிஸ்தவ மதத்தை ஏற்படுத்தினார். தனது போதனைகள் கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமன்றி எல்லா மனிதர்களுக்கும் யுக முடிவுவரை அவசியமானது எனக்கருதியதால் அவர் பரலோகம் சென்றதைத் தொடர்ந்து, தனது பணியை மேற்கொண்டு முன்னெடுத்துச் செல்ல ஒரு சபை அமைக்கப்பட வேண்டுமெனவும், அனைத்து மக்களுக்கும் தனது போதனைகளைப் போதிக்கும் அதிகாரம் அச்சபைக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் அபிப்பிராயப்பட்டார். அந்தச் சபைதான் இன்றுள்ள கிறிஸ்தவத் திருச்சபை" எனக் கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர்.

இன்றைய கிறிஸ்தவர்களுக்கிடையே எண்ணற்ற மதப்பிரிவுகள் காணப்படுகின்றன. எனினும், கோட்பாட்டு ரீதியாக அவற்றை இரண்டாக வகுக்க முடியும். ஒன்று 'ரோமன் கத்தோலிக்கம்' (Roman catholic) மற்றையது 'புரட்டஸ்தாந்து' (protestants) ஆகும்.

16ஆம் நூற்றாண்டு வரைக்கும் இவ்விரு பிரிவுகளும் மேற் குறிப்பிட்ட திருச்சபையின் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்து வந்தன. எனினும், 16ம் நூற்றாண்டிற்குப் பின் 'ரோம்' நகரைத் தலைமையகமாகக் கொண்டியங்கிய கத்தோலிக்கத் திருச்சபைப் 'போப்பு'கள், புதிய வணக்க முறைகளையும் தவறான கோட்பாடுகளையும் அறிமுகப்படுத்தினர்; இப்புவியின் ஏகப்பிரதிநிதிகள் தாங்களே என வாதிட்டனர்; மக்கள் செய்து வந்த கடினக்கிரியைகளுக்குப் பதிலாகப் பணம் பெற்றுக்கொண்டு பாவ விமோசனச்சீட்டு வழங்கி வந்தனர்; தாங்கள் விரும்பியவர்களுக்கே சுவர்க்கம் கிடைக்கும் என வாக்களித்த இவர்கள் பாவங்களை மன்னிக்கும் உரிமை தங்களுக்கு உண்டு என்று மக்களை ஏமாற்றி வந்தனர். இவ்வாறு ரோமைச் சேர்ந்த ரோமன் கத்தோலிக்கர்கள் வாதிட்டு வந்ததால், இங்கிலாந்தில் இயங்கி வந்த கத்தோலிக்கர்கள், ரோமன் கத்தோலிக்கர்களை எதிர்த்து 1564இல் லூதர் (Luther) தலைமையில் 'புரட்டஸ்தாந்தை' ஆரம்பித்து வைத்தார்கள்.[XVIII] மட்டுமன்றி, ஏற்கனவே ஒன்றாக இருந்துவந்த ரோமன் கத்தோலிக்கத்திலிருந்து பிரிந்து செயற்படலாயினர். இந்தப் புரட்டஸ்தாந்தினர், "கடவுளின் அவதாரமான ஏசுவை வழிப்பட சொரூப வழிபாடோ, துறவி குருவாக மாற வேண்டிய அவசியமோ இல்லை" எனவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாகவே ஏசுவிடம் பிரார்த்திக்க முடியும் எனவும், தங்களுக்கு (குருமார்களின்றி) ஏசுவே அருள் புரிவார் எனவும் நம்பிக்கை கொண்டுள்ளனார்.

## கிறிஸ்தவ மதக் கோட்பாடுகள்

இன்றைய கிறிஸ்தவர்கள் மத்தியில் பல பிரிவுகள் காணப்பட்டாலும், அவர்களிடையே கீழ் வரும் பிரதான கோட்பாடுகள் பொதுவானவையாகக் காணப்படுகின்றன:

### திரித்துவம் (Trinity)

இறைவன் (பிதா), இறைவனின் தூதர் ஏசு(சுதன்), பரிசுத்த ஆவி சேர்ந்ததுதான் இறைவன் (Unitarianism) என நம்பிக்கை கொள்வதே திரித்துவமாகும்.[XIX] இக் கோட்பாடு முற்றிலும் மனித அறிவுக்குப் புலப்படாத ஒன்றாகும். அதாவது, 1+1+1=1 என்பது போன்ற பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட சிந்தனையாகும். இச்சிந்தனை பிளேட்டோவின் தத்துவங்களின் வெளிப்பாடே. கி.பி.381ல் முதன் முதலாக கொன்ஸ்தாந்தினிய சபை இக்கருத்தை முன்வைத்தது. உண்மையில், கிறிஸ்தவர்களின் இக்கோட்பாடு ஏசுவின் உபதேசங்களனைத்திற்கும் முரண்பட்டதாகும். அவர் போதித்தது 'ஒரே இறைவன்' என்ற ஏகத்துவக் கொள்கை மட்டுமே. இப்போதனையை பைபிளின் பழைய, புதிய ஏற்பாடுகள் ஆழமாக முன்வைப்பதைக் காணலாம். உதாரணமாக 'மாற்கு'வில், "ஓ... இஸ்ரவேலர்களே.... கேளுங்கள்! எஜமானனான எம் இறைவன் ஒருவன்தான்.." (மாற்கு 12:19) 'கொரிந்தய'னில், "ஒருவனைத்தவிர வேறு இறைவன் இல்லை..." (கொரிந்தயன் 8:4) மேலும் 'டியுடெநொமி'யில் இறைவன் கூறுகிறான்: "நான் நானேதான்.. என்னுடன் வேறு இறைவன் இல்லை. என்னால் முடியாதது ஒன்றுமில்லை. எனது கையை விட்டுவிடுக்க வேறெதுவும் இல்லை." (டியுடெநொமி 32:39)

கிறிஸ்தவர்களின் இத்தவறான கோட்பாட்டை அல்குர்ஆன் இப்படிக் கண்டிக்கின்றது...

**"நிச்சயமாக அல்லாஹ் (பிதா, சுதன், பரிசுத்த ஆவி இம்) மூவரில் ஒருவன்தான் எனக்கூறியவர்களும் மெய்யாகவே நிராகரிப்பாளர்களாகி விட்டனர். ஏனென்றால், ஓர் ஆண்டவனைத்தவிர வேறு கடவுள் இல்லை. ஆகவே அவர்கள் கூறுவதிலிருந்து விலகிக் கொள்ளா விட்டால், அவர்களிலுள்ள நிராகரிப்போரைத் துன்புறுத்தும் வேதனை நிச்சயமாக வந்தடையும்."**

(5:73)

### ஜென்ம பாவம் (கரும பாவம்) (ORIGINAL SIN)

மனிதர்களின் ஆதி பிதாவான ஆதம், இறைவனின் கட்டளைகளுக்கு மாறாக விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்ததால் பாவம் இழைத்தவரானர். இதன் காரணமாக அவருக்குப் பிறக்கும் சந்ததிகள் அனைவரும், பிறக்கும்போதே பாவிகளாகப் பிறக்கின்றார்களெனவும், இவ்வுலகில் பிறந்த கோடானு கோடி மனிதர்கள் அப்பாவத்தை அனுபவித்தேயாக வேண்டுமெனவும் இன்றைய கிறிஸதவச் சித்தாந்தம் கூறுகிறது.[XX] எனினும், இவர்களது இக்கோட்பாட்டை பைபிளின் கீழ் வரும் வசனம் மறுக்கிறது. "பாவம் செய்யும் ஆத்மாவே அதற்காகக் கூலியைப் பெறும். குமாரன் தகப்பனுடைய பாவங்களைச் சுமப்பதில்லை; தகப்பன் குமாரனுடைய பாவங்களைச் சுமப்பது மில்லை" (அஸேகியேல் 18:20) மேலும் இக்கருத்தை உபாகமம் (5:9), யாத்திராகமம் (3:07) ஆகிய வசனங்களும் வலியுறுத்துகின்றன. அல்குர்ஆன்கூட இது குறித்துப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**"ஆதம் தான் செய்த தவறை உணர்ந்து, இறைவனிடம் பிரார்த்தித்த வேளை இறைவன் அவருடைய பாவத்தை (அன்றே) மன்னித்து விட்டான்."**

(2:37)

**மேலும், எந்தவொரு ஆத்மாவும் மற்றைய ஆத்மாவின் பாவச்சுமைகளைச் சுமப்பதில்லை.**

(17:15)

### மானிட மீட்பு (HUMAN SALVATION)

'ஆதாம்' 'ஏவாள்' செய்த தவறின் காரணமாக உலகில் பாவிகளாகப் பிறக்கும் மக்களுக்குப் பாவவிமோசனத்தின் பொருட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள், ஏசுகுமாரராக (God incanate) அவதாரமெடுத்து, சிலுவையில் தம்மை அறையச் செய்தார். இவ்வாறு விசுவாசித்தவர்களின் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப் படுகின்றன; விசுவாசிக்காதவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படுவதில்லை எனக் கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர்.[XXI] எனினும் இந்த நம்பிக்கைக்கும் பைபிளில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருப்பது அவதானிக்கத்தக்கது. "பிள்ளைகளின் நிமித்தம் பிதாக்கள் கொல்லப்படாமலும், பிதாக்களின் நிமித்தம் பிள்ளைகள் கொல்லப்பட்டாலும் அவரவர் செய்த பாவத்துக்கு அவரவரே கொலை செய்யப்பட வேண்டும்." என இறைவன் கட்டளையிட்டதாக 'இராஜாக்கள்' பதினான்கில் குறிப்பிடப்படுகிறது. ஆகவே மனிதர்கள் செய்த பாவத்துக்கு இறைவனது தூதர்கள் தண்டிக்கப்படுவது முற்றிலும் நியாயமற்ற ஒன்று என்பதை, சிந்திக்ககூடிய எவரும் புரிந்து கொள்வர்.

**"வேதக்காரர்களே.. மார்க்கத்தில் இல்லாத விடயத்தைக் கூறுவ்தில் நீங்கள் அளவு கடந்து செல்கிறீர்கள்"**

(அல்குர்ஆன் 4:171)

**"யார் இஸ்லாத்தை அன்றி வெறொரு மார்க்கத்தைப் பின்பற்றுகிறாரோ அவர் அல்லாஹ்வால் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்; மறுமை நாளில் நஷ்டவாளியாகவும் இருப்பார்"** என்ற அல்குர்ஆனின் கூற்றுக்கிணங்க, இஸ்லாம் ஏனைய அனைத்து மார்க்கங்களையும் மிகைக்கும் தன்மை கொண்டதாகத் திகழ்கிறது. இஸ்லாம் இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் என்பதாலும் உலகில் காணப் படுகின்ற ஏனைய மதங்கள் மனிதனுக்கு வழிகாட்டும் தகுதியை இழந்து நிற்பதாலும் சம காலத்தில் மனித சமூகம் எதிர் நோக்குகின்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்ல வேண்டிய பொறுப்பு இஸ்லாத்தையே சாரும்.


உஷாத்துணைகள்:-

(i) இஸ்லாமியர்களைச் சந்திக்கும் முறை (வட ஆபிரிக்கமிசன் பதிப்பு 1986 பக்கம் 03)

(ii) WILLIAM BERNS. THE RISE OF CHRISTI ANITY (LONG MAN GREEN AND COMP LOND) Page 74,81

(iii) Dr செல்வின் "இதோ உங்களுக்கு" ஓட்டின் சத்திரம் (111) பக்கம் 2,3.

(iv) ஹமுத் அல் அத்தி "இஸ்லாம் உங்கள் பார்வைக்கு"பைஸல் இஸ்லாமிய அச்சகம் சவுதி 1985 page 343

(v) THE GOSPELOF BARNABAS Mrand Mrs Laura Rogg. Clanenclon press oxfortd 1907 page 138

(vi) ENGLISH NEW TESTAMENT Rev Jemes A carey M. A. 1901.

page 15 (X1V) 653. 673

(vii) வேதம் கொடுக்கப்பட்டதா? Dr. காமிஸ் பக்கம்: 07 1982) பக்கம் 7

(x) THE BIBLE THE QURAN AND SCIENCED. MAURICE BuCAILLE publish by libya 1978.

page 74 77 (XV) page 50,51,52 (1V)

(xi) page 77

(ix) IS THE BIBLE GOD'S WORD - Ahmad deedat page 12.

(ix) CHRIST AND CHRISTIANITY- AN ISLAMIC APPROACH.

Mohamed Idris Khandlevi - Maktaba yaqeen Daruitasnif L.T.D.

(X1X) page 12-14

(viii) விஞ்ஞான ஒளியில் பைபிளும் குர்ஆனும்- மொரிஸ் புகைல்1993

page 83 - 91 (XV1) page71, 72,

(xviii) Encycopedia PART 3 and PART 7

PART 3. (XVIII) Page 163.

PART 7 (XIX) 304

(xix) WAS JESUS CRUCIFIED -T.MYTHEEN GREEN ROSE

(xx) Page 42 (xxi) page 45.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FAMILY PLANNING - AN ISLAMIC VIEWPOINT

M. ABDULLAH (FIFTH YEAR)

The rapid growth of population in many parts of the world has been viewed with great concern by the governments of many nations over the past few years. It was in the wake of such a situation that a world conference was convened in Cairo some months back, in a bid to create an awareness of the grave consequences of such an increase in population and to discuss ways and means of controlling its growth by popularising the family planning methods. Many are of the view that family planning is the only solution to the many contemporary problems which they regard, are due to the steady growth of population. They argue that the people can enjoy a prosperous life if family planning is implemented forthwith.

It was way back in the late 18th century that a well-known English economist named Thomas Robert Malthus observing the rapid growth of population within the limited habitable space in this planet, came to the conclusion that should the breeding of human race continue at its natural pace it would very soon find this earth too small for habitation. He felt that the population rise is bound to outstrip food production and a disequilibrium in respect of sustenance of the people would be the natural result. Therefore, he said that the increase in human race should never be allowed to exceed the rate of food production. To achieve this objective he prescribed what is now called 'Family Planning' or 'Birth Control'. It was indeed a new phrase used for an old concept, but what Malthus could not figure out was that the vast expansion of economic resources, did virtually outnumber the population growth due to the progress in human knowledge and the application of science and technology.

Even though Malthus's argument was proved to be wrong in his own time, his views paved the way for the emergence of a family planning movement in Europe. The aims of this movement were to adopt birth control as part of a national policy, to give it wider publicity, to explain the ways of inducing the people to resort to it and to make contraceptives available within the reach of every person. Among the many factors responsible for the influence of western nations in the progress of the movement was the Industrial Revolution. Due to vast industrial developments many citizens living in rural areas began to flock to the cities in search of employment in factories. The cities became thickly populated and the authorities had to bear up many unbearable burdens. The situation led to various economic problems and social complexities. Everyone liked to spend the income that he earned on his own person rather than sharing it with others. They tried to reduce the number of dependants as much as possible. Women too began earning for the welfare of the family and were thus unable to indulge in procreation. Man became interested in accumulating more and more wealth for his personal comfort and well- being.

It was due to reasons such as these that the birth control movement grew momentum and gained a firm footing in western nations. This new movement like many other things imported from the west, gained a foothold in many Asian countries. It seemed to many that family planning was the only solution to all the problems relating to the population



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

growth, but its effect was temporary and it failed to serve as a preventive measure for problems created by the adoption of family planning, which in fact began to cause many disastrous after-effects that are now rocking the entire world.

When we take a closer look at these problems, we realise that they were the result of mans adoption of a lifestyle quite contrary to what nature has bestowed on to him. It was man's selfishness and his sense of freedom to enjoy himself all meterialistic resources and pleasures of this world that led him into difficult situations that played havoc on his entire social, economic and political life. This produced many a complex and multi-dimentional problems which when approached in a wrong way, were bound to produce unnatural effects. The consequences of his folly made him find recourse to family planning again. He did not pause to ponder what went wrong with his social and cultural life. Even though the movement succeeded in achieving its immediate purpose of reducing the birth rate, the man was facing consequential problems.

From the time it was introduced birth control was popularly practised mainly among the upper and middle classes. These two classes comprised the most educated, big businessmen and the rich whose standard of living was very high. The lower rungs of the people consisted of the labour class and agricultural workers who hardly took any interest in family planning. Thus the widespread resort to birth control by the upper classes shatterd the delicate balance of population within the society by gradual elimination of its most active and finest elements. It also upset the proper proportion between the old and the young who were a burden on the economy. The far reaching and disastrous consequences of family planning began to reflect on the economic and cultural life of the community.

The ill-effect also began to unfold itself by way of illict sexual relationship resulting in complete sexual anarchy and crimes. It has been the cause of many venereal diseases that have engulfed the entire society. Birth control is also regarded as one of the factors responsible for weakening the bonds of matrimonial relationship in the society which has resulted in childless marriage and increase in divorces. It may be noted that it is the childless marriage that ends in seperation mostly. Above all, the most alarming consequences of this cancerous canker is the decline in birth-rate which undermines the human resources. This has caused the average family to shrink. It is also said that a population in which the two-child system prevails and in which consequently there are but two children surviving on the average of each marriage. is condemned to extinction. Even though we may think that the declining population will tend to cure our unemployment problem it is not quite so. Neither will it make for an improved standard of living for those who remain. On the contrary the economic effects of birth control will definitely be adverse and as a famous economist puts it we are foolish enough to let such a problem exist. These are some of the grave consequences that could follow if family planning is adopted as a national policy.

What does Islam have to say about family planning? Is it possible for Muslims too to adopt child-preventive measures? The ideal Islamic attitude towards this subject would be to judge the issue on the merits of individual cases and private situations. As far as the question of family planning as a movement or a national policy is concerned,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

its basic idea, scheme of implementation and its practical consequences are all repugnant to Islam.

The basic idea of a family planning movement is that with the rise of population the means of sustenance will fall short and life will not be easy to support. But this view is positively contradictory to Islam. Allahu Tha'ala is not only the Creator but also the Provider and Nourisher of mankind. It is he who provides all human beings as well as all other creatures with food and sustenance. He is not unmindful of the needs of his creatures whom he has created according to a proper scheme. The Holy Qur'an states:

> 'And We have made in it (the earth) means of sustenance for you and for those others for whom you are the nourishers, and there is not a thing but with us are the treasures of it, and We do not send it down but in a known measure.'
>
> (15:20-21)

In the Holy Qur'an it is further stated;

> 'Therefore seek the sustenance from Allah and serve Him and be grateful to Him; to Him you shall be brought back.'
>
> (29:17)

Thus Allahu Tha'ala has not created any living being but with its share of sustenance and means of livelihood, determined already and scattered all over the world. It is man's responsibility to search for them to fulfil his own needs and that of those who depend on him. These words of Allahu Tha'ala leave a Muslim with no reason to practise birth control for fear of scarcity of resources and food, as long as he is able to strive hard in search of them. The Holy Qur'an confirms our contention thus:

> 'And do not kill your children for fear of poverty; We shall give them sustenance and yourself too...'
>
> (17:31)

As for the arguments adduced in favour of birth control as a national ploicy, we may note that these arguments are based upon conditions of western life-style on assumption that the western mode of life is the ideal one. Firstly, it is contented that the space on earth is limited and that its economic resources to sustain man are extremely scarce. That at the rate population is increasing there will very soon come a time when no one will be able to live a decent life on earth is another argument in favour of family planning. Unfortunately these concepts are based upon complete misunderstanding. When we look at the universe we see that every single thing in it is governed by a devine force. For instance if we take a look at the man, his procreative potentialities are so tremendous that the sperm produced at a single emission is sufficient to impregnate three to four hundred women. If the potentialities of only one man are allowed to give full play, within a few years the entire planet will be full of his offsprings. Take the starfish; it lays two hundred million eggs and if only one of its kind is permitted to add to its numbers, it is estimated that by the third or fourth generation of this fish all the oceans of the world will get flooded with them and there may be no room for a drop of water in them. Then how indeed is it that such a situation never occurs? It is because Allahu Tha'ala has created everything in this universe in accordance with His plan and they are operating accordingly. Allahu Tha'ala says in the Holy Qur'an:

> 'Of course We have created everything to a set measure.'
>
> (54:49)

From this it is crystal-clear that whatever is bestowed upon mankind is measured and balanced.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

As for lack of space on earth, the growing population is not evenly spread and large parts of land that could be made fit for habitation remain un-utilized. There are many small countries with a large number of inhabitants, whereas many more large countries and cities are with a comparatively less number. It is said that the subterranean water under the Sahara dessert, if scientifically utilized, can make the entire Sahara to flourish. As regards scarcity of economic resourses, the statistics show that the production of food has always been faster than the rise in population.

Available data shows that about 60% of the worlds cultivatable land remains unutilized and if the land brought into cultivation is subject to intensive cultivation with the help of modern technology, there shall never be a problem of scarcity. Therefore the problem lies not in the growth of population but in man himself because he has no vision. It is his lack of initiative and his love of ease that prompt him to escape from labour and toil and throw him into unnecessary difficulties.

Islam, as a divine religion, guides the entire humanity to fit into all circumstances and in peace with nature. The nature of Islamic faith, its spiritual and moral attitudes, its social laws and regulations, its code of ethical behaviour and its overall ideal and mission in life - all have contributed towards mitigating these forces that give rise to the movement of family planning and its adoption as a social policy. For instance, Islam has introduced policies such as 'Zakat', fair distribution of wages so as to block all ways leading to economic distortion and exploitation. Therefore no situation can give rise to the propagation of family planning in a Muslim society on account of poverty. Moulana Maududi says, 'If a person is a true Muslim in thought and deed, he in ordinary circumstances can neither feel any urge towards birth control nor would he be thrown in an immoral situation where violation of nature is forced upon him. He enjoys life by living in restraint.'

Another argument put forward in favour of family planning is that due to problems such as lack of sufficient income, parents are unable to provide their children with adequate education and a good standard of living and therefore limiting the number of their children is the only answer. This is wishful thinking. The lazy man expects his entire life and that of his children to be full of comfort and luxury with no hardship whatsoever. He fails to realize that it is trials and tribulations that afford a man an excellent training in life. Allahu Tha'ala states in the Holy Qur'an:

> 'And surely We shall try you with something of fear and hunger and loss of wealth and lives and crops and give glad tidings to the steadfast.'
>
> (2:156)

Looking back at history we are able to witness quite a large number of really great men who faced severe hardships during their life- time. These great men were able to learn everything through the thick and thin of their life.

Therefore all the arguments as shown above are of a secular and sensate culture and of no significance to any true Muslim who allows the Divine Guidence to regulate all his affairs.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாத்தில் வறுமை ஒழிப்பு

ஏ.எம்.எம். அஸாத் (ஐந்தாம் வருடம்)

இன்று அபிவிருத்தி அடைந்து வரும் எல்லா நாடுகளும் பொதுவாக வறுமை ஒழிப்பை ஒரு முக்கிய இலக்காகக் கொண்டு அதற்கான பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. எனினும் இந்நாடுகள் வறுமை, வறுமை ஒழிப்பு ஆகிய பதங்களை அவற்றின் உண்மையான அமைப்பில் விளங்கிக் கொள்ளாததாலும், பலவீனமான மனித அறிவே அத்திட்டங்களை வரைவதாலும் வறுமை ஒழிப்புக்கான முயற்சிகள் பெரும்பாலும் தோல்வியிலேயே முடிகின்றன. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தை மாத்திரம் உள்ளடக்குதல், வரையறுக்கப்பட்ட சில பிரஜைகளை மாத்திரம் கவனத்திற் கொள்ளல், அத்திட்டங்களுக்குப்பின்னணியாக அரசியல் அமைதல் போன்ற அம்சங்களும் இந்நாடுகளின் தோல்விக்குக் காரணங்களாக அமைகின்றன.

இஸ்லாம் முன்வைக்கும் வறுமை ஒழிப்புத்திட்டம் மேற்குறித்த குறைபாடுகளற்று, பூரணத்துவம் வாய்ந்ததாகத் திகழ்கிறது. மனிதத் தேவைகளையும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான சாதனங்களையும் நன்கறிந்தவனான அல்லாஹ்வால் இத்திட்டம் வரையப்பட்டுள்ளதால், குறைபாடுகள் இடம் பெறுவது அசாத்தியமானதாகும். இத்திட்டம் குறிப்பிட்டதொரு பிரதேசத்தையோ குறிப்பிட்ட சில பிரஜைகளையோ மாத்திரம் கவனத்திற் கொள்ளாது, வறுமையால் பீடிக்கப்பட்ட அனைவரையும் உள்ளடக்குவதால் வெற்றியடைவதும் சாத்தியமாக அமைகிறது.

இஸ்லாமியக்கண்ணோட்டத்தில் வறுமை என்பது தீர்க்கப்பட வேண்டியதொரு பிரச்சினையாகவே கொள்ளப்படுகிறது. அது மட்டுமன்றி அது ஒரு சமூகக்குற்றம் எனக்கருதி அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுமாறும் கூறுகிறது. வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் தாக்கம் விளைவிக்கும் இவ்வறுமை பற்றி சில தவறான கணிப்பீடுகள் சமூகத்தில் நிலவுகின்ற அதே வேளை, இஸ்லாம் ஒரு பரந்த கண்ணோட்டத்தில் அதனை அணுகுகின்றது. நபி (ஸல்) அவர்கள் "யாஅல்லாஹ் இறை நிராகரிப்பிலிருந்தும் வறுமையிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்." என்று பிரார்த்தித்ததும், "வறுமை இறை நிராகரிப்புக்கு இட்டுச் செல்லும்" என்று கூறியதும், "யா அல்லாஹ் அவரது செல்வத்தை அதிகரிப்பாயாக" என்று அனஸ் (றழி) அவர்களுக்காக பிரார்த்தித்ததும், **"மேலும் அவன் உம்மைத் தேவையுடையவராகக்கண்டு (செல்வத்தின் மூலம்) தேவை அற்றவராக ஆக்கினான்"** என்று அல்குர்ஆன் கூறியிருப்பதும் வறுமை பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

இப்பிரபஞ்சத்தைப் படைத்த அல்லாஹ் ஒவ்வொரு அம்சத்துக்கும் நேர் முரணான மற்றோர் அம்சத்தையும் அதில் ஏற்படுத்தி வைத்துள்ளான். இந்த வகையிலேயே ஒரு மனிதனுக்கு ஏற்படுகின்ற துன்பமும் அதற்கான தீர்வும் அமைகின்றன. இவ்விரண்டு அம்சங்களும் அல்லாஹ்வின் விதியாக அமைவது போலவே வறுமையும் அதிலிருந்து கிடைக்கும் விடுதலையும் அமைவதால் அல்லாஹ்வின் கழா-கத்ருக்கு முரணாக வறுமை ஒழிப்பு முயற்சி அமைவதற்கு வாய்ப்பில்லாமல் போகிறது. அது மட்டுமன்றி, இஸ்லாம் வறுமை ஒழிப்புக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை வேறு எந்த மதமோ கொள்கையோ கொடுக்கவில்லை என்பதை நுணுகி ஆராயும் எவரும் ஏற்றுக் கொள்வர்.

இஸ்லாமிய வரலாற்றை எடுத்து நோக்கும் போது, அதன் ஆரம்ப கட்டமாகிய மக்காக்காலம் தொட்டே வறுமை ஒழிப்புக்கு அது கொடுத்து வரும் முக்கியத்துவத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண முடிகிறது. நபி(ஸல்) அவர்களின் நபித்துவத்தோடு, மக்காவில் இஸ்லாம் தோன்றிய அக்காலகட்டத்தில் சிறியதொரு தொகையினரே இஸ்லாத்தை ஏற்றிருந்தனர். அவர்களுக்கென்றொரு செல்வாக்கோ எதிரிகள் விளைவிக்கும் துன்பத்திலிருந்து பாதுகாப்போ இல்லாத அந்த இக்கட்டான சூழ் நிலையிலும் கூட இஸ்லாம் ஏழைகளின் விடயத்தில் மிகவும் அக்கறை காட்டியே வந்திருக்கிறது.

மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்றவைகூடக் கிடைக்கப்பெறாத வறுமை நிலையில் ஒரு சமூகம் வாழ்வதை இஸ்லாம் விரும்புவதில்லை. எனவே, இத்தேவைகளை நிறைவு செய்வதன் மூலம் வறுமையை ஒழித்துக் கட்டுவதற்கு அது பல்வேறு வழிமுறைகளை முன்வைக்கிறது. இவ்வழி முறைகள் முறையாகப் பேணப்படும்போது வறுமையும் அது தொடர்பான அடிப்படைப் பிரச்சினைகளும் சமூகத்திலிருந்து நீங்கி, சுமுகமான வாழ்வு நிலைபெற வழி பிறக்கிறது. வறுமை ஒழிப்புக்காக இஸ்லாம் முன்வைக்கும் இத்திட்டங்களைப்பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்:-

1. **தொழில்:**

சமூகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் தன்னால் முடியுமான ஒரு தொழிலைச் செய்ய வேண்டும் என்பது இஸ்லாத்தின் கட்டளையாகும். வெறுமனே வீட்டில் முடங்கிக் கிடக்காமல் பூமியின் பல பாகங்களுக்கும் சென்று அல்லாஹ் நிர்ணயித்த ஜீவனோபாயத்தைத் தேடிப்பெற்றுக் கொள்ளு மாறு தனது திருமறையின் மூலம் ஒவ்வொருவரையும் அது பணிக்கிறது.

**"அவனே உங்களுக்கு இப்பூமியை (நீங்கள் வாழ்வதற்கு) வசதியாக ஆக்கினான். எனவே, அதன் பல பாகங்களுக்கும் சென்று அவனுடைய உணவிலிருந்து புசியுங்கள்" (67:15)**

தொழில் என்பது மனிதனை வறுமைக் கெதிராகப் போராடச் செய்து, அவனைச் செல்வந்தனாக்கும் ஒரு சாதனம் ஆகையால், இஸ்லாம் ஆகுமான அனைத்து வழிகளையும் அதற்காகத் திறந்து கொடுத்துள்ளது. அதே வேளை, அத்தொழில் அவனுக்கோ சமூகத்துக்கோ தீங்கு விளைவிப்பதாக அமைந்து விடக்கூடாது என்பதில் அது கண்ணுங் கருத்துமாக இருப்பதும் குறிப்பிடத் தக்கது. அல்லாஹ்தஆலா இப்பூமியின் எல்லாப்புறங்களிலும் மனித வாழ்வுக்குத் தேவையான அம்சங்களைப்படைத்துள்ளான் என அல்குர்ஆன் கூறுகிறது.

**"(மக்களே!) நிச்சயமாக நாம் உங்களைப் பூமியில் வசிக்கச் செய்தோம். அதில் வாழ்க்கை வசதிகளையும் ஆக்கித்தந்தோம்" (07:10)**

**"இன்னும் அல்லாஹ் உணவளிக்கப் பொறுப்பேற்றுக் கொள்ளாத எந்த உயிரினமும் இல்லை" (11:06).**

இவ்வாறு அனைத்துச் சிருஷ்டிகளுக்கும் உணவளிக்கும் பொறுப்பை அல்லாஹ் ஏற்றிருந்தாலும், மனிதன் தனக்குரிய பங்கைக் கடும் முயற்சியின் பயனாகவே பெற முடியும் என்பது விதியாகும். எனவே, ஒரு மனிதன் "அல்லாஹ்வை வணங்குவதற்காகவே நான் படைக்கப்பட்டுள்ளேன்" எனக்கூறிக்கொண்டு 'தவக்குல்' என்ற பெயரில் முழுமையாக இபாதத்தில் மூழ்கி விடுவதும், தனது சீரான வாழ்விற்கு வசதியானதொரு தொழிலைத் தேடிக் கொள்ளாதிருப்பதும் இஸ்லாம் வரவேற்காத பண்புகள் என்பது இதன் மூலம் தெளிவாகிறது. உண்மையில், இஸ்லாம் கூறும் 'தவக்குல்' மனித முயற்சியோடு இணைந்ததோர் அம்சமேயாகும்.

இபாதத்தை சில வணக்க வழிபாடு களோடு மாத்திரம் வரையறுத்துக் கொள்வது தவறு எனக்கூறும் இஸ்லாம், தூய எண்ணத்துடன் இஸ்லாமிய வரையறைகளைப் பேணி மேற்கொள்ளப்படும் வியாபாரத்தைக் கூட இபாதத்தாகக் கணிக்கிறது என்பதைப் பின்வரும் ஹதீஸ் மூலம் அறியலாம்.

***"உண்மையான நாணயமுள்ள வியாபாரி (மறுமையில்) நபிமார்களோடும் உண்மையாளர் களோடும் ஷுஹதாக்களோடும் இருப்பார்"***

***ஆதாரம்: திர்மிதி, ஹாகிம்***

இவ்வாறே, (வியாபாரம் மட்டுமன்றி) விவசாயம், கைத்தொழில், மந்தை மேய்த்தல் போன்ற அனைத்து வகையான தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் நபி (ஸல்) அவர்கள் தூண்டுதல் வழங்கியுள்ளார்கள் என்பதை அன்னாரின் ஹதீஸ்கள் காட்டி நிற்கின்றன. தனது நாட்டில் தொழில் செய்ய முடியாதபோது, பிற நாடுகளுக்குச் சென்று தொழில் புரியவும் இஸ்லாம் அனுமதியளிக்கிறது. இத்தகைய வியாபார முயற்சி தூய எண்ணத்துடன் மேற் கொள்ளப்படுமானால் அதுவும் ஒரு வகை ஜிஹாதே என்பது அல்குர்ஆனின் கருத்தாகும்.

**2. செல்வந்தர்கள் தம் உறவினர்களைப் பொறுப்பேற்றல்:**

இஸ்லாம் வறுமை ஒழிப்புக்காக முன்வைக்கும் அடுத்த வழிமுறையாக இதனைக் குறிப்பிடலாம். தொழில் செய்ய முடியாதோர் இதன் மூலம் வாழ்வு பெறுவதால் இஸ்லாம் இதனை அதிகமாக வலியுறுத்துகிறது. இதில், ஒரு குடும்ப அங்கத்தவர் வசதியற்ற தன் குடும்பத்தைப் பொறுப்பேற்றுக் கொள்வது முக்கிய அம்சமாகும். இவ்வாறு பரஸ்பரப் பொறுப்பேற்றல் மூலம் குடும்ப அங்கத்தவர் களுக்கிடையிலான உறவை வலுப்படுத்துவதற்கு இஸ்லாம் முனைகிறது. இந்த உறவையே "இரத்த பந்தம்" என்றும் "நெருங்கிய உறவு" என்றும் அது அழைக்கிறது. இது பற்றிக் குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

***"இன்னும், அல்லாஹ்வின் வேதப்படி (அவர்கள்) உங்கள் உறவினர்களே! ஒருவர் மற்றொருவருக்கு மிக நெருக்கமுடையவரும் ஆவர்" (08:75)***

ஒரு முஃமின் தனது உறவினர்களுக்குப் புரிய வேண்டிய கடமைகளை இதன் மூலம் உணர்த்தும் குர்ஆன், இரத்த பந்தத்தைத் துண்டித்துக் கொள்வோரையும் உறவினருக்கு நோவினை செய்வோரையும் பின்வருமாறு எச்சரிக்கிறது: **"நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும் உறவினர்களுக்குக் கொடுக்குமாறும் (உங்களை) ஏவுகிறான்." (16:90) "ஆகவே, உறவினர்களுக்கு அவர்களது உரிமையைக் கொடுத்து வருவீராக! அவ்வாறே ஏழைகளுக்கும் வழிப்போக்கர் களுக்கும் (அவர்களுக்குரியவற்றைக் கொடுத்து வருவீராக) எவர்கள் அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை நாடுகிறார்களோ அவர்களுக்கு அது மிக்க நன்மையுடையதாகும்." (30:38).**

***"யார் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசிக்கிறாரோ அவர் இரத்த பந்தத்தைப் பேணிக் கொள்ளட்டும்" (புஹாரி, முஸ்லிம்)*** என்னும் நபி மொழியும் மேற் குறித்த அம்சத்தை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

மேற்குறித்த ஆதாரங்கள் அனைத்தும் ஏனையோரை விடத் தனது உறவினர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையே ஒரு முஃமின் முற்படுத்த வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. அத்தோடு உறவினர் களோடு தொடர்பான இந்த அம்சம் பெற்றோருக்கு அடுத்ததாக முக்கியத்துவம் பெறுவதைப் பின்வரும் குர்ஆன் வசனம் எடுத்துக்காட்டுகின்றது: **"மேலும் அல்லாஹ் வையே வணங்குங்கள்; அவனுக்கு எதனையும் இணைவைக்காதீர்கள். மேலும், தாய் தந்தையருக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள்" (04:36)**

இவ்வாறு இஸ்லாம் உறவினர்களுக்கு உபகாரம் புரிய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினாலும், தனது சக்திக்கு மேல் அவர்களுக்காகச் செலவு செய்ய வேண்டு மென்று எவரையும் நிர்ப்பந்திப்பதில்லை.

இவ்வழிமுறை முஸ்லிம் சமூகத்தால் முழுமையாகக் கடைப்பிடிக்கப்படுமானால் முஸ்லிம்களுக்கிடையிலான பிணக்குகள் நீங்கி, பரஸ்பரம் உதவி புரியக்கூடிய ஒரு சிறந்த சமூகமாக அது மாறும் என்பதில் ஐயமில்லை.

**3. ஸக்காத்:**

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் சமூக ரீதியானதும் செல்வத்தோடு நேரடியாகத் தொடர்புபடுவதுமான ஒரு கடமையே ஸக்காத் ஆகும். ஏனைய கடமைகளோடு இதனையும் நிறைவேற்றுவதன் மூலமே இஸ்லாத்தில் முழுமையாக நுழைவதற்கும் முஸ்லிம் சமூகத்தோடு இணைந்து வாழ்வதற்கும் ஒரு மனிதன் தகுதி பெறுகிறான். இந்த ஸகாத் முக்கிய இபாதத்களின் வரிசையில் இடம் பெறும் அதே வேளை, இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாட்டின் ஒரு பகுதியாகவும் கணிக்கப்படுகிறது.

'ஸகாத்', 'ஸதகா', 'இன்பாக்' போன்ற பெயர்களில் தொழுகையுடன் சேர்த்துப் பல இடங்களில் ஸகாத்தையும் அல்குர்ஆன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகிறது. ஸகாத் கொடுக்கச் சக்தியிருந்தும் கொடுக்காதவன் 'காபிர்' என்றும், ஸகாத் கொடுப்பதை விட்டும் ஏனையவர்களைத் தடுப்பவன் பாவி என்றும், ஸகாத் கடமையல்ல என்று மறுப்பவன் கொலை செய்யப்பட வேண்டும் என்றும் இஸ்லாம் கூறுகிறது. இதனால் தான் அபூபக்கர் (றழி) அவர்கள் ஸகாத் கொடுக்க மறுத்துவர்களுக்கெதிராகப் போர் செய்யத் துணிந்தார்கள்.

அல்லாஹ், தனக்குச் சொந்தமான செல்வத்தைத் தான் விரும்பியவர்களுக்கு ஓர் அமானிதமாகவே கொடுக்கிறான். எனினும் அந்தச் செல்வத்தால் பாரியதொரு ஏற்றத்தாழ்வு சமூகத்தில் ஏற்படுவதை அவன் அனுமதிப்பதில்லையாதலால், சட்டங்களாலும், ஆன்மீகப் பண்பாட்டு உபதேசங்களாலும் அந்த ஏற்றத்தாழ்வைக் குறைக்க அவன் வழியேற்படுத்தியுள்ளான். இவ்வழிகளில் ஒன்றே ஸகாத் ஆகும். இது செல்வந்தனின் செல்வத்தைத் தூய்மைப்படுத்தி வளப்படுத்துவதோடு, அவனது கஞ்சத்தனத்தையும் நீக்குகிறது. அதுமட்டுமன்றி, தர்மம் செய்யாத செல்வந்தர்கள் மீது இயல்பாகவே ஏழைகள் கொள்ளக்கூடிய வெறுப்பையும் குரோத மனப்பான்மையையும் தடுத்து, இரு பிரிவினரையும் தூய்மைப்படுத்துவதாகவும் திகழ்கிறது.

'ஸகாத்' என்பது சமூக உத்தர வாதத்தின் வழியில் ஒழுங்குபடுத்தப்பட்ட முதன்மையானதொரு கோட்பாடாகும். இது வறுமை ஒழிப்பில் எவ்வளவு தூரம் முக்கியத்துவம் பெறுகிறது என்பதை, அது விதிக்கப்படும் பொருட்கள்; கடமையாகும் நபர்கள் போன்ற அம்சங்களிலிருந்து விளங்கிக் கொள்ள முடிகிறது.

4. **பைத்துல்-மால் அனைத்து வளங்களையும் பொறுப்பேற்றல்**

'ஸகாத்'ஆகக் கிடைக்கக் கூடிய வளங்கள், புனிதப்போராட்டத்தில் சேகரிக்கப் படும் 'கனீமத்' பொருட்கள், ஜிஸ்யா, கறாஜ் போன்ற அனைத்துப் பொதுச் சொத்துக்களும் சேகரித்து வழங்கப்படும் நிதி நிறுவனமே பைத்துல்-மால் ஆகும். அரசாங்கப் பொறுப் பிலுள்ள இச்சொத்துக்கள் தனிப்பட்ட சிலருக்கு மட்டுமன்றி, அனைத்துப் பிரஜைகளுக்கும் சொந்தமானவை என்று இஸ்லாம் இயம்பு கிறது. இந்த உண்மையை உமர் (றழி) அவர் களது பின்வரும் கூற்றும் உறுதிப்படுத்துகின்றது:

***"அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்தச் சொத்தினைப் பெறுவதற்கு ஒருவரை விட இன்னொருவர் அதிக உரிமையுடைய வரல்ல; நானும் இன்னொருவரை விட உரிமையுடையவனல்ல. முஸ்லிம்கள் ஒவ்வொருவருக்கும் இதில் பங்குண்டு"***

***(அஹ்மத்)***

தேவையுடைய அனைவரினதும் இறுதிப் புகலிடமாக அமையும் இந்நிறுவனம், இஸ்லாமிய அரசின் கீழ் வாழும் முஸ்லிம் களல்லாதோருக்கும் உரித்துடையதென்பது குறிப்பிடத்தக்கது.

5. **ஸகாத் அல்லாத கடமைகள்:**

ஸகாத் கடமையைத் தவிர்த்து, வேறு சில சமூகக்கடமைகளையும் முஸ்லிம்கள் மீது இஸ்லாம் விதிக்கிறது. இக்கடமைகள் ஏழைகளுக்கு உதவியாகவும் வறுமை ஒழிப்புக்கான காரணிகளாகவும் அமைகின்றன.

ஒரு முஸ்லிம் தன் அயலவனுக்குச் செய்ய வேண்டிய கடமை இவற்றில் மிக முக்கியமானது. இது குறித்துத் திருமறையும் நபிவழியும் அதிகமாக வலியுறுத்தியுள்ளன. அயலவனைக் கண்ணியப்படுத்துவது ஈமானின் ஒரு பகுதியாகக் கொள்ளப்படுவதால், அவனை நோவினைப்படுத்துவதும் அவன் மீது அக்கறை செலுத்தாதிருப்பதும் ஈமானிலுள்ள குறைபாட்டைக் காட்டுவதாகவே அமையும்.

*"யார் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசம் கொண்டுள்ளாரோ அவர் தனது அண்டை வீட்டாரை உபசரிக்கட்டும்"* என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

மேற்குறிப்பிட்ட சமூகக் கடமைகளுள் அடுத்து முக்கியத்துவம் பெறுவது 'ஸகாத்துல் பித்ர்' என்னும் தர்மமாகும். ஏழைகளைக் கண்ணியப்படுத்துவதன்மூலம் முஸ்லிம் சமூகத்தையும் அதன் சகோதர வாஞ்சையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணும் பொருட்டு, பெருநாள் தினத்தன்று இத்தர்மம் வழங்கப்படுகிறது. இத்துடன் உழ்ஹிய்யா, சத்தியத்தை முறித்தலுக்குப் பரிகாரமாக வழங்கப்படும் தர்மம், நோன்பு நோற்காதோர் கொடுக்கும் தர்மம் போன்றவையும் ஏழைகளின் வறுமைப் பிரச்சினையைத் தீர்க்கும் ஊடகங்களாகப் பணி புரிகின்றன.

பொதுவாக அல்குர்ஆன், ஏழைகள் விடயத்தில் கடுமையாக நடந்து கொள்வோரையும் அவர்கள் மீது கரிசனை காட்டாதோரையும் மிகக்கடுமையாக எச்சரிக்கிறது. ஏழைகளின் உரிமைகளைக் கொடுத்து விடுமாறும் அதற்காக ஏனையோரைத் தூண்டுமாறும் அது வலியுறுத்தி நிற்கிறது. இந்த ஈகைப்பண்பு கொண்டோரையே இஸ்லாம் உருவாக்க விரும்புகிறது என்பதற்குப் பின்வரும் திருமறை வசனங்கள் எடுத்துக்காட்டாக அமைகின்றன:

***"(கஷ்டத்தில் இருப்போருக்காக) அல்லாஹ்வுக்கு அழகிய கடன் எவர் கொடுக்கிறாரோ, அதை அவருக்கு அவன்இரு மடங்காகப் பன்மடங்காகச் செய்வான்" (02:245)***

***"இறைபாதையில் செலவிடப்படும் செல்வத்திற்கு உவமையானது: ஒவ்வொரு கதிரிலும் நூறு தானிய மணிகளைக் கொண்ட ஏழு கதிர்களை முளைப்பிக்கும் ஒரு வித்தைப் போன்றது. அல்லாஹ் தான் நாடியோருக்கு (இதை மேலும்) இரட்டிப்பாக்குகிறான்" (02:261)***

இவ்வாறு வறுமை ஒழிப்புக்கு இஸ்லாம் முன்வைக்கும் தீர்வுகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டதால் ஏழைகள் என்ற ஒரு பிரிவினர் இல்லா தொழிந்தமையை இஸ்லாமிய வரலாறு நிரூபித்துக் கொண்டிருக்கிறது. உமர் (றழி), உமர் இப்னு அப்தில் அஸீஸ் ஆகியோரின் ஆட்சிக் காலப்பிரிவுகள் இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். இது குறித்து நபியவர்கள் செய்த ஒரு முன்னறிவிப்பு இங்கு குறிப்பிடத்தக்கது.

*"நீங்கள் ஸதகா கொடுங்கள். ஏனெனில் ஒரு காலம் வரும். அக்காலத்தில் மனிதன் தனது ஸதகாவை எடுத்துச் செல்வான்; எனினும் அதனை ஏற்றுக் கொள்பவனைக் காணமாட்டான். அவ்வேளை ஒருவன் கூறுவான்: 'இதை நீ நேற்றுக் கொண்டு வந்திருந்தால் நான் ஏற்றிருப்பேன். இன்று இது எனக்குத் தேவையில்லை."*

**உஷாத்துணைகள்:**

1. முஷ்கிலதுல்-பக்ர் வ கைப ஆலஜஹா அல் இஸ்லாம்
   – யூசுப் அல்-கர்ழாவி
2. அல்-இபாதா பில் இஸ்லாம்
   – யூசுப் அல் கர்ழாவி
3. பிக்ஹு அஸ்ஸகாத் -யூசுப் அல் கர்ழாவி

*****

*"நான் என்ற மமதையைக் களைந்தெறிந்து விட்டு, துன்பமான நிலையிலும் இன்பமான நிலையிலும் இஸ்லாமியக் கடமைகளுக்கும் விதிகளுக்குமேற்ப உள்ளத்தை நெறிப்படுத்த வேண்டும்; மிருக உணர்வுகளின்பால் அது திரும்புகின்ற போதெல்லாம் இறை உணர்வை நோக்கி அதனை வழிப்படுத்த வேண்டும்; ஐங்காலத் தொழுகை என்னும் உயரிய பயிற்சியைத் தினமும் ஐந்து முறை இரவிலும் பகலிலும் அதற்குக் கொடுக்க வேண்டும்; இவ்வைங்காலத் தொழுகையின்றி இஸ்லாம் இஸ்லாமாக இருக்கமாட்டாது. எனவே, நபி (ஸல்) அவர்கள் விளக்கிக் காட்டியது போன்று தொழுகையென்பது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இஸ்லாத்தின் தூணாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.*

*அறிஞர் : முஸ்தபா ஸாதிக் அர்ராபிஇ.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமும் இன்றைய இளஞ்சந்ததியினரும்

என்.எம்.அஷ்ரப் (நான்காம் வருடம்)

உலகிலே இன்றுவரை தோன்றி மறைந்த, தோன்றிக் கொண்டிருக்கின்ற சமுகங்களின் ஜீவ நாடியாகத் திகழ்பவர்கள் இளைஞர்களாவர். உலக வரலாற்றின் போக்கினையே மாற்றியமைக்கத்தக்க சக்தியைப் பெற்றிருப்பவர்களும் இவர்களேயாவர். இந்த வகையில் நோக்கும்போது ஒரு நாட்டிலுள்ள இளைஞர்கள் உயரிய ஒழுக்க மாண்புகளையும் மனிதாபிமானப் பண்புகளையும் சமூக உணர்வினையும் பெற்று விளங்குவார்களாயின் அந்நாட்டில் காணப்படும் வளங்களுள் விலை மதிக்க முடியாத ஒரு வளமாகவே அவர்கள் கருதப்படுவர். இது பற்றிக்கூற வந்த மகாகவி அல்லாமா இக்பால் அவர்கள், "எந்தவொரு சமுகத்தில் இளைஞர்களது உள்ளம் இரும்பை நிகர்த்திருக்கிறதோ, அச்சமுகத்திற்கு வாளெடுத்துப் போராடும் கோழைகள் தேவையில்லை" என்கிறார்.

இவ்வகையில் நோக்கின் ஒரு சமூகத்தினது அல்லது ஒரு நாகரீகத்தினது எழுச்சியும் வீழ்ச்சியும் இளைஞர்களினது கரங்களிலேயே தங்கியுள்ளன என்று துணிந்து கூறலாம். வாளினையொத்த வாலிபப் பருவத்தினைப் பிரயோகிக்கும் முறைக்கேற்பவே அதன் விளைவுகளும் அமைய முடியும். உலகில் சத்தியம் நிலைக்க உழைத்தவர்களுள் அனேகமானோர் வாலிபர்களாகவே காணப்படுகின்றனர் என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள் பலவற்றிற்குப் பின்னணியாக நின்றுழைத்தவர்கள் இளைஞர்களே என்பதும் வெளிப்படையான உண்மையாகும்.

**வரலாற்றில் வாலிபர்கள்:-**

வாலிபர்களைப் பொறுத்தவரை அவர்களின் உணர்வும் உத்வேகமும் எப்போதும் ஒரேமாதிரியாகவே இருந்து வந்துள்ளன. வரலாற்றுச் சுவடுகளை நோக்கின் இக்கூற்று உண்மையானது என்று புரிந்து கொள்ளலாம். இஸ்லாத்தின் ஆரம்ப கால கட்டத்தில் அதன் துரித வளர்ச்சிக்காகத் தமது சொத்து சுகங்கள், உயிர்கள் போன்றவற்றைத் துச்சமாக மதித்துக் களம் புகுந்தவர்கள் தியாக உள்ளம் படைத்த வாலிபர்களேயாவர். இத்தகைய செயற்திறன் மிக்க தியாக உணர்வை நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் வரலாற்றில் அதிகமாகக் காண முடிகிறது. அவர்கள் இளைஞராக இருந்த போது அக்கால மக்கள் விக்கிரகங்களை வைத்து வணங்கி வந்தனர். அதனைச் சகியாது அவற்றைத் துகள்துகளாக தகர்த்தெறிந்த பெருமை இப்றாஹீம் (அலை) அவர்களையேசாரும். அன்னாரின் இச் செயலை ஆட்சேபித்த அம்மக்கள் கோபம் கொண்டு அவரைக் கடுமையாகச் சாடியதை அல்குர்ஆன் கீழ்வருமாறு குறிப்பிடுகிறது.

"அதற்கு அவர்களில் சிலர், இளைஞர் ஒருவர் இவ்விக்கிரகங்களைப் பற்றி அவதூறாகப் பேசிக் கொண்டிருந்ததை நாங்கள் செவியுற்றோம். அவருக்கு இப்றாஹீம் எனப் பெயர் சொல்லப் படுகின்றது. (அல்அன்பியா 21.60)

இவ்வாறு அல்லாஹ் அல்குர்ஆனில் பிறிதோர் இடத்தில் குகைவாசிகள் பற்றி பிரஸ்தாபிக்கும்போது,

"நபியே அவர்களின் உண்மையான சரித்திரத்தை நாம் உமக்குக் கூறுகிறோம். நிச்சயமாக அவர்கள் தாங்களது இறைவன் மீது விசுவாசம் கொண்ட வாலிபர்களாகும். மேலும், நாம் அவர்களை நேரான வழியில் செலுத்துகிறோம்." (18.13)

இந்த வரிசையிலேதான் வாலிபரான யூசுப் (அலை) அவர்கள் பற்றியும் அல்லாஹ் குறிப்பிடுகின்றான். பாலியல் இன்பத்தை அடைந்து கொள்வதற்கான வழி அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் திறந்து காணப்பட்டது. எனினும் அவரது திடமான ஈமானுக்கு முன்னால் அவையனைத்தும் செயலிழந்தன. அவ்வேளை அவர் பலவீனம் நிறைந்தவராக இருந்திருப்பின் கால சூழ்நிலை நிச்சயமாக அவரை அக்குற்றத்தில் வீழ்த்தியிருக்கும்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்காவிலே தன்பிரசாரத்தை ஆரம்பித்த போது மக்கத்து குறைஷிகள் நபிளாருக்கு தம் எதிர்ப்புக்களைக் காட்டியதோடு பிரசாரப்பணிக்கு பல தடைகளையும் ஏற்படுத்தினர். தூதுத்துவத்தையும் ஏகத்துவத்தையும் எள்ளி நகைத்தனர். இவ்விதம் குறைஷிகளுக்கும் நபிகளாருக்கும் இடையில் நடைபெற்ற கொள்கைப் போராட்டத்தில் இரு தரப்பிலும் முக்கிய பங்கெடுத்தவர்கள் இளைஞர்களே. நபிகளாரின் அணியில் மக்கத்து வாலிபர்கள் அதிகமாக இணைந்து கொண்டார்கள். இவர்கள் இஸ்லாத்தின் எழுச்சிக்காக மேற்கொண்ட தியாகங்கள் அளப்பரியன. அன்று நபிகளாரின் தோழர்களில் அன்னாரை விட வயதில் கூடியவர்கள் ஒரு சிலரே இருந்தனர். ஏனையோர் இளம் வயதினராகவே காணப்பட்டனர். இத்தகையோரின் பட்டியலில் அலி(றலி) சஅத் இப்னு அபீவக்காஸ் (றழி), சுபைர் இப்னு அவ்வாம் (றழி) தல்ஹா (றழி) போன்றவர்களை அடக்கலாம். இவர்களுள் அலி (றழி) அவர்கள் தனது ஒன்பதாம் வயதிலேயே இஸ்லாத்தை ஏற்றார்கள். இவ்விளமைப் பருவத்திலிருந்தே அவர்கள் இஸ்லாத்திற்காகச் செய்த தியாகங்களை வரலாற்று ஏடுகளில் காணலாம். அந்தத் தொடரில் வந்தவர்களுள் ஒருவர்தான் இந்தியாவைக் கைப்பற்றுவதற்காக தனது பதினெட்டாவது வயதில் முஸ்லிம் படைக்கு தலைமை தாங்கி கீழைத்தேய நாடுகளில் இஸ்லாம் பரவுவதற்கு காரணமாயிருந்த முஹம்மத் இப்னு காசிம் என்னும் தளபதியாவார்.

இவர்கள் அனைவரும் இஸ்லாமிய அச்சில் வார்த்தெடுக்கப்பட்ட வாலிபர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறே, அண்மைக்காலமாக எகிப்து, பலஸ்தீனம், காஷ்மீர் போன்ற நாடுகளில் இஸ்லாம் ஆட்சிபீடம் ஏற வேண்டும் என்ற தீராவேட்கையுடன் களத்திலே இரத்தம் சிந்திப்போராடி வருபவர்களும் இளைஞர்களே. இவர்களைப் போலல்லாது சீரிய வழியில் நெறிப்படுத்தப்படாத இளைஞர்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட புரட்சிகள், போராட்டங்கள் என்பன வரலாற்றையே மாசுபடுத்தியிருப்பதை காணலாம். இதற்கு எடுத்துக் காட்டாக சில தசாப்தங்களுக்கு முன் இடம்பெற்ற கம்யூனிஸ புரட்சியைக் கூறலாம். இப்புரட்சியை முழுமையாக முன்னெடுத்துச் சென்றவர்களும் இளைஞர்களேயாவார்.

### இளைஞர்களின் இன்றைய நிலை

இந்நவீன யுகத்திலே தமக்கோ அல்லது சமூகத்திற்கோ எவ்விதப் பயனுமற்ற செல்லாக் காசுகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய இளைஞர்கள், மேற்சொன்ன தியாக வரலாறுகளை உலகிற்கு அறிமுகப் படுத்திய வெற்றி வீரர்களின் முன்னால் முழந்தாளிட்டு நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இவர்கள் இன்று கலாசார பண்பாட்டுத் துறைகளில் மாத்திரமன்றி வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் வீழ்ச்சியடைந்துள்ளனர். இவர்களை அந்நிலையிலிருந்து மீற்கவென உருவாக்கப்பட்ட நவீன கொள்கைளும் சித்தாந்தங்களும் கூட அவர்களை மென்மேலும் குழப்பத்தில் ஆழ்த்தி, தம் நிலைப்பாட்டைக் கூட அறிய முடியாத இழிநிலைக்குள்ளாகி விட்டனர். மேற்கத்திய நாகரிகம் இஸ்லாமிய உலகத்தில் ஊடுருவி, முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் அதன் செல்வாக்கு வலுப் பெற்றுள்ளது. இதன் விளைவாக தொடர்ந்தேர்ச்சியான முறைச் சலவைக்கு உள்ளான ஓர் இளைஞர் குழு இஸ்லாமிய உலகில் தோன்றியுள்ளது. இதனால் இளைஞர்களை ஆக்கிரமித்துள்ள விரக்தி மனப்பான்மை சமூகத்தின் மத்தியில் ஒரு தேக்க நிலையை ஏற்படுத்தியுள்ளது.

சமூகத்தின் கடிவாளத்தைக் கையிலேந்தி அதனை நேரான பாதையில் இட்டுச் செல்லவேண்டிய பொறுப்புவாய்ந்த இஸ்லாமிய இளைஞர்கள், தம் கடமையை மறந்து சடவாத மதுவுண்டு மதிமயங்கிக் கிடக்கின்றனர். பெயரளவில் மாத்திரமே இவர்கள் இஸ்லாமியர்களாவர். இ அந்நிய கலாசாரத் தாக்கத்தை சிறிதளவேனும் அறிந்து கொள்ளாத இவர்கள் அனுதாபத்திற்குரியவர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாலிபர்களை வழிபிறழச் செய்யும் பிரதான காரணிகள் :-**

நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட பிரகாரம் வாலிபப்பருவம் என்பது பல சிறப்பம்சங் களைப் பொதிந்ததாகும். வளம்மிக்க வாலிபப்பருவம் தவறிப்போன ஒருவனின் நிலைப்பாடு, நிச்சயமற்ற எதிர்காலத்தையே சுட்டிக்காட்டுகிறது எனவே, இளைஞர்களின் நெறிபிறழ்வுக்கான காரணிகளை இனங்கண்டு அவற்றை அகற்ற உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் அவசியமாகும். இந்த வகையில் இளைஞர்களை வழிகெடுக்கூடிய காரணிகளாக பின்வருவனவற்றை நாம் அடையாளம் காணலாம்.

**01. இஸ்லாத்தைப் பற்றிய பூரண தெளிவின்மை.**

இஸ்லாத்தைப் பற்றிய பூரண தெளிவின்மை காரணமாக அதன் யதார்த் தத்தை அடைந்து கொள்வதில் இளைஞர்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எய்தவில்லை. எனவேதான் இஸ்லாமியக் கொள்கைத் திட்டங்களை குறுகிய வட்டத்துள் நோக்க இவர்கள் தலைப்பட்டனர். அந்நிய சிந்தனைகளை ஆச்சரியத்தோடு நோக்கும் இவர்களின் நிலை கவலைக்குரியதாகும்.

**02. ஜாஹிலிய்ய சமூக அமைப்பு.**

நவீன ஜாஹிலிய்ய சூழலில் உண்மை முஸ்லிமாக வாழ்வதற்கான வழி முறைகளை விட, ஒரு நாஸ்திகனாக வாழ்வதற்குரிய வாய்ப்பு வசதிகளே அதிகம். இந்நிலை தொடருமாயின் இளைஞர்களின் ஒட்டுமொத்த மான வீழ்ச்சி தவிர்க்க முடியாததாகிவிடும். எனவே, பெற்றோர்கள் இவ்விடயத்தில் கூடிய கரிசனை காட்ட வேண்டும். அவர்களது பொறுப்புக்களையும் பணிகளையும் உணர்த்தி அவற்றில் இஸ்லாமிய அணுகு முறையைப் புகுத்த ஆவன செய்தல் வேண்டும்.

**03. நவீன நாகரீக மோகம்.**

இன்று நாகரீகமானவர்கள் என்றும், முற்போக்கு வாதிகள் என்றும் கருதி, எவர்களை எம் இளைஞர்கள் பின்பற்று கின்றனரோ அவர்களிடம்தான் பஞ்மாபாதகங் களும் ஒழுக்கச் சீர்கேடுகளும் மலிந்து காணப்படுகின்றன. இந்நிலைக்குள் சிக்கித் தவிக்கும் எம் இளைஞர்களுக்கு சீரிய வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும். இன்றேல்-செயற்றிறன் அற்ற ஓர் இளைஞர் சமூகம் தான் உருவாகும்.

**04. நவீன கல்வி முறை.**

இதுபற்றி ஷஹீத் செய்யித் குதுப் குறிப்பிடும் போது, "இன்று எம்மிடம் காணப்படுகின்ற கல்வித்திட்டத்தின் அடிப் படைகளை மாற்றாதவரை இந்தச் சமூகத்தினது போக்கை மாற்றமுடியாது" என்கிறார். ஏனெனில், இன்றுள்ள கல்வித் திட்டங்கள், பயிற்சித் துறைகள் போன்ற யாவும் சடவாதத் தத்துவங்கள், மேற்கத்திய சிந்தனைகள், கலாசாரம் என்பவற்றுடன் பிணைந்தே காணப்படுகின்றன.

**05. வெகுசனத் தொடர்பு சாதனங்கள்.**

இன்றைய வெகுசனத் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் அவற்றின் அடிப்படை இலக்கை அடைந்து கொள்ளத் தவறி விட்டன என்றே கூறவேண்டும். குறிப்பாக இன்றுள்ள பத்திரிகைகள், வானொலி, தொலைக் காட்சிச் சேவைகள் போன்றன குறுகிய நோக்கங்களுக்காகவே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இவை ஒழுக்க மாண்புகளை பாதிக்கும் பல்வேறு அம்சங்களை சமூகத்தின்பால் முடுக்கி விடுவதால் அங்கு சீர்கேடுகள் உருவாகின்றன.

**இஸ்லாத்தின் பார்வையில் இளைஞர்கள்**

இஸ்லாம் மனித பலவீனங்களையும் இயல்புகளையும் கவனத்திற் கொண்டு அல்லாஹ்வால் வகுத்தளிக்கப்பட்ட ஒரு வாழ்க்கை நெறியாகும். அது மனித வாழ்வின் சகல துறைகளுக்கும் வழிகாட்டல்களை வழங்குகின்றது. அத்தோடு, அது இளைஞர் களுக்கு வேறு எந்த மதமோ கொள்கைகளோ அளிக்காத முக்கியத்துவத்தையும் முன்னுரிமை யையும் வழங்கியுள்ளது. வாழ்வின் முக்கிய கட்டமான வாலிபப்பருவத்தை சீர்படுத்துவதில் அது மிகுந்த அக்கறை கொள்கிறது. சமூகத்துக்கு எவ்விதப்பயனும் விளைவிக்காமல் மனித வளம் வீணே கழிவதை இஸ்லாம் ஒருபோதும் அனுமதிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடேற்றம் பெற ஏக வழி

இன்று இளைஞர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு உரிய முறையில் தீர்வுகளை முன்வைக்காவிடின் மனித குலத்தின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகவே காணப்படும். அடிப்படையில் இளைஞர்கள் நோயுற்றவர்களல்ல. மாறாக நோய்க்கு மிக அருகாமையிலுள்ளவர்கள். எனவே, சூழலிலே ஏற்படுகின்ற சீர்கேடுகளும் குழப்பங்களும் அவர்களின் ஆளுமையில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

உலகளாவிய ரீதியில் குழப்பத்தில் ஆழ்ந்திருக்கும் இளைஞர் சமுதாயத்தை ஒளியின் பால் மீட்டெடுக்கும் வல்லமை இஸ்லாத்திற்கு மாத்திரமே உண்டு. மனிதனால் உருவாக்கப்பட்ட ஏனைய அனைத்துக் கொள்கைகளும் கோட்பாடுகளும் தம் பணியில் தோல்வியையே கண்டன. எனவே, இன்றைய இளைஞர்கள் இஸ்லாமிய வரலாறு உருவாக்கித்தந்த முஹம்மத் இப்னு காசிம், தாரிக் இப்னு ஷியாத் போன்ற செயல் வீரர்களாக மாற்ற வேண்டுமெனில் முதலில் அவர்களை சிறந்த முறையில் பயிற்றுவிக்க வேண்டும். அத்தோடு அவர்களின் உள்ளங்கள் அகீதாவாலும் இஸ்லாமியப் போதனைகளாலும் நிரப்பப்பட வேண்டும். உண்மையான அகீதாவை இவ்வையகத்தில் நிலை நிறுத்த உழைத்த, நபி (ஸல்) அவர்களின் பாசறையிலே பண்பாட்டுப்பயிற்சி பெற்ற உத்தம ஸஹாபாக்களதுவாழ்க்கை வழி முறை இவ்விளைஞர்களின் வாழ்விலும் பிரதிபலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எனவே, இன்று இவ்வுலகிலே இஸ்லாத்தை நிலை நிறுத்த, மேற்கூறிய பயிற்சிகள் வழங்கப்பட்ட, இரும்பை நிகர்த்த இதயம் படைத்த இளைஞர் பரம்பரை யொன்று கட்டாயத் தேவையாகும். ஏனெனில், மெல்லமெல்லத் தலைதூக்கும் இஸ்லாமிய எழுச்சிக்கு உந்து சக்தியை வழங்கும் இளைஞர்களை நவீன இஸ்லாமிய உலகு வேண்டி நிற்கின்றது. இந்நிலை நடைமுறைச் சாத்தியமானதாக மாறுமாயின் இப்புவி மீது ஒளி மிகுந்த ஓர் அத்தியாயத்தினை பதிவு செய்ய முடியும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

உஷாத்துணைகள்:-

01. அல்இஸ்லாம் வமுஷ்கிலாதுஷ்ஷபாப் - கலாநிதி ஸஈத் ரமழான் பூதி.
02. வாஜிபுஷ் ஷபாபுல் முஸ்லிம் அல் யவ்ம் - கலாநிதி யூசுப் அல் கர்ழாவி
03. இளைஞனே விழித்தெழு - மௌலானா மௌதூதி.
04. இஸ்லாமிய சிந்தனை மலர்05 இதழ்01, மலர் 14 இதழ் 01

* * * *

## நவீன கல்வி முறை

இன்று எம்மிடம் காணப்படுகின்ற கல்வித்திட்டத்தின் அடிப்படைகளை மாற்றாதவரை இந்தச் சமூகத்தினது போக்கை மாற்ற முடியாது.

\- ஷஹீத் செய்யித் குதுப் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீழைத்தேய ஆய்வுகளும் இஸ்லாத்திற்கெதிரான சதிகளும்

செயின் முஹம்மத் றஜப் (நான்காம் வருடம்)

இஸ்லாத்தின் இலட்சிய உதயக் கீற்றுக்கள் இந்த வையகத்திற்கு ஒளி வெள்ளம் பாய்ச்சத் தொடங்கிய காலம் தொட்டே அது எண்ணிலடங்காத எதிர்ப்புக்களையும் சவால்களையும் எதிர்கொண்டு வந்திருக்கிறது என்பது ஒரு வரலாற்று உண்மையாகும். இருளுக்கும் ஒளிக்குமிடையே ஏற்படுகின்றபோராட்டத்தில இறுதியாக வெற்றிவாகை சூடுவது ஒளியே என்ற உண்மையின் அடிப்படையில், சத்திய இஸ்லாம் அசத்தியங்களோடு போராடிய போதெல்லாம் ஜெயித்தே வந்திருப்பதை வரலாறு தெரிந்த எவரும் மறுக்க முடியாது.

இது பற்றி 'ஹுபன்னக்கா அல்-மைதானி' என்ற அறிஞர் குறிப்பிடுகையில "இஸ்லாம் இறைவனிடமிருந்து வந்திருக்காவிட்டால் எப்போதோ அழிந்து போயிருக்கும்." என்று கூறியிருப்பது, இஸ்லாம் எதிர் கொண்ட எண்ணற்ற சவால்களை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகின்றது. இச்சவால்களிலொன்றான 'கீழைத்தேய வாதம்' பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கீழைத்தேயவாதிகள் – ஓர் அறிமுகம்

கீழைத்தேய நாடுகளின் மொழி, வரலாறு, மதம், நாகரிகம் போன்ற துறைகளில் ஆய்வுகளை நடாத்தியவர்கள் கீழைத்தேய வாதிகள் எனப்படுகின்றனர். பல்வேறு பட்ட நாடுகளையும் இனங்களையும் சேர்ந்த இவர்கள் அறபு, பாரசீக, சீன, இந்திய அறிவியற்றுறைகளில் தங்கள் ஆய்வுகளை மேற்கொண்டாலும், குறிப்பாக இஸ்லாமிய நாகரிகம், வரலாறு, அறபு மொழி, இஸ்லாமியக்கலைகள் என்பவற்றையே அதிகமாக ஆய்வு செய்தனர். கீழைத்தேய வாதிகளில் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்களாகவே காணப்படுகின்றனர்.[1]

கீழைத்தேய ஆய்வுகள் என்ற போர்வையில் இஸ்லாத்தை ஆழமாகக் கற்று, இஸ்லாத்தில் சந்தேகங்களை ஏற்படுத்தி, இஸ்லாத்தை வேரோடு பிடுங்கி எறிய வேண்டுமென்பதே கீழைத்தேய வாதிகளின் ஆராய்ச்சிகளின் அடிப்படை நோக்கமாகும். கீழைத்தேய வாதிகளின் இந்த நோக்கத்தை பிரான்சிலிருந்து பிரசுரிக்கப்பட்ட Lemonde mussalman எனும் சஞ்சிகையில் chatalier என்ற கிறிஸ்தவப் பிரசாரகர் இப்படி எழுதுகிறார்.

"முஸ்லிம்கள் இஸ்லாத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையைப் பலவீனமடையச் செய்வதில் எமது பிரசாரகர்கள் தோல்வி கண்டுள்ளனர் என்பதில் சந்தேகமில்லை. மேற்கத்திய மொழிகள் வாயிலாகக் கருத்துக்களைப் பரப்புவதன் மூலம் இதனைச் சாதிக்க முடியும். மேற்கத்திய மொழிகளை முஸ்லிம்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதன் மூலம் ஐரோப்பாவில் பிரசுரிக்கப்படும் சஞ்சிகைகள், நூல்கள் என்பவற்றோடு முஸ்லிம். உலகிற்குத் தொடர்பேற்பட வழி பிறக்கும் அது முஸ்லிம்கள் உலோகாயுதத் துறையில் முன்னேற வழிகோலும். அப்போதே இதுவரை முஸ்லிம்களின் தனித்துவத்தையும் சக்தியையும் பாதுகாத்த இஸ்லாமியக் கோட்பாடுகளையும் சித்தாந்தங்களையும் சீர்குலைக்கும் தமது இலட்சியத்தில் கிறிஸ்தவ மிஸனரிகள் வெற்றிகாண முடியும்."[2]

1. அத்தப்ஸீரு வல் இஸ்திஷ்ராக் : பக்கம் 35 முஹம்மத் இஸ்மாயில் த.்.தாவி
2. ISLAM AND WEST-KURSHID AHMED (LAHORE 1970)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, கீழைத்தேயவாதிகளின் ஆய்வுகளின் அடிப்படை நோக்கம் முஸ்லிம்களை விட்டும் இஸ்லாத்தைத் தூரப்படுத்துவதே என்பதை இந்த வாசகம் கோடிட்டுக்காட்டுகிறது. இஸ்லாமிய வரலாற்றிலேயே முதன் முதலில் இஸ்லாமியக் கொள்கையில் சந்தேகங்களை ஏற்படுத்தியவர்கள் உமையாக்காலத்தில் வாழ்ந்த டமஸ்கஸைச் சேர்ந்த 'யஹூனா'வும், அப்பாஸியர் காலத்தில் வாழ்ந்த 'பஹ்தீஸூம்' ஆவர். இத்தகையோர்களே கீழைத்தேய வாதிகளுக்கு முன்னோடிகளாக விளங்கினார்கள் என்று 'அத்தப்ஸீர் வல் இஸ்திஷ்ராக்' என்ற நூலில் 'முஹம்மத் இஸ்ஸத் இஸ்மாயீல் தஹ்தாவி' குறிப்பிடுகிறார். எது எவ்வாறிருப்பினும் சமகால உலகில் மிகவுமே ஆபத்தான முறையில் செயற்பட்டு வரும் கீழைத்தேய வாதிகளின் ஆராய்ச்சி 13ஆம் நூற்றாண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டதாகும். இஸ்லாமியக் கோட்பாட்டை மிக நுணுக்கமான முறையில் ஆராய்ந்த இவர்களை 'அல் முஸ்தஷ்ரிகூன் பைனல் இன்ஸாப் வல் – அஸபிய்யா' என்ற நூலில், அதன் ஆசிரியரான 'அலவி மாலிகி' இரண்டு வகையாக வகுத்து நோக்குகின்றார்.

1. ***தீவிரவாதிகள்:–*** **(Extremist)** என இனங்காணப்படும் இவர்களது முழு நோக்கமும் இஸ்லாத்தை வேரோடு களைய வேண்டும் என்பதாகும். இவர்கள் தமது ஆராய்ச்சிகள் மூலம் இஸ்லாமியக் கோட்பாட்டில் திரிபுகளையும் சந்தேகங்களையும் ஏற்படுத்தியிருப்பதைக் காணலாம். இத்தகைய கீழைத்தேயவாதிகளுக்கு உதாரணமாக, KARICKER, ANTOAL, SHARK, ALFRED GUILLAUME என்பவர்களைக் குறிப்பிட முடியும்.

2. ***நேர்மையானவர்கள்:–*** **(Righteousts)** இவர்களை இரண்டாவது பிரிவினராக இனங்காண முடியும். இவர்களும் இரண்டு வகையாகப் பிரிகின்றனர். அதாவது, கீழைத்தேயவாதிகளில் சிலர் இஸ்லாமியக் கோட்பாடுகள், பண்பாடுகள், நாகரிகம் என்பவற்றை ஆராய்ந்ததன் பின்னர் இஸ்லாத்தை அதன் உண்மை வடிவில் வெளியிட்டனர்.

'அலவி மாலிகி' கூறுவது போல், இவர்கள் அழுக்கடைந்த உடல்களோடு இஸ்லாத்தை அழகான உடைகளில் வெளிப்படுத்தினர். மேலும், கீழைத்தேய ஆய்வுகளை மேற் கொண்ட சிலர் அதன் யதார்த்த பூர்வ நிதர்சன உண்மைகளை உணர்ந்து, அதன் போதனைகளால் ஆகர்ஷிக்கப்பட்டு, அதனை ஏற்றும் கொண்டனர். இவர்களுக்கு உதாரணமாக, பிரான்ஸைச் சேர்ந்த E.Dinet ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த **'லியோ போல்ட் வைஸ்'** என்போரைக் குறிப்பிட முடியும்.

### *கீழைத்தேய வாதிகள்– ஓரு வரலாற்று நோக்கு*

கீழைத்தேய ஆய்வு முயற்சிகளில் முதன் முதலில் ஈடுபட்டவர் யார்? என்பது பற்றி வரலாற்றில் எவ்விதச் சான்றுமில்லை. பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கிறிஸ்தவ மதப்புரோகிதர்கள் இஸ்லாமிய ஆட்சிக்கொடி பறந்து கொண்டிருந்த ஸ்பெயினுக்குப் பிரயாணங்களை மேற்கொண்டு, இஸ்லாமியக்கலாசாலைகளில் முஸ்லிம் அறிஞர்களிடத்தில் உடலியல், வைத்தியம், தத்துவம் போன்ற கலைகளை ஆழமாகக் கற்றனர். அறபு மொழியைக் கற்றுத் தேர்ந்ததால் அம்மொழியில் காணப்பட்ட அறிவியற்றுறை நூல்களைத் தங்களது தாய் மொழிக்குப் பெயர்க்கலாயினர். ஆரம்பத்தில் ஸ்பெயினுக்கு வந்த கிறிஸ்தவ மத அறிஞர்களில் JERBERT, BIRRELE AENERE, GERARD,.DEGREMONE, என்பவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களைத் தொடர்ந்து இன்னும் பல கிறிஸ்தவர்கள் ஸ்பெயினுக்குச் சென்று பல்துறைகளையும் ஆழமாகக் கற்றுத் தங்களின் நாடுகளுக்குத் திரும்பிய போது, அறபு மொழியைக் கற்பதற்காகவும் அறபியக் கல்வி முறையைப் பரப்புவதற்காகவும் தங்களது நாடுகளில் கலாசாலைகளை நிறுவினர். அக்காலத்தில் அறிவியற்றுறை நூல்கள் அறபு மொழியில் காணப்பட்டதாலும் தங்களது மாணவர்களை அறிவியலின் பால் தூண்ட வேண்டியிருந்ததாலும் அங்கு பாடசாலைகளை நிறுவ வேண்டிய தேவை இருந்தது. அறபு மொழியைக்கற்பதன் மூலம் இஸ்லாத்தினைப் பூரணமாக அறிந்து அதனைச் சீர்குலைக்க முடியும் எனக்கருதிய இவர்கள், பதினெட்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டில் மேற்கத்திய காலனித்துவம் அனைத்து நாடுகளையும் ஆட்கொண்ட போது இஸ்லாமியக் கலாநிலையங்களில் காணப்பட்ட பல்வேறு நூல்களையும் ஐரோப்பாவிற்கு எடுத்துச் சென்று தங்களது ஆய்வுகளில் வேகமாக ஈடுபடத்தொடங்கினர்.

*கீழைத்தேயவாதிகள் வரலாறு நெடுகிலும் செய்த சதிகள்*

இஸ்லாத்தின் புனித போதனைகளிலும் மூலாதாரங்களிலும் சந்தேகங்களை ஏற்படுத்த நினைத்த கீழைத்தேய வாதிகள் பல்வேறு வழிகளிலும் செயல்பட்டனர். அவர்களது இஸ்லாத்திற்கெதிரான முயற்சிகளுக்கு அப்போதிருந்த காலனித்துவம் பெரிதும் துணை புரிந்தது. சிலுவை யுத்தத்தைத் தொடர்ந்து இஸ்லாத்தின் பலமான நம்பிக்கைக் கோட்பாடுகளான ஏகத்துவம், நபித்துவம், மறுமை போன்றவற்றில் ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றைப் பலவீனப்படுத்தினர். இதே போன்று இஸ்லாமிய நாடுகள் காலனித்துவத்திலிருந்து சுதந்திரமடைந்த போது இஸ்லாமிய நாடுகளுக்கும் மேற்கத்திய நாடுகளுக்குமிடையில் இக்கீழைத்தேயவாதிகளே தூதுவர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் அறபுலகில் அறபு மொழியைக்கற்று இஸ்லாமிய அரசியல் சிந்தனையாளர்களோடும் பத்திரிகைத் துறையோடும் தொடர்பு கொண்ட கிறிஸ்தவ மத சிந்தனைகளையும் மேற்கத்திய அரசியல் கொள்கைகளையும் புகுத்தினர்.

*கீழைத்தேய வாதிகளின் விஷமத்தனங்கள்*

கீழைத்தேயவாதிகள் ஆராய்ச்சி என்ற போர்வையில் இஸ்லாத்திற்கெதிராக செயல்பட்டு வருகின்றனர். அந்த வகையில் அல்குர்ஆன், ஹதீஸ், இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகள், இஸ்லாமியச் சட்டக்கலை, வரலாறு, நாகரிகம், அறபு மொழி என்பன தொடர்பாக பல்வேறு வாதங்களை முன்வைக்கின்றனர்.

*வஹி பற்றிய இட்டுக்கட்டு:-*

'வஹி' என்பது 'ஹிஸ்டீரியா' நோயாகும். அதாவது பரம்பரை பரம்பரையாய் இருந்து வரும் நரம்பு நோயாகும். இந்நோயால் பீடிக்கப்பட்டவர் சுய அறிவை இழந்து விடுவார். தொடர்ந்தேர்ச்சியான நடுக்கமும் உடலிலே பதற்ற நிலையும் ஏற்படும். இந்நிலை தொடர்ந்தால், சில உறுப்புக்கள் செயலிழந்து விடும். அவ்வேளை நோயாளி தன்னையறியாமல் புலம்புவார். குறிப்பிட்ட நேரத்திற்குப் பின் பய உணர்வை ஏற்படுத்துகின்ற அடையாளம் தோன்றி காணமுடியா உருவங்களைக் காண்பார். எனவே, ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குப் பாய்வார். இவ்வாறு KARICKER, ANTOAL போன்ற கீழைத்தேயவாதிகள் வாதாடுகின்றனர்.

ஆனால், ஹிஸ்டீரியா நோயால் பாதிக்கப்பட்ட எவரும், மேற்சொன்ன பண்புகளைக் கொண்டவராகக் காணப்படுவார் என இன்றுவரை மருத்துவத்துறையில் கண்டு பிடிக்கப்படவில்லை. மருத்துவத்துறை இதனை அங்கீகரிக்கவுமில்லை. மாறாக, அவர் சுய நினைவோடே கருத்துக்களைத் தெளிவாகப்பேசுவார் என்பதையே மருத்துவம் கூறுகிறது. இவ்வாறு 'வஹி' பற்றி இன்னும் அதிகமான வாதங்களை முன்வைக்கின்றனர். "முஹம்மத் அவரது சொந்தக் கருத்துக்களை அவரின் மொழி நடையில் கூறினார். மாறாக அவருக்கு வஹி இறங்கவில்லை." என்பதும் கீழைத்தேயவாதிகளின் வாதமாகும். அல்குர்ஆன் வசனங்களுக்கிடையே எத்தகைய கருத்துத் தொடர்புமில்லை. அது மனிதனாலேயே இயற்றப்பட்டது என்றும் கீழைத்தேயவாதிகள் வாதிக்கின்றனர். இவர்கள் முன்வைத்த அனைத்து வாதங்களுக்கும் சம காலத்திலேயே இஸ்லாமிய அறிஞர்களால் தகுந்த பதிலடிகளும் மறுப்புகளும் முன்வைக்கப் பட்டிருக்கின்றன.

*சுன்னா பற்றிய வாதங்கள்*

கோல்ட்ஸியர் என்ற யூத கீழைத்தேய வாதி 1980ஆம் ஆண்டு சுன்னா பற்றிய தனது விமர்சனங்களை Muhammedaisene stidien எனும் நூலில் ஜேர்மனிய மொழியில் இரண்டு பாகங்களாக வெளியிட்டார். "பிற்காலத்தில் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் வளர்ச்சி காரணமாக தோன்றிய சில மரபுகள், பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்கள் ஆகியவற்றை நியாயப்படுத்தவும், அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதத்தன்மையைப் பேணவும் அவை பற்றிய சில போதனைகளை, வாக்குகளை ஹதீஸ் எனப் பெயரிட்டு, இஸ்லாத்தில் நபியவர்கள் கூறியதாக பின்னால் வந்த முஸ்லிம்களால் இட்டுக்கட்டப்பட்டவையையே 'சுன்னா' எனப்பெயரிட்டனர்.என இவர் வாதாடினார். இதனைத் தொடர்ந்து வந்த ALFRED A. GUILLAUME தனது TRADITION OF ISLAM என்ற நூலிலும் MARGOLIUTH என்பவர் தனது MOHAMMADANISM என்ற நூலிலும் இதே கருத்தை முன்வைக்கிறார். இவ்வாறு கீழைத்தேயவாதிகள் அநேக பொய் வாதங்களை முன்வைக்கின்றனர். JUYNBOLL என்பவர் மதங்கள் பற்றிய தனது கலைக் களஞ்சியத்தில் (Encyclopaedia of Religious and ethics) சுன்னா பற்றி இப்படிக் கூறுகிறார். "The word sunnah is often wrongly taken to mean "traditions" (viz: regarding the deeds and saying of the prophet) but it realy means the method of behaviour generally followed"[3]

சுன்னா என்பது பெரும்பாலும்' 'ஒழுகலாற்று விதிகள்' அதாவது நபிகளாரின் வாக்குகள், செயல்களைக் குறிப்பதாகத் தவறாகக் கருத்துக்கொள்ளப்படுகிறது. ஆனால், உண்மையில் அது மக்களால் பின்பற்றப்பட்ட மரபு ரீதியான நடத்தையைக் குறிக்கின்றது." என எழுதியுள்ளார். இவ்வாறு அனைத்து ஹதீஸ்களும் முஹம்மது நபிக்குப் பின்னால் வந்தவர்களால் இட்டுக்கட்டப் பட்டவை; ஹதீஸில் அதிகமான கலப்புக்களும் இடைச்செருகல்களும் காணப்படுகின்றன என்று வாதாடும் இவர்கள் அபூஹுறைரா, இமாம் அபூஹனீபா, இமாம் சுஹ்ரி போன்றோருக் கெதிராகப் பல்வேறு குற்றச் சாட்டுக்களையும் முன்வைக்கின்றனர்.

*இஸ்லாமிய சட்டக்கலை:-*

கீழைத்தேய வாதிகள் இஸ்லாத்தின் அனைத்துத் துறைகளிலும் வாதங்கள் முன்வைப்பது போல் இஸ்லாமிய சட்டக்கலை தொடர்பாகவும் பல்வேறு சந்தேகங்களைக் கிளப்பியிருக்கின்றனர். இஸ்லாமிய சட்டக்கலை என ஒன்று இஸ்லாத்தில் அடிப்படையிலேயே இருந்ததில்லை. மாறாக, இவை அனைத்தும் ரோம சட்டக்கலையிலிருந்தே தோன்றின என்றும் வாதாடுகின்றனர். இவர்களது இந்த வாதங்களுக்கு விளக்கங்களையும் பதிலடிகளையும் Dr. Mohammed Muslehuddeen என்பவர் தனது Philosophy of Islamic law and orientalists என்ற நூலில் தெளிவுபடுத்துகிறார்.

கீழைத்தேய வாதிகளின் அனைத்து வாதங்களுக்கும் தகுந்த பதில்கள் முன்வைக் கப்பட்டுள்ளன. இத்தகைய பொய்யான வாதங்களுக்கு மறுப்புத்தெரிவிக்கும் வகையில் இஸ்லாமிய அறிஞர்கள் எழுதியுள்ள நூல்களுள் 'சுன்னா வ மகானதுஹா பித்தஷ்ரி இல் இஸ்லாம்' (முஸ்தபா ஸிபாஈ) 'அன்வாருல் காஷிபா' (அப்துர்ரஹ்மான் இப்னுயஹ்யா), போன்றவற்றை உதாரண மாகக் குறிப்பிடலாம்.

*கீழைத்தேயவாதிகள் கையாளும் வழி முறைகள்*

கீழைத்தேயவாதிகள் புனித இஸ்லாமியக் கோட்பாடுகளில் சந்தேகங்களையும் வாதங் களையும் முன்வைப்பதற்கு பல வழிமுறை களைக் கையாளுகின்றனர். குர்ஆன் சுன்னா பற்றிய சந்தேகங்களையும் புனைந்துரை களையும் கொண்ட நூல்களை வெளியிடல் இஸ்லாத்தைப் பற்றிப் பிழையாகச் சித்திரிக்கும் சஞ்சிகைகளை வெளியிடல்; அனாதை மடங்கள், அகதி முகாம்கள், பாடசாலைகள் போன்றவற்றிற்கு கிறிஸ்தவ மதப்பிரசார கர்களை அனுப்புவதோடு பல்வேறு உதவிகளையும் அவற்றிற்கு வழங்குதல், இஸ்லாமிய நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களில் விரிவுரைகளை நடத்துதல், இஸ்லாமியக் கலைக்களஞ்சியங்களை வெளியிடல், தங்களது திட்டங்களைச் செயற் படுத்துவது பற்றிக் கலந்தாலோசிக்க மாநாடு களைக் கூட்டல், இஸ்லாமிய நாடுகளில் பல்கலைக்கழகங்களை நிறுவுதல் போன்ற வைகள் கீழைத்தேயவாதிகள் கையாளும் முக்கிய வழிகளாகும்.

3. (Edinburgh volume vii)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கீழைத்தேயவாதிகளின் மிக முக்கிய நூல்களும் சஞ்சிகைகளும்*

கீழைத்தேயவாதிகள் எழுதிய நூல்களுள் "Today Islam" (A.J.ARBERRY 1943), "Quran translation" (1950) Islamic mysticism (1950) A. Geom எழுதிய "THE ISLAM". H.A.R. Gibb எழுதிய "The way of Islam" "Islam and west Community", von Grunbaum எழுதிய "MUHAMMADIAN Festivals" "Studies in History of Islamic Culture" என்பன மிக அபாயகரமானவையாகும். இதே போன்று இவர்கள் வெளியிட்ட மிக ஆபத்தான சஞ்சிகைகளாக THE MUSLIM. WORD', 'Le monde mussulman', 'Organization of oriental science" என்பன கருதப்படுகின்றன.

கீழைத்தேயவாதிகள் தமது நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நூல்களை மட்டுமன்றி சஞ்சிகைகளையும் பயன்படுத்துகின்றனர் என்பது மேற் குறித்த தகவல்களின் மூலம் அறிய முடிகிறது.

அல்குர்ஆன், சுன்னா, இஸ்லாமிய வரலாறு, இஸ்லாமிய சட்டக்கலை, இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடு என்பவற்றில் திரிபுகளையும் சந்தேகங்களையும் உண்டு பண்ணும் வகையில் கீழைத்தேயவாதிகள் எண்ணற்ற நூல்களை எழுதியுள்ளனர். இத்தகைய நூல்களை முஸ்லிம்கள் கற்று, தூய இஸ்லாத்தைத் தவறுதலாக விளங்கிவருவதானது எதிர்கால முஸ்லிம் சமூகத்திற்கு மிகப்பயங்கர அச்சுறுத்தலாக அமைந்து விடும் கீழைத்தேயவாதிகளின் விஷமத்தனமான முயற்சிகள் கிறிஸ்தவ மதப் பிரசாரத்தைப் பின்னணியாகக் கொண்டு, சமகால இஸ்லாமிய உலகில் தலை விரித்துத் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் ஒவ்வொரு முஸ்லிமும் இஸ்லாம் பற்றிய ஆழமான அறிவும் விழிப்புணர்வும் கொண்டு வாழ்வது இன்றியமையாததாகும். அத்தோடு மேற்குறித்த விஷமிகளை இனங்கண்டு இவர்களுக்கு தக்க பதிலடிகளை வழங்குவது ஒவ்வொரு இஸ்லாமிய அறிஞரதும் கட்டாயக் கடமையாகிறது. கீழைத்தேய வாதிகளின் சதி வலைகளிலிருந்து முஸ்லிம் சமூகத்தைக் காப்பதற்கு விழிப்புணர்வும் பரந்த இஸ்லாமிய அறிவும் கொண்ட ஒரு சாரார் இன்றுள்ள முஸ்லிம் சமூகத்தின் அவசியத்தேவை என்பதில் இரு கருத்திற்கிடமில்லை.

**உஷாத்துணைகள்:-**


01. அத்தப்ஸீரு வல் இஸ்திஷ்ராக்: முஹம்மத் இஸ்ஸத் இஸ்மாயில் தஹ்தாவி

02. அல் முஸ்தஷ்ரிகூன் பைன இன்ஸாப் வல் அஸபிய்யா -அலவிமாலிகி

03. அல் இஸ்திஷ்ராக் வல் முஸ்தஷ்ரிகூன் -கலாநிதி முஸ்தபா ஸிபாயி

04. அல் முஸ்தஷ்ரிகூன் வல் முபஸ்ஸிரூன் பில் ஆலமில் அறபில் இஸ்லாமி - - இப்றாஹிம் கலீல் அஹ்மத்

05. அல் முஸ்தஷ்ரிகூன் வல் இஸ்லாம் - - ஸகரிய்யா ஹாஸிம் ஸகரிய்யா

06. ISLAM AND WEST - Proff: Kurshid Ahmed LAHORE -1970

07. PHILOSOPHY OF ISLAMIC LAW AND ORIENTALISTS - DR :Muhammed Muslehudeen


* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாத்தில் கல்வி - ஒரு வரலாற்று நோக்கு

உலகளாவிய ரீதியில் ஒரு மகத்தான அறிவியல் மறுமலர்ச்சிக்கு வழி வகுத்த இஸ்லாமியக் கல்வியின் தோற்றுவாய், எழுத்துருப் பெறாமல் வாய்மூல மரபாக இருந்த பண்டைய அறபு நாகரீகத்திலிருந்து ஊற்றெடுக்கிறது. மானிட வர்க்கத்தின் பண்பாட்டு வளர்ச்சியிலிருந்து சேய்மையில் காணப்பட்ட இந்த நாகரீகத்தை மனித வாழ்விற்கு இசைவானதாக ஆக்கிய பெருமை குர்ஆனுக்கும் சுன்னாவிற்கும் உரியது. இவை இரண்டும் வகுத்த வழியில் இஸ்லாமிய வரலாறு மகத்தான பல வளர்ச்சிப் படிகளைக் கண்டுள்ளது. இந்த வகையில், இஸ்லாமிய அறிவியல் வரலாற்றில் அடையாளமிட்டுக் காட்டக் கூடிய சில கட்டங்களை நோக்குவது சிறந்ததாகும்.

இஸ்லாமியக் கல்விப் பாரம்பரியத்திற்கு அடித்தளமிட்டவர் எழுத வாசிக்கத் தெரியாத ஒரு மனிதர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இஸ்லாமியக் கல்வியின் உருவாக்கம் 'வஹி'யுடன் ஆரம்பமாகின்றது. வஹியின் ஆரம்பமே **"வாசிப்பீராக"** என்று கல்வியின் அவசியத்தை உணர்த்துவதாக அமைகிறது. நபிகளார் தனக்கு ஓதத் தெரியாது என்று கூறியபோது மீண்டும் வானவர் ஜிப்ரீல் "நீர் உமது இறைவனின் பெயரைக் கொண்டு ஓதுவீராக; அவன் தான் மனிதன் அறியாத வற்றை யெல்லாம் அவனுக்குக் கற்றுக் கொடுத்தான்" என்றார்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்காவில் கண்ணியமானதொரு குடும்பத்தில் பிறந்தார்கள். இவ்வாறான கண்ணியமிக்க குடும்பங்களிலேதான் எழுதப் படிக்கத் தெரிந்த மனிதர்கள் காணப்பட்டனர். என்றாலும் எழுத்தறிவின்மை அறேபியா எங்கும் பரந்து காணப்பட்டது. எழுத வாசிக்கத் தெரிந்த ஒரு சில மனிதர்கள் நகரங்களிலும் சிறிய குடியிருப்புக்களிலும் வாழ்ந்தனர். மக்காவின் வியாபாரிகள் ஏனைய வியாபாரிகளைச் சந்தித்த போது, அவர்கள் ஓரளவாவது எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாகக் காணப்பட்டனர். இஸ்லாத்தை ஆரம்பத்தில் தழுவிய மனிதர்களுள் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களும் இருந்தனர். இவர்களில் சிலர் நபிகளாரது காலத்தில் வஹியை எழுதக் கூடியவர்களாகவும், பிற்காலத்தில் இஸ்லாமிய சாம்ராச்சியத்தின் சிரேஷ்ட அதிகாரிகளாகவும் விளங்கினர்.

இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்னர் அறபு மொழியிலான ஆக்கங்கள் அனைத்தும் வாய்மூலங்களாகவே அமைந்திருந்தன. அறேபியரின் வளம்மிக்க கவிதைகளும் வாய் மொழி மூலமாகவே பரிமாறப்பட்டன. ஒருவன் கவிஞனாகக் கணிக்கப்படுவதற்கும், அவன் தனது கவிதைகளைப் பாடுவதற்கும் சில தகைமைகள் கொண்டிருக்க வேண்டுமென்ற அவசியம் இருக்கவில்லை.

எழுத்தறிவற்ற, வாய்மூல மரபுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு சூழலில் அல்குர்ஆன் அருளப்பட்டது. அது கல்வி கற்பதன் மகத்துவத்தைக் கூறுகின்ற அதே வேளை, அறிவியல் அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அறிவுள்ள மனிதர்கள் நபிமார்களின் வாரிசுகளாகக் கருதப்படுகின்றனர். குர்ஆனுக்கு வியாக்கியானம் செய்யும் பணியை நபிகளாரே ஆரம்பித்து வைத்தார்கள், முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது போதனையின் மூலம் மக்களிடமிருந்து உலகியல் இலாபங்களை எதிர்பார்க்கவில்லை. மாறாக அல்லாஹ்வின் திருப்தியை மட்டுமே எதிர்பார்த்தார்கள்.

நபியவர்கள் தமது பிரசாரத்தின் போது, சமூகத்தின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் வஹியின் விளக்கங்கள் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்கள். நபியவர்களின் சன்மார்க்கப்போதனையானது எப்பொழுதும் கல்வியின் முக்கியத்துவத்துடன் தொடர்புபடுகின்ற விடயங்களை உள்ளடக்கியதாகவே காணப்பட்டது. கல்வியறிவுள்ளோர் கல்வியறிவற்றோருக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிக்குமாறு பணிக்கப்பட்டனர். புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய சமூகத்தினருக்குப் போதனை செய்ய கல்வியறிவுள்ளவர்கள் மாத்திரம் அனுப்பி வைக்கப்பட்டனர். அத்தகைய மனிதர்களே வணக்கஸ்தலங்களில் இடம் பெற்ற போதனா கூடங்களின் ஆசிரியர்களாகப் பணிபுரிய அனுமதிக் கப்பட்டனர். பள்ளிவாயல்களே இஸ்லாத்தின் ஆரம்பக் கல்விப்பாசறைகளாகத் திகழ்ந்தன. அத்தோடு குர்ஆனே முதற் பாட நூலாகவும் அமைந்தது.

கல்வியின் மூலஸ்தானங்களாகப் பள்ளி வாயல்கள் இருந்தமை, வரலாறு முழுவதும் கல்வியின் சிறப்பு தொடர்ந்திருப்பதற்குக் காரணமாக அமைந்ததெனலாம். அப்பள்ளி வாயல்கள் சமூக நடவடிக்கைகளைப் பிரதிபலித்துக் காட்டும் முக்கிய தலங்களாகக் காணப்பட்ட அதேவேளை, நீதிமன்றங் களாகவும் செயற்பட்டன. மார்க்கப் போதனைகளும் அரச கொள்கைகளும் கூட அங்கு விளக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க தாகும். அப்பள்ளிவாயல்களிலே அறிஞர்களும் பிரசாரகர்களும் அமர்ந்திருக்க, அவர் களிடமிருந்து அறிவு பெறும் நோக்கில் மனிதர்கள் சிறியவர், பெரியவர் என்ற பாகுபாடின்றி அறிவுத் தாகத்தோடு சென்றனர்.

நபிகளாருடன் இணைந்து போதனை களில் ஈடுபட்ட ஆசான்கள், நபிகளாரைப் போலவே எவ்வித வேதனமும் பெறாமல் தமது பணிகளை மேற்கொண்டனர். நபிகளாரின் காலத்திற்குப் பின்னர் அவர்கள் ஒரு தார்மீக சமுதாயத்திற்கான திட்டங்களை வகுக்கக் கூடியவர்களாக மாறினார்கள். அச்சமூகத்தின் அங்கத்தவர்களும் தலைவர் களும் போதகர்களும் அச்சமூகத்தின் முன்னேற்றத்திற்காகத் தங்களை அர்ப்பணித்த வர்களாக இருந்தனர்.

பிற்காலத்தில் குர்ஆனுக்கு விளக்கமாக அமைந்த நபிகளாரின் சுன்னாவை அவர்கள் தொகுத்தனர். கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்ற விதத்தில் சுன்னா அமைந் திருப்பதற்கு. தக்க சான்றுகளாகக் கீழ்வரும் நபிவாக்குகளைக்குறிப்பிடலாம்:

**"கல்வியைக் கற்றுக் கொள்வது முஸ்லிமான ஆண் பெண் இருபாலார் மீதும் கடமையாகும்"**

**"அறிவைத் தேடுகின்ற ஒருவனது நன்னோக்கத்தைப் பொருந்திக்கொண்டதற்கு அடையாளமாக வானவர்கள் தங்களுடைய இறக்கைகளை அவன் மீது விரிக்கின்றார்கள்."**

ஆரம்ப காலத்தில் குர்ஆன், ஹதீஸ் போன்ற துறைகளை ஆழமாகக்கற்றவர்கள் அரேபியத் தீபகற்பத்தை விட்டும் வெளியேற வில்லை. ஆனால், பிற்காலத்தில் அவர்கள் தீபகற்பத்தினை விட்டும் வெளியே சென்று அறிவுப்பணியைத் தொடர்ந்தார்கள். அவர்களுட் பலர் ஈராக்கிலும், இன்னும் சிலர் சிரியா, எகிப்து போன்ற நாடுகளிலும் வாழ்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சரியான முறையில் குர்அனை ஓதுவது பற்றிய அறிவைப்பெற்றுக் கொள்வதற்கும் ஹதீஸ்களை இனங்கண்டு கொள்வதற்கும் விரும்பியவர்கள் தூர இடங்களுக்குப் பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் அவ்வப்போது ஏற்பட்டது. இவ்வாறு கல்வி கற்றவர்களிடமிருந்து அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஈமானின் அடியாகவே தோன்றியது. இதன் நடைமுறைகளிற் சில முன்னைய அமைப்புக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. இந்த அமைப்புக்கள் இஸ்லாமியக் கல்வி வரலாற்றில் மைல் கற்களாக விளங்குகின்றன.

ஆரம்ப காலங்களில், கல்வி கற்பவர்களிடம் விஷேட தகைமைகள் காணப்பட வேண்டும் என்ற அவசியம் இருக்கவில்லை. ஆனால், பிற்காலத்தில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. கல்வித் தகைமைகளை வேண்டி நிற்கின்ற ஒரு நிர்வாக முறையை முதன் முதலில் உமர் (றழி) அவர்கள் அறிமுகம் செய்தார்கள். உமர் (றழி) அவர்களின் கீழ்வரும் கூற்றானது இதற்குத்தக்க சான்றாக அமைகின்றது. அவர்கள் தமது ஆட்சிக்காலத்தில் முஸ்லிம் களுக்குப் பின்வருமாறு கூறினார்கள்:

**"நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு நீச்சல், அம்பெய்தல்,குதிரையேற்றம், கவிதை புனைதல் போன்ற பயிற்சிகளை வழங்குங்கள்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வரலாற்றாசிரியரின் கூற்றுப்படி, ஆரம்ப கால இஸ்லாமிய சமூகம் கல்விக்கெனத் தனியானதொரு அமைப்பை உருவாக்கவில்லை. இஸ்லாமிய அரசு சிறார்களுக்குக் கற்பிக்கின்ற போதனா ஆசிரியர்களுக்குத் தனியானதொரு கொடுப்பனவுத் தொகையை ஒதுக்கவுமில்லை. கல்வி கற்பவர்களே அதற்கான செலவினங்களை ஏற்க வேண்டியிருந்தது. இதனடியாகத்தான் தனிப்பட்ட ஆசிரியர்களின் விசேட வகுப்புக்கள் ஆரம்பமாயின.

இத்தகைய வகுப்புக்கள் முதலில் வீடுகளிலேயே நடத்தப்பட்டன. மாணவர்கள் தனிப்பட்ட முறையிலும், சிறுசிறு குழுக்களாகவும் அவ்வகுப்புக்களில் கலந்து கொண்டனர். மாணவர்களது கல்வி கற்க வேண்டுமென்ற ஆர்வமும் ஆசிரியரின் வருவாய் பெற வேண்டும் என்ற தேவையுமே இவ்விசேட வகுப்புக்கள் தொடர்ந்தும் நடப்பதற்கு உறுதுணையாய் அமைந்தன. கால ஓட்டத்தில் மாணவர்களின் தொகை பன்மடங்காகப் பெருக, அவர்களுக்கு வகுப்பு நடாத்துவதற்கான தனியானதொரு இடம் ஒதுக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. இவ்வாறு ஒதுக்கப்பட்ட இடங்கள் **"அல்-மக்தப்"** அல்லது **"அல்-குத்தாப்"** என்ற பெயர்களால் அழைக்கப்பட்டன. இஸ்லாமிய வரலாறு முழுவதிலும் இந்த இரண்டு வார்த்தைப் பிரயோகங்களும் மாறிமாறி உபயோகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. **"எழுதுதல்"** என்ற அறபு மொழியின் வினையடியிலிருந்தே இவ்விரு சொற்களும் தோற்றம் பெறுவதைக்காணலாம்.

இப்போதனா வகுப்புக்களில் கவிதையும் எழுத்தும் வாசிப்பும் எண்கணிதமும் பாடத்திட்டத்தின் முக்கிய கூறுகளாக அமைந்தன. பெண்களை விட ஆண்களே அதிகம் அவ்வகுப்புக்களில் கலந்து கொண்டனர். குர்ஆனின் சிறிய அத்தியாயங்களை ஓதுதலும் சிறுசிறு கவிதை அடிகளை மனனம் இடுதலும் இவர்களது பாடவிதானங்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

பிற்காலத்தில் இஸ்லாமிய அரச சேவையில் எழுத்தறிவு முக்கியதோர் இடத்தை வகித்தது. ஆரம்ப கால யூத, கிறிஸ்தவர்களின் மத நம்பிக்கைப்படி, அவர்களது நாட்டு நிருவாக விடயங்களில் ஈடுபடுபவர்கள் எழுத்தறிவை அடிப்படைத் தகுதியாகக் கொண்டிருந்தனர். இஸ்லாமியப் படைத் தளபதிகளினதும் நிருவாகத் தலைவர்களினதும் தஸ்தாவேஜுகள் அறபு மொழியில் மாத்திரம் காணப்படவில்லை. மாறாக, அந்தந்த நாட்டுக் குடிமக்களின் தாய் மொழியிலேயே அமைந்திருந்தன.

'கெய்ரோ'வைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த சில கலீபாக்கள், தாங்கள் நபிமார்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்று கூறினர். இவர்கள் தமது இந்த வாதத்தை நன்கு திட்டமிட்ட கல்விக் கொள்கையின் ஊடாகப் பலப்படுத்தினர். அத்தோடு அவர்கள் கெய்ரோவில் ஒரு பள்ளியையும் நிறுவினர். பிற்காலத்தில் இப்பள்ளிவாயல் 'அல்-அஸ்ஹர்' என அழைக்கப்படும் பாரியதொரு கல்விக் கூடமாக மாறியது. உலகின் முதலாவது பல்கலைக் கழகம் எனவும் இது கருதப்படுகிறது. இதன் மூலம் கெய்ரோவில் ஏற்பட்ட கல்வி மறுமலர்ச்சியினால் ஏற்கனவே பக்தாதிலிருந்த கல்வி முறைமை எவ்விதத்திலும் பாதிக்கப் படவில்லை. என்றாலும், கெய்ரோவிலும் பக்தாதிலும் கல்வி கற்ற மார்க்கப் போதகர்கள், நீதவான்கள், அரச உத்தியோகத்தர்கள் போன்றோரின் தேவை உணரப்பட்டது. இருந்த போதிலும் இவர்களை உருவாக்குகின்ற பணி தாமதமாகவே மேற்கொள்ளப் பட்டதெனலாம்.

இக்கால கட்டத்தில்தான் இஸ்லாமியக் கல்வி வரலாற்றில் ஒரு முக்கிய மாற்றம் இடம்பெற்றது. இஸ்லாமிய அரசு கல்வி நிலையங்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்களை அரசாங்க உத்தியோகத்தர்களாகக் கணித்து அவர்களுக்கு வேதனம் வழங்கியதோடு, மாணவர்களுக்கு இலவசமாக உணவும் தங்குமிட வசதிகளையும் அளித்து, கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதற்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது. அத்துடன் கல்வி கற்பவர்களின் 'மத்ஹபு'களுக்கு ஏற்ப பாடத்திட்டங்களையும் வகுத்துக் கொடுத்தது. இப்பாடத்திட்டத்தில் மார்க்கக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருந்ததுடன் சட்டக்கலை, பண்டைய அறபு இலக்கியங்கள் போன்றவைகளும் போதிக்கப்பட்டன.

எனவே, வேத வெளிப்பாட்டோடு ஆரம்பமான கல்வி முயற்சி, குர்ஆன் சுன்னாவால் வளர்த்தெடுக்கப்பட்டுப் பிற்பட்ட காலங்களில் தனி மனிதர்களாலும் உத்தியோகபூர்வமற்ற அமைப்புக்களாலும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இஸ்லாமிய அரசு, வரலாறு நெடுகிலும் ஒரு சகட ஓட்டத்தில் சென்று கொண்டிருந்தாலும் கல்வித்துறையானது வேகமாக வளர்ச்சி பெற்றுக் கொண்டே வந்தது. இருண்டு போயிருந்த ஐரோப்பா விடியலைப் பற்றிச் சிந்திக்கத் தெரியாதிருந்த வேளை, இஸ்லாத்தினால் உருவாக்கப்பட்டு வளர்ந்து வந்த கல்விப்பணி, அறபு தேசத்தில் வானளாவ வளர்ந்து கொண்டிருந்தது. "அறபு நாட்டின் கல்வி முயற்சிகள் ஏற்படுத்திய சலசலப்பும் சந்தடியும் நீண்ட காலமாக ஐரோப்பாவிற்கு எட்டவேயில்லை" என்பது உலக வரலாறு சொல்லும் உண்மையாகும்.

குறிப்பு:-

இக்கட்டுரை பேராசிரியர் A.L. திபாவி அவர்களின் Islamic Education என்ற நூலின் Historical view of Education In Islam என்ற பகுதியைத் தழுவியது.

ஆங்கில மூலம்:- பேராசிரியர். ஏ. எல். திபாவி
தமிழில் :- ஏ. எச். இஹ்ஸானுதீன்
எப். எம் ஸினான்

******

"தஃவத்துடைய பாதையில் என்றுமே தடைகள் இருந்து வந்துள்ளன. ஆனால் இஸ்லாமியப்பிரசாரம் என்பது அழித்தொழிக்கப்படும் ஒரு களமல்ல. அது உருவாக்கும், கட்டியெழும்பும் களம். மனித இயல்புகள் வேறுபட்டவை. எனவே, வெறுப்பும் வேதனையும் தரக்கூடிய துன்பங்களைச் சகித்துக் கொள்ளத்தக்க உறுதியான உள்ளத்தைப் பெற்றிருப்பதிலேயே தஃவத்தின் வெற்றி தங்கியுள்ளது. இஸ்லாமிய தஃவத்தின் வரலாற்றில் எமது முன்னோர்கள் எதிர்நோக்கிய தடைகளோடு இன்று நாம் எதிர் நோக்கும் தடைகளை ஒப்பிடும் போது இவை மிகவும் அற்பமானவை என்பதைப்புரிந்து கொள்ளலாம்"

பேரறிஞர் மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# මුහම්මද් නබි (සල්) තුමාගේ බහුභාර්යා ජීවිතයේ යථාර්ථය

එම්. ජී. රරීසුල් ඉස්ලාම් (අවසන් වසර)

ශිෂ්ට යන වචනයට අර්ථය නොදැන නූගත්කම නමැති අඳුරු අන්ධකාර අගාධයේ ගිලී සිටි අරාබි ජනයා දේශීය මට්ටමින්වත් නොසිතා හුදෙක් ඉතා කෙටි සීමිත ගෝත්‍රික මට්ටමින් පමණක් සිතන්නටත් ඒ අනුව තම කටයුතු කරන්නටත් පුරුදුව සිටියහ. ශිෂ්ට යන වචනයට අර්ථ ගන්වන, ජාත්‍යන්තර වශයෙන් සංකීර්ණව සිතන ඒ අනුව ක්‍රියා කරන ජන සමාජයක් බවට ඔවුන්ව පත්කළ මුහම්මද් (සල්) තුමාණන්ගේ මුළු ජීවිතය ම, සෑම අංග චලනයක් ම ලෝකයාට පරමාදර්ශයකි. කරුණාව, දයාව, මෛත්‍රිය සෙනෙහස, පරාර්ථචර්යාව, ඉවසීම යනාදී ගුණාංගයන්ගෙන් හෙබි මුහම්මද් (සල්) තුමාණෝ ආගමික නායකයෙකු ලෙස, දේශපාලන නායකයෙකු ලෙස හා යුද සෙබලෙකු ලෙස ජීවත් වූ අතර ම සෙනෙහසින් පිරි පියෙකු ලෙස හා ආදරණීය සැමියෙකු ලෙස ආදර්ශවත් පවුල් ජීවිතයක් ගත කළහ.

අග්‍රගණයේ කාමුකයෙකු ලෙස සිටි නිසාත් හුදෙක් කාමුක ජීවිතය පිළිබඳ නොසන්සිඳුන තම ආශාවන් මුදුන්පත් කරගැනීම පිණිසත් මෙතුමා බහුභාර්යා ජීවිතයක් ගත කළ බව ඉස්ලාමයට විරුද්ධ සමහර විචාරකයින් ගේ මතයයි. නබි තුමාණන්ගේ බහුභාර්යා ජීවිතයේ දක්නට ලැබෙන විශේෂ කරුණු දෙකක් එම විචාර බොරු ප්‍රලාපයන් බවට පත්කිරීමට ප්‍රමාණවත් ය.

01) නබි තුමා තම බහුභාර්යා ජීවිතය ඇරඹුවේ මහලු වියට පා තැබීමෙන් පසුවයි. එනම් එතුමාගේ පනස්වන වියෙන් පසුවයි.

02) නබි තුමා විවාහ කරගත් භාර්යාවන්ගෙන් ආයිෂා (රළි) තුමිය හැර අනෙක් සියලු දෙනා ම වැන්දඹුවෝ වූහ.

මෙම මූලික සත්‍යයන් දෙක ම එම විචාරකයින්ට ප්‍රමාණවත් පිළිතුරක් වේ යැයි සිතමි. දේශීය සිරිත් විරිත් අනුව බහුභාර්යා ජීවිතයට, පරදර සේවනයට කෙතෙකුත් ඉඩ තිබුණ ද කදීජා (රළි) තුමිය මිය යන තුරු ම එනම් තම තරුණ විය සම්පූර්ණයෙන් ම ගෙවී යන තුරු ම වෙනත් කාන්තාවක සරණ පාවා ගැනීමට එතුමා අදහස් නො කළේය. තව ද යහපත් හැසිරීම්වලට හා යහගුණාංගවලට ප්‍රසිද්ධියක් ඉසිලූ නිසාත් හැඩි දැඩි දේහයක් සතුව සිටි නිසාත් සුරූපී කන්‍යාවන් රැසක් විවාහකර ගැනීම එතුමාට සුළුදෙයක් ලෙස තිබිණ. ඇත්ත වශයෙන් ම එම විචාරකයින්ගේ මතය පරිදි නබි තුමාණෝ හුදු නොසන්සිඳුන කාම ආශාවන් මුදුන්පත් කර ගැනීම පිණිස මෙම විවාහයන් කරගත්තා නම් එතුමාගේ ප්‍රබෝධවත් තරුණ වියේ කොතෙකුත් ඉඩකඩ තිබුණ ද එසේ කරන්නට අදහස් නොකළේ ඇයි ? මහලු වියට පා තැබීමෙන් පසු වුව ද කන්‍යාවන් විවාහකර ගැනීමට ඕනෑතරම් අවකාශ තිබියදීත් වැන්දඹුවන් විවාහකර ගත්තේ ඇයි?

තවදුරටත් අපගේ අවධානය යොමුකළහොත් සහාබාවරු හෙවත් නබිතුමා පෙන්වූ මග පිළිගත් එතුමාගේ සහායකයෝ නබිතුමා වෙනුවෙන් තම සම්පත් සියල්ල වුවද පරිත්‍යාග කිරීමට මෙන් ම තම වටිනා ජීවිතය පවා පරදුවට තබන්නට කොයි මොහතේත් සූදනම්ව සිටි බව පැහැදිලි වේ. ඔවුහු නබිතුමාගේ නියෝගයන් පිළිගෙන කටයුතු කළහ. මෙවැනි වාතාවරණයක් යටතේ එදා සිටි අලංකාර රූමත් කන්‍යාවක් විවාහකර දෙන මෙන් නබි තුමා පැවසුවා නම් එය ඉටුකරදීමට සහාභාවරු කිසිවිටකත් පසුබට නොවෙනවා නිසැකයි. එසේ තිබිය දී නබිතුමාණෝ වැන්දඹුවන් විවාහ කර ගැනීම එතුමා ගේ නොසන්සිඳුන කාම ආශාව ගෙන දක්වයි ද? නැතිනම් මීට වඩා උසස් යථාර්ථයක් ගෙන දක්වන අපේක්ෂාවෙන් කරන්නට ඇති ද? මෙම කරුණ පිළිබඳ ව



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අපගේ දැඩි අවධානය යොමුවිය යුතුය. ඉහත විචාරකයින් තම අන්ධ විචාරයන් අත්හැර බුද්ධිමත්ව නිරීක්‍ෂණය කර නිගමනයකට පැමිණියායින් පසු විචාරයේ යෙදුණානම් සත්‍ය වශයෙන් ම ඔවුහු නබි තුමාණන් ගේ බහු භාර්‍යා ජීවිතයේ යථාර්ථය අවබෝධකර ගන්නවා ඇති. ඒ සමග ම මෙහි උසස් ආදර්ශයන් හා උපදේශයන් ගැබ්ව ඇති බවත් වටහා ගන්නවා නිසැකයි.

නබිතුමාණෝ බහුභාර්‍යා ජීවිතය පිළිපැදීමට හේතු වූ කරුණු රාශියක් තිබුණද ඒ සියල්ල සංක්ෂිප්තව මෙලෙස දැක්විය හැක.

01) විද්‍යාත්මක සාධක

02) ඉස්ලාමීය ෂරීඅත් නීති රීති සම්බන්ධ හේතු

03) සාමාජික හේතු

04) දේශපාලනික හේතු

## 1) විද්‍යාත්මක සාධක

නබි තුමාණන්ගේ බහුභාර්යා ජීවිතයට හේතුවූ මූලික කරුණක් ලෙස මෙය දැක්විය හැක. ඉස්ලාමය ස්ත්‍රී පුරුෂ දෙපාර්ශවයටම පහළ වුණ මාගෝපදේශයකි. ඉස්ලාමීය ෂරීඅතයේ පුරුෂයන් හා සම්බන්ධ නීතින් හා යුතුකම් උගන්වා තිබෙනවා මෙන් ම ස්ත්‍රීන්ට ද ඔවුනට විශේෂිත නීතින් හා යුතුකම් ඉගැන්වීමේ අවශ්‍යතාව මතුවිය. ඒ නිසා ස්ත්‍රීන් හා සම්බන්ධ නීති රීතින් මෙන් ම ඔවුන්ගේ එදිනෙදා ජීවිතය හා බැඳී පවතින ඔවුනට පමණක් විශේෂිත කරුණු පිළිබඳ ව ඉගැන්වීමට පිරිසක් අවශ්‍ය විය. මෙය නියමාකාරයෙන් ඉටුකිරීමට නම් එම පිරිස ස්ත්‍රීන් පිරිසක් වීම අත්‍යවශ්‍ය වූ අතර ඔවුහු නබිතුමාගේ පෞද්ගලික ජීවිතය පිළිබඳ මනා අවබෝධයක් ලබා සිටීම ද අවශ්‍ය විය. මේ නිසා මෙම වගකීම නබිතුමාගේ භාර්‍යාවන් පිට පැටවිණි. තමන් හා සම්බන්ධ දරු ප්‍රසූතිය, මාසික සෑතුවීම්, විවාහ කටයුතු හා ඉස්ලාම් ධර්මය සම්බන්ධ වෙනත් කරුණු පිළිබඳවත් ප්‍රායෝගික ජීවිතයේ දී ඔවුන්ට ඇතිවන ගැටළු පිළිබඳවත් සෘජුව ම නබිතුමාගෙන් අසා දැනගැනීමට බොහෝ ස්ත්‍රීහු ලජ්ජා වූහ. එම නිසා තම ගැටළු නබි තුමාණන්ගේ භාර්යාවන්ගේ මාර්ගයෙන් එතුමාට ඉදිරිපත් කර විසඳුම් ලබා ගැනීමට බොහෝ ස්ත්‍රීහු පුරුදුව සිටියහ. එසේම නබිතුමාගෙන් විමසනු ලැබූ සමහර ප්‍රශ්නවලට පැහැදිලිව පිළිතුරු දීමට එතුමා ද ලජ්ජා විය. නමුත් එතුමාණෝ සමහර අවස්ථාවල දී තම පිළිතුර ව්‍යංගයෙන් පැවසූහ. කෙසේ වෙතත් ඒවා පැහැදිලි ව කියා දීමට හැකිවන්නේ ස්ත්‍රියකට පමණක් හෙයින් නබි තුමා ඒ වෙනුවෙන් තම භාර්යාවන් යෙදෙව්වේය. මෙයට පහත සඳහන් සිද්ධිය කදිම උදහරණයකි.

"එක් ස්ත්‍රියක් නබිතුමා හමුවට පැමිණ මාසික සෑතුවෙන් පිරිසිදුවන්නේ කෙසේදැයි විමසූවිට එතුමාණෝ කස්තුරිවල පෙඟවූ පුළුන් කැබැල්ලක් දී ඉන් පිරිසිදු කරගන්නැයි කීහ. එය නිසිලෙස එම ස්ත්‍රියට නොතේරුණ හෙයින් කෙසේ ද? කෙසේදැයි ඇය තුන්වරක් නබිතුමාගෙන් විමසූවාය. එවිට නබිතුමාණෝ තම භාර්යාවක් වන ආයිෂා(රළි) තුමියට එය පැහැදිලි කරදෙනමෙන් පැවසූහ. එතුමිය එය ඇයට පැහැදිලි කළාය."

(මූලාශ්‍රය: බුහාරි, මුස්ලිම්, නසාඊ)

ප්‍රධාන ඉස්ලාමීය නීති මූලාශ්‍රයක් වශයෙන් සුන්නා හෙවත් නබිතුමාගේ වචනය, ක්‍රියාව හා අනුමැතිය යන සියල්ලම සහාබාවරු ඉතා සූක්ෂම ලෙස අවධානය කර මතක තබා .ගත් අතර ම ඒ පිළිබඳව අන් අයද දැනුවත් කළහ. එතුමාගේ පෞද්ගලික ජීවිතය පිළිබඳව හා නිවසේ එතුමාගේ කටයුතු පිළිබඳ ව අවධානය යොමුකිරීමට එම සහාබාවරුන්ට හැකියාවක් අවකාශයක් නොලැබුණි. එනිසා එම කටයුතු පිළිබඳව අවධානය යොමුකර ඒවා මතකයේ රඳවා ඉන් අන් අයද දැනුවත් කිරීම එතුමාගේ භාර්යාවන්ට පැවරුණ භාරදූර කාර්යයක් විය.. සත්‍ය වශයෙන් ම නබිතුමාගේ පෞද්ගලික ජීවිතයේ සෑම ක්‍රියාවක් පිළිබඳවම අවධානය යොමුකර ඒවා මතක තබා ගැනීම එක් ස්ත්‍රියකට කෙසේවත් කළ නොහැක්කකි. නබි තුමාගේ මරණින් පසු එතුමාගේ භාර්යාවන් නවදෙනා විසින් ලබාදුන් එතුමාගේ ජීවිතය පිළිබඳ කරුණු මෙන් ම අනෙකුත් දැනුම් සම්භාරය ද ජනයාට ලබාදීම ඇත්ත වශයෙන්ම එක් ස්ත්‍රියකට කිසිසේත් ම කළ නොහැකි දෙයකි. මුහම්මද් නබිතුමා



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඉගැන්වූ ඉස්ලාමීය පවුල් ජීවිතය නොනැසී පවතින්නට එතුමාගේ භාර්යාවන්ගේ මෙහෙය අපමණය.

**2) ඉස්ලාමීය ෂරීඅත්-නීතිරීති සම්බන්ධ හේතු:-**

එදා අරාබි ජනයා සමහර මිථ්‍යා මතයන්හි හා නොගැළපෙන ප්‍රතිපත්තීන්හි එල්බ ගෙන සිටියහ. ඉස්ලාමයේ උදාවත් සමග එහි නොයෙකුත් වෙනස්වීම් ඇතිවිය. කෙනෙක් තමාට දාව උපන් දරුවෙකු ගෙන ඇති දැඩි කළහොත් ඇති දැඩි කළ පුද්ගලයාගේ පුතෙක් ලෙස එම දරුවා සළකනු ලැබිණි. මෙසේ මුහම්මද් නබිතුමා යටතේ සෙයිද්(රළි) තුමා හැදී වැඩුණේය. අරාබි ජනයා ඔහුව "මුහම්මද්ගේ පුත් සෙයිද්" යැයි ඇමතූහ. නමුත් සෛද්ගේ නියම පියාගේ නමින් ඔහුව හඳුන්වන්නැයි අල්ලාහ් නියෝග කළේය. එතැන් පටන් නබිතුමාණෝ ඔහුව "හාරිස් බින් සරාහීල්ගේ පුත් සෛද් වශයෙන් හැඳින්වූහ. නමුත් අරාබි ජනයා එල්බ ගෙන සිටි මතයෙහි මෙය එතරම් බලපෑමක් ඇති නොකළේය. නබිතුමාණෝ තම නැන්දනියගේ දුව වූ "සෛනබ් බින්ත් ජහ්ෂ්" නමැති තරුණිය සෙයිද් (රළි) තුමාට විවාහ කර දුන්හ. ඔවුන් දෙදෙනා අතර මතභේද හටගත් නිසා ඔවුහු දික්කසාද වූහ. මේ අවස්ථාවේ අල්ලාහ් නබිතුමාට "සෛනබ්"ව විවාහ කර ගනුමෙන් නියෝග කළේය. මෙම ක්‍රියාව වූ කලී එදා අරාබි ජනයාගේ සිරිත් විරිත්වලට පටහැනි විය. මන්ද යත් ඇති දැඩි කළ දරුවාව තම පුත් ලෙස සලකන හෙයින් එම පුතාගේ බිරිඳ දික්කසාද වීමෙන් පසු ඇති දැඩි කළ පුද්ගලයා විසින් ඇය විවාහකර ගත නොහැකිය යන මතයක් අරාබි ජනයා තුළ විය. එසේ විවාහ වීම ඔවුන්ගේ සමාජ සම්ප්‍රදාය බිඳින්නක් විය. "මුහම්මද් තම පුතුගේ බිරිඳ විවාහ කර ගත්තා"යැයි ජනයා දොස් නැඟීමට එතුමා බියවිය. නමුත් අල්ලාහ්ගේ නියෝගය මීට වෙනස් ස්වරූපයක් ගත්තේය. දාව නුපන් ඇති දැඩි කරන දරුවා හා තමාට දාව උපන් දරුවා අතර වෙනසක් ඇති බව පෙන්වා දීම අල්ලාහ්ගේ නියෝගයේ පරමාර්ථය විය. මෙසේ ඉස්ලාමීය නීතියට පටහැනි වූ සමාජ සම්ප්‍රදාය බිඳ හෙළා ආගමික නීතිය හා ෂරීඅතය ස්ථාපනය කිරීම සඳහා නබිතුමාණෝ මෙම විවාහය කර ගත්හ. අල්කුර්ආනය මෙය පැහැදිලිව පවසයි.

*"ඔබ මිනිසුනට බිය වූවෙහි. ඔබ බිය වීමට ඉතාමත් සුදුස්සා අල්ලාහ් පමණකි. සෙයිද් තම බිරිඳ ව දික්කසාද කළේය. විශ්වාසකයින් විසින් ඇතිදැඩි කරනු ලැබූවන් විසින් තම භාර්යාවන් දික්කසාද කරනු ලැබුවහොත්, ඔවුන්ව (එම පුද්ගලයන්ව) ඇති දැඩි කළ විශ්වාසකයින් එම ස්ත්‍රීන්ව විවාහ කර ගැනීමෙහි කිසිම බාධාවක් නොතිබිය යුතු නිසා ඇය ඔබට අපි විවාහ කර දුනිමු. නියත වශයෙන්ම මෙය සිදුවියම යුතු අල්ලාහ්ගේ ආඥාවකි."*

*(සූරතුල් අහ්සාබ් : 37)*

මෙය ස්ථිර කරනු වස් අල්ලාහ් මෙසේද පැවසුවේය.

*"ඔබගේ පුරුෂයන්ගෙන් කිසිවෙකුටත් මුහම්මද් පියෙකු නොවේ. නමුත් ඔහු අල්ලාහ්ගේ දූතයා මෙන්ම අවසන් වක්තෘවරයාද වේ."*

*(සූරතුල් අහ්සාබ් : 40)*

මෙම විවාහ සම්බන්ධය වූකලී දේව නියෝගය හේතුකොටගෙන ඉස්ලාමීය ෂරීඅත් නීතියට පටහැනි සමාජ සම්ප්‍රදාය බිඳ හෙළා ඉස්ලාමීක ධාර්මික නීතිය ස්ථිර කිරීමට නබිතුමා විසින් කරනු ලැබුවකි. ඉහත විචාරකයින්ගේ මතය පරිදි තම කාමාශාව මුදුන්පත් කරගන්නට කරගත් විවාහයක් නොවන බව මින් මොනවට පැහැදිලිය.

**3) සාමාජික හේතු:-**

මුහම්මද් නබිතුමාණන්ට දූත මෙහෙය ලැබුණු ආරම්භක කාලයේ සිට එතුමා හා ඉතා සමීපව ආශ්‍රය කළ, සැම දුක් දොම්නසකදීම එතුමා හා නොසැළී සිටි උසස් සහාබිවරයෙකු වශයෙන් අබූබක්කර් (රළි) තුමා අවධාරණයෙන් නම් කළ හැක. එසේම අබූබක්කර් (රළි) තුමාට කුරෛෂි ගෝත්‍රිකයන් අතර වැදගත් තැනක් හිමිව තිබිණි. කුරෛෂි වංශය සමග ඇති සබඳතාවන් දැඩිකර ගැනීම පිණිසත්, අබූබක්කර් (රළි) තුමා හා තමා අතර ඇති මිත්‍රත්වය තවදුරටත් සමීපකර ගැනීමටත් එතුමාගේ දුවණිය වූ ආයිෂා (රළි) තුමිය නබිතුමාණෝ විවාහ කර ගත්හ. මේ සමගම ඉස්ලාමයේ අබූබක්කර්

(රළි) තුමාට වැදගත් ස්ථානයක් හිමිබව හඟවා ඔහුට ද සමාජීය වශයෙන් ගෞරවයක් ලබා දීමට මෙම විවාහ සම්බන්ධය මගින් නබි තුමා අදහස් කළේය.

එසේ ම ඉස්ලාමයේ වර්ධනයට පුරෝගාමියකු වූද නබිතුමාට ඉතා සමීප මිත්‍රයකු වූද උමර් (රළි) තුමා හා තමා අතර ඇති සමීපභාවය තව දුරටත් තහවුරු කර ගැනීම, පිණිසත් උමර් (රළි) තුමාට මුස්ලිම්වරු අතර සැලකිය යුතු ස්ථානයක් හිමිව තිබෙන බව ඒත්තු ගැන්වීමටත්, එතුමාගේ කුරෙෂි වංශය සමග ඇති තම සබඳතාවන් තව දුරටත් ස්ථිර කරගනු පිණිසත් "හෆ්සා" නමැති එතුමාගේ වැන්දඹු දුවණිය නබි තුමා සරණ පාවා ගත්තේය.

සව්දා බින්ත් සම්අත් නමැති කාන්තාව හා ඇගේ ස්වාමිපුරුෂයා ඉස්ලාමය වැළඳගත් හෙයින් මක්කාවේදී ඉතා දැඩිලෙස හිංසා පීඩාවලට ලක් කරනු ලැබූහ. එනිසා මක්කාව අත්හළ ඔවුහු ඇබිසීනියාව බලා ගියහ. මෙය ඇගේ ගෝත්‍රිකයින් හා පවුලේ සාමාජිකයන් තුළ ඇය කෙරෙහි වූ කෝපය දෙගුණ තෙගුණ වීමට හේතුවිය. ඇබිසීනියාවෙන් පැමිණෙන අතර මගදී ඇගේ සැමියා මරණයට පත්වීම නිසා ඇය කාගේත් සරණක් නොමැතිව අසරණ වූවාය. තම ගෝත්‍රිකයන් වෙත නැවත ගියහොත් බොහෝ වධ හිංසාවලට හා කරදරවලට මුහුණ දෙන්නට ඇයට සිදුවෙනවා නිසැකය. සමහරවිට ඇය මරණයට පත් කරන්නට පවා ඔවුහු ඉදිරිපත් විය හැකි තත්වයක් උදවී තිබිණි. ඇගේ අසරණ තත්වයෙන් ඇය මුදා ගනු පිණිසත්, ඉස්ලාමය කෙරෙහි ඇති ඇගේ ස්ථිරත්වයට හා ලැදියාවට ත්‍යාගයක් ලෙසත් ඇගේ සැමියා ඉස්ලාමය කෙරෙහි දැක්වූ අචල විශ්වාසයට ගෞරව දැක්වීමක් ලෙසත් නබිතුමාණෝ එතුමිය සරණ පාවා ගත්හ.

සැමියා මිය යෑමෙන් හෝ දික්කසාද කිරීමෙන් වැන්දඹුවන් වන අය මෙන්ම ඔවුන්ගේ දරුවෝද සමාජයේ තුලනය ආරක්ෂාකිරීමෙහිලා ප්‍රශ්නයක් වෙයි. වැන්දඹුවන් සරණපාවා ගෙන නිසිලෙස රැකවරණය දී ඔවුන්ගේ අනාථ දරුවන් යහපත් පුද්ගලයන් ලෙස බිහිකිරීම සමාජයේ වගකීමක් බව ඉගැන්වීමටත් අස්වාමිකව සිටි අයට අත දීමේ වැදගත්කම ගෙන හැර දැක්වීමටත් මෙසේ නබි තුමාණෝ වැන්දඹුවන් විවාහ කර ගත්හ. ඒ අතරින් "සෙයිනබ් බින්ත් හුසෙයිමා නමැති වැන්දඹුව එතුමියගේ හැටවන වියේදී නබිතුමා විසින් සරණ පාවාගැනීමත් "හින්ද් බින්ත් අබී උමෙයියා" නමැති සිව්දරු මවක් සරණපාවා ගැනීමත් විශේෂයෙන් සඳහන් කළ හැකිය.

**04) දේශපාලනික හේතු:-**

නබිතුමාණන්ගේ ඉස්ලාමීය ප්‍රචාරයට හා මදීනාවේ පිහිටවනු ලැබූ ඉස්ලාමීය ප්‍රතිපත්තිමය රජයට එරෙහිව සැමවිට ම සතුරු අන්තරාව පැවතුණි. ළදරු වියේ සිටි ඉස්ලාමීය රජය ඉන් බේරා ගැනීමට ආක්‍රමණකාරී පියවරක් හෝ ආරක්ෂාකාරී පියවරක් ගැනීමට ප්‍රමාණවත් තරම් ආයුධ සන්නද්ධ බලයක් හෝ ශක්තියක් මුස්ලිම්වරු සතු නොවීය. මදීනාව අවටින් බනූ නළීර්, බනූ කුරෙයිලා වැනි යුදෙව් ගෝත්‍රිකයන්ගෙන් මෙන්ම කුරෙෂි වංශයට අයත් නොයෙකුත් ගෝත්‍රයන් වෙතින් මෙම රජයට එරෙහිව සතුරු උවදුරු එල්ල වෙමින් තිබිණ. එසේ ම මුස්ලිම්වරුන්ට පක්ෂපාතී ගෝත්‍රිකයන් හා අපක්ෂපාතී ගෝත්‍රිකයන් අතර ද විටින්විට සටන් ඇවිලෙමින් තිබිණි. මේ වාතාවරණය මත ඉස්ලාමීය රජයේ ස්ථාවරභාවය අස්ථිරව පැවතිණි. මේ නිසාම නබි (සල්) තුමාණෝ තමාට එරෙහිවන ගෝත්‍රිකයන් තමා හා එකහ කර සාමයෙන් සිටින්නට වෙර දැරූහ. ඒ වෙනුවෙන් ගතහැකි සෑම පියවරක්ම ගැන්මට නබිතුමාණෝ පසුබට නොවූහ. මින් එක් මගක් වශයෙන් නබිතුමා තමාට විරුද්ධවන ගෝත්‍රිකයන්ගේ ස්ත්‍රීන් සරණපාවාගෙන එම ගෝත්‍රිකයන්ගේ සහාය තමා දෙස යොමු කරගන්නට උත්සාහ කළහ. ගෝත්‍ර දෙකක් අතර සිදුවන සරණ මංගල්‍යය හේතු කොට ගෙන එම ගෝත්‍ර අතර සමගියක් ඇතිවනවා මෙන්ම ඔවුහු පරස්පර ආරක්ෂාවද සලසා ගනිති. මෙය අරාබි ගෝත්‍රිකයන් අතර බොහෝ විට දක්නට ලැබුණු ලක්ෂණයක් විය. එක් ගෝත්‍රයක වැදගත් පුද්ගලයෙක් තවත් ගෝත්‍රයක වැදගත් ස්ත්‍රියක සරණ පාවා ගතහොත් මෙම විවාහය මගින් තමන්ට ගෞරවය ලබාදිනැයි ස්ත්‍රියගේ ගෝත්‍රිකයෝ අදහස් කරන අතරම එම විවාහ කරගත් පුද්ගලයාට රැකවරණය සැලසීමටද ඔවුහු ඉදිරිපත් වෙති. මෙය තම ඉස්ලාමීය රාජ්‍යයේ ආරක්ෂාවට සාධකයක් කරගත් නබි තුමාණෝ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

නොයෙකුත් ගෝත්‍රිකයන්ගේ වැදගත් කාන්තාවන් විවාහ කරගෙන තම රජයේ ශක්තිය වර්ධනය කරගන්නට හා ආරක්ෂාව තහවුරු කරගන්නට කටයුතු කළහ.

බනු මුස්තලක් නමැති ගෝත්‍රයේ ප්‍රධානියා මුස්ලිම්වරුන්ගේ පරම හතුරෙක් විය. ඔවුන් හා මුස්ලිම්වරුන් අතර ඇතිවූ යුද්ධයෙන් එම නායකයා මරණයට පත්වූ අතර ඔහුගේ "ජුවෛරියා" නමැති බිරිඳ මුස්ලිම්වරුන්ගේ සිරභාරයට ගනු ලැබිණ. එම ගෝත්‍රිකයන් සමග සාමය ඇතිකර ඉස්ලාමයට බලයක් ලබාගැනීමට හා සිරභාරයට ලක්වූවන්ට සැලකිය යුත්තේ කෙසේදැයි පෙන්වාදීමටත් නබිතුමාණෝ ඇගේ කැමැත්ත ඇතුව ඇ හා විවාහ වූහ. ඇට ගෞරව දැක්වීමක් වශයෙන් ඇ සමග සිරභාරයට ගත් සියලු දෙනාම නිදහස් කරනු ලැබිණි. මේ උතුම් උසස් ක්‍රියාව දුටු ඔවුහු සියලුදෙනාම ඉස්ලාමය වැළඳගත්හ. මෙය ඉස්ලාමීය රජයේ ශක්තිය වර්ධනය වීමට හේතුවිය.

නබිතුමාගේ බාප්පාවූ අබ්බාස් (රළි) තමාගේ බිරිඳ ලුබාබා එනම් නබි තුමාගේ කුඩම්මාගේ නැගණියවූ මයිමූනා සමග ද නබි තුමාණෝ විවාහ වූහ. ඇය කුරෙෂි වංශයේ හිලාලියියා ගෝත්‍රයට අයත් වයස්ගත කතක් වූවාය. මෙම විවාහයත් සමග ඇගේ ගෝත්‍රිකයන් කණ්ඩායම් කණ්ඩායම් වශයෙන් ඉස්ලාමය වැළඳගෙන ඉස්ලාමයේ ස්ථාවරභාවය වෙනුවෙන් අවලව කටයුතු කළහ.

නබිතුමාගේ මෙම විවාහයන් වූකලි ඉස්ලාමික රාජ්‍යයේ ස්ථාවරභාවය ආරක්ෂා කිරීම හා ඉස්ලාමයේ බලය තහවුරු කර සියලු ම ජනයාට තම මාර්ගෝපදේශය, මගපෙන්වීම ලබාදීම පෙරදැරි කරගත්තකි. සෆියියා (රළි) තුමියගේ හා උම්මු හබීබා (රළි) තුමියගේ විවාහය මේ අනුවම සිදුවිය.

බනු නළීර් නැමති යුදෙව් ගෝත්‍රය හා මුස්ලිම්වරු අතර සිදුවූ කයිබර් යුද්ධයේ දී බනු නළීර් ගෝත්‍රික නායකයාගේ දුවවූ සෆියියා නමැති වැන්දඹු කාන්තාව ද මුස්ලිම්වරු අත්අඩංගුවට ගත් පිරිස අතර වූවාය. නබි තුමාණෝ වැදගත් කුළ කාන්තාවක වූ සෆියියා තුමියට නිදහස දෙන බවත් ඉන්පසු කරුණු දෙකක් ඉදිරිපත් කර එකක් පිළිගනුමෙන් ද පැවසූහ. එනම් නිදහස ලබා නබිතුමා හා විවාහ වීම, නැතහොත් නිදහස ලබා ඇගේ ගෝත්‍රිකයන් වෙත යෑම එම කරුණු දෙක විය. මින් පළමුවැන්න ඇය තෝරා ගත්තාය. මෙහි ප්‍රතිඵලය වශයෙන් එතුමා හා ඇ අතර විවාහය සිදුවිය.

මක්කාවේ ප්‍රධානියා වූද කුරෙෂි වංශයේ නායකයා වූද අබූසුෆ්යාන් හා කුරෙෂි වංශයට අයත් බනු අබ්දුෂ්ෂම්ස් නමැති ඔහුගේ ගෝත්‍රිකයෝ ද ආරම්භයේ සිට ම නබිතුමාගේ හා මුස්ලිම්වරුන්ගේ පරම විරෝධීන් වූහ. ඉස්ලාමයට හා මුස්ලිම්වරුන්ට එරෙහිව පැමිණි සෑම උවදුරකදී ම මොවුන්ගේ සහභාගීත්වය නොමදව දක්නට ලැබුණි. මෙම නායක අබූ සුෆ්යාන්ගේ දුවණිය උම්මු හබීබා හා ඇගේ සැමියා මක්කාවේදී ඉස්ලාමය වැළඳ ගත්හ. අබූ සුෆ්යාන්ගෙන් සිදුවිය හැකි වධහිංසාවලට බියවූ මේ දෙපළ ඇබීසීනියාවට ගියහ. උම්මු හබීබාගේ සැමියා එහි දී යුදෙව් දහම වැළඳගැනීමේ හේතුවෙන් උම්මු හබීබා ඔහුගෙන් දුරස්ථ වූවාය. ඇගේ අසරණ දුඃඛිත තත්වය ගැන සැළවුණ විගස ඉස්ලාමය කෙරෙහි ඇති ඇගේ ඇල්ම, ලැදියාව හා ස්ථිර බව ගරුකිරීමත්, කුරෙෂි වංශයේ අතිවැදගත් තැනක් හිමි ස්ත්‍රියක් විවාහ කර ගැනීමෙන් ඉස්ලාමයට සැලසෙන පිටුවහලත් කරනකොටගෙන නබිතුමාණෝ ඇය විවාහකර ගත්හ. නබිතුමා නුසුදුසු යැයි නොසිතූ අබූසුෆ්යාන් තම දුවණිය හා එතුමා විවාහ වීම උසස්කොට සැලකූ අතර ඒ වෙනුවෙන් ආඩම්බර වූවේය.

ගෝත්‍ර අතර නොයෙකුත් අරගලයන් හා අසමගිකම් පැවති සමාජ ව්‍යුහයක විවිධ ගෝත්‍රිකයන්ට අයත් ස්ත්‍රීන් සමග එක්ව ජීවත්වීමෙන් චක්‍රවර්තියකු වශයෙන් යම් ආදර්ශයක් නබිතුමා විසින් ලබාදෙනු ලැබුණි. එසමගම විවිධ ජාතීන්ට හා ගෝත්‍රයන්ට අයත් ස්ත්‍රීන් අපක්ෂපාතීව තම භාර්යාවන් ලෙස තබා ගැනීම මගින් සර්ව සහෝදරත්වය පිළිබඳ හැඟීම ජනහද තුළ පතිත කිරීමට නබිතුමාණෝ උත්සාහ කළහ.

නබිතුමා ගතකළ බහු භාර්යා ජීවිතය සමහර විචාරකයන්ගේ මතය පරිදි හුදු කාමාශාව



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

සත්සිදවා ගැනීම පිණිස සිදුකරගත්තක් නොව උසස් පරමාර්ථයන් පෙරදැරිකරගෙන සිදුවූවක් බව මින් පැහැදිලි වේ.

අවසාන වශයෙන් බෞද්ධ ලේඛකයෙක්වූ මෛත්‍රී මූර්ති "ආගම හා මියගිය ලෝකය" නමැති තම ග්‍රන්ථයෙහි නබිතුමාගේ බහුභාර්යා ජීවිතය පිළිබඳ සඳහන් කළ අදහස ගෙන දැක්වීම උචිතයැයි සිතමි.

"භක්තිමත් කදීජා මියගිය පසුව මුහම්මද් තුමා වරින්වර කාන්තාවන් නවදෙනකු සරණපාවා ගත්තේය. ඉන් අටදෙනෙක්ම වැන්දඹු කාන්තාවෝය. ඔවුන් අතර සෆිය්යා වැනි යුදෙව් කාන්තාවෝද වූහ. මෙම විවාහ සිදුවූයේ හුදු කාම ජීවිතය පිළිබඳ නොසන්සිඳුන ආශාවන් නිසායැයි සිතිය නොහැකිය. තරුණ කාන්තාවන් කොතෙකුත් සොයා ගතහැකිව තිබියදී එතුමා වැන්දඹුවන් සරණපාවා ගැනීම අපගේ සැළකිල්ලට භාජන වියයුතු කරුණකි. එයින් එතුමන් කරඇත්තේ අස්වාමිකව සිටියවුනට පිහිටවීමක් බව පෙනේ. අනික් කරුණ නම් එතුමාගේ නායකත්වයට මෙම විවාහ නිසා ඇතිවූ පිටුවහලයි. එතුමන් පහළවූයේ ගෝත්‍රික අරගල හා පවුල් අතර බරපතල අසමගිකම් පැවති සමාජයකය. විවිධ පවුල්වලට අයත් ස්ත්‍රීන් සමග එක්ව විසීමෙන් නායකයෙකු වශයෙන් එතුමා සමාජයට කිසියම් ආදර්ශයක් දීමට නැත්කළාසේ පෙනේ. විවිධ ගෝත්‍රයන්ට ජාතීන්ට හා පවුල්වලට අයත් කාන්තාවන් රැසක් ස්වකීය පත්නීන් වශයෙන් තබාගැනීමෙන් සර්ව සහෝදරත්වය පිළිබඳ හැඟීම ජනයා අතර පැතිර වීමද එතුමාට පහසු කරුණක් වන්නට ඇත. මේ සියල්ල හැරුණු විට තත්කාලීන සමාජය විසින් බහුභාර්යා සේවනය නුසුදුසු දෙයක් වශයෙන් නොසලකා ලද බවද අප විසින් සැලකිය යුතුය."

*** ***


**SIDDEEK & COMPANY (Textiles)**

IMPORTERS, WHOLESALE & RETAIL DEALERS IN
TEXTILES, READYMADE GARMENTS &
ELECTRICAL APPLIANCES

★ ★
★

164 &168, Second Cross Street,
Colombo 11.
Sri-lanka.

Tel: 336319
329785
Fax: 448636
423707




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவத்துறை வளர்ச்சிக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு

தொகுப்பு: எஸ்.எல்.சியாத் அஹ்மத் (ஐந்தாம் வருடம்)

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" எனும் முதுமொழிக்கேற்ப மனிதன் எப்போதும் நோய்களில் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதில் கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறான். ஆதிகாலம் முதலே அறிவியல் துறைகளுள் மிக உன்னதமானதொரு துறையாக மருத்துவத் துறை வளர்ந்து வந்திருக்கிறது.

ஆரம்பகாலத்தில், இத்துறை கிரேக்க நாகரிகம் செழிப்புற்றிருந்த போது கணிசமான முன்னேற்றம் கண்டிருந்தது ஆயினும், கிரேக்க நாகரிகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி மருத்துவத் துறையினையும் பாதிக்கத் தவறவில்லை. இக்காலகட்டத்தில் பெருமானார் (ஸல்) அவர்களால் தொடக்கிவைக்கப்பட்ட ஆத்மீகப் புரட்சியின் அடியாக தோன்றிய சிந்தனைப் புரட்சி, ஆரம்பகால முஸ்லிம்களிடையே அறிவுத்தாகத்தையும் ஆராய்ச்சி வேட்கையையும் ஏற்படுத்தி விட்டதைத் தொடர்ந்து, அக்கால முஸ்லிம்கள் அவர்களுக்கு முன் அறிவுப் பாதையில் நடைபோட்ட உரோம, பாரசீக, கிரேக்க இந்திய மருத்துவ நூல்களை அறபு மொழியில் மொழி பெயர்த்ததோடு, அவர்களின் தவறுகளை ஆராய்ந்து திருத்தியும்; பல புதிய கண்டுபிடிப்புக்களை கண்டு பிடித்தும் உன்னத பங்களிப்புகளை மருத்துவத்துறைக்குச் செய்தார்கள். அதனை வரலாற்று ஆசிரியர்களுள் ஒருவரான ஸீ.ஜீ மென்டிஸ் குறிப்பிடும் போது "மத்திய காலப்பிரிவில் ஐரோப்பாவில் தட்டிக்கழிக்கப்பட்டு, கவனிப்பாறற்றுக் கிடந்த மருத்துவக்கலைக்கு புத்துயிர் அளித்தவர்கள் முஸ்லிம்கள்" என்று கூறுவதும் கவனிக்கத்தக்கது.

இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முந்திய காலப்பரிவில் அறேபியர்கள் நாடோடிகளாக வாழ்ந்தமையால் அவர்களிடத்தில் மருத்துவத் துறை குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ந்திருக்க வில்லை. அது பெரும்பாலும் மந்திரித்தல், (Witchcraft) சூனியம் முதலியவற்றோடு தொடர்புடையதாக மட்டுமே காணப்பட்டது. மந்திரவாதிகளையும் குறிசொல்பவர்களையும் இவர்கள் வைத்தியர்களாகக் கொண்டிருந்தார்கள். இருந்த போதிலும் இரத்தம் குத்தல், சூடு போடுதல் , பத்தியம் காத்தல் ஆகிய சிகிச்சை முறைகளும் இந்தியாவில் இருந்தும் சீனாவில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட சில மூலிகைகளையும் மருந்துகளையும் பயன்படுத்தும் பழக்கமும் அங்கு இருந்ததாக வரலாறு குறிப்பிடுகின்றது. "பகலுணவை தாமதியாமல் உண்ணல், தளர்ந்த ஆடையை அணிதல், பெண்களோடு கொள்ளும் உறவைக் குறைத்தல் என்பன மனிதனுக்கு நோயற்ற வாழ்வை கொடுக்கும் என்ற மருத்துவக் கோட்பாட்டை அக்கால அறேபியர் கொண்டிருந்தனர்.

இவ்வாறான மருத்துவ அறிவை அவர்கள் பெரும்பாலும் அனுபவ ரீதியாகவே பெற்றிருந்தார்கள் இவர்களின் பிரதான தொழிலாகக் கால்நடை மேய்த்தல் இருந்தமையால் அக்கால்நடைகளின் செயற்பாடு, அவைகளுக்கு ஏற்படும் நோய்கள், அவற்றின் பிரசவம் போன்றவற்றை அவதானித்து அதிலிருந்து சில மருத்துவ உண்மைகளை அறிந்திருந்தார்கள்.

இச்சூழ்நிலையில், அன்றைய அறபு மக்களது வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய இஸ்லாம், மூட நம்பிக்கைகளை ஒழித்து, பௌதீக ரீதியிலான மருத்துவ முறைக்கு ஊக்கமளித்தது. இந்த வகையில், முஸ்லிம்களின் மருத்துவ ஆராய்ச்சிக்கும் அதன் வளர்ச்சிக்கும் முன்னோடியாக நபி (ஸல்) அவர்கள் திகழ்ந்தார்கள். இவர்களின் போதனைகளும் திருக்குர்ஆனின் அறிவுரைகளுமே மருத்துவத் துறை வளர்ச்சிக்கு மிகவும் தூண்டுகோலாக அமைந்திருந்தது. ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் "அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் மருந்துகளைக் கொண்டு பரிகாரம் தேடிக் கொள்ளுங்கள், மரணத்தைத் தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்ற எல்லாநோய்களுக்கும் அல்லாஹ் மருந்துகளைப் படைத்துள்ளான். ஆனால், மனிதர்கள் அவற்றை அறியாமல் இருப்பதுண்டு" என்று கூறினார்கள் மற்றொரு சமயம் "ஒவ்வொரு நோய்களுக்கும் மருந்துண்டு அம்மருந்தை பயன்படுத்தினால் அல்லாஹ்வின் கருணையால் நோய் குணமடையும் என்று கூறினார்கள். இத்தகைய போதனைகளோடு மட்டுமே தன்னை நிறுத்திக் கொள்ளாது நபி (ஸல்) அவர்கள் பல நோய்களுக்கான நிவாரணங்களையும் மருந்துகள் பற்றிய உண்மைகளையும் மருந்துப்பொருட்களின் இயல்புகளையும் விளக்கினார்கள். இவ்வாறு பெரும் மருத்துவ மேதையாக விளங்கிய நபி (ஸல்) அவர்களின் நோய் நிவாரணம் பற்றிய விளக்கத்தை அத்திப்புன் நபவிய்யி என்ற நூலில் இப்னு கையூம் அல்ஜௌஸி என்பார் தொகுத்திருக்கின்றார். மேலும், நபிகளார் காலத்தில் குறிப்பிடத்தக்க முஸ்லிம் வைத்தியர்களும் முஸ்லிம் அல்லாத வைத்தியர்களும் இத்தகைய பௌதீக வைத்தியம் செய்து வந்தார்கள். ஹாரித் பின் கலாதா என்ற யூத மருத்துவரைப் பற்றிய குறிப்புக்களை வரலாற்றில் காணமுடிகிறது. ஒரு முறை ஸஅத் பின் அபீ வக்காஸ் நோய்வாய்ப்பட்டிருந்த போது ஹாரிதை சிகிச்சை செய்யுமாறு நபியவர்கள் பணித்தார்கள்.

இவ்வாறே, நாற்பெரும் கலீபாக்களின் ஆட்சிக்காலத்திலும் மருத்துவத் துறை ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட துறையாக வளர்ந்திருக்கவில்லை. ஆயினும், அக்கால கலீபாக்கள் நிர்வாக முறையினை கவர்னர்களின் கீழ் பரவலாக்கம் செய்தபோது அபிவிருத்திப் பணிகளில் நாட்டம் கொண்டிருந்த கவர்னர்கள் வைத்தியசாலைகளையும் மருத்துவக் கல்லூரிகளையும் அமைத்தார்கள். சமூகத்தில் சகல குடியானவர்களும் சிகிச்சை பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் அவற்றை விரிவுபடுத்தியிருந்தார்கள். இந்தக் கலீபாக்களின் ஆட்சிக் காலத்திலேயே முதன் முதலாக உலகில் மருத்துவக் கடைகளும் மருந்தகங்களும் தோற்றம் பெற்றன என்று வரலாற்றாசிரியர் **"ஹிட்டி"** தனது "அரேபியர் வரலாறு" எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

ஆயினும் அப்பாஸிய கலீபாக்களின் ஆட்சிக்காலத்திலேயே (749-1258) மருத்துவத்துறை பழைய சிறப்பையும் புதிய மெருகையும் பெற்றது எனலாம். கலீபா அல்மஃமூன் (813 -833) என்பார் "பைதுல் ஹிக்மா" (House of wisdom) என்ற நிறுவனத்தை நிறுவி, அதில் ஹுனைன் இப்னு இஸ்ஹாக் என்பவரை பிரதம மொழிபெயர்ப்பாளராக நியமித்து, அவர் மூலமாக மறைந்து கிடந்த கிரேக்க, பாரசீக நெஸ்ரோரியன் அறிவியல் நூல்களை தேடி எடுத்து, அறபு மொழியில் மொழி பெயர்க்கச் செய்தார். ஹுனைன் இப்னு இஸ்ஹாக் 139 நூல்களை மொழி பெயர்த்திருந்தார். இவ்வாறே HIPPOCRATES, GALAN DIOSCORIDES ஆகிய கிரேக்க மருத்துவ மேதைகளின் நூல்களும் மொழி பெயர்க்கப்பட்டன. 856இல் கலீபா அல் முதவக்கில் இந்நிறுவனத்தை மேலும் விரிவுபடுத்தி, கிறிஸ்தவ அறிஞர்களை கிரேக்க கையெழுத்துப் பிரதிகளை கண்டுபிடித்து வருமாறு உலகின் பல பாகங்களுக்கும் அனுப்பி வைத்தார். இவ்வாறு அனுப்பப் பட்டவர்களுள் ஹுனைன் இபுனு இஸ்ஹாக்கும் ஒருவராவர். இவர் அக்காலத்தில் கிடைப்பதற்கு மிக அரிதாக இருந்த GALAN இன் மருத்துவ நூலை கண்டு பிடிக்கவென மொஸப்பத்தேமியா சிரியா, எகிப்து, பலஸ்தீன் போன்ற நாடுகளுக்கெல்லாம் பிரயாணம் செய்ததாக குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறு வெறுமனே மூல நூல்களை மொழி பெயர்த்ததோடு மட்டுமே நின்று விடாது அவற்றிலுள்ள தவறுகளை சுட்டிக் கட்டியும் மருத்துவத் துறையில் பரிசோதனை முறையை (Exeprimental Method) அறிமுகப்படுத்தியும் இன்னும் பல புதிய மருத்துவக்கருத்துக்களைப் புகுத்தியும் சிறந்த பங்களிப்பைச் செய்ததோடு மொழி பெயர்க்கப்பட்ட நூல்களையெல்லாம் சுருக்கி ஒன்று சேர்த்து, முடிவுற்ற சுவடி (Pandect) எனும் பெயரில் கைநூல்களாக வெளியிட்டார்கள் பெரும்பாலும் இவை மருத்துவம் பற்றிய சகல விடயங்களையும் தம்மகத்தே கொண்டவையாக அமைந்திருந்தன.

இந்த வகையில் மத்தியகால முஸ்லிம் மருத்துவர்களின் தந்தையாகக் கருதப்படுபவர்கள் **அபூபக்கர் முஹம்மத் இப்னு கைரிய்யா அல் ராஸி** (865 -925 ) என்பவராவார். மேற்குலகத்தால் "ராஸிஸ் "என்று அழைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் இவர், மருத்துவ வரலாற்றில் புகழ் பெற்றவராக விளங்குகின்றார். இளமையில் இரசவாதத்தில் (Alchemy) ஈடுபாடுடையவராக அறிவுலகில் பிரவேசித்த இவர் பின்னர் மருத்துவத்துறையில் முழுக்கவனத்தையும் செலுத்தி அதன் வளர்ச்சிக்கு அதி உன்னத பங்களிப்பினைச் செய்தார்.

இவர், பக்தாதில் நிறுவப்பட்டிருந்த தலைமை மருத்துவமனையில் தலைமை மருத்துவராக கடமையாற்றினார். பின்னர் அப்பாஸியக் கலீபா முக்ததிர் பில்லாஹ் என்பவரின் ஆட்சிக் காலத்தில் அரச வைத்தியசாலைகளின் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

ஒரு முறை பக்தாதில் வைத்திய சாலையொன்றை நிறுவுவதற்கு ஏற்ற பொருத்தமான இடத்தை தெரிவு செய்யுமாறு கலீபா முக்ததிர் அல் ராஸியைக் கேட்டபோது, ஒவ்வொரு நகரத்திலும் இறைச்சித் துண்டை தொங்கவிட்டு, எந்த இடத்தில் இறைச்சித் துண்டு பழுதடையாமல் நீண்ட நேரம் இருக்கின்றதோ அந்த இடத்தில் வைத்திய சாலையை நிறுவுமாறு அவர் ஆலோசனை வழங்கினார். இது அல் ராஸி பெற்றிருந்த விஞ்ஞான பரிசோதனை நுட்பத்தையும், அவரது அறிவின் புலமையையும் எடுத்துக் காட்டுகின்றது. இவர் எழுதிய இரு நூற்றுக்கும் அதிகமான நூல்களில் அரைவாசி நூல்கள் மருத்துவம் பற்றியதாகும். "அல் ஜுதரி வல் ஹஸ்பா" என்ற அவரது நூல் சின்னமுத்து (Measles), பெரியம்மை (Small pox) பற்றிய விரிவான விளக்கத்தைத் தருவதோடு, அவை பற்றிய அறிகுறிகள், அவற்றுக்கிடையிலான வேறுபாடுகள், சிகிச்சை முறைகள் போன்றவற்றையும் விளக்குகின்றது இவ்விரு நோய்கள் பற்றி முதன் முதலில் எழுதப்பட்ட இந்நூல், கி.பி. 1498– 1866 வரையுள்ள காலப்பகுதியில் இலத்தீன் மற்றும் ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு 40 தடவைகளுக்கு மேல் வெளியிடப்பட்டமை இதன் சிறப்புக்குச் சான்றாகும்.

"மருத்துவத்தின் அகராதி" என வர்ணிக்கப்படும் 20 வால்யூம்களைக் கொண்ட "அல் ஹாவி" என்ற நூல் ராஸியின் இன்னொரு முக்கிய நூலாகும். இது போன்றதொரு நூல் மருத்துவத் துறையில் இது வரை உருவாக்கப் படவில்லை என்பது அநேகரின் அபிப்பிராய மாகும். இதில் அப்பாஸியரின் காலம் வரை வழக்கில் இருந்து வந்த கிரேக்க, சிரிய, அறேபிய, இந்திய, பாரசீக சிகிச்சை முறைகள் பற்றி விமர்சிப்பதோடு, அதன் இறுதியில் தனது கருத்துக்களையும் அனுபவங்களையும் அவர் குறிப்பிடுகிறார். அந்நூல் 1279 இல் இலத்தீனில் மொழி பெயர்க்கப்பட்ட (CONTINENS) என்ற பெயரில் BRESICA வில் பதிப்பிக்கப்பட்டது இந்நூல் இன்றுகூட ஐரோப்பிய பல்கலைக் கழகங்களில் பாட நூலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அல்ராஸியின் மற்றொரு நூலான "கிதாபுல் மன்ஸூரி" எனும் நூல் சிறந்ததொரு மருத்துவப் படைப்பாகும் இவை மாத்திரமன்றி "கிதாபுல் அஸ்ரார்", "கிதாபுத் திப்பி", "அல் தாவி" , எனும் அரிய நூல்களையும் இவர் எழுதியிருக்கின்றார்.

இத்தகைய அரிய பல நூல்களை எழுதியதோடு, பிரயோக மருத்துவத்திலும் கை தேர்ந்தவராக இவர் இருந்தார். "மகப்பேற்று மருத்துவம்", "பெண் நோய் மருத்துவம்", "கண் மருத்துவம்", சத்திர சிகிச்சை போன்ற விஷேட மருத்துவத் துறைகளிலும் தனது ஆராய்ச்சியை விரிவு படுத்திய இவர் SETON என்ற ஒரு வித நூற் கட்டையைக் கண்டு பிடித்தார். சத்திர சிகிச்சையின் போது தையல் போடுவதற்காக மிருகங்களின் இழைகளை முதன் முதலில் பயன்படுத்தியவரும் இவரேயாவார். அல் ராஸியின் உருவப்படத்தை பாரிஸ் பல்கலைக் கழகத்திலுள்ள மருத்துவ பீடத்தில் இன்றும் காணலாம்.

அல் ராஸிக்குப் பிறகு மருத்துவக்கலை வளர்ச்சிக்கு அரும் பங்காற்றியவர்களுள் இப்னு ஸீனா (கி.பி. 980– 1037) சிறப்பிடம் பெறுகிறார். தனது பதினேழாவது வயதிலே திறமை வாய்ந்த மருத்துவராக புகழ் பெற்றிருந்த இவர் 99 நூல்களை எழுதியுள்ளார். இவற்றுள் 17 நூல்கள் மருத்துவம் பற்றியதாகும் அவற்றுள் மருத்துவத் துறையின் பைபிளாக மதிக்கப்படும் "கானுன் பித் திப்பி" என்ற நூல் ஐரோப்பியர்களிடையே பெரும் புகழையும் வரவேற்பையும் பெற்றுள்ளது. கலன், அல் ராஸி ஆகியோரின் மருத்துவ விதிகளை விளக்கும் இந்நூல் நோய்க் காரணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Aetiology) நோய்களின் தன்மை, தடுக்கும் வழிகள் மற்றும் குழந்தை நலம் வயோதிபர் நலம் (Geriaties) என்பவற்றை விளக்கிக் கூறுகின்றது. 760 க்கும் அதிகமான மருந்துகள் பற்றிய குறிப்புக்கள் இதில் விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் பற்றி டாக்டர் மைறுப் (Dr. Meyerhof) எழுதும் போது "இந்நூல் மருந்துவத்தின் காவியம்" (Master piese) என வர்ணிக்கிறார். இந்நூல் சென்ட் லூயிஸ் மொன்ட் பெல்லியர் போன்ற ஐரோப்பிய நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களில் விரிவுரை நூலாக உபயோகிக்கப்பட்டது. மேலும் இவர் "அல் ஜூதா பித் திப்பி என்ற மருத்துவக் கவிதை நூல் ஒன்றையும் ஆக்கினார். உள மருந்தியல் (Psycho- pharmacology) பற்றிய அக்கால மருத்துவ உலகில் எழுதப்பட்ட "அத் திப்பிய்ய துல் கவிபா" "ஹுதுத் அத் திப்பி" ஆகிய சிறிய நூல்களும் பிரபல்யமானவையாகும்.

தொற்று நோய், மண்டை நரம்பில் ஏற்படும் வலி (Trigeminal Nearalgia) முதலியன பற்றி முதன் முதலில் அறிமுகப்படுத்திய பெருமை இப்னு ஸீனாவையே சாரும் தற்கால மருத்துவத்தின் தந்தை ( Father of the modern medicine) என்று ஐரோப்பியரால் அழைக்கப்பட்ட இப்னு ஸீனா சிறந்த சத்திர சிகிச்சை வல்லுனராகத் திகழ்ந்தார். மூச்சுக் குழற் றொடுவையை பிளந்து குழாயைச் செலுத்தி, சிகிச்சை செய்யும் முறையை (Tracheotom) இவரே முதன் முதலில் கண்டுபிடித்தார் சிறுநீர்ப்பையில் வைத்தியம் செய்வதோடு, பிரசவத்தின் போது யோனி மடலினூடாக கையை நுழைத்து, நிலை பிறழ்ந்திருக்கும் குழந்தையை ஒழுங்கான நிலைக்குத் திரும்பும் (Internal version) முறையையும் சத்திர சிகிச்சை செய்து குழந்தையை எடுக்கும் (Caesarian Section) முறையையும் இவர் அறிந்திருந்தார் கண்ணோய் பற்றிய தெளிவான கோட்பாடு இவருக்கு இருந்தது மன நோய் மருத்துவதில் இவருக்கிருந்த திறமையினைக் கொண்டு எண்ணற்ற மனநோயாளர்களைக் குணப்படுத்தினார்.

அவ்வாறே, 10ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் குர்துபாவில் வாழ்ந்த அல் ஸஹ்றாவி (986 –1013) எனும் அறிஞரையும் மறந்துவிட முடியாது. ஸ்பெயினை ஆட்சி செய்த உமையாக் கலீபா 2ம் ஹகம் காலத்தில் அரச சபை மருத்துவராக திகழ்ந்த இவர் உடற் கூற்று நிபுணராக புகழ் பெற்றிருந்தார் தமது உடற்கூற்று ஆராய்ச்சிக்கு குரங்குகளைப் பயன்படுத்தி வெற்றி கண்ட இவர் 30 வால்யூம்களைக் கொண்ட **"அத் -தஸ்ரீப்"** என்ற நூலை எழுதினார். மருத்துவத் துறையில் ஒப்பற்ற ஆராய்ச்சிக் களஞ்சியமாகத் திகழ்ந்த இந்நூலில் இருநூறுக்கும் அதிகமான மருத்துவக் கருவிகளின் படங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

மூலிகை பற்றி ஆராய்ந்து கருத்து வெளியிட்டவர்களுள் **ஜமீர் இப்னு சத்தார்** என்பவர் முக்கியமானவராவர். மருந்தியல் (Phamacology) பற்றி அதிகமான நூல்களை எழுதிய **அபூ மன்சூர் முவப்பஹ்** என்பாரும் மருத்துவத்துறை வரலாற்றில் போற்றப் படுகிறார். முதன் முதலில் (ACARUS SCABIE) எனும் ஒட்டுண்ணியைப் பற்றியும் அப்பூச்சியால் உண்டாகும் சொறி நோயைப் பற்றியும் கண்டுபிடித்தவரான **இப்னு ஸுஹ்ர்** ( 1091-1162) என்பார் மருத்துவத்துறை வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவராவர். மத்திய பகுதியில் பிரசித்தி பெற்ற மேற்குலக முஸ்லிம் மருத்துவ மேதைகளுள் **இப்னு ருஷ்த்** (1126 –1198 ) சிறப்பிடம் பெறுகிறார். மருத்துவவியல் சம்பந்தமாக இவர் எழுதிய நூற்களின் எண்ணிக்கை சுமார் பதினாறு ஆகும். இவர்கள் தவிர **அலி இப்னு றிழ்வான்** (998 –1067 ) **அபுல் சல்த்** (1067 –1134) **இப்னு முஹம்மத் அல் காபிஹி இப்னு ஹுபல் அல் பக்தாதி** (1117– 1213) **இப்னு நபீஸ்** (1210 –1289) **இப்னு காதிமா** (1323-1369)போன்ற மருத்துவ மேதைகளும் மருத்துவத்துறை வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பினைச் செய்திருக்கின்றார்கள். இதில் குறிப்பிடப்படாத இன்னும் சில மருத்துவ மேதைகள் வரலாற்றில் காணப்படுகின்றார்கள் இவர்கள் வெறும் சித்தாந்த வாதிகளாக மட்டும் இருக்கவில்லை. மாறாக கோட்பாடுகளைச் செயற்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபட்டனர். இந்த வகையில் முஸ்லிம்களின் மருத்துவ மனைகள் பற்றிய ஆராய்ச்சி விரிவானதாகும்.

நபி (ஸல்) அவர்கள் காலமாகி சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்குள் மக்கா மதீனாவில் மாத்திரமன்றி இஸ்லாமிய அரசின் பல பாகங்களிலும் வைத்தியசாலைகள் நிறுப்பட்டிருந்ததாக Geovgizeldan என்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகிறார் உமையாக் காலப் பிரிவில் குருடர்களுக்காகவும் குஷ்டரோகிகளுக்காவும் ஆங்காங்கே மருத்துவமனைகள் அமைக்கப் பட்டதாக வலராற்றுக் குறிப்புக்கள் காணப் பட்டாலும், அப்பாஸியக் காலத்திலேயே சகல வசதிகளையும் கொண்ட ஒழுங்குபடுதப்பட்ட பாரிய வைத்தியசாலைகள் தோன்ற ஆரம்பித்தன. கலீபாக்களின் கீழ் பணியாற்றிய கவர்னர்கள் தங்கள் நிர்வாகத்திற்குட்பட்ட ஒவ்வொரு பகுதிகளிலும் தனித்தனியாக வைத்திய சாலைகளை நிறுவினார்கள். பக்தாதில் மட்டும் பாரிய நான்கு வைத்தியசாலைகள் நிறுவப்பட்டன.

9ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் முதன் முதலில் அத்தகைய தொரு வைத்தியசாலையை நிறுவிய பெருமை, கலீபா ஹாறூன் அல் ரஷீதையே சாரும். பக்தாதில் இவரால் நிறுவப்பட்ட BIMARISTAN என்ற வைத்திய சாலை சகல வசதிகளையும் கொண்டதாகக் காணப்பட்டது. இங்கு மருத்துவம் பயில விரும்பும் மா்ணவர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டது. கலீபா அல் முக்ததிர் பில்லாஹ் 931 ஆம் ஆண்டில் **ஸினான் பின் தாபித் இப்னு சூரா** என்பவரை அங்கு மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு பரீட்சை நடத்துமாறு கேட்டிருந்தார் நடத்தப்பட்ட அப்பரீட்சையில் 860 மாணவர்கள் தேர்ந்தனர்.

இவ்வைத்தியசாலையைப் பின்பற்றி பக்தாத், குர்துபா, டமஸ்கஸ், கெய்ரோ, மக்கா ஜெருஸலம் அலப்போ , ஹர்ரான் ஆகிய பிரதேசங்களிலும் பல மருத்துவ சாலைகள் நிறுவப்பட்டன. இவ்வைத்திய சாலைகளில் ஒவ்வொரு வகையான நோயாளிகளுக்கும் பிரத்தியேகமான சிகிச்சை நிலையங்களைக் கொண்ட விடுதிகள் அமைக்கப்பட்டிருந்ததோடு ஆண், பெண் இருபாலாருக்கும் தங்குவதற்கான தனித்தனி விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. கொர்டோவாவில் அமைக்கப்பட்டிருந்த வைத்தியசாலையில் செயற்கை நீர் ஊற்று, மூலிகைத்தோட்டம், பூந்தோட்டம், நூலகம் என்பன காணப்பட்டதோடு இங்கு வந்து குணமடைந்து செல்லும் ஒவ்வொரு நோயாளிக்கும் ஐந்து தங்க நாணயங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்த வைத்தியசாலைகள் ஒவ்வொன்றிலும் 100க்கும் அதிகமான வைத்தியர்களும் நிபுணர்களும் சேவையாற்றி வந்தனர் மன நோயாளர்களுக்கான தனியான வைத்திய சாலையொன்று முதன் முதலில் 1304ஆம் ஆண்டில் கட்டிய பெருமை முஸ்லிம்களையே சாரும் சிறைச் சாலைகளிலும் சிறைக்கைதி களுக்கென பிரத்தியேகமான வைத்தியசாலைகள் நிறுவப்பட்டிருந்தன.

போர்க்களங்களில் சிகிச்சை செய்வதற் கான இராணுவ வைத்திய சாலைகளும் முஸ்லிம்களால் நிறுவப்பட்டிருந்தன. இவ்வைத்தியசாலைகளுக்கு நோயாளிகளையும் வைத்தியர்களையும் ஏற்றிச் செல்வதற்கு **அம்புயுலன்ஸ்** (Ambulance) வண்டிகளாக ஒட்டகங்களைப் பயன்படுத்தினர். மருத்துவ நிலையங்களின் பரிபாலன முறை பற்றியும் இக்காலப்பிரிவில் எண்ணற்ற நூல்கள் எழுதப்பட்டன. இவற்றுள் **அல் ராஸி** எழுதிய **ஸிபத் அல்-பீமாரிஸ்தான்** என்ற நூல் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறே "மருந்தியல்" துறைக்கும் முஸ்லிம்கள் தமது பங்களிப்பினைச் செய்யத் தவறவில்லை. அவர்கள், பேதி மருந்தாக உபயோகிக்கப்படும் ஒருவகை இலைகள் (Senna) கற்பூரம் (Cumphor), சாதிக்காய் (Nutmeg), கராம்பு ( Cloves), போன்ற சில புதிய மருந்துகளைக் கண்டுபிடித்ததோடு மருந்து கலப்பதற்காக **றோஸ் வோட்டர்** ( ROSE WATER ) ஒரேஞ்ச் வோடர் ( ORANGE WATER) என்பவற்றையும் பயன்படுத்தினார்கள் பித்தவாத ஜுரம் ஏற்பட்டவர்களுக்கு குளிர் நீரை (COLDWATER) பயன்படுத்தி வைத்தியம் செய்யும் முறையை இவர்கள் கண்டு பிடித்திருந்தார்கள். தற்காலத்தில் பாவிக்கப்படும் களிம்பு, மாத்திரை போன்றவற்றைச் செய்யும் இரசாயன மருந்து கலக்கும் முறையை முஸ்லிம்களே அறிமுகப் படுத்தினர். மேற்குலகில் பயன்படுத்தப்படும் மருந்துகள் இன்றும் அறபுப் பெயர்கள் கொண்டே வழங்கப்படுகின்றமை அதற்கு சிறந்த சான்றாகும் பிற்காலத்தில் மாத்திரம் 160க்கும் மேற்பட்ட மருந்தியலாளர்கள் இருந்ததோடு பல மருந்தியல் கடைகளும் அங்கு இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அன்று அழிந்து போகும் ஆபத்திலிருந்த துறையை புனர்நிர்மானம் செய்து புத்துயிர் அளித்த பெருமை முஸ்லிம்களையே சாரும். ஆயினும் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாகவும் அறிவியல் துறையில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட தவறான கண்ணோட்டம் காரணமாகவும் அத்துறை, முஸ்லிம்களை விட்டும் ஸ்பெயின் ஸிஸிலியின் ஊடாக ஐரோப்பாவிற்குள் நுழைந்து, ஐரோப்பிய மருந்துவக் கலை வளர்ச்சியில் தமது ஆழ்ந்த செல்வாக்கை பதித்துவிட்டது.

**உஷாத்துணைகள்:**


1) அபுபக்கர் ஏ.எம். அறிவியல் வளர்த்த முஸ்லிம்கள் பாகம் 1

2) SALAH AL - ASKARY M.D.
THE WORLD JOURNAL
February 1977 vol-4 no 4

3) SAYID MUJTAB RUKNI MUSAWI CARI
WESTERN CIVILIZATION THROUGH MUSLIM EYES P-76, P-78, P-79

4) ABBAS MAHMOOD AL-AKKAD
THE ARAB'S IMPACT ON EUROPEAN CIVILIZATION PP 34-36

5) AMIR HASSAN SIDDIQE STUDIES IN ISLAMIC HISTORY PP 47 - 49

6) MOHAMED IMRAN ROLE OF MUSLIMS IN WORLD CIVILIZATION
PP 10 - 11


✦✦✦✦✦

***Islamic culture is not only tolerant and liberal, It is also dynamic in sprit, having imbibed the best from all the earier cultural foundations. It reflects diversity in unity as a distinct way of life.***

***DR. ZIAUDDIN AHMAD***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைப்பும் முற்றுப் புள்ளியும்

ஒருகலை உயிரோடு உலவித்திரிகின்றதென்றால் அது வாழ்க்கையிலிருந்து வந்திருக்க வேண்டும்.

இலக்கியமென்பது கூட, கலை சூல் கொண்ட கரு என்பதாலேயே அது பெற்றெடுக்கும் பிறவிகள் பெரும்பாலும் மார்க்கண்டேயவரத்தைத் தமதாக்கிக் கொள்கின்றன.

இங்கு ஒரு விடயம் என்னவென்றால்–

பூமியில் தோன்றிய விருட்சம் மீண்டும் பூமிக்கு நிழல் கொடுப்பது போல–வாழ்க்கையில் இருந்து தோன்றிய இலக்கியம், மீண்டும் வாழ்கைக்கே வகுப்பிலக்கணம் சொல்லிக் கொடுக்கிறது....

சிலந்திக் குஞ்சுகள் தாம் வாழ, தாய்ச் சிலந்தியை உறிஞ்சிக் குடிப்பது போல ஆரோக்கியமான இலக்கியம் –

இறந்த காலத்தை உறிஞ்சி உறிஞ்சி நிகழ் காலத்திற்கு உரமேற்றுகிறது.....

அந்த உரத்தில் மனிதம் மேலும் வளர்ந்துகொண்டிருக்கிறது.

இந்த வகையில்–

ஹிஜ்ரி 105 இல் அறபுலகில் பிறந்த இமாம் ஷாபிஈ அவர்கள் நிறைந்த பங்களிப்பை இவ்வுலகிற்கு இறைத்து வைத்துள்ளார்கள்.

இவருக்கு இஸ்லாமியக் கலைகள் பலவற்றில் நிரந்தரமான தங்க நாற்காலிகள் நட்டு வைக்கப்பட்டுள்ளன.

இஸ்லாம் வேறு – இலக்கியம் வேறு என கோடு கிழிக்காமல் இஸ்லாமியக் கம்பத்தில் இலக்கியக் கொடியேற்றியவர் இவர்.

இவரது கவிதையைப் படிப்பதன் மூலம்–

இஸ்லாத்தையும் உணரலாம்;

கவிதையையும் நுகரலாம்.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள்.

நீண்ட நாள் மண்ணில் புதைந்து கிடக்கும் ஓர் இரும்புத் துண்டு துரு களையப்பட்டால் எவ்வாறு தெரியுமோ–

அவ்வாறே...... சொற்களின் சேர்மானங்களைக் கலைத்து விட்டுக் கருப்பொருளைப் பார்த்தால் எந்த இலக்கியத்தில் இஸ்லாமியக் குருதி பாய்கிறதோ.... அது தான் உண்மையான இஸ்லாமிய இலக்கியம்.

எனவே–

இஸ்லாமிய இலக்கியத்தில் அதன் தூறலும் சாரலும் ஒருமித்து விழ வேணடும்.

அதன் சொற்களை எடுத்து நசுக்கும்போது இஸ்லாமியசாறு ஒழுக வேண்டும்.

அந்தப் பண்பை இவரது கவிதைகள் கொண்டிருக்கின்றன.

★

வாழ்க்கை என்பது பசுஞ் சோலைவனம் மட்டுமல்ல; அதில் முட்களும் இருக்கின்றன.

அந்த முள்ளிலே நடந்து, முள்பட்ட இடத்தில் மருந்து தடவும் முயற்சிதான் வாழ்க்கை.

எனவே தான் வாழ்க்கை எப்போதும் சுகமாக இருப்பதில்லை இதனை இமாமவர்கள் இப்படி விளக்குகின்றார்கள்......

காலம் எனும்
கிண்ணத்தில்
அனர்த்தமும் உவகையுமே
நிரப்பி வைக்கப்பட்டுள்ளன.
வாழ்க்கை எனும்
கோப்பையில்
கலக்கமும் தெளிவுமே
ஊற்றிவைக்கப்பட்டுள்ளன.

எனவேதான் சில்லென்று பூக்கும் சில நிமிஷத்துச் சந்தோஷப் பூக்கள் மறு நொடியில் உதிர்ந்து விடுகின்றன.

சில பொழுதுகளில் உவகை ஓங்கி நிற்கிறது.

பல பொழுதுகளில் விசனம் விசும்பி நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபக்கம் மகிழ்ச்சி சிரிக்கிறதென்றால் மறு பக்கம் துக்கம் அழுகிறதென்று அர்த்தம்.

மனிதனது வாழ்க்கைப் பாதை நெடுகிலும் தடைகள் தழுவிக் கிடக்கின்றன- அதிலும்....

அந்தப் பாதை நேர்வழி சென்றால் தடைகள் ஏராளம் ஏராளம்.......

கடலின் மேற் பரப்பிலேதான்
பிணங்கள் மிதக்கின்றன.
ஆனால்
அடியின் ஆழத்திலோ
முத்துக்கள்
புதைந்திருக்கின்றன.
வான முகட்டிலே
எண்ணிக்கையில்லாத நட்சத்திரம்
விரவிக்கிடக்கிறது.
ஆனால் சூரியனையும் சந்திரனையுமே
கிரகணம் பீடிக்கிறது.

நேர்வழியில் செல்பவர்களுக்குத் தடைகள் ஏராளம்- அங்கங்கே மாய அம்புகள் வந்து விழவே செய்கின்றன.

இதற்காக விசனப்பட்டு விசும்பலாகாது.

காய்த்த மரத்திற்குத்தான் கல்லெறி என்பதை நினைக்க வேண்டும்.

★

மனிதன் எப்போதும் பொருள் தேடித் தேடியே தன்னையும் தன் நிலையையும் தொலைத்துக் கொள்கின்றான்.

திட்டமிட்டுத் தன்னைப் படைத்த இறைவன் தனது இரையையும் கட்டி வைத்துள்ளான் என்பதை மனிதன் மறந்து விடுகின்றான்.

காலி வயிற்றோடு காலையில் பறக்கும் பறவை வயிறு நிறையாமல் கூடு திரும்புவதில்லை.

ஐந்தறிவிற்கு உணவளிக்கும் இறைவன் ஆறறிவை விட்டு விடுவானா?

இன்று வயிறு நிரம்பினாலும் மனிதன் நாளையை நினைந்து நலிவுறுகின்றான்.

இந்த விளங்காத விலங்கை உடைக்கும்படி இமாமவர்கள் ஏவுகின்றார்கள்.

நீ
நாளை உயிரோடிருப்பாய்- எனும்
உயில் உனக்கு
வழங்கப்பட வில்லை.
அவ்வாறிருக்க-
அதற்கடுத்த நாளின்
உணவிற்காக நீ ஏன்
வில்லங்கப்படுகிறாய்....?

இவ்வாறு அர்த்தமற்ற கவலையை விடும்படி மனிதனுக்கு ஏவும் இமாமவர்கள் -திருப்தியைக் கைப்பபிடிக்கும் படி - எடுத்துரைக்கின்றார்கள்.

அதற்கு அவர்களே ஓர் எடுத்துக்காட்டு

செல்வங்களின் தலையாக
திருப்தியைக் கண்டேன்.
அதன் வாயிலைப் பற்றிக் கொண்டேன்.
அடுத்தவன் வீட்டுக் கதவோரங்களிலோ
முற்றங்களிலோ- இரப்பவனாக
என்னைக் காண முடியாது.
இதனால்-
எந்தவொரு நாணயமும் இல்லாமல்
செல்வந்தனாக
மாறிவிட்டேன்.
மக்களுக்கு முன்னால்
ஓர் அரசனைப் போல்
உலவித்திரிகின்றேன்.

இமாமவர்களது கவிதையில் அர்த்தமும் ஆழமும் சம விகிதத்தில் கை குலுக்குகின்றன.

தோண்டத் தோண்ட ஊறும் ஊற்றாய் அர்த்தங்கள் பீறிட்டுப் பாய்கின்றன. அவர் கவிதைகளை இந்த நூற்றாண்டுகளுக்கு மட்டுமல்ல; இன்னும் சில நூற்றாண்டுகளுக்கும் பதியம் போடலாம்.

ஏனெனில்-

விருட்சமாக விருத்தியடையும் வீரியம் அவற்றுக்கிருக்கிறது.

**S.M. பைஸல் ஐயூப்** **(நான்காம் வருடம்)**

# நளீமிய்யா கலாபீட பட்டப்பரீட்சைக்கு 1993, 1994 ஆம் கல்வி ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளின் தலைப்புகள்

01) இஸ்லாமியப் பொருளாதாரத்தில் சொத்துரிமை பற்றிய கோட்பாடு

02) அறிவு பற்றிய அல்குர்ஆனின் கொள்கை

03) சட்ட மூலாதாரம் என்ற வகையில் நபித்தோழர் வாக்கு

04) ஹிஸ்பா அமைப்பு- ஓர் இஸ்லாமிய நோக்கு

05) இஸ்லாத்தில விவசாயப் பங்குடைமை

06) உமர் இப்னு அப்தில் அஸீஸ் (றஹ்) அவர்களும் அநியாயங்களை தடுப்பதில் அவர்களின் கொள்கையும்

07) அறபுக்கவிஞர் அஹ்மத் ஷவ்கி

08) இமாம் இப்னு கையிம் (றஹ்)-ஆளுமையும் அறிவுப்பங்களிப்பும்

09) அல் இஸ்மத் - ஓர் ஆய்வு

10) அல்குர்ஆனின் ஒளியில் முஹம்மத் (ஸல்) அவர்களின் ஆளுமை

11) இஸ்லாத்தில் ஆன்மீகத்துறை

12) பரிபூரண மார்க்கம் இஸ்லாம்

13) பைஅத் - ஓர் ஆய்வு

14) ஸஹீஹ் அல்புஹாரி -ஓர் ஆய்வு

15) அபூபக்கர் (றழி) அவர்களும் அவர் காலத்துப் பிரச்சினைகளில் அவர்களின் நிலைப்பாடும்

16) ஷிர்க்கும் அதன் வகைகளும்- ஓர் ஆய்வு

17) குர்ஆனியக் கதைகள் ஓர் ஆய்வு

18) ஸுன்னாவை கையாள்வோர்க்கான வழிகாட்டல்கள்

19) மேற்கத்திய சட்டத்தில் காப்புறுதியும் இஸ்லாத்தில் அதன் தீர்வும்

20) இஸ்லாத்தில் சமூகக் கூட்டுப் பராமரிப்பு

21) பிக்ஹுக்கலை கருத்து வேறுபாடுகளும் அவற்றை அணுகும் முறையும்

22) இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் நவீன படப்பிடிப்பு- "ஒரு சட்ட ஆய்வு"

23) நான்கு இமாம்களின் பார்வையில் ஆஹாதான ஹதீஸ்கள்

24) மறுமை நாளுக்குரிய பெரிய அடையாளங்கள்

25) இஸ்லாமிய நோக்கில் "அல்ஜாஹிலிய்யத்"

26) இமாம் அஹ்மத் இப்னு ஹம்பல் -ஆளுமையும் அறிவுப்பங்களிப்பும்

27) இளைஞர் பிரச்சினைகளும் இஸ்லாமியத் தீர்வுகளும்

28) இஸ்லாமியக்கண்ணோட்டத்தில் வெகுசனத் தொடர்பியல்

29) இம்மை மறுமை வாழ்வு -ஓர் ஒப்பீட்டாய்வு

30) இமாம் தபரி -ஆளுமையும் அறிவுப் பங்களிப்பும்

31) இந்திய முஸ்லிம்கள் -ஒரு வரலாற்று ஆய்வு

32) அல்குர்ஆனின் நிழலில் மறுமை நாளின் பயங்கரங்கள்

33) ஷரீஅத் சட்ட முடிவுகள் சுட்டிக்காட்டும் பதப்பிரயோகங்கள் -ஓர் ஆய்வு

34) இறைநேசர் இப்றாஹீம் நபியின் தஃவா வரலாறு

35) நயவஞ்சகம் -ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்

36) தலைமைத்துவமும் இஸ்லாமும்

37) இஸ்லாமியப் போராட்டத்தலைவர் என்ற வகையில் காலித் இப்னு வலீத்

38) அரசு பற்றிய இஸ்லாத்தின் கோட்பாடு

39) இஸ்லாத்தில் குடும்ப அமைப்பு

40) இஸ்லாமிய சட்ட வல்லுனர் என்ற வகையில் அஷ்ஷெய்க் யூசுப் அல்கர்ழாவி

41) கர்பலாவும் இஸ்லாமிய வரலாற்றில் அது ஏற்படுத்திய தாக்கமும்

42) சிந்தனை ரீதியான காலனித்துவப் போராட்டமும் இஸ்லாமிய சமூகமும்

43) உள நோய்களும் இஸ்லாமியப் பரிகாரங்களும்

44) இஸ்லாமிய தஃவாவின் சட்ட திட்டங்கள்

45) உஹத் யுத்தம் -ஒரு வரலாற்று ஆய்வு

46) சூரா அன்ஆமின் படிப்பினையூட்டும் பத்துப் போதனைகள்

47) ஸ்பெயினின் இஸ்லாமிய வரலாறு

48) இஸ்லாமும் சமாதானமும்

குறிப்பு:

இவ்வாய்வுக்கட்டுரைகள் யாவும் அறபு மொழியில் சமர்ப்பிக்கப்பட்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NAMES AND ADDRESSES OF JAMIAH GRADUATES WHO PASSED OUT BETWEEN 1992-1994

| | | | |
|---|---|---|---|
| (01) | Ash Sheikh: | H. L. M. Haris | 191/A, Ambakka, Handessa, Kandy. |
| (02) | Ash Sheikh: | J. M. Rizwan | 56, Ketakumbura, Leemagaha kottuwa. |
| (03) | Ash Sheikh: | M. S. Ayub Khan | 19, Hijragama, Hemmathagama. |
| (04) | Ash Sheikh: | A. M. M. Anees | 261/A, Maberiya, Ukuwela. |
| (05) | Ash Sheikh: | M. I. Abdul Rahman | Kalampindunawa, Horawapothena. |
| (06) | Ash Sheikh: | A. W. M. Imthiyas | 112, Padinawela, Boragas. |
| (07) | Ash Sheikh: | B. Musthafa | Hunukalthuwa, Silmiyapura. |
| (08) | Ash Sheikh: | S. A. A. Nayeem | 162/1, Bulugahatenna, Akurana. |
| (09) | Ash Sheikh: | S. H. M. Suhair | Knox sreet, Mutur - 6. |
| (10) | Ash Sheikh: | A. F. M. Shukri. | "Darul Jazla" Tunduwa, Haburugala. |
| (11) | Ash Sheikh: | R. M. Nawas | Hulangapola, Haggala, Via Nuwara Eliya. |
| (12) | Ash Sheikh: | S. M . Thoufeek | M. P. C. S. Road, Odamavadi, Valaichienai. |
| (13) | Ash Sheikh: | M. I. M. Shareefdeen | Asshaheed Ahamed Lebbe Mawathe, Kattankudy -02. |
| (14) | Ash Sheikh: | M. I. Abul Hassan | 126/A, Walpottuwewa, Weerapokuna. |
| (15) | Ash Sheikh: | A. S. Jafir | T. C. Road, Kinniya - 06. |
| (16) | Ash Sheikh: | A. L. Junaideen | 53, Muslim colony, Kaduruwela. |
| (17) | Ash Sheikh: | M. T. Abdul Rahman | Thampala, Polonnaruwa. |
| (18) | Ash Sheikh: | S. A. Buhary Mohamed | Ward No. 2, Thoppur. |
| (19) | Ash Sheikh: | M. T. M. Tariq | 22/1, Peraru Colonsivan Kovil Rd, Kantalai. |
| (20) | Ash Sheikh: | Mr. M. S. M. Sirajudeen | "Fathima Manzil" Bandarakoswatte. |
| (21) | Ash Sheikh: | M. H. M. Siraj | River side, Bamana, Narangoda. |
| (22) | Ash Sheikh: | A. S. Shafeek | Naithel Nagar, Mutur. |
| (23) | Ash Sheikh: | A. R. M. Subair | Central Road, Alankeini, Maruthamunai - 01, Kalmunai. |
| (24) | Ash Sheikh: | A. Fowzul Rahman | 13, Main Street, Galgamuwa. |
| (24) | Ash Sheikh: | B. Nihmathullah | Man/ Karadikulli, Marichukkatti. |
| (26) | Ash Sheikh: | M. J. M. Hijas | 146/A Bambaradeniya, Leemagahakotuwa. |
| (27) | Ash Sheikh: | A. R. M. Rizvi | 3A, Doragamuwa Road, Meegamuwa Junction, Udatalawinna, Madige. |
| (28) | Ash Sheikh: | M. A. M. Nilam | "Fowziya Manzil" Nangalla, Thulhiriya. |
| (29) | Ash Sheikh: | M. S. M. Naseer | 364, Galle Road, Mahagoda, Beruwela. |
| (30) | Ash Sheikh: | M. H. M. Roomy | 416/7, Kandy Road, Alawathugoda, |
| (31) | Ash Sheikh: | M. M . Faslur Rahman | Kaleliya. |
| (32) | Ash Sheikh: | M. J. M. Nihamathullah | 220, Palliyadi Road, Palamunai (E. P). |
| (33) | Ash Sheikh | M. I. M. Abbas | 123/12, Kangayanodi, Kattankudy. |
| (34) | Ash Sheikh: | M. L. M. Saboor | 465/A, Ottapalli Street, Eravur - 03 (E. P). |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| (35) | Ash Sheikh: | M. J. Thufail Ahamed | 15/9, Kiringadeniya, Mawanella. |
| (36) | Ash Sheikh: | A. A. Rafees | Hajmalas, Pallikudiyiruppu, Akkaraipattu - 06 |
| (37) | Ash Sheikh: | F. M. Rashad | 54, Srimalwatte Road, Madawela Bazaar. |
| (38) | Ash Sheikh: | M. Abdul Majeed | Malwatte Road, Thambillawa, Kaleliya. |
| (39) | Ash Sheikh: | M. A. M. Mashahir | Allela Walavu, Yonakepura, Dikwella. |
| (40) | Ash Sheikh: | A. B. M. Idrees | Alim Street, 5th Division, Valaichenia (E. P) |
| (41) | Ash Sheikh: | O. D. M. A. Thawwab | 361, Kahatagaha Mada, Pahamuna. |
| (42) | Ash Sheikh: | U. L. M. Mahir | Hembawela , Bandarakoswatte. |
| (43) | Ash Sheikh: | A. A. A. Asmar | U. N. House, Yonakapura, Dickwella. |
| (44) | Ash Sheikh: | M. M. M. Mihlar | P/Pudukudiyiroppu, Bataluoya. |
| (45) | Ash Sheikh: | Z. A. M. Thahir. | F : 63, Thalgaspitiya, Aranayake. |
| (46) | Ash Sheikh: | A. L. M. Hassan Aly | 160, Manchenthoduwai, Batticaloa. |
| (47) | Ash Sheikh: | S. H. A. Rayees | Ahthimurippu P. P. Potkerni, Murungan. |
| (48) | Ash Sheikh: | S. A. M. Naleem | Main Street, Eravur - 01. |
| (49) | Ash Sheikh: | M. K. M. Shakeeb | 151, Mosque Road, Trincomalee. |
| (50) | Ash Sheikh: | A. B. M. Ashraf | 18, Jayanthi Mawatha, Anuradhapura. |
| (51) | Ash Sheikh: | M. T. M. Lafir Madany | 12/7B, Marikkar Place, Maradana, Beruwela. |
| (52) | Ash Sheikh: | M. M. Niyas | Paddanichchoor Puliyankulam, Vavuniya. |
| (53) | Ash Sheikh: | S. M. K. Mohamed Jabir | "Kabeer Mahal" 126, Old Road, Kattankudy - 01. |
| (54) | Ash Sheikh: | U. K. A.Raheem | 97, Main Street, Oluvil - 01. |
| (55) | Ash Sheikh: | S. A. Azeez | Echeentivu - 03, Kinniya. |
| (56) | Ash Sheikh: | M. S. M. Mashood | Hembawela, Medige, Midyala, Bandarakoswatte. |
| (57) | Ash Sheikh: | S. H. Salman Faris, | 36, 3rd Lane, 3rd Cross Street, Puttalam. |
| (58) | Ash Sheikh: | M . I. Md. Roofil | Mn/ Veppankulam, P. P. Potkerny. |
| (59) | Ash Sheikh: | A. M. M. Mihlar | "Malhahira Manzil" Pulmoddai - 03. |
| (60) | Ash Sheikh: | S. M. Anver Sadath | 6, Agara Colony, Horombawa, Narammala. |
| (61) | Ash Sheikh: | M. Z. M. Rizan | 217, Garagoda, Yatiyantota. |
| (62) | Ash Sheikh: | M. R. Ramzi Ali | "Razeena Villa", Mattamagoda, Kannatota. |
| (63) | Ash Sheikh: | M. J. M. Ramazan | D/27d, Gampola, Road, Olana, Hemmathagame. |
| (64) | Ash Sheikh: | A. M. M. Rizam | 93/4, Tennekumbura, Kandy. |
| (65) | Ash Sheikh: | S. A. C. M. Junaideen | Sinnapalli Lane, Sammanthurai - 04. |
| (66) | Ash Sheikh: | K. B. Niyas | P. P. Potkerny, Mannar. |
| (67) | Ash Sheikh: | A. R. M. Ashraf | Small Mosque Lane, Sammanthurai - 04. |
| (68) | Ash Sheikh: | M. H. M. Fouzer | 88, N. H. Mawatha, Chinafort, Beruwela. |
| (69) | Ash Sheikh: | S. L. A. Razaak | Thoppur - 07. |
| (70) | Ash Sheikh: | T. Shakir | Veliakkara, Vijithapura, Kalawewa. |
| (71) | Ash Sheikh: | M. C. M. Irfan | "Maimuna Mansil", 26. Dr. Ahamed Fareed Mawatha, Kattankudy - 06. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

ஆசியுரை வழங்கி "அல்ஜாமிஆவை" அலங்கரித்த நளீமிய்யா கலாபீட ஆயுட்காலத்தலைவர், கௌரவ பணிப்பாளர்

அல்ஜாமிஆ மலர்வதற்கு உரமிட்ட விரிவுரையாளர்கள்

நன்கொடை வழங்கியோர்

விளம்பரதாரர்கள்

கட்டுரையாசிரியர்கள்

அட்டைப்பட ஓவியர்

மாணவ சகோதரர்கள்

நளீமிய்யா பட்டதாரிகள்

கலாபீட அலுவலக கணக்காளர்

அச்சுவேலையை அழகுற அமைத்தவர்கள்

அனைவருக்கும் அல்லாஹ்தஆலா நல்லருள் புரிவானாக. நன்றி

சஞ்சிகைக்குழு

✡

*We appreciate very humbly the magnanimity, willing guidance, and timely assistance extended to us to make this publication a success.*

*May Allah Shower his blessings upon all of you*

**Editorial Board**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

# BAIRAHA FARMS LTD.

**YOU ARE A GOOD MEAL BETTER OFF WITH**

## BAIRAHA CHICKEN

The one word that makes the difference

**BAIRAHA - Naturally**

Bairaha Broilers are HALAL SLAUGHTERED, PROCESSED under HYGIENIC conditions in the most MODERN PLANT, BLAST FROZEN to maintain freshness and Microbiologically tested.
Also HYBRO DAY OLD BROILER CHICKS
for a heavier Hybro Broiler with a high percentage of prime parts and a low percentage of FAT and,
HISEX - BROWN DAY OLD LAYER CHICKS
for tremendous liveability and optimum production under all conditions.

# BAIRAHA FARMS LTD.

**407, Galle Road, Colombo - 3.**
**Telephone : 575255, 573055, 576010**
**Telex : 21398 "MIMNAC"CE**
**Fax : 941 - 575256**

TYPESET & PRINTED BY A J.PRINTS, 1-B.P.T.DE. SILVA MAWATHA, DEHIWELA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org